தொகுதி - XV11 மாசி - 2017 இதழ் - 1

# சிந்தனை

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதி - XVII மாசி- 2017 இதழ் - 1

# சிந்தனை

பதிப்பாசிரியர்

**பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா**

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
2017

உசாத்துணைப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

பொதுசன நூலகம்
24 AUG 2017
மாநகர சபை
யாழ்ப்பாணம்

8246(P) PL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CINTANAI** The Journal of the Faculty of Arts, University of Jaffna is published in March, July and November every year.

CINTANAI is a refereed Journal, its referees come form University Scholars and the National scholarly community.

| | |
|---|---|
| **Editor** | Professor Selliah Krishnarajah |
| **Associate Editor** | Dr. K.Kajavinthan |
| **Managing Editor** | Dr. S. Santhirasegaram |
| **Editorial Committee Members** | Dr. K.Shriganeshan<br>Dr. K.Arunthavarajah<br>Dr. (Mrs) J. Rasanayagam<br>..................<br>Mr. R. Rajeshkannan<br>Mrs. S. Arulanantham<br>Mrs. S. Prabaharan |

| | |
|---|---|
| **Annual Subscription** | 1500/- SLR / 15US $ |
| Price Per Copy | 500/-SLR |
| **Published by** | The Faculty of Arts, University of Jaffna, Jaffna, Sri Lanka. |
| **Printed by** | Harikanan (Pvt) Ltd., # 681, K.K.S. Road, Jaffna. |
| **ISSN** | **2478 - 1061** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ **சிந்தனை** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் ஆய்விதழாகும். இவ் இதழ் ஆண்டுக்கு மும்முறை மார்ச், ஜூலை, நவம்பர் மாதங்களில் வெளியிடப்படுகின்றது. பிரசுரிக்கப்படும் கட்டுரைகள்: பொருளியல், புவியியல், அரசியல், வரலாறு, தொல்லியல், சமூகவியல், கல்வியியல், மானிடவியல், மெய்யியல், மொழியியல், தமிழ், வடமொழி, இந்துநாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம், நுண்கலைகள் முதலிய துறைகளில் உள்ள பொருட் கூறுகள் பற்றியனவாக அமையும்.

◆ **சிந்தனை**யில் வெளியாகும் கட்டுரைகளின் தகுதி, தகுந்த பல்கலைக்கழக ஆய்வாளர்களால் நிர்ணயிக்கப்படுகின்றது.

◆ **சிந்தனை**யில் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட விரும்புவோர் கட்டுரையின் இரு பிரதிகளைக் கணினிப்பதிப்பாக ஆசிரியருக்கு அனுப்புதல் வேண்டும். அத்தோடு இலத்திரனியல் பிரதி ஒன்றும் newcintanai2014@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அடிக்குறிப்புக்கள், உசாத்துணை விபரங்கள் ஆகியன கட்டுரையின் இறுதியில் அமைதல் வேண்டும்.

◆ **உசாத்துணை** விபரங்கள் பின்வரும் ஒழுங்குமுறையில் தரப்படுதல் வேண்டும். கட்டுரை எனில் ஆசிரியர் பெயர், முதலெழுத்துக்கள், அடைக்குறியினுள் வெளியிடப்பட்ட ஆண்டு, கட்டுரைத் தலைப்பு, சஞ்சிகையின் பெயர், தொகுதி இலக்கம், கட்டுரை இடம்பெற்றுள்ள பக்கங்கள், நூல் எனில்: ஆசிரியர் பெயர், முதலெழுத்துக்கள் அடைப்புக்குறியினுள் வெளியிடப்பட்ட ஆண்டு, நூலின் தலைப்பு, விபரம், வெளியிடப்பட்ட இடம், வெளியிட்டோர் விபரம்.

◆ **கட்டுரை** அனுப்புவோர் தங்கள் பெயர், பட்டங்கள், பதவிகள், அலுவலக முகவரி, மின்னஞ்சல் ஆகிய விபரங்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தனித்தாளில் குறித்து அனுப்புதல் வேண்டும். கட்டுரையின் தலைப்பினையும் ஆங்கிலத்தில் குறிப்பிடுக. அனுப்பப்படும் கட்டுரைகள் ஆய்வு வளர்ச்சிக்கு வழங்கும் பங்களிப்பினைச் சுருக்கமாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

◆ சந்தா கொடுப்பனவுகள் சிந்தனையின் நிர்வாக ஆசிரியருக்கு அனுப்பப்படல் வேண்டும். இலங்கையில் காசுக்கட்டளை, தபாற்கட்டளை, காசோலை மூலமும், பிறநாடுகளிலிருந்து வங்கிக் கட்டளைகள் மூலமும் அனுப்பப்பட வேண்டும். மாற்றிதழாக சிந்தனையினைப் பெற விரும்புவோர் நிர்வாக ஆசிரியருடன் தொடர்பு கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CINTANAI, REFREED JOURNAL, FACULTY OF ARTS, UNIVERSITY OF JAFFNA, SRI LANKA, 2015

PROCEDURE FOR PUBLICATION OF RESEARCh; ARTICLES IN CINTANAI (IN TAMIL)

This particular Research Journal will be released thrice in a year, March July and November.

**Procedure profile.**

1. The title of article is by very short and express the main theme vividly.
2. The article with title should proceed with the research summary and the main technical terms.
3. The research article should not be exceeded more than 15 page A4 size by using BAAMINI found and TIME NEW ROMAN.
4. The concepts or ideas which borrowed from other sources should be incorporated with FOOT NOTES system with bibliographical notes
5. The finding and conclusion or suggestion of the article should be vividly inscribed at the end of the article,
6. The method adopted and materials used in the research discussion are should be spelled out at the set out of the article.
7. Photos, Graphs and Tables are will be accepted for publication but with in limited levels.
8. All permanent staff of the the Faculty board should support to purchase the volumes.
9. The members of the faculty could send more than one research article but the screening committee's decision is ultimate for publication. The acceptance for publication will be notitieded.
10. Authors should write his / her name, affilation, address, e-mail, contract telephone number in below the title of Article.

# The submission of Research Articles:

1. It is expected to the research article in both,soft and two hard copies and those unsuitable for publications will be returned to the respective authors.
2. The research articles for publication Cintanai should be written in Tamil Language but in case of Citations and Foot notes it could be used English terms too.
3. The continuation of one article under the same caption to other volumes is prohibited.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரை ஆசிரியர்கள்

1. **பேராசிரியர் ஏ. எஸ் சூசை,** ph.D.
இணைப்பேராசிரியர் / புவியியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
assoyasa@gmail.com
**திருமதி வீ. பிரதீபா** M.phl.
சிரேஷ்ட விரிவுரையாளர் , தரம் II
புவியியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
Vtheepa@gmail.com

2. **பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா** M.A
தலைவர்/ வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
Skrishna514@gmail.com

3. **திரு. சி. திருச்செந்தூரன்,** M.Phil.
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
அரசறிவியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
sthiruchchenthuran@yahoo.com

4. **திரு தி. விக்னேஸ்வரன்,** M.Phil.
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
அரசறிவியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
vigneswaran7@gmail.com

5. **திரு. சு. சி. உதயகுமார்** M.Phil.
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
பொருளியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
ssuthayan@yahoo.com

6. **கலாநிதி க. ரதிதரன்** Ph.D.
முதுநிலை விரிவுரையாளர் தரம் I
நுண்கலைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
rathidrama@yahoo.com

7. **பேராசிரியர் நா. ஞானக்குமாரன்** Ph.D.
சிரேஷ்ட பேராசிரியர் / மெய்யியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
gnanamss@hotmail.com

8. **கலாநிதி கலைவாணி இராமநாதன்** Ph.D.
ஓய்வுநிலைப் பேராசிரியர்
இந்துநாகரிகம்,

9. **திரு.** S. **நவநீதகிருஷ்ணன்** M.Phil. (LIS)
சிரேஷ்ட உதவிநூலகர் தரம் II
நூலகம்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
ksnavan78@gmail.com.

10. **செல்வி கு. பத்மாசனி** M.Phil.
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
kulambaba@yahoo.com.in

11. **திரு ர. பிரகாஷ்,** B.F.A (Hons)
விரிவுரையாளர்
முதுகத்துவமாணி ஆய்வாளர்
கட்புல தொழில்நுட்பக் கலைத்துறை,
சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்
pragash0333@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை

சிந்தனை ஆய்விதழ் : கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பொருளடக்கம்

1. வங்காலை பறவைகள் சரணாலயம் : நிலைத்திருக்கக்கூடிய முகாமைத்துவமும் அதற்கான சவால்களும். 1-11

-ஏ. எஸ் சூசை / வீ. பிரதீபா

2. தொண்டமானாற்றுப்பள்ளத்தாக்கினை மையப்படுத்திய சர்வதேச போக்குவரத்து மார்க்கங்களும் இடைக்கால வட இலங்கையின் சமூக பொருளாதார வரலாற்றில் அதன் செல்வாக்கும் – ஒரு வரலாற்றாய்வு 12-34

– செல்லையா கிருஷ்ணராசா

3. ஜீ. ஜீ பொன்னம்பலத்தின் அரசியல் தலைமைத்துவம் : ஒரு விமர்சன ரீதியான மீள்பார்வை 35-44

– சி. திருச்செந்தூரன்

4. நவீன அரசியல் சிந்தனையில் அரசியல் அபிவிருத்தி என்ற எண்ணக்கரு – ஒரு விமர்சன ஆய்வு 45-56

– தி. விக்னேஷ்வரன்

5. வேலைவாய்ப்பினைத் தீர்மானிப்பதில் கல்வித்தரத்தினதும் வயதினதும் வகிபாகம் (கரைச்சி பிரதேசத்தின் வட்டக்கச்சி கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) 57-66

– சு. சி. உதயகுமார்

6. நடிப்பிற்கான மாற்று அணுகுமுறைகள் : கலையரசு சொர்ணலிங்கத்தின் அரங்க நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு. 67-82

– க. ரதிதரன்

7. சுப்பிரமணிய பாரதியார் சுட்டிய யாழ்ப்பாணத்துச் சுவாமி 83-92

– நா. ஞானக்குமாரன்

8. சிந்துவெளி நாகரிகம் பற்றிய ஆய்வாளர்களின் கருத்துக்கள் - ஒரு மீள் பரிசீலனை 93-104

– கலைவாணி இராமநாதன்

9. சமஸ்கிருத காவியவியல் நூல்களுள் அதிகமான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை வரைவிலக்கணப்படுத்தும் குவலயானந்தம் – ஓர் ஒப்பியலாய்வு 105-114

– S. நவநீதகிருஷ்ணன்

10. யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய உணவுகளினதும் உடன் உணவுகளினதும் உணவுத் தரம் குறித்த ஓர் விடய ஆய்வு 115-126

– பத்மாசனி குலராசசிங்கம்

11. இந்துக் கோயில்களில் கட்புலக்கலை வெளிப்பாடுகள் – யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்துக் கோயில்களை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு 127-137

– ர. பிரகாஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன் நிறைவு நூலகம்
பயன்பாட்டாளர்.

# வங்காலை பறவைகள் சரணாலயம் : நிலைத்திருக்கக்கூடிய முகாமைத்துவமும் அதற்கான சவால்களும்

ஏ.எஸ் சூசை / வீ. பிரதீபா

**ஆய்வுச்சுருக்கம்**

வடமாகணத்திலேயே அதிக உயிர்ப்பல்வகைமையைக் கொண்ட மாவட்டமாக மன்னார் மாவட்டம் காணப்படுகின்றது. இதில் மடு,கட்டுக்கரை,வங்காலை ஆகிய மூன்று பிரதேசங்கள் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இதில் வங்காலை பறவைகள் சரணாலயமானது அதன் உயிர்ப்பல்வகைமையின் செழுமை கருதி சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் ஒன்றாக "ரம்ஸார்உடன்படிக்கையினூடாக ௨010ல் பிரகடனப்படுத்தபட்டது. இவ்வாறான முக்கியத்துவம் பெற்ற பகுதியின் நிலைத்திருக்ககூடிய முகாமைத்துவ செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது அவசியமான ஒன்றாகும். இச்சந்தர்ப்பத்தில் சரணாலயத்தின் நிலைத்திருக்கும் முகாமைத்துவ செயற்பாடு தொடர்பாக மக்களின் செயலாற்றல், மனோநிலை, வேறுபட்ட அரச நிறுவனங்களின் செயற்றிட்டங்கள் என்பனவற்றினூடாக சூழல் நிலைத்திருப்பில் எவ்வாறான சவால்களை எதிர் நோக்குகின்றது, என்பது பற்றி அறியும் நோக்கில் சரணாலய எல்லை நிர்ணயம் தொடர்பாக சரணாலய எல்லைக்குள் உள்வாங்கப்பட்ட தனிநபர் காணி உரிமையாளர்கள் அனைவரிடமும் நோக்க அடிப்படையிலான மாதிரி எடுப்பு முறைமூலம் திரட்டப்பட்ட தகவல்களையும் வேறுபட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளிடமிருந்தும், சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டும் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம், சூழற்பாதுகாப்பு தொடர்பான செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் நிறுவனங்களிடையே ஒருங்கிணைந்த செயலாற்றல் என்பது ஏற்படுத்தப்படாமையும் மற்றும் சூழல் முகாமைத்துவ செயற்பாடுகளில் மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டப்படாமை, மக்கள் குழுக்களை இணைத்துக் கொள்ளாமை போன்றன சரணாலய நிலைத்திருப்புக்கான சவால்களாக கண்டறியப்பட்டதுடன், சரணாலய எல்லை தொடர்பாக மக்களின் கோரிக்கைகளை கவனத்திற் கொண்டு அதேவேளை சரணாலய உயிர்ப்பல்வகைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையிலான எல்லை நிர்ணயம் தொடர்பான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** சரணாலயம், உயிர்ப் பல்வகைமை, சூழல் முகாமைத்துவம், மக்கள் பங்களிப்பு

உயிர்பல்வகைமைபேணுதலில் வன விலங்கு சரணாலயங்கள் முக்கியம் பெற்றவையாகக் காணப்படுகின்றன. இலங்கையினுடையஅமைவிடமும் அதன் பௌதீக அம்சமும் உயிர்ப்பல்வகைமையின் செழுமைக்குகாரணமாகஅமைகின்றது. அதன் காரணமாகஇலங்கையில் காணப் படும் ஈரநிலங்கள் சர்வதேசரீதியில் முக்கியத்துவம் பெற்றஈரநிலங்களாக "ரம்ஸா" உடன்படிக்கையால் (Ramsar,2010) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் காட்டுத்திணைக்களம், வனவிலங்குப் பாதுகாப்புத்திணைக்களம் போன்றன உயிரப்பல்வகைமையைபாதுகாக்கும் நோக்கில் இயற்கைஒதுக்குகள், வனவிலங்கு சரணாலயம், பாதுகாக்கப்பட்டபிரதேசங்கள் போன்றவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவரவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாத்துவருகின்றது. அந்த வகையில் இலங்கையில் 509 பகுதிகள் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக நிர்வகிக்கப்பட்டுவருகின்றது (Aijith,Silva,2011). இவற்றில் பெரும்பாலான பகுதிகள் இலங்கையின் ஈரவலயத்தை உள்ளடக்கிய பிரதேசங்களிலேயே அமைவு பெற்றுள்ளது.

இலங்கையின் வறண்டவலயத்தை உள்ளடக்கிய வடமாகணத்தில் சுண்டிக்குளம், கொக்கிளாய், வவுனிக்குளம், மடு, இராட்சதகுளம் (கட்டுக்கரை) போன்றனசரணாலயங்களாக 1938 இல் பிரகடனப்படுத்தப்பட்டது (Asian Wetland Directory, 1989). இருந்தபோதிலும் உள்நாட்டு யுத்தம் காரணமாக அப்பகுதிகளில் எந்தவித பாதுகாப்பு முகாமைத்து வநடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியவில்லை. உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் மன்னார் மாவட்டத்தின் வங்காலைப் பிரதேசத்தை யண்டிய ஈரநிலப் பிரதேசத்தில் காணப்படும் உயிர் பல்வகைமையைக் கருத்திற் கொண்டு வனவிலங்கு பாதுகாப் புத்திணைக்களத்தால் 2008ல் வங்காலை சரணாலயமாக பிரகடனப் படுத்தப் பட்டது (வர்த்தமானி பத்திரிகை, 2008). இச்சரணாலயம் பொருளாதாரம் மற்றும் சூழலியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகின்றது. பலஅருகிவரும் பறவையினங்களை பருவகாலங்கலங்கறளில் இச்சரணாலயத்தினுள் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. (Spot-billed Duck, Comb Duck, Gadwall, Long-toed stint, Peregrine Falcon, Common –ringed plover, Temmincks Stint, Red-necked Phalarope, Eastern Black –tailed Godwit) (இலங்கைப் பறவைகள் கழகம், 2010).

புறவைகள் சரணாலயத்தின் எல்லைகள் நிர்ணயிக்கப்படும் போதுவங்காலைக் கிராமத்தின் ஒருபகுதி குடியிருப்பு நிலங்கள் சரணாலய எல்லைக்குள் உள்வாங்கப்பட்டது. இதற்கு மாற்றீடாக வேறுநிலம் பாதிக்கப்பட்டவர்களுக்குபகிர்ந்தளிக்கப்பட்டது. இருந்த போதிலும் சரணாலய எல்லை பற்றிபல்வேறு கோரிக்கைகள் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் சூழல் ரீதியாகஇச்சரணாலயத்தின்முக்கியத்துவத்தைக் கருத்திற் கொள்வதுடன், மக்களின் பங்களிப்பையும் பெற்று சூழற்பேணுகை செயற்பாட்டை முன்னெடுப்பதன் மூலமே சிறந்த முகாமைத்துவத்தை நடைமுறைப் படுத்தமுடியும். இவ் ஆய்வுவங்காலை சரணாலயத்தின் முகாமைத்துவம் தொடர்பாக எதிர்நோக்கும் சவால்களை இனங்கண்டு அதன் நிலைத்திருக்கக்கூடிய முகாமைத்துவத்திற்கான ஆலோசனைகனைகளை முன்வைப்பதாக உள்ளது.

### ஆய்வின் நோக்கம்


வங்காலை பறவைகள் சரணாலயத்தின் நிலைத்திருப்பு தொடர்பாக எதிர் நோக்கும் சவால்களை இனங்கண்டு கொள்ளுதலும், சரணாலய எதிர்கால நிலைத்திருப்பிற்கேற்ப சாத்தியமான வழிமுறைகளை ஆராய்ந்து அவற்றிகான தீர்வுகளை முன்வைப்பதும் இவ்வாய்வு நோக்கமாக கொண்டுள்ளது


### ஆய்வுப்பிரதேசம்

வங்காலைசரணாலயமானதுமன்னார் மாவட்டத்தின்மேற்குக்கரையோரமாகமன்னார் தீவையும் பெருநிலப்பரப்பையும் இணைக்கின்ற ஈரநிலப்பகுதியை உள்ளடக்கி அமைவு பெற்றுள்ளது. ஈரநிலத்தை உள்ளடக்கியவங்காலை சரணாலயமானது, வடக்கே பள்ளிமுனையையும், கிழக்கே திருக் கேதீஸ்வரம், தெற்கே வங்காலை கிராமம், மேற்கே சவுத்பார் போன்றவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. கடற்புற்படுக்கைகள், முட்புதர்கள், புல்வெளிகள், குளம், மணற்கும்பி, கண்டற்தாவரங்கள் (கண்ணா, கண்டல், கிண்ணை), தழை, இராவணன்மீசை, விடத்தை, கடற்புற்கள் போன்றதாவரங்களும் உவர்சதுப்பு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடனீரேரி என்பவற்றை கொண்டு 4800ஹெக்ரர் பரப்பை உள்ளடக்கியுள்ளது. இதனுள் சதுப்பு நிலம் 1050 ஹெக்ரர் ஆகவும்,கண்டற்காடு 720 ஹெக்ரர் ஆகவும்,நீர்ப்பரப்பு 2030 ஹெக்ரர் ஆகவும் ,பருவகால மாற்றத்திற்கு உட்படும் பகுதிகளாக 1100 hak காணப்படுகின்றது. அத்துடன் வங்காலைக்கிராமத்தின் ஏறத்தாள 2:3 பகுதியையும் உள்ளடக்கியுள்ளது. இலங்கைபறவைகள் கழகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 2008 செப்ரெம்பர்மாதம் வர்த்தமானியில் இது சரணாலயமாக அறிவிக்கப்பட்டது. வங்காலை கடற்கரையோரமாக காணப்படும் அடர்ந்தகண்டற்காட்டுச்சூழல் பருவகால இடம்பெயர்பறவைகளுக்கு குறிப்பாக ஐரோப்பாவில் இருந்து இடம் பெயரும் பறவைகளுக்கு புகலிடமாக விளங்குகின்றது. வங்காலைப் பிரதேசத்தில் ஏறத்தாழ 149 பறவையினங்கள் காணப்படுகிறது (இலங்கைபறவைகள் கழகம் இ2010) இதன் சிறப்புக்கருதிசர்வதேசரீதியில் முக்கியத்துவம் பெற்றஈரநிலப் பகுதிகளில் ஒன்றாக "ரம்ஸா" வால் 2010 ஆடி மாதம் பிரகடனப்படுத்தப்பட்டது (ரம் ஸா உடன்படிக்கை,2010). வங்காலைக்கடற்சூழற் தொகுதி ஏறத்தாழ 60ற்கு மேற்பட்ட மீனினங்களைக் கொண்டு பொருளாதார ரீதியில் முக்கியம் பெற்ற ஒன்றாக காணப்படுகிறது. அத்துடன் புராதானவரலாற்றுசிறப்புமிக்க அகழ்வாராட்சிப் பகுதியையும் (மாதோட்டம் திருக்கேதீச்சரம்) ஆகியவற்றையும் இது உள்ளடக்கியுள்ளது.





படம்:01 ஆய்வுப்பிரதேச அமைவிடம்

**ஆய்வுப்பிரச்சினை**

வங்காலைபறவைகள் சரணாலயஎல்லையுள் வங்காலைக்கிராமத்தின் மேற்கெல்லையின் ஓர் பகுதி (வங்காலை வடக்கு, வங்காலை கிழக்கு) உள்வாங்கப்பட்டுள்ளதால் எல்லை நிர்ணயம் பற்றிவங்காலைக் கிராமமக்கள் சிலகோரிக்கைகளை விடுத்துவருகின்றனர். இவ் வெல்லை பாரிய அளவு அரச நிலத்தை உள்ளடக்கியிருந்த போதும் வங்காலைக் கிராமத்தின் எல்லைப் புறமாக தனியார் காணிகளும் உள்வாங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே வங்காலைக் கிராமத்தின் அபிவிருத்திக்கு நிலப்பற்றாக்குறை காணப்படும் சந்தர்ப்பத்தில் இவ் வெல்லையினுள் பொதுமக்களின் குடியிருப்புக்கானநிலம், வயல்நிலம், என்பவற்றுடன் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனையில் இருந்தகிறிஸ்தவ தேவாலயம், விளையாட்டுமைதானம், கால்நடைப்பண்ணை, எரிபொருள் நிரப்பு நிலையம், முதியோர் இல்லம், பாடசாலை போன்றவற்றிற்கென ஒதுக்கப்பட்ட காணிகள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் எல்லைமீள்நிர்ணயம் தொடர்பாகமக்கள் சிலகோரிக்கைகளைவிடுத்து வருகின்றனர். அத்துடன் எல்லைமேலும் விஸ்தரிக்கப் பட்டால் தங்களது குடியிருப்புக்களும் அதில் உள்வாங்கப்பட்டுவிடும் என்ற அச்ச உணர்வும் காணப்படுகிறது.

இவ்வெல்லைக்குள் சட்டரீதியற்ற செயற்பாடுகளாக கண்டற் தாவரங்களை அழித்தல், கழிவுகளைக் கொட்டுதல், மற்றும் சட்டரீதியற்ற மீன்பிடி போன்றன இடம் பெறுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மக்களின் பங்களிப்பு மற்றும் விழிப்புணர்வின்றி முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்களின் எதிர்பார்த்த இலக்கு என்பது கேள்விக்குறியாகவே இருக்கும். மேலும் நிறுவனரீதியாக முன்னெடுக்கப்படும் சில அபிவிருத்தித் திட்டங்களும் சரணாலய உயிர்ப் பல்வகைமைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. இவ்வாறான விடயங்கள் சரணாலய முகாமைத்துவத்திற்கு ஓர் சவாலாகவே காணப்படுகினறது. எனவே இவ்வாறான பிரச்சினையைக் கருத்திற் கொண்டு இவ்வாய்வு முன்னேடுக்கப்பட்டுள்ளது.

**தரவும் தரவுப்பகுப்பாய்வும்**

இவ்வாய்விற்காகமுதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன் படுத்தப்பட்டுள்ளது. கள ஆய்வு, நேர்காணல், வினாக்கொத்து போன்றமுறைகள் முதலாம் நிலைத் தரவு சேகரிப்பதற்கான நுட்பங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வினாக்கொத்துஆய்வில் நோக்க அடிப் படையிலான மாதிரி எடுப்பு முறை பயன்படுத்தப்பட்டது. இங்குசரணாலய எல்லைக்குள் உள்ளடக்கப்படும் தனியார்காணி உரிமையாளர்கள் 140 குடும்பங்களாகக் காணப்பட்டது. அக்குடும்பங்கள் மத்தியில் ஒழுங்கு முறையான மாதிரி யெடுப்பு நுட்பத்தைப் பயன்படுத்தி 50% மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு (70 குடும்பங்கள்) வினாக்கொத்து மூலம் சரணாலயம் பற்றியமக்களின் மனோநிலை, எதிர்பார்ப்பு, விழிப்புணர்வு, எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பனபற்றியதகவல்கள் பெறப்பட்டது.

கள ஆய்வானது ஐப்பசி 2015 தொடக்கம் பங்குனி 2017வரை மேற்கொள்ளப்பட்டது. இக்காலப்பகுதிக்குள் இடம்பெயர்பறவைகள் அதிகளவில் தங்கும் காலப்பகுதிகள் இதங்குமிடங்கள் என்பன அவதானிக்கப்பட்டு பறவைகள் அதிகளவில் தங்கும் இடங்கள் படமாக்கப்பட்டது. அத்துடன் சரணாலய எல்லைக்குள் இடம்பெறும் மானிட செயற்பாடுகள் என்பன பற்றிய தகவல்களும் சேகரிக்கப்பட்டது.

வங்காலைக் கிராமத்தின் பாடசாலை அதிபர், கிறிஸ்தவ தேவாலய மதகுரு, கிராமசேவகர், நில அபிவிருத்தி உத்தி யோகத்தர் போன்றோரிடமிருந்து கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலமும் சரணாலய முகாமைத் துவம், அதன் எல்லை நிர்ணயம் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட முறை மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட முதலாம் நிலைத் தரவுகளையும் ஏற்கனவே வெளியிடப்பட்ட இரண்டாம் நிலைத்தரவுகளையும் ஆதாரமாகக் கொண்டு பண்புசார் ரீதியில் விபரணப்பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகளும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முடிவுகள்

சரணாலய எல்லைநிர்ணயம் தொடர்பாக மக்களின் கருத்தை அறியும் பொருட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப் படையில், சரணாலய எல்லை நிர்ண யிக்கப்படுவதற்கு முன்னர் மக்கள் சந்திப்போ அவர்களுடனான கலந்துரையாடல்களோ எதுவும் இடம் பெறவில்லை. வங்காலைக் கிராமத்தின் ஏறத்தாழ 2/3 பகுதி நிலம் சரணாலய எல்லைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதால் அதன் அபிவிருத்திக்கு நிலம் பற்றாக் குறையாக் காணப்படுவதும் ஓர் குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

சரணாலயஎல்லையோரமாகவாழும் மக்கள் அனைவரும் சரணாலயத்தின் முக்கியத்துவம் பற்றிஅறிந்திருந்த போதும் சரணாலயத்தை முகாமைசெய்வதில் மக்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் வகையிலான செயற்பாடுகள் ஏதும் முன்னெடுக்கப்படவில்லை என 92%.மான மக்கள் தெரிவித்திருந்தனர். இங்கு சரணாலய எல்லை நிர்ணயிக்கப் படுவற்கு முன் மக்களிடம் ஓர் தெளிவான விளக்கத்தை வழங்கி மக்களிற்கு விழிப்பு ணர்வூட்டப்படவில்லை. இதனால் எதிர்காலத்தில் மீண்டும் சரணாலய எல்லைவிஸ்தரிக்கப்படுமானால் தமது குடியிருப்பு நிலங்களைதாம் இழக்க நேரிடும் என்ற அச்ச உணர்வு எல்லை நிர்ணயத்தால் பாதிக்கப்பட்ட அனைத்துமக்களிடமும் இருப் பதை அறியமுடிந்தது.

சரணாலய எல்லைக்குள் உள்வாங் கப்பட்ட குடியிருப்பு நிலங்களுக்கு மாற்றீடாக அனை வருக்கும் சரணாலய எல்லைக்குஅருகில் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளது (ஆனாள் நகர், அரச உத்தியோகத்தர் வீட்டுத்திட்டம்). எனினும் மக்களின் வயல் நிலங்கள் சரணாலய எல்லைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. ஆனாலும் தற்போது அந்நிலங்களில் வயற் செய்கைகக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனுமதிவழங்கப்பட்ட போதும் அது தொடர்பாக திருப்தியற்ற நிலையிலேயே மக்கள் காணப்படுகின்றனர். காரணம் அந்நிலங்களை விற்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது என்கின்ற மனோநிலையில் காணப்படுகின்றனர்.


இதனை விட சரணாலய எல்லைக்குள் ஓர் கிறிஸ்தவதேவாலயம், விளையாட்டு மைதானம், கால் நடைப்பண்ணை, எரிபொருள் நிரப்பு நிலையம், முதியோர் இல்லம், பாடசாலை போன்றவற்றிற்கென ஒதுக்கப்பட்ட நிலப்பரப்புக்களும் இதனுள் உள்வாங்கப்பட்டுள்ளது இதனைப் படம் 02 காட்டுகின்றது.

இதனால் தேவாலயத்தில் குறிப்பிட்ட நேரங்களுக்காவது வழிபாடுகளை மேற் கொள்வதற்கு அனுமதிகோரி மக்கள் வேண்டுகோள்விடுத்ததன் காரணமாக அதற்கான அனுமதி வழங்கப்பட்டு குறிப்பிட்ட நேரத்தில் மக்கள் வழிபாட்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது அவ்வாலயத்தை அகற்றுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனம் அறிவித்துள்ளது. இதனை மக்கள் ஏற்றுக்கொள்ளாத மனோநிலையிலேயே காணப்படுகின்றனர்.

விளையாட்டு மைதானம், எரிபொருள் நிரப்பு நிலையம், பாடசாலை போன்றவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிலங்களுக்கு மாற்றீடாக சரணாலய எல்லையை அண்டி நிலம் வழங்கப்பட்டுள்ள போதும், ஏனைய தேவைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களுக்கு மாற்றுக்காணி ஒதுக்கப்படவில்லை.

மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களில் இருந்தும்,நேரடி அவதானிப்பின் மூலமும் சரணாலய எல்லைக்குள் மக்களின் அத்துமீறிய செயற்பாடுகள் இடம்பெறுவது அவதானிக்கப்பட்டது. சரணாலயபகுதிக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படக்குறியீட்டு
விளக்கம்

1. படைமுகாம்
2. குடியிருப்புக்கு ஒதுக்கப்பட்ட நிலம்
3. பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட நிலம்
4. தேவாலயம்
5. வயல் நிலம்

**மூலம்: கள ஆய்வு**

**படம் : 2 சரணாலய எல்லைக்குள் உள்வாங்கப்பட்ட தனியார் மற்றும் பொதுத் தேவைகளுக்கான காணிகள்**

கழிவுகொட்டுதல், ஈரநிலபல்வகைமை கொண்ட கண்டற்தாவரங்கள் அழிக்கப் படல் (படம் 03 அழிக்கப்பட்ட கண்டற் தாவரங்களைக் காட்டுகின்றது) மற்றும் சரணாலய எல்லைக்குட்பட்ட கடற் பிராந்தியங்களில் சட்டரீதியற்ற மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்றனவற்றை இனம்காணக் கூடியதாக இருந்தது. பாரியகண்டல் மரக்குற்றிகள் வெட்டப்பட்டு கடற்பகுதிகளுக்குள் இடப்படுகிறது. இதனால் அப்பகுதியில் அதிகமீன்கள் செறிவடையும். இவ்வாறு மரக்கொப்புகள் சிலமீனவர்களால் குறுகிய நோக்கம் கருதி கடலினுள் போடப்படு வதால் ஏனைய மீனவர்களின் மீன்பிடிவலைகள் சேதமாக்கப்படுகின்றது. இவ்வாறான நட வடிக்கைகள் மக்களின் விழிப்புணர்வற்ற செயற்பாடுகளையே காட்டுகின்றது.

2008இல் சரணாலயமாக பிரகடனப் படுத்தப்பட்ட போது அவ் எல்லையுள் இராணுவமுகாம்கள் அமைக்கப்பட் டிருந்தது. இது தற்போது மேலும் விஸ்தரிக்கப்பட்டு வேறுபட்ட பகுதிகள் இராணுவ தேவைக்காக கட்டிடங்கள் மற்றும் விருந்தினர்



**மூலம்: களஆய்வு**

**படம்:03: சரணாலய எல்லைக்குள் அழிக்கப்பட்ட கண்டற்றாவரங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதிகள், தேனீர்ச்சாலைகள் போன்றன அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனைப் படம் 02 காட்டுகின்றது. இச்செயற்பாடு தொடர்பாக மக்கள் கருத்துத் தெரிவிக்கையில் தமது காணிகளை சரணாலயத்திற்கென உள்வாங்கிவிட்டு இராணுவ தேவைக்கு பெருமளவு நிலத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்ற மனோநிலையும் காணப்படுகின்றது. இது தொடர்பாக சரணாலய எல்லைக்குள் இவ்வாறான செயற்பாடுகள் இடம் பெற்றுவரும் நிலையில் தங்களது கோரிக்கை தொடர்பாகசிறியளவு தூரம் எல்லையை மீள்நிர்ணயம் செய்யும் போது தங்களது கோரிக்கைகள் நிறைவு செய்யக்கூடிய யதாக இருக்கும் என மக்கள் கருதுகின்றனர். சரணாலய எல்லைக்குள் காணப்படும் இராணுவ முகாம், மற்றும் விமான இறங்குதுறை புகையிரதசேவை போன்ற செயற்பாடுகளும் பறவைகளின் இயல்பு நிலையை பாதிப்பதாகவுள்ளது.

சரணாலயத்திற்குள் கூடுதலாக இடம்பெயர் பறவைகளே அதிகம் பருவமாற்றத்திற்கேற்ப அங்கு வந்து தங்கிச் செல்கின்றது. குறிப்பாக வடகீழ்ப் பருவக்காற்று காலங்களிலேயே எமது பிரதேசத்திற்கு இடம் பெயர்கின்றது. குறிப்பாக கார்த்திகை இறுதிப்பகுதியில் இருந்து மாசிவரை அதிகம் தங்கிச் செல்கின்றது. ஏனைய காலப்பகுதியில் உள்ளூர்ப் பறவையினங்களை இங்கு அவதானிக்கமுடிகிறது. சுரணாலய எல்லைக்குள் குறிப்பிட்ட சில பகுதிகளி லேயே பருவ காலங்களில் அதிகம் தங்கிச் செல்வதை அவதான்க்கமுடிகின்றது இதனைப் படம் 04 காட்டுகின்றது.

மேலும்நிறுவனரீதியாகமுன்னெடுக்கப்படும் சிலசெயற்பாடுகளும் உயிர்ப் பல்வகைமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாகவே உள்ளது. உதாரணமாக தற்போதய காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய வறட்சி நிலையை




**மூலம்: களஆய்வு**

**படம்:04 அதிகம் பறவைகள் தங்குமிடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாளிப்பதற்காக புதுப்பிக்ககூடிய சக்தி வளப்பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கில் நாட்டில் பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. அதன் ஓர் அங்கமாக தற்போது கடற்கரையோரங்களில் காற்றாலைகளை நிறுவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. ஊதாரணமாக வங்காலை சரணாலயத்தின் எல்லையை அண்மித்து மன்னார் தீவின் தெற்குக்கடற்கரையோரமாக காற்றாலைகள் நிறுவுவதற்கான திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பாக நோக்கின் ஐரோப்பாவில் இருந்து பருவகால மாற்றத்திற்கேற்ப இடம்பெயரும் பறவைகள் நீண்டதூரம் பயணித்து ஆசியாக் கண்டத்தை கடந்து இந்தியாவின் தென்கரையோரமாக வந்தடைந்து இராமேஸ்வரம், ஆதாம் பாலத்தினூடாக மன்னார்த் தீவை வந்தடையும் பாதைகளையண்டியே இலங்கை மின்சார சபையினால் காற்றாலைகளை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது இதனைப் பினவரும் படம் 05 காட்டுகின்றது.

இத்திட்டத்தினால் உயிர்ப்பர்வகைமைக்கு பாதிப்பு ஏற்படும் என்று கருதி பல்வேறு சூழலியலாளர்களின் எதிர்ப்பால் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது நிறுவன ரீதியிலான இணைந்த செயற்பாடின்மையையே




**படம்: 05 காற்றாலை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டபிரதேசம்**

காட்டுகின்றது. குறித்த ஓர் நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் சூழற் பாதுகாப்புச் செயற்திட்டம் இன்னெரு நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் சூழற் பாதுகாப்புத் திட்டத்தைப் பாதிப்பதாகவுள்ளது என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டிய விடயமாகக் காணப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் சரணாலய நிலைத்திருப்பிற்கு சவாலாகக் காணப்படுகின்றது.

**ஆலோசனைகள்**

சரணாலய எல்லைக்குள் இடம்பெறும் விழிப்புணர்வற்ற செயற்பாடுகளை குறைப் பதற்கு முதலில் மக்களுக்கு சரணாலயத்தின் முக்கியத்துவம் அதனை எவ்வாறு பாதுகாக்கலாம் எவ்வாறான செயற்பாடுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகளின் இயல்பு நிலையை பாதிக்கும் என்பது தொடர்பாக பூரண விழிப்புணர்வு ஊட்டப்படவேண்டும்.

எல்லைக்குள் இடம்பெறும் விழிப்புணர்வற்ற செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு சரணாலய முகாமைத்துவத்துள் மக்கள் குழுக்களை ஒருங்கிணைத்துக் கொள்வதை உறுதிசெய்தல் வேண்டும்.

சரணாலய எல்லை நிர்ணயம் தொடர்பாக ஏற்படும் சாதக,பாதக விளைவுகளை முன் கூட்டியே மக்களுக்கு தெரியப்படுத்தி யிருத்தல் வேண்டும். ஆனாலும் தற்போதாவது இது தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து மக்களின் கோரிக்கைகளை கவனத்திற் கொண்டு செயற்பாடுகளை முன்னெடுக்கப்படவேண்டும்.

தற்போது சரணாலய எல்லைக்குள் மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப சில செயற்பாடுகள் அனுமதிக்கப்பட்டுள்து. இவ்வனுமதிகள் கூட சரணாலய உயிர்ப்பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வண்ணம் எவ்வாறான செயற்பாடுகள் தவிர்க்கப்படவேண்டும் என்பது தொடர்பாக அம்மக்களுக்கு பூரணவிளக்கம் வழங்கப்படவேண்டும். உதாரணமாக பறவைகள் அதிகம் தங்கும் காலங்களில் கூடிய சத்தத்துடன் ஒலிபெருக்கி பாவனை, விவசாய செய்கைக்கு நிலத்தை பயன்படுத்தல், உழவியந்திரப்பாவனை போன்றன பறவைகளின் இயல்புவாழ்க்கையை குழப்புவதாக இருக்கும் எனவே இதுபற்றி தெளிவான விளக்கம் இருந்தால்த்தான் இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்த்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இச்சரணாலயத்தினுள் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் பறவைகளை அவதானிப்பதற்கான (Bird Watching) ஒழுங்குகள் ஏற்படுத்தப் படுவதுடன், அப்பிரதேசத்தையண்டி சில உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை விருத்தி செய்வதனூடாகவும் அதனை ஓர் சுற்றுலாமையமாக விருத்தி செய்வதனூ டாக சூழற்பாதுகாப்பை உறுதி செய்வதனூடாக வும் வங்காலைக் கிராமமக்களும் பொருளாதார ரீதியாக நன்மையினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் ஓர்பிரதேசத்தில் பாதுகாக்கப்பட்ட பிரதேசமோ அல்லது சரணாலயங்களோ அமைவு பெற்றுக்காணப்பட்டால் இவ் வெல்லையில் இருந்து 500m வரை எவ்வித மானிடச் செயற்பாடுகளும் இடம்பெறுவதை தவிர்த்துக்கொள்ளவேண்டும் (தேசிய சூழற் சட்டம்,2003) என்பது தேசிய சட்டமாக உள்ளது. இதனை மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டிய அதேவேளை வங்காலை கிராமத்தின் அபிவிருத்திக்கான நிலம் என்பது மிகவும் பற்றாக்குறையாக இருப்பதனால் எல்லை நிர்ணயம் தொடர்பாக அப்பகுதி மக்கள் அதிருப்தியுடன் காணப்படுவதுடன் எதிர்காலத்தில் மேலும் எல்லை விஸ்தரிக்கப்பட்டால் மேலும் தமது நிலங்கள் பறிபோகும் என்ற அச்ச உணர்வில் அனைத்து மக்களும் காணப்படுகின்றனர். இந்நிலைமையை போக்கி சரணாலய நிலைத்திருப்பில் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக மக்களின் கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டும், பறவைகளின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாத வகையிலும், கள ஆய்வின் முலம் இனம் காணப்பட்ட பறவைகள் அதிகம் தங்குமிடங்களைஅடிப்படையாகக்கொண்டும், சூழற் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டும் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட எல்லையை சற்று முன்னோக்கி நகர்த்தக்கூடிய சாத்தியப்பாடுகள் இருப்பதனால் வங்காலைக் கிராமத்தின் தெற்குப் புறமாகக் காணப்படும் எல்லையை தற்போதய எல்லையிலிருந்து 0.75கி.மீ முன் நகர்த்துவதனால் பொதுத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிகளும் இ விவசாய நிலங்களும் விடுவிக்கப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றது படம் 06 புதிய எல்லையைக் காட்டுகின்றது.

இதனால் மக்களின் கோரிக்கைகள் நிவர்த்தி செய்யப்படுவதுடன் அவர்களினுடைய ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளக்கூடிய சாதகமான சூழல் ஏற்படுத்தக்கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன.

சரணாலய எல்லைக்குள் பாதுகாப்பு நோக்கில் முன்னெடுக்கப்படும் தள்ளாடி இராணுவ முகாம் விஸ்தரிப்பு செயற்பாடுகளை மட்டுப்படுத்தப்படவேண்டும் என்பது இப்பகுதி மக்களின் வேண்டுகோளாக உள்ளது.

காற்றாலை நிர்ணயம் தொடர்பில் தெளிவானஇ ஆழமான சூழற்தாக்க மதிப்பீட்டறிக்கையுடன் ஒருங்கிணைந்த நோக்கில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் செயற்படவேண்டும். குறிப்பாக வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம்இ கடற்கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்இ மத்திய சுற்றாடல் அதிகார சபைஇ இலங்கை மின்சாரசபை போன்ற நிறுவனங்களிற்கிடையிலான ஒருங்கிணைந்த செயற்பாடு இடம்பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும். இவற்றினூடாக சரணாலய நிலைத்திருப்பிற்கேற்ற முகாமைத்துவ செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.




மூலம்: களஆய்வு

படம் :06 புதிய எல்லை நிர்ணயத்தைக் காட்டும் படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


1. Kotagama.S.W,Leonard pinto,Samarakoon.I(1989)Wetland in Srilanka: Asian wetland Directory,The World conservation Union(IUCN).538-595
2. Ajith,K. Silva.D.(2011).Description of Protected Area system, Action Plan for Implementing the Convention on Biological Diversity's Programme of Work on Protected Areas, Ministry of Environment ,Battaramulla.
3. Ramsar Convention Secretariat.(2017) , Ramsar sites
4. Available: http://www.ramsar.org/sites-Countries
5. Ceylon Bird Club.2013.Bird Watching sites
6. Available: http://www.bird and wildlifeteam.com
7. Gazette Notification of Srilanka. 2008.09.08, Srilanka Government Press
8. National Environmental Act,2003, Subsidiary Legisla


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டமானாற்றுப்பள்ளத்தாக்கினை மையப்படுத்திய சர்வதேச போக்குவரத்து மார்க்கங்களும் இடைக்கால வட இலங்கையின் சமூக பொருளாதார வரலாற்றில் அதன் செல்வாக்கும் - ஒரு வரலாற்றாய்வு

செ. கிருஷ்ணராசா

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கைத்தீவில் நீர்ப்பாசனவியல் நாகரிகம் மற்றும் நீரியல் தொழினுட்பம் தோற்றம் பெற்று அது தழைத்தோங்கிய காலம் வரைக்கும் அதாவது கி.பி.10ஆம் நூற்றாண்டு வரைக்கும் உள்நாட்டு-வெளிநாட்டு வாணிப நடவடிக்கைகள் பெருமளவிற்கு அரசநிறுவனங்களினூடாகவே முன்னெடுக்கப்பட்டு வந்திருந்தமையை இலக்கிய, சாசனவியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. ஆனால் கி.பி.10ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து பொலனறுவை இராசதானியாக்கப்பட்டதன் பின்னர் இலங்கையின் பொருளாதார வலைப்பின்னல் அமைப்பில் அரசசார்பற்றதும் சுதந்திரமானதுமான வணிக நிறுவனங்கள் பல நேரடியாக பங்கு கொண்டு, வாணிபத்தில் ஈடுபட்டு வந்திருந்தமைக்கான சான்றுகள் இலங்கைத்தீவு முழுவதிலுமிருந்து கிடைத்துள்ளன. அந்த வகையில் மத்திய கால இலங்கை மக்களின் பொருளியல் வாழ்க்கை முறையானது மையஆட்சிமுறையைத்தழுவியும்,பிராந்தியப் பொருளாதார கூட்டுநிறுவனங்களாகத்தொழிற்பட்ட வாணிக நடவடிக்கைகளைத் தழுவியும் சர்வதேச வணிக கூட்டுக்களின் இணைவுடனும் வளர்ச்சியடைந்திருந்தது. இலங்கை வரலாற்றில் மத்தியகாலம் என வரையறை செய்யப்பட்டுள்ள காலப்பரப்பானது பன்மொழி, பன்மத, பல்லினச் சமுதாயங்கள் வாழ்ந்த ஒரு காலகட்டமாக அமைந்தமை பொருளியல் , பண்பாட்டுத்துறை வளர்ச்சிக்கான அடிப்படையாயிற்று.மத்தியகாலம் என வரையறுக்கப்படும் சமத்துவ- சமாதான காலத்தின் பொற்காலம் மகாயான பௌத்தத்தின் வளர்ச்சியுடன் மலர்ந்தது. இக்காலகட்டத்தில் இலங்கையில் அபரிமிதமாகத் தோற்றம் பெற்ற தமிழ் மற்றும் சிங்கள மொழியில் எழுதப்பட்ட சாசனங்கள் மற்றும் இலக்கிய வடிவங்கள் இவ்விடைக்காலத்தின் சிறந்த பொருளியல் வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்றன. இலங்கைத்தீவு அடங்கலாக இக்குறிப்பிட்ட வளர்ச்சிநிலை எட்டப்பட்டிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அபரிமிதமாகக் கண்டெடுக்கப்படும் மத்தியகாலத்திற்குரிய தங்கம், வெள்ளி, செப்பு நாணயங்கள் இப்பொருண்மியத்தின் வளர்ச்சி நிலையை உறுதிப்படுத்துகின்றன. இப்பின்னணியிலே உள்நாட்டு பொருண்மிய மையங்களான நகரங்கள், துறைமுகங்கள், கிட்டங்கிகள், தெருமூடி மடங்கள் எனப் பல்வகையான சமூக, பொருளாதார நிறுவனங்கள் போக்குவரத்து வலைப்பின்னல் அமைப்பினால் இணைக்கபட் பட்டிருந்தன. எனவேநீரியல்வள நாகரிகமொன்றின் பல்பக்கப் பொருளியல் வாழ்வுமுறையின் பங்காளிகளாக இலங்கை மக்கள் மாற்றமடைந்திருந்த அதேவேளை வடஇலங்கைத் தமிழ் மக்களும் இம்மத்திய காலப்பபரப்பில் இலங்கையின் பொருளாதார விருத்தியில் பங்கெடுத்திருந்மையினை உறுதிப்படுத்த முடிகின்றது. வடஇலங்கைத்துறைமுகங்களில் இருந்தும், வழுக்கியாறு, தொண்டமானாறு போன்ற நீர்வழிப்போக்குவரத்திற்கு பயன்பட்ட பள்ளத்தாக்கு வெளிகளிலிருந்தும் கண்டுபிடிக்கப்பெற்ற சாசன மற்றும் தொல்லியல், நாணயவியற் சான்றுகள் இம்மத்திய கால வடஇலங்கையில் ஏற்பட்டிருந்த பொருளாதார விருத்தியை உறுதிப்படுத்தி நிற்கின்றன. இவ்வாய்வுக் கட்டுரையில் தொண்டமானாற்றுப்பள்ளத்ததாக்கின் பங்களிப்பு வடஇலங்கையில் இம்மத்தியகால பொருண்மிய விருத்தியில் கொண்டிருந்த நிலையை ஆராய்வதனையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவ்வடிப்படையில் அதன் பிரதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் மையங்கள், அவற்றினைச் சந்தைப் பொருளாதாரத்துடன் இணைத்து வைத்த போக்குவரத்து வலைப்பின்னல் அமைப்பினை ஏற்படுத்த உதவிய வணிக வழிகள், கனிம வளங்கள் மற்றும் பண்பாட்டு மையங்கள் தொடர்பாக இவ்வாய்வுமுயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** பொருளாதார வலைப்பின்னல், பன்மைச்சமூகம், மத்தியகாலம், வணிகக்கூட்டுக்கள், மகாயான பௌத்தம், வாணிபப் பண்பாட்டு முனைப்புக்கள், சமுத்திரவியல் முகப்பு, உப்பு வாணிபம், யானை வர்த்தகம், வணிக கணங்கள்.

**ஆய்வு முறையியலும் வரையறையும்**

யாழ்ப்பாணக் குடாநாடு தென் இந்தியாவுடன் மிகநெருக்கமான பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்த ஒரு பகுதியாகும். இப் பண்பாட்டுத் தொடர்பின் செல்வாக்கிற்கு அதிகம் உட்பட்டதாக தொண்டமானாற்று பள்ளத்தாக்கு காணப்படுகின்றது. வடமராட்சிக்குள் அடங்கும் இத் தொண்டமனாற்றுப் பள்ளத்தாக்குப் பிரதேசம் தனித்துவமான பண்பாட்டுப்பரப்பைக் கொண்டுள்ளது. ஆனால் வரலாற்றாசிரியர்களினதும் தொல்லியல் ஆய்வாளர்களதும் கவனத்தினைப் பெரிதும் ஈர்க்காத நிலையில் இருந்துவரும் தொண்டமானாற்று வெளியானது மத்தியகால வடஇலங்கையின் வரலாற்றிலும் அதன் பொருளாதார ஈட்டத்திலும் பங்கு கொண்டிருந்தமையினை வரலாற்று மூலாதரங்களின் அடிப்படையில் தெளிவுபடுத்தவேண்டிய பொறுப்பு எமக்குரியதாகின்றது.

வளர்ச்சியடைந்து வரும் தொல்லியல் ஆய்வுகளினால் வெளிக்கொணரப்படும் சுதேச மரபுகளையும், பண்பாடுகளையும், காலந்தோறும் வளப்படுத்திய வாணிகக் கட்டமைப்பு பற்றிய இவ்வாய்வினை எல்லைப்படுத்துவது கடினமானதோர் விடயமாகும். அதாவது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் மேலாய்வுகளினால் கிடைத்து வரும் தொண்டமனாற்றுப் பள்ளத்தாக்கினை மருவி வளர்ச்சியடைந்திருந்த வாணிகப்பண்பாட்டு மையங்கள் பற்றிய தகவல்கள் இதுவரையில் வெளிக் கொணரப்படாத விடயங்களாக உள்ளன. இந்நிலையில் மத்தியகாலப்பரப்பிற்குரியவை என அடையாளம் காணப்பட்ட பண்பாட்டு எச்சங்கள் பற்றிய விடயங்களையும் அவற்றிற்கு அடிப்படையாக அமைந்த உற்பத்தி ஊடகங்களையும் வெளிக் கொணர்வதன் ஊடாக யாழ்ப்பாணத்தில் தொண்டமனாற்றுப் பள்ளத்தாக்கின் முகத்துவாரத்திலிருந்து, உப்பு வல்லையூடாக முள்ளிக்கு அப்பால் அம்பன், குடத்தனை, நாகர்கோயில், மணற்காடு என நீண்டு சென்று நல்லதண்ணித்தொடுவாய் வரையான பிரதேசத்து வாழ்வியற்கோலங்களை வாணிபப் பொருளியல் அடிப்படையில் எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இவ்வாறான தகவல்களை வெளிக் கொண்டுவருவதன் மூலம் மத்தியகால யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார வலைப்பின்னலின் மூலங்களை இனங்கண்டு கொள்ள முடியும். எனவே இவ்வாய்வுப் பரப்பினை மிகப்பரந்த ஒரு பரப்பிற்குள் உள்ளடக்கிய வகையில் பண்பாட்டுக் கிராமங்களை மட்டும் மையப்படுத்தியதாகக் கொண்டு இதனை ஒரு தொடக்க நிலை ஆய்வாக வடிவமைத்துக்கொள்ள முடிந்தது. இவ்வாய்வின் காலப்பரப்பினை மத்தியகாலம் அதாவது கி.பி.10ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.17ஆம் நூற்றாண்டுகள் எனக் கொண்டு, அக்காலப்பரப்பிற்குரியதான வரலாற்று மூலங்களின் அடிப்படையில் விபரண மற்றும் ஒப்பீட்டியல் முறையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கின் பௌதீக அம்சங்கள், வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த தென்னிந்திய வணிகத் தொடர்புகளுக்கும், பாரம்பரிய- பழமையான வாழ்வுமுறைகள், பழக்கவழக்கங்கள், தனித்துவமான பண்பாட்டுக் கோலங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிலங்கையுடனான சமயத்தொடர்புகள். போன்ற பல அம்சங்களின் நிலைபேற்றிற்கும் வழிசமைத்திருக்கக் காரணமாகின. குடா நாட்டினுள் ஒரு சிறிய குடாநாடாக விளங்கும் வடமராட்சியின் தனித்துவம் இற்றைவரைக்கும் பேணப்பட்டுக் கொண்டு வரப்படுவதற்கும் இத்தொண்டமானாற்றின் அமைப்பே காரணமாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த பௌதீக இயல்புகளையும் சிறந்த இயற்கை மூலவளங்களையும் கொண்டுள்ள இப்பள்ளத்தாக்குப் பிராந்தியம் இதுவரையில் வரலாற்று அடிப்படையிலோ அல்லது பொருளாதார வளர்ச்சி நோக்கிலோ ஆராயப் படாதுள்ள நிலமையைக் காணக் கூடியதாக உள்ளது.

**தொண்டமானாறு தொடர்பான இலக்கிய வரலாற்று மூலங்கள்**

தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கை மையப்படுத்திய வகையில் மிகத் தொன்மையான குடியிருப்புக்களும், ஜீவனோபாயத்திற்கான மனித செயற்பாடுகளும் நிகழ்ந்து வந்திருந்தமைக்கான தொல்லியற்சான்றுகள் கிடைத்துள்ளன. இந்நதிப்பள்ளத்தாக்கின் முகத்துவாரப் பரப்பிலிருந்து உப்புவல்லை, சூரியவெளி, மண்டான், சோழங்கன், கரணவாய், கரவெட்டி, கல்லுவம், சோழஉப்புப் புலம்(சோனப்பு), முள்ளி வரையான மக்கள் வாழ்விடங்கள் தொடர்பான பண்பாட்டு வரலாற்றினை அறிவதற்கு எமக்கு போதியளவில் இலக்கிய மூலங்கள் காணப்படாத நிலையிலும் கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாண வைபவக் கௌமுதி, யாழ்ப்பாண வைபவம், யாழ்ப்பாணக் குடியேற்றம் போன்ற வரையறுக்கத்தக்கவரலாற்று இலக்கிய நூல்களைக் கொண்டே இப்பிரதேசத்தில் நிறுவப்பட்ட மத்தியகாலக் குடியேற்றங்கள் தொடர்பான வரலாற்று வளர்ச்சியை அறிய முடிகின்றது (கிருஸ்ணராசா, செ., குடியேற்றங்களால் உருவான தொன்மங்கள் பற்றிய ஆய்வு, சிந்தனை, 2015, பக்.76-79). இந் நூல்கள் பெரும்பாலும் எடுத்துக் கொண்ட விபரத்தை அதாவது மத்தியகாலக் குடியேற்றங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றனவேயல்லாமல் மக்களது வாழ்வியல், பொருளியல் வளர்ச்சி தொடர்பான விடயங்கள் எவற்றையும் குறிப்பிட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கத்தக்கது.

இரண்டாம் நிலையிலுள்ள நூல்கள் வரிசையில் செ.இராசநாயகத்தின் புராதன யாழ்ப்பாணம், ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம், சுவாமி ஞானப்பிரகாசரின் யாழ்ப்பாண வைபவ விமர்சனம், எஸ். சிவலிங்கராஜா எழுதிய வடமராட்சியின் கல்விப் பாரம்பரியம், அமரர். சித்தர் சின்னத்துரை நினைவு வெளியீடான கரவெட்டியின் வாழ்வியல் (Conventional Life of Karavaddy), ப.புஸ்பரட்ணத்தின் யாழ்ப்பாணத்து வாழ்வியல், இ.பாலசுந்தரத்தின் இலங்கையின் இடப்பெயர் ஆய்வு: வடமராட்சி-தென்மராட்சி போன்ற நூல்கள் எமது ஆய்விற்கு வளம் சேர்த்தன. இவற்றினைவிட களஆய்வுகள் மற்றும் நேரடி அவதானம் மூலம் பெறப்பட்ட தகவல்கள், திருவடியாள் என்ற பெயரில் ஆய்வுக் கட்டுரைகள்-தரவுகளைத் தாங்கி வடமராட்சிப் பிரதேசத்தின் பண்பாடு தொடர்பான விடயங்களை மையப்படுத்தி ஆண்டு தோறும் வெளியிடப்படும் பிரதேசமலர், மற்றும் இணையத்தளங்கள் ஊடாகப் பெறப்பட்டதகவல்கள், வல்வெட்டித்துறை யிலுள்ள ஆவணக் காப்பகத்திலிருந்து பெறப்பட்ட தகவல்கள், கையேடுகள் என்பனவும் இவ்வாய்வு முயற்சிக்கு உதவிய தகவல் தேட்டங்களாகும்.

இந்த ஆய்வினை வழிப்படுத்துவதன்பொருட்டு மூன்று கருதுகோள்களை பின்வரும் கருத்துநிலைகளில் குறிப்பிடமுடியும். அவையாவன: தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கானது,

1. பொருளீட்டத்திற்கான கனிம வளங்களைக் கொண்டுள்ள பௌதீக உறுப்பாக விளங்கி வருகின்றமை.
2. குடாநாட்டின் அரசியல், பண்பாட்டுத் தளநிலமையானது காலங்களினூடாக மாற்றத்திற்குள்ளாகி வந்திருந்த நிலையிலும் வடமராட்சி மரபுகளையும் அவற்றின் அடையாளங்களையும் தந்த பண்பாட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களைப் பேணிப்பாதுகாத்து வந்த ஓர் அரணாக விளங்கி வந்திருந்தமை.

3. உள்ளூர் உற்பத்திப்பொருளாதார வாணிபப் போக்குவரத்து இணைப்புக்கான ஒரு புவியியல் அலகாக விளங்கி வந்துள்மை.
4. மத்திய காலத் தென்னிந்திய - வட இலங்கையின் சமூக, பொருளாதார நிறுவனங் களை ஒன்றிணைத்திருந்தமை.

**ஆற்றுப்போக்கின் மூன்று இயற்கைப் பிரிவுகள்**

34 மைல் நீளமான இப்பள்ளத்தாக்கின் போக்கானது மூன்று பிரதான பகுதிகளாக வகுத்து ஆராயத்தக்கதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. அவையாவன:

1. தொண்டமனாற்றின் முகத்துவாரப்பகுதி
2. உப்பு-வல்லைச்சந்தியிலிருந்து முள்ளி வரையுள்ள பள்ளத்தாக்குப் பரப்பு
3. முள்ளியிலிருந்து நல்லதண்ணீர்த் தொடுவாய்-சுண்டிக்குளம் வரைக்குமுள்ள கண்டல் பற்றைக்காட்டுப் பள்ளத்தாக்குப் பரப்பு.

இந்த மூன்று பிரிவுகளையும் உள்ளடக்கிய இப்பள்ளத்தாக்கானது அவ்வப்பிரிவுகளில் தனித்துவமானபௌதீகஇயல்புகளையும், பௌதீக இயல்புகளுக்கேற்ற ஜீவனோபாய உத்திகளையும் பண்பாட்டு மூலங்களையும் இற்றைவரைக்கும் கொண்டு விளங்குவதனையும் அப்பின்னணியில் உருவான பண்பாட்டுத்தோற்றப்பாடுகளையும் தாங்கியவண்ணம் மளிர்வதனைக் காண முடிகின்றது.

முகத்துவாரப்பரப்பானது இருமருங்கிலும் நெருக்கமான கோயிற்குடியிருப்புக்களையும் தனித் துவமான சமய- பண்பாட்டுக் கோலங்களையும் தாங்கிய வண்ணம் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. சமூக, பொருளாதார, பண்பாட்டுச் சேவை நிறுவனங்கள் இப்பகுதியில் நன்கு வளர்ச்சியடைந் துள்ளமையானது எமது ஆய்விற்கு வளமூட்டுவதாக உள்ளது. தொன்மங்கள் நிறைந்த ஒரு பிராந்தியமாகவும் இம்முகத்துவாரப்பரப்பு விளங்கி வந்துள்ளமையின் பின்னணியில் வடஇலங்கையின் பண்பாட்டு வளர்ச்சிக்கு தொடர்ச்சியான வகையில் பங்களிப்பு வழங்கிய தளமாகவும் திகழ்ந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


இரண்டாவது பிரிவாகக் கொள்ளப்பபடும் உப்புவல்லைச் சந்தியிலிருந்து முள்ளிவரைக்கும் உள்ள நீண்ட குடியிருப்புப் பரப்பானது எமது ஆய்வு நோக்கில் முக்கியமான பிரதேசமாகக் காணப்படுகின்றது இக்குறிப்பிட்ட குடியிருப்புப்பிராந்தியமே செழிப்பான பயிர்ச் செய்கையின் பொருளாதார வளங்களையும் அவற்றினை மையப்படுத்தி வளர்த்தெடுக்கப்பட்ட பாரம்பரியக் பண்பாட்டு நிறுவனங்களையும், போக்குவரத்துப் பாதைகள், சந்தைகள், இடுகாடுகள் போன்றனவற்றையும் கொண்டு திகழ்வதனையும் காணமுடிகின்றது. இக் குடியிருப்புப் பரப்பே மத்தியகால யாழ்ப் பாணத்தில் பிரமாண்டமான வளம் சேர்க்கும் பொருளாதார நடவடிக்கைகளையும், அரசியல் பண்பாட்டுத் தொடர்புகளையும், பொருளியல் ஈட்டத்தின் தன்மைகளையும் அங்கிருந்து கிடைக்கப்பெற்றுள்ள தொல் பொருட்சின்னங்களும், பண்பாட்டு மூலங்களும் உறுதிப்படுத்தியுள்ளன.


உப்பு வல்லை சந்தியில் இருந்து ஆற்றுப்பள்ளத் தாக்கை அண்டி கல்லுவம், மண்டான், சோழங்கன், நொத்தாரிசுதோட்டம், அந்திரான், வல்லியாவத்தை, ஆவடி எனும் கிராமங்களை உள்ளடக்கிய கரணவாய் மேற்கு- து/349, முதலைக்குழி, விபுலானந்தா, வீரபத்திராயன் என்பன கரணவாய் தெற்கு-து/ 348 மணலாவடி, உச்சில், மணற்பாத்தி, நுகவில், கலட்டி, ஆனைப்பந்தி, குருக்கள்பகுதி என்பன கரணவாய் கிழக்கு- து/351, மத்தோனி, வெல்லன் என்னும் பகுதிகள் மத்தோனி து/366 தச்சன்தோப்பு, சம்பந்தர் கடையடி, பெரிய தோட்டம்; சத்தியதோட்டம் என்பன கரவெட்டி மத்தி- து/367 கரவெட்டி கிழக்கு து/368 இல் காட்டுப்புலம், தெடுத்தணை துன்னாலை தெற்கில் து/370 கலிகை, வேம்படி, கட்டைப்பலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடவத்தை, மாலிசந்தி, கிழான், வானன்கிரங்சி, குமரன்குளம், தல்லையப்புலம், முள்ளி என்பனவும் கப்புது, அந்தணன்திடல், கரம்பன் என்பன கப்புது து/ 382 எனும்கிராம சேவகர் பிரிவினுள்ளும் அடங்கும் (வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச அலுவலகக் கையேடு,2014). இக்குறிப்பிட்ட






Source- Provincial Irrigation Dept. Project Report - 1985

கிராமங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட பண்பாட்டு மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு தொண்டமானாற்றுப்பிராந்தியம் வரலாற்றில் பெற்றிருந்த இடத்தினை ஆய்வு செய்துகொள்ளமுடிகின்றது.

**தொண்டமானாற்றின் தரையமைப்பும் கனிம பொருட் செறிவும்**

இப்பள்ளத்தாக்கின் கீழ்ப்பரப்பானது உவர்மண் செறிந்த பிராந்தியமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்படும் மொத்த உவர் நீர் பரப்பானது 71.6 சதுர கிலோமீற்றர் (28 சதுரமைல்கள்) ஆகும். இதில் 13.9 சதவீதம் தொண்டமானாறு பள்ளத்தாக்கில் காணப்படுகின்றது. தொண்டமானாறு பள்ளத்தாக்கானாது அதன் முகத்துவாரத்தில் இருந்து சுண்டிக்குளம் வரைக்கும் 34 மைல் நீளத்தை உடையது. இதன் அகலம் எல்லா இடங்களிலும் ஒரே அளவினதாக இல்லை. வரணி,நாவற்காடு, அம்பன் பகுதிகளை அண்டி 2.05 கிலோ மீற்றர்களாகவும், குடத்தனை பகுதிகளை அண்டி ஒடுங்கி 1.00 கிலோ மீற்றர் அகலத்தையும், வல்லை பாலம் சார்ந்து விரிவடைந்து 5.00 கிலோ மீற்றர் அகலத்தையும் பின்னர் படிப்படியாக ஒடுங்கி சென்று முகத்துவாரப்பகுதியில் 2.00 மீற்றர் அகலத்தையும் கொண்டு காணப்படுகிறது. கோடை காலத்தில் நீரின் அளவு குறைவடைவதுடன் மாரி காலத்தில் நீர் நிரம்பியும் காணப்படும். முகத்துவாரத்தில் கரையோரமணலும் கரையோரங்களில் மஞ்சள் கபில நிறம்கலந்த மண்ணும் காணப்படுகின்றது. வல்லைப் பகுதி பரந்த உவர்ப் பகுதியாகவே உள்ளது. வல்லைப் பாலத்திற்கு மேற்குப் பகுதியில் தொண்டமானாறு வரையிலும் நீரின் அளவு குறைவடைந்த போதிலும் வற்றுப் பெருக்கின் செல்வாக்கு காரணமாக குறைந்தளவில் நீரைக் கொண்டதாக காணப்படுகின்றது. இதனாலேயே இப் பகுதியில் வருடம் முழுவதும் மீன்பிடியில் ஈடுபட முடிகிறது.

தொண்டமனாறு முகத்துவாரதத்திலிருந்து குடத்தனைவரை ஏறக்குறைய மேற்கு கிழக்காக செல்லும் இந் நதியானது குடத்தனையிலிருந்து சுண்டிக்குளம் வரை வடக்குத் தெற்காக திரும்பி யாழ்ப்பாண கடனீரேரி வரை செல்லும் இது 34 மைல் நிலைக்குத்தாக 28.08 சதுர மைல் பரப்பினையும் 225 சதுர கிலோமீற்றர் பிரதேசத்தினை பின்னணி நிலமாகவும் கொண்டுள்ளது என செ.பாலச்சந்திரன் தனது கணிப்பின் படி கூறியுள்ளார்.இதன் நிலப் பயன்பாட்டை இரு தெளிவான பிரிவுகளாக வகுக்கலாம் என்றும் நெல் உப உணவுப் பயிர்கள் பயிரிடப்பட்ட ஒரளவு அபிவிருத்தி அடைந்த 80 வீதமான நிலப்பரப்பினைக் கொண்ட பகுதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றையது கண்டல் காடு , புதர் தரிசு நிலம் என 75 வீதமான நிலப்பரப்பினைக் கொண்ட குடத்தனையலிருந்து சுண்டிக்குளம் வரையிலான பகுதியாகும். இங்குள்ள விவசாய நிலத்தினை நம்பி வாழுகின்ற மக்கள் இவ் ஏரியின் வடகிழக்கு பக்கத்தில் வடமராட்சி கரையோரக் கடலை நம்பி வாழுகின்றனர். தொண்டமானாற்றில் இருந்து சுண்டிக்குளம் வரை வட கிழக்குப் பக்கத்தில் வடமராட்சியையும் வட மேற்கில் வலிகாமத்தையும் தெற்கு மேற்கு பக்கங்களில் தென்மராட்சியையும் எல்லைகளாக கொண்டுள்ள தொண்டமானாறு ஏரி குறித்து அதன் அமைப்பு வடிவத்தினை பின்வருமாறு கூறலாம்.

வல்லைப் பாலத்தில் இருந்து சாவகச்சேரி பாலம் வரையிலான பகுதியானது சிறந்த உப்பு விளையும் கனிமபொருட்செறிவு மிக்க பிரதான பகுதியாகும். கோடைக்காலத்தில் வற்றுப்பெருக்கின் செல்வாக்கிற்கு உட்படுகின் றமையால் அதிவரண்ட பருவத்தில் நீர் முற்றாக வற்றி விடுகின்றது. இதனால் மாரி காலத்தில் மட்டும் சிறிதளவில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு இவ்வேரியில் வாய்ப்பு உள்ளது. சுமார் 4 கிலோ மீற்றர் நீளமான இப்பரப்பில் இற்றைவரைக்கும் மீன்பிடித் தொழில் நடைபெற்றவண்ணம் உள்ளது.

வண்ணாத்திப்பாலம் அல்லது பூதன் குளிப்பாலமானது (சாவகச்சேரி பாலத்தில்) பிரித்தானியரால் முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட முதற் பாலம் என்ற வகையில் வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் இப் பாலத்திலிருந்து முள்ளி பகுதி வரையிலான பகுதியானது சுமார் 2 கிலோ மீற்றர் நீளமுடையது. இப்பகுதியும் மாரி காலத்தில் மட்டுமே நீர் தேங்கி நிற்கும் பகுதியாகும். கரவெட்டி கிழக்குப்பகுதி மக்கள் இப்பகுதி சார்ந்தே மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். கடுங்கோடை காலத்தில் நீர் அறவே வற்றி விடுகின்றது.

முள்ளிப் பாலம் தொடக்கம் முள்ளியான் வரையில் அமைந்த பகுதியானது 30 கிலோ மீற்றர் நீளமுடையது. இது உவர் ஏரிக்குரிய தாவரங்கள் கொண்ட பகுதியாகும். (சிவகுமார்,ஜெ.,1973,8) பறவைகளின் சரணாலய பகுதியாக விளங்கும் இப்பகுதியில் பறவைகளின் எச்சம் ஏரி வாழ் மீன்களுக்கான சத்துப் பொருட்களாக மாரிகாலத்தில் கிடைக்க ஏதுவாகின்றது. இங்கு வளர்கின்ற கண்டல் காட்டு மரங்களில் பெருமளவானவை யாவா, மலேசியக்காடுகளில் வளர்கின்ற காட்டினத்தாவரங்களாகவே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவ் இயற்கை அமைப்பின் பின்னணியில் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் வாணிபச் செல்வாக்கிற்கு உட்பட்டவையாக இவ் ஆற்றுப்பரப்பு காணப்படுகின்றது.

**மத்தியகாலப் பொருளியல் ஈட்டத்தில் ஏற்பட்ட பெருவளர்ச்சி**

காலத்தினூடாக மாறி வருகின்ற பொருளாதார ஈட்டத்தின் மாற்றங்களால் பாரம்பரிய பண்பாட்டில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன-வந்துள்ளன. கி.பி. 13ம் நூற்றாண்டுக்குப்பின் இலங்கைத்தீவிலும் இத்தகைய பொருளாதார- பண்பாட்டு மாற்றங்கள் பல தடவைகள் நிகழ்ந்துள்ளன. நீர்ப்பாசனவியல் தொழினுட்பத்தினூடாகப் பெறப்பட்ட பொருளாதார வளம் கைவிடப்பட்டு, கடல் - சமுத்திரவியல் தொடர்புடைய வாணிக பொருளியல் ஈட்டத்தினுள் இலங்கை பிரவேசித்த காலம் இக்காலமாகும். வடஇலங்கையைப் பொறுத்தவரையிலும் இம்மாற்றத்தினை தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கின் இருமருங்கிலும் நிகழ்ந்திருந்த பண்பாட்டு வெளிப்பாடுகளிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. அந்த வகையில் பண்பாடு என்கிற தளத்தின் ஆணி வேராக இயங்கக் கூடிய தகுதி கிராமங்களுக்கு இருந்தமையால் இப்பிரதேசத்தின் புவியியல் அமைவு, தமிழக வரலாற்றுப் பின்னணி, ,சமூகவியற் கூறுகள், சமயம், கலைகள், சம்பிரதாயங்கள் போன்ற பண்பாட்டுக் கூறுகள் ஏற்படுத்தித் தந்த செல்வாக்குத்தான் இப்பிரதேசத்தை ஒரு சிறந்த தனித்துவமான பொருளாதார, பண்பாட்டுப் பாரம்பரியமும் வாழ்க்கைமுறையும் உள்ள நீண்ட வரலாற்றுப் பின்னணியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பிரதேசமாக மாற்றுவித்திருந்தது. தொண்டமானாற்று பள்ளத்தாக்கின் முகத்துவாரத்திலுள்ள சன்னதி முருகன் கோவிலில் தொடங்கி சுண்டிக்குளத்திலுள்ள ஒல்லாந்தரது அரண் வரைக்கும் பரந்து சிதறிக்காணப்படும் பண்பாட்டுக் கிராமங்களின் தனித்துவமான இந்துமதப் பண்பாட்டுக் கூறுகள், கிறிஸ்தவ தேவாலயங்கள், மடங்கள், ஆவுரஞ்சிக்கற்கள், பின்பற்றப்படும் சடங்குகள் - கிரிகைகள் என்பன யாழ்ப்பாணக்குடாநாட்டில் காலந்தோறும் நிகழ்ந்து வந்த ஜீவனோபாய - பொருளியல் மாற்றங்களை வெளிப்படுத்தி நிற்பதனைக் உறுதிப்படுத்துகின்றன. வெற்றிலைக்கேணியில் உள்ள கோட்டை, வெளிச்சவீட்டுப்பரப்பு ஆகியன யாழ்ப்பாண அரச காலத்தில் வரிஅறவிடும் ஆயம் ஆக தொழிற்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜீவனோபாயத்தின் பொருட்டு சமூகங்கள் ஒன்றுகூடும் மையங்களாக நாளடைவில் மாற்றம் பெற்ற மையங்கள் நகரமாகவோ அல்லது கோவிலாகவோ அல்லது பிரதான சந்தையாகவோ வடிவமாற்றம் பெற்றுள்ளன. இந்நிலையில் கடல்முகப்புத்தளங்கள் உருவாகி, பண்பாட்டடிப்படையில் மக்கள் வாழும் பிரதேசங்களாக மாற்றமடைந்தன. இவ்வாறு உருவான பல்வேறு குடியிருப்புக்களுக்கு இடையே உருவாக்கப் பெற்ற போக்குவரத்துப் பாதைகள் நாளடைவில் பிரதான வாணிகமார்க்கங்களாக மாற்றமடைந்து பல்வேறுவகையான பண்பாட்டுக்கோலங்களை துறைமுகங்களினூடாக உள்நாட்டிற்கும் வெளிநாட்டிற்கும் பரிமாற்றம் செலுத்திவந்திருந்தன.. இவ்வியல்பான செயல்முறையூடாகவே யாழ்ப்பாணக் குடாநாட்டில் வடமராட்சிப் பிராந்தியத்திற்கும் வன்னிப்பிராந்தியத்துக்குமிடையிலான வாணிக மையங்களை இணைத்து வைத்த பிரதான பண்பாட்டு வழித்தடங்களை தொண்டமானாறு இணைத்துப்பிணைத்து வைத்திருந்தது. இவ்வகையில் யாழ்ப்பாணத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு ஒல்லாந்தர் காலம் வரைக்குமான ஒரு காலகட்டத்தில் தொண்டமானாற்றினூடாக வடிவமைக்கப்பட்ட வாணிப வழித்தடங்கள் பெரும்பங்காற்றியிருந்தன. அவ்வாணிபத்தடங்கள் வன்னிப்பிராந்தியத்தினையும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகடற்கரை யோரமாகவுள்ள துறைமுகங்களையும் இணைத்து வைத்ததோடு, சமுத்திரவியல் பண்பாடு யாழ்ப்பாணக்குடாநாட்டில் வலிமை பெறுவதற்கும் வழிசமைத்திருந்தமையைக் காணமுடியும். அப்பண்பாட்டின் உள்ளீடுகளாக அமையப் பெற்ற துறைமுகங்களும் அவற்றினை உள்நாட்டுடன் இணைத்து வைத்த வாணிக வழிகளும் வணிகப் பொருட்களின் பரிவர்த்தனைக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தன ( கிருஸ்ணராசா, செ. 'போத்துக்கீசர்-ஒல்லாந்தர் கால யாழ்ப்பாணம்-வன்னி வாணிபத்தெருக்கள் -ஓர் ஆய்வு', வன்னி வரலாறும் பண்பாடும், 2014, ப.76). தொண்டமானாற்றுப்பள்ளத்தாக்கின் வரலாற்றுப் பாரம்பரியம் அவ்வாறு இடைக்காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்த பொருளியல் முகிழ்ப்பினை தென்னிந்திய அரச வம்சங்களுடன் இணைத்து வைத்திருந்தமையினை சாசனச் சான்றுகள் மற்றும் நாணயச் சான்றுகள் வெளிப்படுத்தியுள்ளன. அப்பொருளியல் வரலாற்று வளர்ச்சியில் முதலில் சோழப் பேரரசைத்தொடர்ந்து விஜயநகர்பேரரசரும் வட இலங்கையின் கனிம செறிவுப் பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தமையை சான்றுகள் காட்டுகின்றன. உள்நாட்டில் யாழ்ப்பாண அரசும் அதன் பின்னர் ஒல்லாந்தர்களும் வடஇலங்கையில் இயற்கையான கனிமவளப்பிரதேசங்களை தத்தமது இறுக்கமான நிர்வாக முகாமைத்துவத்திற்குள் கொண்டிருந்தமையை வரலாற்று மூலங்கள் தெளிவுபடுத்துகின்றன (கிருஸ்ணராசா, செ., இலங்கைவரலாறு - II,2000,ப.290).


**மத்தியகால தென்னிந்திய வம்ச அரசியல்-பொருளாதார மேலாதிக்கமும் வடஇலங்கையும்**


இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் விளைவாக யாழ்ப்பாணக்குடாநாடு முழுவதிலுமாகக் கண்டெடுக்கப்பட்ட பலதரப்பட்ட நாணய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரங்கள இக்காலப்பரப்பு மிகவும் செல்வச்செழிப்பாக இருந்தமையை உறுதிப்படுத்துகின்றன. இப்பின்னணியில் யாழ்ப்பாணத்தமிழரது பொருளியல் வரலாறும் இடைக்காலத்திலிருந்து நிரந்தரமானதும் தொடர்ச்சியானதாகவும் மாற்றுவிக்கப்பட்டிருந்தது என்பதனையும் உறுதிப்படுத்த முடிகின்றது. அவ்வகையில் வடஇலங்கைத்தமிழரது பண்பாட்டு வடிவத்தின் நிலைக்களமாக அமையப் பெற்ற யாழ்ப்பாணக் குடாநாடு தென் இந்தியாவிற்கும் மிக அருகில் அமைந்துள்ளமையால் அடிக்கடி இம்மத்தியகாலப்பரப்பில் பல்வேறு வம்ச அரசியற் பொருளாதார மேலாதிக்கத்திற்குள் உட்பட்டு வந்திருந்தமையும் குறிப்படத்தக்கது. எனவே வடஇலங்கைப்பிராந்தியம் மத்தியகாலத் தென் இந்திய அரசியல், பொருளாதார. சமூக, பண்பாட்டு நிறுவனங்களின் அதீத செல்வாக்கிற்குள் நேரடியாக உட்படுத்தப்பட்டு வந்துள்ள வகையில் யாழ்ப்பாணக்குடாநாடும் தனித்துவமான பொருளியல் , பண்பாட்டு வடிவங்களை வடிவமைத்துக் கொண்டமையைக் காண்கின்றோம். அதில் தொண்டமானாறு பள்ளத்தாக்கு பிரதேசத்தின் பங்களிப்பும் முதன்மையானதாக விளங்கி வந்திருந்தமையையும், அப்பிராந்தியம் தென்னக - இலங்கைப் பொருளியல் பண்பாட்டு பரிவர்த்தனைகளுக்கு உட்பட்டு வந்துள்ளமையையும் வரலாற்றுச் சான்றுகளுடன் உறுதிப்படுத்தப்படக்கூடியதாக உள்ளது. இவ்வாற்றுப் பள்ளத்தாக்குப் பிரதேசத்திலமைந்த கிராமங்கள், அவற்றின் பெயர்கள் , அக்கிராமங்களை இணைத்து வைத்துள்ள போக்குவரத்து வலைப்பின்னல் பாதைகள், சந்தைகள், கோவில்கள், அக்கோவில்களின் விமானத்திலுள்ள வரலாற்றுச் சிற்பங்கள் மற்றும் சவஅடக்க(இடுகாட்டு) மையங்கள், நன்னீர் நிலைகள், புற்றரவைகள், நன்செய்நிலங்கள் ஆகியன இப்பள்ளத்தாக்குடனான பொருளாதார மற்றும் ஜீவனோபாய -பண்பாட்டுத் தொடர்புகளை இணைத்து வைத்திருந்தன. மத்தியகாலத்து தென்னிந்திய ஆதிக்க சக்திகளின் பொருளியல் தேட்டத்தின் விளைநிலங்களாக வடஇலங்கையில் காணப்பட்ட கனிமவளப் பிரதேசங்கள் திகழ்ந்து வந்தமையின் ஒரு பக்கவிளைவாகத் தோற்றம் பெற்ற




**1.மத்தியகால சோழமண்டலக்கடற்கரையும்ஆடைநெய்தற் தொழிலும்**

**2.ஒல்லாந்தர்கால வடஇலங்கைக் கைத்தொழில் மையங்களும் தேவாலயங்களும் துறைமுகங்களும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாற்றுக் குடியிருப்புக்கள் வளர்த்தெடுத்த பண்பாட்டு நிறுவனங்கள் இற்றைவரைக்கும் தொண்டமானாற்றின் பண்பாட்டுச் சூழலினை வளப்படுத்தி வந்துள்ளன. ஆகவே எமது இந்த ஆய்வில் ஆற்றின் முகத்துவாரப்பரப்பிலிருந்து முள்ளி வரையிலான ஆற்றின் போக்கிற்கு இருபக்கங்களிலுமாக அமைந்த கிராமங்களை அடிப்படையாகக் கொண்டும் அங்கிருந்து சேகரிக்கப்பட்ட மானிடவியல் மற்றும் சமூகவியல் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டும் தொண்டமானாற்றின் முகத்துவாரப்பரப்பில் தற்போது வளர்ச்சி பெற்றுள்ள பல்வகையான பண்பாட்டு - சமுதாய நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டும் மத்திய கால வடஇலங்கைப் பொருளியல் வலைப்பின்னல் முறையினை எடுத்து விளக்க முடியும்.

**சோழ வணிக கணங்களும் தொண்டமானாற்று வணிக மையங்களும்**

சோழப்பெரும் பேரரசின் ஒன்பதாவது மண்டலமாக அல்லது மாகாணமாக "ஈழமான மும்முடிச் சோழ மண்டலம்" என்ற பெயரிலே இலங்கைத் தீவு அவர்களுடைய இராணுவ, சிவில் நிர்வாகத்திற்குள் உட்பட்டிருந்தது. கி.பி. 993 அளவில் அனுராதபுரம் உட்பட இராஜரட்ட என அழைக்கப்படும் இலங்கையின் வட பகுதி முதலாம் இராஜராஜனாலும் பின்பு கி.பி. 1017 ஆம் ஆண்டில் இருந்து தீவின் முழுநிலப்பரப்பும் முதலாம் இராஜேந்திரனாலும் சோழ இராணுவ சிவில் நிர்வாக முறைகளுக்குட்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையானது கி.பி. 1070 வரையுள்ள காலப்பகுதி மட்டுமே அதாவது தஞ்சையில் முதலாம் குலோத்துங்கனுடைய ஆட்சியின் தொடக்கம் வரை நீடித்துக் காணப்பட்டிருந்தது. இலங்கையில் பொலநறுவை என்று வழங்கப்பட்ட நகரமே ஜனநாத மங்கலம் என்ற பெயரில் தலைநகரமாக்கப்பட்டு சோழருடைய சிவில் நிர்வாகம் பரவலாக்கப்பட்டிருந்தது. திருகோணமலை சோழருடைய பிரதான கடற்படைத்தளமாகஇராணுவநடவடிக்கைகளின் கேந்திர நிலையமாக, தென்கிழக்காசிய நாடுகளை இராணுவ அடிப்படையில் கட்டுப்படுத்துகின்ற மையமாக தொழிற்பட்டிருந்தது. மாந்தைத்துறைமுகம் பிரதான ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளுக்குரிய மையமாகவும் ஓரளவுக்கு இராணுவ நடவடிக்கைகளுக்குரிய மையமாகவும் தொழிற்பட்டிருந்தது. அதேநேரம் பாரிய பிராமணக்குடியேற்றங்கள் நிகழ்த்தப்பட்டபிரதேசங்களாகவும் அவை மாற்றப்பட்டிருந்தன. இதே மாதிரியான மத்தியகாலப் பிராமணக் குடியேற்றங்கள் கரணவாய், துன்னாலை போன்ற தொண்டமானாற்றின கரையோரக்கிராமங் களிலும், யாழ்ப்பாண இராச்சியகாலத்தில் தும்பளையிலும் உருவாகியிருந்தன. இப்பின்னணியில் தொண்டமானாற்றின் சிலமையங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த முகாமைத்துவ மையமாக விளங்கியிருந்தன. இந்நிலையிலே வடமராட்சிப் பகுதியிலே பொலிகண்டியில் காணப்படுகின்ற கங்கை கொண்டான் கிராமமும் பிராமணக்குடியேற்றமாக இருந்தமையினை ஒரு வகையில் பேரரசச்சோழ மரபினருக்கும் அவ்விடத்துக்குமுரிய தொடர்பினை நன்கு எடுத்துக் காட்டுவதாகவே உள்ளது. அலை அலையாக அமைந்த மண் மேடுகளின் மேல் முதிர்ந்த பனை மரங்களைக் கொண்டிருக்கும் அப்பிரதேசத்தினை மிகஆழமான வாணிபத்தெருக்கள் ஊடறுத்துச் செல்கின்றன. அவை வல்வெட்டித்துறை நகரையும் பருத்தித்துறை (பெருந்துறை) நகரையும் இணைப்பவையாகக் காணப்படுகின்றன. இக்கிராமத்தின் அயல் கிராமங்களாக பொலிகண்டி, பாலாவி, ஆதித்தன் புலம் என்பன அமைந்துள்ளன. பொலிகண்டியிலே சோழர் காலத்துக்குரிய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே கங்கை கொண்டான் என்றழைக்கப்படும் இக்கிராமத்திற்கும், இக் குடா நாட்டின் கண் அமைந்து காணப்பட்டிருக்கக்கூடிய சோழர்களது அரசியல் பண்பாட்டு மையங்களுக்குமிடையே மிகவும் நெருக்கமான தொடர்புகள் இருந்திருக்கின்றன - அவை வாணிபப்பெருந்தெருக்களால் ஒன்றினைக்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[stamp]

**சோழர்கால தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கும் வாணிபத்தெருக்களும்**

தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கில் பரவலான குடியிருப்புக்களும், வாணிப மையங்களும், வாணிபத் தெருக்களின் இணைப்புக்களும் ஏற்படுத்தப்பட்ட ஒரு காலப்பரப்பாக சோழர் காலம் அமைந்து கொண்டமைக்கான தொல்லியற்சான்றுகள் எமக்குக்கிடைத்துள்ளன. குறிப்பாக நகரங்கள், கோயில்கள், பெருந்தெருக்கள் என்பன சோழர்காலத்தைய வட இலங்கையின் பிரதான உறுப்புக்களாக அமைந்து கொண்டன. பெருந்துறைமுகத்திலுள்ள (பருத்தித்துறை துறைமுகத்திலுள்ள) நகரக்கட்டமைப்பு சோழர்காலத்திலேயே தொடங்கப்பெற்றிருந்தமை காரணமாகவே யாவாவிலுள்ள கடாரத்துடனான நெல்வாணிபத்தொடர்புகள் இத்துறை முகத்துடன் மிகநெருக்கமாக பிணைக்கப் பட்டிருந்தன. கற்கோவளத்தில் கண்டுபிடிக்கப் பெற்ற சுடுமண்வளையக் கிணறு, மற்றும் நாகர்கோவிலுக்கண்மையிலுள்ள கௌத்தன் துறைமுகத்தினருகே கண்டுபிடிக்கப் பெற்ற செங்கட்டிக்கிணறும் சோழர்காலத்திற்குரியவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வடிப்படையில் பருத்தித்துறைப்பிரதேசத்தின் நகரத்திட்டமிடல் மற்றும் பெருந்தெருக்களின் உருவாக்கம் என்பன மத்தியகால சோழர்களது வாணிப நடவடிக்கைகளுடனும், அவர்களது பண்பாட்டு நடவடிக்கைகளுடனும் தொடர்பு பட்டவையாகவே இருப்பது தெளிவாகின்றது.

**கோட்டைத்தெருவும் சோழர்களது வாணிப நடவடிக்கைகளும்**

வடமராட்சி, வதிரியில் உள்ள பெரியதோட்டம், கோட்டைத் தெரு என்னும் மத்திய காலக் கிராமங்களில் தொல்லியல் முதனிலையாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் பழமை வாய்ந்த புராதனமான புளியமரத்தின் அடித்தளத்திலிருந்து சோழர்கால மட்பாண்டத் தொகுதிகளுடன் இணைந்து காணப்பட்ட நீள்சதுரமான ஐம்பொன்னாலான ஒரு வெட்டுக்காசினையும் மீட்டெடுக்க முடிந்தது. இந்த வெட்டுக்காசில் பதிக்கப்பட்டுள்ள ஒரு பெண் தெய்வத்தினுடைய உருவமானது வணிக கணமொன்றினது குறியீடாக இருப்பதும் ஆய்வுக்குரிய ஒரு மூலமாக இப்பொழுது அமைகின்றது. அத்தோடு இக்குறிக்கப்பட்ட கிராமங்களில் நிலவிவரும் ஐதீகங்கள் மற்றும் இங்குள்ள 400 வருட பழமை வாய்ந்த புளியமரத்தினைப் பற்றிய ஐதீகங்கள் சோழர்களது வாணிப நடவடிக்கைகளையும் பண்பாட்டுத் தொடர்புகளையும் உறுதிப்படுத்துவனவாக உள்ளன.


இப்புளியமரத்தடியில் இருந்து எமக்குக் கிடைத்த மட்பாண்டங்கள் யாவும் பிற்பட்ட சோழர் காலகட்டத்திற்குரியவை என்பதனை வகை மாதிரியிலான (Typology) ஒப்பீட்டு - கணிப்பீட்டு முறை வெளிப்படுத்தி நிற்கின்றது. யாழ்ப்பாணக் கோட்டையின் தெற்குப் பக்கச் சுவருக்குள் இருந்து மீட்டெடுக்கப்பட்ட பெருமளவிலான சோழர்கால மட்பாண்டங்களுடன் (தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டவை) ஒத்த தன்மையை உடையவையாகக் கோட்டைத்தெருவில் கிடைத்த மட்கலங்கள் காணப்படுகின்றன. மிகவும் தடித்த கழுத்து வளையங்கள் சோழர்கால வெண்கல சிற்பங்களில் இடம் பெறும் கழுத்தலங்கார முறைகளை ஒத்ததன்மை இம்மட்பாண்டங்களிலும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. மிகக் கூர்மையான வரைபுகள், வெட்டுக்கள்; இம்மட்பாண்டத்தொகுதியில் காணப்படும் சிறப்பியல்புகளாகின்றன. எனவே சோழர் காலத்திலிருந்தே ஊரின் நடுவேயுள்ள இப்புளியமரத்தடி மன்று; ஆகத் தொழிற்பட்டு வந்திருக்க வேண்டும் என்பதை இச் சான்றுகள் நன்கு எடுத்து நிரூபிக்கின்றன. கூடவே கிடைத்த நாணயமும் அக்கருத்தினை மேலும் உறுதிசெய்யும் சான்றாக அமைவதோடு, இப்பிராந்தியத்துடன் சோழர் கொண்டிருந்த வாணிபத் தொடர்புகள் பற்றி ஆராய்வதற்கு அடிப்படை மூலமாகவும் அமைந்து கொள்வதனைக் காணலாம்.

அண்மைக் காலங்களில் சோழ மன்னரது நாணயங்கள் பல குடாநாட்டின் உள்ளும், புறமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்திருப்பது தமிழர் பண்பாட்டு வரலாற்றுக்கு உதவும் மூலங்களை இனங்கண்டு கொள்வதற்கு மேலும் வழிதேடித் தந்துள்ளன எனலாம். இப்பின்னணியிலேயே கோட்டைத்தெரு என்ற மையத்தில் கிடைத்த ஐம்பொன்னினாலான நீள்சதுரமான க்ஷவெட்டுக்காசு; (ஈழக்காசு) மத்தியகால வடமராட்சி பிராந்தியத்துடனும், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டுடனும்





Map: 1.1
Source: Arjuna's Atlas of Sri Lanka, P.25.

**மத்தியகால வடஇலங்கையின் வணிகமார்க்கங்களை ஒருங்கிணைத்த பௌதீக அமைப்பு**

சோழர்கால வணிக கூட்டுக்களில் ஒன்றான நானாதேசிகள் என்றழைக்கப்பட்ட சாத்துக்கள் கொண்டிருந்த வியாபாரத் தொடர்பு பற்றியும், அப்பின்னணியில் சோழப் பண்பாடு இப்பிராந்தியத்தில் பரந்து கொண்டிருந்த முறைமை பற்றியும் அறிந்துகொள்வதற்கேற்ற வரலாற்று மூலமாகின்றது.

**மத்தியகால நல்லூரினை மையப்படுத்திய வாணிபப் பாரம்பரியமும் தொண்டமானாறும்**

கி.பி. 13ம் நூற்றாண்டுத் தொடக்கத்துடன் வடஇலங்கையில் அராபியர் வசம் சிக்கியிருந்த சமுத்திரவியல் வாணிப மையங்களை தம்வசமாக்கிய நிலையில், புதிய பொருளாதார மையங்களை உள்நாட்டிலும், மற்றும் மேற்கு-கிழக்கு கடற்கரைபிராந்தியங்களிலும், கன்னியாகுமரி மற்றும் இராமேஸ்வரத்திலும் உருவாக்கியதோடு, இரண்டாம் பாண்டியப்பேரரசினை தனது பாதுகாப்பரசாகவும் மாற்றிக்கொண்டு ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு கோலோச்சத்தொடங்கியது. இவ்வாறு புதியதோர் அரசு வடஇலங்கையில் புத்துாக்கம் அடைந்தமையைத் தொடர்ந்து ஒரு புதிய சமூக எழுச்சி ஏற்பட்டுக்கொண்டது. மத்தியதரைக்கடற்பிராந்திய கடல்வாணிப வலைப்பின்னலுடன் தொடர்புபடுத்தப்பட்ட வகையில் வடஇலங்கையில் மையங்கொண்டிருந்த வாணிபப் பகைப்புலத்தின் செழிப்பில், நல்லூரில் ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற வம்சப் பெயரில் அரசு ஒன்று வளர்த்தெடுக்கப்பட்டது. கள்ளியங்காட்டுச் செப்பேடுகள், விஜயநகரப்பேரரசுக்காலக் கல்வெட்டுக்கள், பல்வகைப்பட்ட சேது நாணயங்கள், தோம்புச்சுவடுகள் மற்றும் இராசதானிக்காலத்தில் உருவான மருத்துவ – சோதிட இலக்கியங்கள் போன்ற மூலாதாரங்கள் வாயிலாகவும் இவ்வரசின் இருப்புப் பற்றியும் செழிப்புப்பற்றியும் உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது. இவைமாத்திரமன்றி யாழ்ப்பாணத்தமிழரது மரபுகள், தொன்மங்கள், ஐதீகங்கள், வடஇலங்கையிலுள்ள சமூக-சாதிப் பிரிவுகள் போன்ற சமூகவியல், மானிடவியல் ஆதாரங்களின் அடிப்படையிலும் நல்லூர் இராசதானியின் இருப்புப்பற்றி மிகவும் விரிவாக தமிழ்வரலாற்றாசிரியர்கள் ஆராய்ந்துள்ளனர். பேராசிரியர்களான எஸ். பத்மநாதன், கா.இந்திரபாலா, வீ. சிவசாமி, பொ.இரகுபதி, ப.புஸ்பரட்ணம் ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றாய்வியல் மற்றும் தொல்லியல் நெறிமுறையின் அடிப்படையில் நல்லூர் இராசதானி அதன் வளர்ச்சிப் பருவங்கள் தொடர்பாக ஆய்வு செய்துள்ளனர். நல்லூர் பற்றிய வரலாற்றுத் தொன்மங்களுடன் இணைந்த நிலையில் பெறப்பட்ட நல்லூர் இராசதானி தொடர்பான வரலாற்று வடிவங்களையும் ஆராய்வதற்கு முயற்சி எடுத்தபோது நல்லூர் பற்றிய தொன்மங்கள் யாவும் மத்தியகால குடியேற்றங்களால் உருவானவை என்பது தெளிவாகியது. இவற்றின் பின்னணியில் தொண்டமானாற்றுப்பள்ளத்தாக்கு முக்கிய பங்காற்றியிருந்தமையும் தெளிவாகியது. (செ. கிருஸ்ணராசா,2015, சிந்தனை,பக்.69-85)

எமக்கு கிடைத்துள்ள மிகவும் நம்பகம் வாய்ந்த செப்பேட்டுப்பதிவேடாக கிடைத்திருப்பது கள்ளியங்காட்டுச் செப்பேடாகும். 'யாழ்ப்பாணம் இராச்சியம் பண்ணியருளிய செகராசசேகர மகாராசா' என இடம்பெறும் கள்ளியங்காட்டுச் செப்பேட்டுத் தொடர் நல்லூர் இராசதானி பற்றிய செய்தி கூறும் முதலாவது இலங்கைச்செப்பேட்டுச் சாசனப்பட்டயமாகும். இப்பட்டயம் தருகின்ற வரலாற்றுச் செய்திகள் யாழ்ப்பாணத்தின் பொருண்மிய வரலாற்றிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. மத்திய காலத்தில் இலங்கையில் பிராந்திய அரசமுறை ஒன்று இருந்தமைக்கான ஒரேயொரு செப்பேட்டு ஆவணமாக கள்ளியங்காட்டு செப்பேடு மட்டுமே காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் வன்னிப்பிராந்தியத்திற்கும் குடாநாட்டிற்குமிடையே காணப்பட்டிருக்கக்கூடிய வாணிபப் பண்பாட்டுத் தொடர்புகளை உறுதிப்படுத்துவதற்கு கள்ளியங்காட்டுச் செப்பேடுகள் அடிப்படையாதாரமாக அமைந்துள்ளன.

நல்லூருக்கும் தும்பளை- கற்கோவளத்திற்கும் இடையிலான வாணிபத் தொடர்புகளின் பின்னணியில் தொண்டமானாற்றுப்பள்ளத்தாக்கு பெரும்பங்கு வகித்துள்ளமை தெளிவாகின்றது. அத்தாய்,அத்துளு, அந்தணன் திடல் ஊடான கால்வாய் நீர்ப்பாதை தம்பசெட்டியையும் தொண்டமனாற்றுப்பள்ளத்தாக்கினையும் மாயக்கை நீரேந்து பரப்பினூடாக இணைத்து வைத்திருந்ததன் அடிப்படையில் தும்பளை துணைதலைநகரான கோப்பாயுடன் இணைக்கப்பட்டுப் பின்னர் நல்லூருடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தமை மேலும் ஆராயத்தக்கது. மாயக்கைப் பரப்பில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட காலக் கூரையோடுகள், சுடுமண் விளக்குகள், மத்திய காலத்திற்குரிய அராபிய நாணயங்கள், சோழமட்பாண்டங்கள், அராபியமட்பாண்டங்கள் போன்ற தொல்பொருட்களை இக்கட்டுரையாசிரியரினால் சேகரிககப்பட்டுள்ளமையின் அடிப்படையில் இந்த வாணிப மார்க்கத்தினை அடையாளம் காண்பதற்கு முடிந்தது. தம்பசெட்டி இற்றைவரைக்கும் படகுகட்டும் கைவினைத் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குவதும் இவ்வாணிபமார்க்கத்தின் பின்னணியில் உருவான வளர்ச்சி என்றே குறிப்பிடமுடியும். தம்பசெட்டி-வியாபாரிமூலை என்ற இரு பண்பாட்டுக்கிராமங்களும் மத்திய காலத்திலிருந்து புடவைவியாபாரத்தில் சிறந்து விளங்கி வந்திருந்தமைக்கான சான்றுகளும் எமக்குக்கிடைத்துள்ளன. சம்பு- சம்பான்- சம்புக்கோளம் -பருத்தித்துறை என்ற பதப்பிரயோகங்கள் புடவை வியாபாரத்திலிருந்தே தோற்றுவிக்கப்பட்டிருந்தன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாணிபப் பண்பாட்டின் பின்னணியில் தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கினூடாக அமையப்பெற்ற நீர்வழிப்போக்குவரத்துக்களே வளம் சேர்த்திருந்தன என்பதனை கிடைத்த தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் உறுதிப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

**ஒல்லாந்தர்கால வணிக வழிகள்**

எமக்குக்கிட்டிய காலத்திற்குரிய வாணிபப் பாதைகளை தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்குடன் இணைந்த வகையில் அடையாளம் கண்டுகொள்வதற்கு போத்துக்கீசர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் காலத்திற்குரிய பதிவுகளும், டச்சுறோட்டுக்களும் முதலில் உதவி நிற்பதனைக்காணமுடிகிறது. வடமராட்சியில் தமது வர்த்தக ஏகாதிபத்தியத்தைப் பரப்பிய முதலாவது ஐரோப்பிய இனத்தவர் போர்த்துக்கேயரே ஆவார். கி.பி. 15ம் நூற்றாண்டு தொடக்கத்தில் ஐரோப்பிய நாடுகளுள் கப்பல் கட்டும் கலையிலும், கப்பலோட்டும் கலையிலும் முதலில் தேர்ச்சி பெற்ற நாடாக போர்த்துக்கல் மிளிர்ந்தது. இதற்குச் சமகால ஐரோப்பிய சூழலில் நிலவிய அகக்காரணிகளும், இந்து சமுத்திரக் கரையோர மற்றும் தூரகிழக்காசிய நாடுகளில் காணப்பட்ட வர்த்தக வளம் நோக்கிய தேடல் என்ற புறக்காரணியும் போத்துக்கேயரது இந்துசமுத்திரத்தின் மீதான ஆதிக்கத்தற்கு உந்துதலாக அமைந்து காணப்பட்டது. இதைவிட இந்நாடு ஏனைய ஐரோப்பிய நாடுகளை விட கடல்சார் கப்பற்பயணங்களில் அதீத நாட்டம் கொள்வதற்கு வேறும் பல தனித்துவ காரணங்களும் தூண்டுதலாக அமைந்தது. இவ்வாறு ஒருங்குசேர்ந்த பல சாதக அம்சங்களின் பெறுபேறாகவே கீழைத்தேசங்களை நோக்கி கடல் மார்க்கமாக வந்த முதலாவது ஐரோப்பியன் என்ற பெருமையை வாஸ்கொடகாமா என்ற போர்த்துக்கேயன் பெறுவதற்கு வழிவகுத்தது.11 இவ்வாறு 15ம் 16ம் நூற்றாண்டுகளில் இந்து சமுத்திர வர்த்தகத்தின் பெரும்பகுதி போர்த்துக்கேயரது ஆதிக்கத்தின் கீழேயே இருந்தது. இவர்களை அடுத்து இந்து சமுத்திரப் பிரதேச வர்த்தக நடவடிக்கைகளில் தலையிட்ட இனத்தவர் ஒல்லாந்தர் ஆவார்.

16ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக பல வகையிலும் முன்னேற்றமடைந்த ஒல்லாந்தர் கீழைத் தேசங்களுக்கு வருவதற்குப் பல வழிகளிலும் முயன்றனர். மேலும் போர்த்துக்கேயரது கத்தோலிக்கத்திற்கு எதிராகத் தமது புரட்டஸ்தாந்து சமயத்தைப் பரப்புவதும் இவர்களது ஆவலுக்குத் தூண்டுதலாக அமைந்தது. இவ்வாறு ஐரோப்பாவில் ஒல்லாந்தர் எழுச்சி பெறவும் போர்த்துக்கேயருக்கு இருந்த கடலாதிக்கம் வீழ்ச்சி கண்டது. 1595இல் ஒல்லாந்தர் வலிமை பெற்ற குடியேற்றவாதிகளாகத்திகழத் தொடங்கினர். அதுமுதல் தமது கப்பல்களைக் கீழைத்தேசங்களுக்கு அனுப்ப ஆரம்பித்தனர். முதன் முதலில் அவர்களது கப்பல்கள் கி.பி. 1602 இல் இலங்கைக்கு வந்தன. கி.பி. 1658 இல் யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் கைப்பற்றியதோடு யாழ்ப்பாணத்தில் அவர்களது ஆதிக்கம் நிலைபெறலாயிற்று. அதாவது 1658 இல் கரையோரப்பகுதி முழுவதும் ஏற்பட்ட ஒல்லாந்தர் ஆட்சி 1796 இல் ஆங்கிலேயரது ஆட்சி ஏற்படும் வரை இங்கு நீடித்து நிலைததிருந்தது.

138 ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிய ஒல்லாந்திரின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக வர்த்தகம் காணப்பட்டது. போர்த்துக்கேயரைத் தொடர்ந்த இவர்களது அரசியல் நிர்வாக, சமூக சமயத்துறைகளில் குறிப்பிடத்தக்க பல மாற்றங்கள் ஏற்பட்டது. இலங்கையில் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளை நிர்வகிக்க டச்சுக்கிழக்கிந்திய கம்பனியின் கீழ் கொழும்பில் ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டார். இவ் ஒல்லாந்த ஆள்பதிக்கு அடுத்த நிலையிலேயே யாழ்ப்பாணம் காலி ஆகிய கொமாண்டர்களின் படைத்தளபதிகள் தமது அங்கத்துவப் பதவிகளை வகித்தனர். ஒல்லாந்தர் நிர்வாக நோக்கத்திற்காக கொழும்பு கொமாண்டரி, யாழ்ப்பாணக்கொமாண்டரி, காலிக்கொமாண்டரி என மூன்று பிரிவுகளாகவும், இலங்கையைப் பிரித்தனர். ஒல்லாந்தர் கால இலங்கையின் முழு நிர்வாகத்திற்கும் மையமான ஆள்பதியும் மைய ஆட்சிப்புலமாக கொழும்பு விளங்கியிருந்த போதும் யாழ்ப்பாணம் காலிக் கொமாண்டரிகளின் நீதிநிர்வாக அதிகார வரம்பானது கொழும்பினை விடவும் அதிகரித்தே காணப்பட்டிருந்தது. கொமாண்டரிக்கு அடுத்து இரண்டாம் நிலையில் அதிகாரம் திசாவை என்பவரிடமும் அடுத்து ஒப்பர்கூவட் (Opepehoofed) என்பவரிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண நீதி நிர்வாகக் கொமாண்டரியின் பரப்பானது புத்தளத்தின் வடக்கிலிருந்து வடமேற்காக வளர்ந்து சென்று வடகிழக்கு இலங்கையின் கடற்கரைப் பரப்புக்களை உள்ளடக்கிய வண்ணம் சென்று மட்டக்களப்புக் கோட்டையின் தெற்கு வரை அதன் பரப்பு விரிவடைந்திருந்தது. யாழ்ப்பாணக் கொமாண்டோவின் ஆள்புலத்துக்குரிய கேடயச் சின்னத்தில் ஒல்லாந்தக் கம்பனியைக் குறிக்கும் "V.O.C." என்ற எழுத்தோடு யாழ்ப்பாணக் கற்பகதருவான பனைமரம் வரையப்பட்டிருந்தது (Phillipus Baldaeus ,1759). இவர்களது வர்த்தகம், நெசவு, நெல், பருத்தி சாயத்துக்குரிய மரச்செய்கை, நெசவு, குதிரைவளர்ப்பு, முத்துச் சங்கு குளித்தல் உப்பு, சுண்ணக்கல், பனைமரம் முதலியவற்றில் தங்கி இருந்தது.

**பள்ளத்தாக்குடன் இணைக்கப்பட்ட ஒல்லாந்தர் காலத் தெருக்களின் வலைப்பின்னலமைப்பு**


போக்குவரத்தின் அவசியத்திற்கு மூலகாரணமாய் விளங்குவது வாணிபப் பொருட்களின் பரிவர்த்தனையே. இப்பின்னணியில் வடமராட்சியில் இன்றைய கால கட்ட தெருக்களின் வளர்ச்சியை பின்னோக்கிப் பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது. ஒற்றையடிப் பாதைகளாகவும் மண் ஒழுங்கைகளாகவும் பயன்படுத்தப்பட்ட பல பாதைகளை தெருக்களாக ஆக்கி, ஒல்லாந்தர் தமது அரசியல், மத பொருளாதார நோக்கத்திற்காக அவற்றை அபிவிருத்தி செய்திருந்தனர். அவர்கள் இதனை இங்கே செய்திருக்காவிட்டால், உள்ளூர்த் தெருக்களுடனான போக்குவரத்து தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்காவிட்டால் பூங்காக்கள் நிரம்பிய நகரங்கள், பலர் வாழக்கூடிய இடங்கள் நிரம்பிய பரந்த நகர்ப்புறங்கள், மற்றும் திட்டமிட்டு அமைக்கப்பட்ட உபநகரங்கள் முதலியவை தோன்றியிருக்க வாய்ப்பு இருந்திருக்காது. கிராமங்கள் நகரங்களை இணைத்து ஒரு நாடு முழுவதையும் ஒரே அலகாக ஆக்குவதற்கு தெருக்கள் பெரிதும் உதவியிருக்கின்றன. ஒரு நாட்டின் பொருளாதார நிலமை சரியான நிலையில் இருக்க வேண்டுமென்றால் போக்குவரத்து இன்றியமையாததாகும். அந்த வகையில் ஒல்லாந்தர்கால இலங்கைப் பண்பாட்டியலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக அமைந்தது வீதிகளாகும். மனித சமுதாய வளர்ச்சியிலே டச்சுறோட் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது. வரலாற்றுக் காலத்திலிருந்து இலங்கையில் வீதிகள், வண்டிற்பாதைகள், நெருஞ்சாலைகள் என்பன அமைக்கப்பட்டிருப்பதும் ஒல்லாந்தர் காலத்திலேயே அவை காத்திரமான தோற்றத்தையும், பங்களிப்பினையும் பெற்று மக்கள் வாழ்வில் பிரதான ஊடகமாகத் திகழ்ந்தன என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.


இந்தவகையில் டச்சுவீதிகளை சிறப்பாக எடுத்து நோக்கிப்பார்க்குமிடத்து, வல்லிபுரம் தேவஸ்தானம் அமைந்துள்ள இடத்திலிருந்து வெற்றிலைக் கேணிக் கண்மையிலுள்ள மண்டலாய் பிள்ளையார் ஆலயத்தின் பின்வீதிவரைக்கும் கடற்கரையோரமாக டச்வீதி அமைக்கப்பட்டுள்ளது. அடுத்தது மாசிவன் சந்தியிலிருந்து எழுதுமட்டுவாலூடாக தொண்டமானாற்றின் பள்ளத்தாக்கினை ஊடறுத்து கிளாலி வரைக்குமான ஒரு பிரதான டச்வீதி அமைக்கப்பட்டுள்ளது. இவை தவிர கௌத்தன்துறையிலிருந்து தென்கிழக்குப் பக்கமாக நல்லதண்ணீர்த்தொடுவாய்வரை (சுண்டிக்குளம் வரைக்கும்) டச்வீதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து வரணியையும் வல்லிபுரமூடாக கௌத்தன்துறையை இணைத்த வகையிலும் மேலும் வடமராட்சியில் உள்ள டச்வீதிகளை இணைத்து தொடர்புபடுத்தும் வகையிலும் பல டச்சுவீதிகள் அமைக்கப் பட்டுள்ளன.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணமூடாக மன்னாருக்கு டச்சுவீதி அமைக்கப்பட்டிருந்தது. இவ் வீதி பூநகரியூடாக மன்னாரைச் சென்றடைந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கச்சாய்-கிளாலி ஊடாக பழைய முறுகண்டிக்கு ஒரு டச்சுவீதி அமைக்கப்பட்டிருந்தது. அவ்வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய வட்டக்கச்சியூடாக இராமநாதபுரத்தை இணைத்தவண்ணம் காட்டு மார்க்கமாக பழைய முறுகண்டி நோக்கிச் செல்கின்றது. இற்றைவரைக்கும் இப்பாதையின் ஊடாக மாடுகளை, எருதுகளை கால்நடையாக கொண்டு வரும் முயற்சிகள் நடைபெற்றவண்ணமேயுள்ளன. வடமராட்சியிலுள்ள மற்றுமொரு டச்சுவீதி இப்பொழுது நாச்சிமார் வீதி என நாமமிடப் பட்டுள்ளது. இவ்வீதி ஒல்லாந்தர் காலத்தில் பொலிகண்டித்துறைமுக நகரத்தையும் வல்லை உப்புக் கழியையும் எள்ளங்குளம் என்ற கிராமத்தினூடாக இணைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பருத்தித்துறை வெளிச் சவீட்டுப்பரப்பிலிருந்து ஆரம்பிக்கும் கரையோரப்பாதை சுண்டிக்குளம் ஊடாகச் சென்று, பின்னர் கரைச்சி, முல்லைத்தீவு பின்னர் அங்கிருந்து கதிர்காமம் வரைக்கும் உள்ள முக்கியமான துறைமுகநகர்களையும்






1. Commercial Route linking between Thondamanaru Lagoon and Iranaimadu Basin
2. Resource Centers along with Thondamanaru Basin

கிராமங்களையும் இணைத்திருப்பது ஒல்லாந்தர் காலத்திற்கு முன்நிகழ்ந்த வாணிப பண்பாட்டு நடவடிக்கைகளின் விளைவினால் ஏற்பட்டது எனக் குறிப்பிடப்பட்டாலும், ஒல்லாந்தர் காலத்தில் அவை மீண்டும் புதுப்பொலிவு பெற்று விளங்கின என்றால் அது தவறாகாது.

வடமராட்சியில் ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட வீதிகள் மக்களது மனைகளையும், சந்தைகளையும், இடுகாட்டு மையங்களையும், தேவாலயங்களையும் இணைத்திருந்ததோடு கடற்கரையோரத்துறைமுகப்பட்டினங்களையும் அவை தொடுத்திருந்தன. பருத்தித்துறை துறைமுகநகர் இவை எல்லாவற்றிற்கும் உயிர்ப்பினை ஊட்டுகின்ற வாணிப நகராக ஒல்லாந்தர் காலத்திலிருந்தே வளர்ச்சி பெற்றுவிட்டிருந்தமையைக் காண்கின்றோம்.

ஒல்லாந்தர்களது காலகட்டத்திலே மாட்டுவண்டிகள், குதிரைகள், பல்லக்கு, யானை முதலியன போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன. வாணிகப் பொருள்கள் எல்லாம் ஒரே இடத்தில் உற்பத்தியாவதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பொருள்கள் உற்பத்தியானபடியால் அப்பொருள்களை எல்லாம் ஓரிடத்தில் கொண்டு சேர்ப்பதற்கு வண்டிகள் பெருமளவு பயன்படுத்தப்பட்டன. மக்கள் பலர் கால்நடையாகவும் மாட்டுவண்டில்களிலும் போக்குவரத்துச் செய்தனர். குதிரைகளை ஒல்லாந்தர் தமது நாடுகளிலிருந்து கொண்டு வந்து இங்கு போக்குவரத்திற்காகப் பயன்படுத்தினர்.

இவைதவிர மாட்டுவண்டிகளில் வாணிகப் பண்டங்களை-பொருட்களை வாணிகர் பலர் ஒன்று சேர்ந்து பொருள்களை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு சென்றார்கள். ஒல்லாந்தர் போக்குவரத்துச் சேவைகள் சிலவற்றைத்திருத்தி அமைத்தார்கள். சில புதிய தெருக்கள் அமைக்கப்பட்டன. சிற்றாறுகளை கடத்தற்குப் பாலங்கள் அமைக்கப்பட்டன. தரைமார்க்க போக்குவரத்துச் சேவைகள் ஓரளவு சீர்படுத்தப்பட்டமை பொருளாதார அபிவிருத்திக்கு மட்டுமன்றி அவர்களின் ஆதிக்கத்தினை வலுப்படுத்துவதற்கும், பொருளாதாரத்தை தன்வயப்படுத்தற்கும் உதவிற்று. வர்த்தக நோக்கத்தினாலும், மதம் பரப்பும் நோக்கத்தினாலும், அரசியல் நோக்கத்தினாலும். வீரதீர செயல்களினாலும் இலங்கைக்கு வந்த ஒல்லாந்தர் எண்ணிய நோக்கத்தை அடைவதற்கு வழிகாட்டியாக டச்சுவீதிகள் இவர்களால் அமைக்கப்பட்டன.

**ஒல்லாந்தர்கால தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கில் ஜீவனோபாயமும் வாழ்க்கை முறைகளும்**

இப் பிரதேசத்தின் ஜீவனோபாயமாக பெருந்தோட்ட விவசாயம், உள்ளூர் வர்த்தகம், மீன்பிடி, பனைம்பொருள் உற்பத்திக் கைத்தொழில்,உப்பு உற்பத்திக் கைத்தொழில் எனப் பலவும் மேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில் உற்பத்தித் தத்துவம், உற்பத்திப் பொருட் தத்துவம், விற்பனைத் தத்துவம், சந்தைப்படுத்தல் தத்துவம், சமூக சந்தைப்படுத்தல் தத்துவம் என்பன ஒல்லாந்தர் காலத்திலிருந்து சிறப்பாகக் கைக்கொள்ளப்பட்டு வருகின்றமையை இங்கு காணமுடிகின்றமை குறிப்பிடத்தக்கது. இன்று இவற்றின் பிரதிபலன்களையே வட இலங்கை மக்கள் தமது பண்பாட்டின் அடிப்படைகளாகக் கொண்டுள்ளனர்.

**தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்குக் கிராமங்களில் ஒல்லாந்தப் பயிர்வகைகள்**

ஊரிக்கரையை அடுத்து தரவையும், தரவையை அடுத்து ஓரளவு உவர்த்தன்மையான வயல் நிலங்களும், அதனை அடுத்து நன்நீர் வயல்நிலங்களும், அதற்கு அப்பால் மேட்டுநிலத்தோட்ட நிலங்களும், அதற்கு மேலே குடியிருப்பு நிலங்களும் தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கில் காணப்படுகின்றன. அத் தன்மை சில இடங்களில் ஒடுங்கியும், சில இடங்களில் விரிந்தும் காணப்படுகின்றது. கரவெட்டிப் பிரதேச செயலகம் 193 சிறு கிராமங்களைக் கொண்டது. அவற்றில் 08 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட 40 கிராமங்கள் தொண்டமானாற்றுநுப் பள்ளத்தாக்கினை மருவிய வகையில் சிறந்த விவசாய நிலங்களையும் ஒல்லாந்தரால் அறிமுகப்படுத்தப்பட்ட பயிர்உற்பத்திகளையும் கொண்டுள்ளது. இங்கு பெருமளவு நெல் பயிரிடப்பட்டாலும் இங்கு காலபோகம், சிறுபோகம், ஆடிப் பயிர்(ஆடிக்காய்) என 03 நிலைகளில் உபஉணவுப்பயிர் உற்பத்தி செய்யப்படுகின்றது. தொண்டமானாற்று முகத்துவாரப்பரப்பில் கோடைகாலத்தில் நீர் வரத்தானது உப்பு நீர் படுக்கையிலிருந்து நன்னீரத்தரையை நோக்கி வருவதனால் உள்ளூர் மண், நீர் இரண்டும் உவராகி மாற்றமடைந்து செல்வது சர்வசாதாரண நிகழ்வாக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் பயிர்களின் உற்பத்தி இங்கு குறிப்பாக ஒல்லாந்தப் பயிர்வகைகளுள் ஒன்றான புகையிலை உற்பத்தி மந்த நிலையை அடைந்து விட்டது. பள்ளத்தாக்கினை மருவிய கிராமங்களில் நன்னீரின் தரம் குறைவடையாது இருப்பதற்காகவும் காலப் போக்கில் மண்ணின் தரம் குன்றி விவசாயச் செய்கை பாதிக்கபபடாதிருப்பதற்காகவும் ஒல்லாந்தர் காலத்தில் வெள்ளவாய்க்கால்களை வெட்டுவித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றினைத் தொண்டமானாற்றுடன் இணைப்பித்து பள்ளத்தாக்கின் நீர்மட்டத்தினை நிரந்தரமாகப் பேணியவகையில் பொருளாதார ஈட்டத்திற்கான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இப்பொழுது பள்ளத்தாக்கு நன்னீராக்கப்பட்டுள்ளது. இவ் ஏற்பாட்டினால் மீன்பிடி பாதிக்கப்பட்டதோடு, விவசாயச் செய்கையில் ஆர்வம் அதிகரித்த போக்கும் காணப்படுகின்றது. கரணவாய் தெற்கில் 238, மேற்கில் 377, கரவெட்டி கிழக்கில் 227, மத்தொனியில் 110, கரவெட்டி மத்தியில் 137, துன்னாலை தெற்கில் 225, கப்பூதில் 85 குடும்பங்கள் வீதமும் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றன. சின்னக் கறுப்பன், மொட்டைக் கறுப்பன், பச்சைப் பெருமாள், முருங்கன், சீமாட்டி போன்ற நெல்லினங்கள் இப்பள்ளத்தாக்கில் பயிரிடப்படுகின்றன (ஆழ்வார்ப்பிள்ளை,பொ.,2005,64).

புகையிலை, வெங்காயம், மிளகாய், கீரை, போஞ்சி, புடோல், வெண்டி, பாகல், கத்தரி, பூசணி, வாழைக்காய், வத்தாழை, வெள்ளரி, நீர்ப்புசணி, பயிற்றை, சோளம், கருணைக்கிழங்கு, மரவெள்ளிச் செய்கை என ஒல்லாந்தர்காலத்தில் இப்பள்ளத்தாக்கில் அறிமுகப்படுத்தப்பட்டு, வருமானம் ஈட்டப்பட்டது. குறிப்பாகப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முறைகளில் சில பயிர்வகைகள் பயிரிடப்பட்டமைக்கான பதிவுகளும் கிடைத்துள்ளன. அவற்றுள் மரவள்ளி அம்முறையில் பயிரிடப்பட்ட ஒரு பயிராகும் ( Lewis,J.P., The Mannual of Vanni District in Ceylon, 1895, p.255). தொண்டமானாற்றின் தெற்குப் பள்ளத்தாக்குப்பரப்பில் தென்மராட்சிப் பரப்பிற்குள் பெருந்தோட்டப்பயிர் வகையாக மரவள்ளி, முருங்கை ( உலாந்தா முரங்கை) சாயவேர் என்பன உற்பத்தி செய்யப்பட்டமைக்கான பதிவுகள் கிடைத்துள்ளன (கிருஸ்ணராசா,செ.,இலங்கை வரலாறு-II, 2000,. ப.291).

கல்லுவத்தில் மிளகாயும், சோழங்கனில் பீற்றூட்,கரட்,உருளைக்கிழங்கு என்பனவும் ஒல்லாந்தர்காலப் பயிர்வகைகளுள் பிரபல்யமானவை. வடமராட்சியில் விவசாயத்தில் மிகத்தரமான உபஉணவு உற்பத்திப் பொருட்கள் சோழங்கனிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இப்பொழுது இங்கு 1448 கெக்டர பரப்பில் இல் விளையும் நெல் பழமையான முறைப்படி சேமிக்கப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்தில் தொண்டமானாற்று பள்ளத்தாக்கிலுள்ள வயல் வெளிகளில் நெல் விதைப்பதற்கென்று வெளியிடங்கைச் சேர்ந்த விதைப்பாளர்களை கொண்டுவந்திருந்தனர் என்ற குறிப்பும் காணப்படுகின்றது (சிவத்தம்பி,கா., கரவெட்டியின் வாழ்வியல், 2010, ப.27). இலைப் பயிரான புகையிலை அறுவடை செய்த பின் புகையூட்டப்பட்டு, பாணிப்புகையிலையாக சுவையூட்டி,மீண்டும் உலர்த்தப்படுகின்றது. ஒல்லாந்தர்காலப்பரப்பிலிருந்து இம்முயற்சி இற்றைவரைக்கும் தொடர்கிறது. ஒல்லாந்தர் காலத்தில் மலையாளதேசத்திற்கு இச்சுவையூட்டப்பட்டு உலர்த்தப்பட்ட பாணிப் புகையிலை வண்ணான்குளம் - நித்தியவெட்டையிலிருந்து தொண்டமானாற்றின் படகுப்பாதையூடாக ஏற்றுமதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நித்தியவெட்டைக்கு மிக அருகாமையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒல்லாந்தர் காலக் கட்டடமொன்று அண்மையில் வரலாற்று வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது ( புஸ்பரட்ணம், ப., வலம்புரி, 2017, ப. ).

**மீன்பிடி**

தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கின் இருபக்கங்களிலும் மீன்பிடியும் உயர்வான பொருளாதாரத்தை ஈட்டித் தந்த மிகத்தொன்மையான தொழில் நடவடிக்கையாகக் கொள்ளப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்து மத்தொனிக் கிராமம் முற்றுமுழுவதுமாக மீன்பிடிச் சமூகத்தைக் கொண்டதாகவே காணப்பட்டது. இவர்களை விடவும் கரவெட்டி, கரணவாய் என அனைத்துப் பிரதேச மக்களும் மீன்பிடியில் மத்தியகாலப்பரப்பில் ஈடுபட்டிருந்தனர். இவர்களில் பெண்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்பிடியில் ஈடுபட்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சமூகத்தில் மிகவும் வறுமை நிலைப்பட்டவர்களே இதில் பரவலாக ஈடுபட்டு அதிகளவான இலாபத்தையும் ஈட்டியுள்ளனர். ஆனால் இன்று இத் தொண்டமானாற்று வடிகால் நன்னீராக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து மீன்பிடி முற்றமுழுதாக கைவிடப்பட்டுள்ளது. இந்நிலை அவர்களது பொருளாதாரத்தை வீழ்ச்சி நிலைக்கு கொண்டு சென்றது. ஒல்லாந்தர் காலப்பரப்பில் மீனவர் சமுதாயம் பெருமளவில் முன்னேற்றம் கண்டிருந்தனர் என்றே கூற வேண்டும். இன்றும் கரை வலை, வீச்சு வலை, சூரை வலை, திருக்கை வலை, கட்டு மரம் தூண்டில், போன்றவற்றின் மூலம் மீன்பிடி தொண்டமானாற்றில் மேற்கொள்ளப்படுகின்றது. (சிவகுமார்,ஜெ.,1973,பக் 40-45.) மணலை, திரளி, சாளை, பொடி மீன், சிங்க இறால், திருக்கை, நெத்தலி, போன்றனவும் வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்பட்டது மாரி காலத்தில் பாய்ச்சல் நீருடன் சேர்ந்து இப்பிரதேசத்தில் மீன் வந்து தங்கி வளர்வதனால் மார்கழி மாதத்தில் இருந்து சித்திரை வரை மீன்பிடி அமோகமாக நடைபெறுவது வழக்கமாகும்.

**கால்நடை மற்றும் பறவைகள் வியாபாரம்**

தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்களது பொருளாதார ஈட்டத்தில் கால்நடைகளின் பங்கும் அளப்பரியதாகும். ஒல்லாந்தர்களது வாணிப நடவடிக்கைகளில் ஆடு மாடு கோழி புறா எனப் பலவும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இறைச்சி, பால; முட்டை எனப்பலவகையான உணவுப்பொருட்கள் தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கிலிருந்து தென்னிந்தியாவுக்கு குறிப்பாக மலையாளத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. தென்னிந்தியாவிலுள்ள பளையகார்ட் என்ற மையமே ஒல்லாந்தர்கால நெசவு உற்பத்திக்கு பெயர்போன தொழிற்சாலைகளைக் கொண்டிருந்தது. தொண்டமானாற்றுப்பள்ளத்தாக்கிலிருந்து சாயவேரிலிருந்து தயாரிக்கப்பட்ட பலவர்ணச் சாயங்கள் பளையகார்ட் என்ற இடத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. கோழிச்சாயம் எனக்குறிப்பிடப்படும் வர்ணச் சேர்க்கையை உருவாக்கயவர்கள் ஒல்லாந்தரேயாவர். இதனைப் பயன்படுத்தும் முறையை மேலே குறிப்பிடப்பட்ட கிராமங்களில் இன்றும் காணமுடியும். மண்டான், சோழங்கன், மத்தொனி போன்ற பிரதேசங்களில் கோழிகள் அதிகளவில் சாயம் பூசி வளர்க்கப்படுகின்ற முறையைக் காணமுடியும்.

தொண்டமானாற்றின் மூலம் பொருட்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்டது என்ற கருத்தில்முரண்பாடு இருக்கமுடியாது. கருணாகரத் தொண்டமான் உப்பை பெற்றுக்கொள்ளவே இவ் ஆற்றை அமைத்தான் என செவிவழிமரபு கூறுகின்றது. ஒல்லாந்தர் ஆற்றின்போக்கில் நடுவில் மரக்கலம் செலுத்தக்கூடிய வகையில்ஆழமான வாய்க்காலினை ஆழமாக அமைத்து கப்பல் போக்குவரத்திற்குரிய வழியை தொண்டமானாற்றில் அமைத்துக் கொண்டிருந்தனர். இவ்வாற்றுப்பள்ளத்தாக்கில் மத்தியகாலம் தொட்டு ஏற்றுமதி, இறக்குமதி, பண்டமாற்று வர்த்தகம் என்பன மேற்கொள்ளப்பட்டு வந்திருந்த நிலையை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் தொல்பொருட்கள் கிடைத்துள்ளன. . குதிரை, யானை, வாசனைத்திரவியங்கள் எனப் பலவும் இவ் ஆற்றின் மூலம் ஏற்றுமதி - இறக்குமதி செய்யப்பட்டது. உப்பு இங்கிருந்து கருணாகரனால் ஏற்றுமதி செய்யப்பட்டதோடு, சங்கிலி மன்னன் காலத்திலும் அதனைத் தொடர்ந்து வந்த போத்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்திலும் அந் நடவடிக்கை தொடர்ந்திருந்தது. (கடந்த முப்பதாண்டுப் போரின்போது இங்கிருந்த உப்பளம் முற்றுமுழுவதுமாக அழிக்கப்பட்டது.) இந்த உப்பளத்தில் வேலை செய்த பலரும் தொழிலினை இழக்கவேண்டி ஏற்பட்டதோடு, பொருளாதாரத்தையும் இழக்கவேண்டியேற்பட்டது. மேலும் நன்னீராக்கல் திட்டத்தின் பின்னர் உப்பு விளைதல் முற்று முழுதாகத் தடைப்பட்டு விட்டது. தொண்டமானாற்றில் விளையும் உப்பை அள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தொனி, இளமதி, அந்திரான் பிரதேசத்து பெண்கள் விற்பனை நடவடிக்கைகளில் கடந்தகாலங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். இன்று இந்த உப்பு விளையாத தன்மை அவர்களது பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக கொள்ளப்படுகின்றது. இன்று ஆற்றின் மூலமான வர்த்தக நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டாலும், உள்ளூர் உற்பத்திகள் உள்ளூர் சந்தைகளிலும், நெல்லியடி, அச்சுவேலி, கல்வியங்காடு சந்தைகளில் கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகின்றது. மொத்த உப்பு உற்பத்தியின் ஏற்றுமதி வெளி மாவட்டங்களுக்கும் செய்யப்பட்டு வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**குடிசைக் கைத்தொழில்**

**பனைப்பொருள் உற்பத்தி**

ஆரம்ப காலம் முதல் இப் பிரதேசங்கள் சிறந்த பனை வளத்தினை கொண்டிருக்கின்றது "தாலமும் தமிழனும் தலை வணங்காத் தன்மையில் ஒத்தவர்கள்" என்ற கலாநிதி. தக நாயக்கவின் கூற்றுக்கமைய தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்து அவர்களின் வாழ்விற்கு வழிகாட்டியாக அமைந்தது பனை வளம். தன்னையே நம்பி வாழும் மக்களின் பசியைப் போக்கும், பஞ்சத்தைப் போக்கும் தாவரமாக அமைந்தது பனையே ஆகும். (மனோன்மணி,ச.,2012,ப 280) யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதான வளங்களான கடல் வளம், நீர் வளம், பனை வளம் எனக் குறிப்பிட்ட வளங்களுள் பனை வளம் முக்கியம் பெறுகிறது. தொண்டமனாற்றுப் பிரதேசம் கடற் காற்றினை தடுத்தும், மழைவீழ்ச்சியை கூட்டியும், மண்ணரிப்பைத் தடுத்தும், தொழில் வளங்களைப பேணியும் மக்களை பேணி வரும் கற்பகத் தருவாய் போற்றப்படுகிறது.

பனங்கைப்பணிப் பொருட்களான தொப்பி, கூடை, விசிறி, பாய், சுளகு, இடியப்பத்தட்டு போன்ற உணவு சாரா உற்பத்திக் கைத்தொழில்களும், பனம்பழம், பனங்கிழங்கு, நுங்கு, கள்ளு, பதனீர் எனப் பல விளை பொருட்களைப் பயன்படுத்தி உணவு சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்களும் மேற் கொள்ளப்பட்ட வகையினை ஒல்லாந்தர்காலப் பதிவுகள் வெளிப்படுத்துகின்றன. இப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பனை சார்ந்த உணவுப் பண்டங்களான கிழங்கு, ஒடியல், புழுக்கொடியல், பனாட்டு ஆகியனவற்றிற்கு உள்ளூரிலும், வெளியூரிலும் அதிக சந்தை வாய்ப்புக்கள் இருந்து வருகின்றமையையும் காணமுடிகின்றது. இவ்வாறு பனை வளத்திலிருந்து பெறப்படும் பொருட்களை சந்தைப்படுத்துவதனூடாக அதிக வருமானத்தை தொண்டமானாறு மக்கள் பெற்றிருந்தனர்.

**கயிறுதிரித்தல்**

கயிறு திரித்தல் தொழிலானது இப் பிரதேசத்தில் நீண்ட காலமாக செய்யப்பட்டு வந்த ஒரு தொழில் வகையாகும். இது பாரிய அளவில் இடம்பெறவில்லை எனினும் இங்கு திரிக்கப்பட்ட கயிறுகள் பொதுவாக வட பகுதியில் கோயில்களின் தேர் வடம் இழுப்பதற்கும், கப்பல் தேவைக்கும், மற்றும் பலதரப்பட்ட தேவைக்கும் பயன்படுத்தப்பட்டன. இக் கயிறுகள் அங்குள்ள சிவன் கோயில் வடக்கு வீதியில் திரிக்கும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வந்தது. குறிப்பாக 1975 ஆம் ஆண்டு வரை இத் தொழில் நிலவி வந்ததாக ந.நகுலசிகாமணி "வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்" எனும் நூலில் குறிப்பிட்டடுள்ளார். மேலும் அவர் குறிப்படுவதாவது: கயிறு திரிப்பதற்கு தேவையான உபகரணங்கள் அத்தனையும் சிவன் கோயில் நிர்வாகத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வந்தது. கயிறு திரிப்பவர்கள் இச்சாதனங்களுக்கு வாடகை செலுத்த வேண்டும் என்ற நியதி காணப்பட்டது. கயிறு திரித்த முறை பற்றிக் நோக்கும்போது, சிறப்பாக நங்கூரம் கட்டும் கயிறு (4அங்குல விட்டம்) திரிக்கும் பொழுது எட்டுப் பேர் இணைந்து திரிப்பார்கள். ஒவ்வொரு புரிக்கும் ஒருவராக எண்மர் இணைந்து நங்கூரக் கயிற்றினைத் திரிப்பார்கள். கயிறு திரிக்கும் வேலையில், பழைய மீன்பிடிக்கு பயன்படுத்தப்பட்ட வலைகளை கயிறாக திரித்திருந்தமையையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக் கயிறுகள் கிணற்று நீர் அள்ளுவதற்கு பயன்படுத்தப்பட்டமையையும் அறிய முடிகின்றது. . இவ்வாறாக தொண்டமனாற்று பள்ளத்தாக்கு மக்களது சிறுகைத்தொழில் நடவடிக்கைகள் ஜீவனோபாயத்துடன் தொடர்பு பட்டவையாக ஒல்லாந்தர் காலத்தில் இருந்து வருகின்றது.

### நல்லெண்ணெய் ஊற்றல்

தொண்டமனாற்று பள்ளத்தாக்கு மக்களது தொழில் முறைகளில் நல்லெண்ணெய் ஊற்றலும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இத் தொழில் முறையில் இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்பு குடவத்தை, மணலாவடி, நுகாவில், வல்லியாவத்தை போன்ற பிரதேச மக்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். நல்லெண்ணெய் ஊற்றும் வேலையில் ஆரம்ப காலத்தில் மனித வலுவை மட்டுமே பயன்படுத்தினர். அதாவது பனை நாரினால் இழைக்கப்பட்ட முன்று மூலை அல்லது நான்கு மூலை உள்ள ஊற்றுப் பெட்டியில் காய்ந்த எள்ளைத் திணித்து துலா போன்ற ஒரு மரத்தாலான உருளையை மேற்படி ஊற்றுப் பெட்டியில் வைத்து மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் அசைத்து எண்ணெய் பெறப்படும். இம்முறையில் பெறப்பட்ட எண்ணெய் உணவுத் தேவைக்கே பயன்படுத்தப்பட்டது. இந் நடவடிக்கை இன்று முற்று முழுதாக கைவிடப்பட்ட தன்மையைக் காணலாம்.

### கருவாடு உற்பத்தி- ஒல்லாந்தர் காலக் கைத்தொழில்

இப் பள்ளத்தாக்கை அண்டி வாழுகின்ற மக்கள் முன்பொரு காலத்தில் கருவாட்டு உற்பத்தியில் கைதேர்ந்திருந்தனர். மத்தொனி மக்கள் கருவாடு உற்பத்தியின் மூலம் குறிப்பிடத்தக்க வருமானத்தை இற்றைவரைக்கும் பெற்றிருந்தனர். இவர்கள் பெரிய, சிறிய மீன்களில் கருவாடுகளை தயாரித்ததோடு, இவற்றுக்கு உப்புப் பயன்படுத்தாமை ஒரு சிறப்பம்சமாகும். இவை நீண்ட காலத்திற்கு வைத்துப் பயன்படுத்தப்பட்டதோடு, தென்னிலங்கைக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டது. துரியாப் பாரைக் கருவாட்டுக்கு தனியான கிராக்கி காணப்பட்டது. இவற்றை விட கரவெட்டி , மண்டான், வல்லியாவத்தை பிரதேசத்தவர்ளும் சமுதாய மட்டத்தில் கீழ்மட்டத்தில் காணப்பட்ட சாதியினரும் இந் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

### பலகார உற்பத்தியும் சந்தை வாணிபமும்

அந்தணன் திடல், சோழங்கன், தச்சன் தோப்பு, வெல்லன், தழையப்புலம் (தல்லையப்புலம்), எனப் பல கிராமத்து மக்களும் பாரம்பரிய உணவுகளான எள்ளுப்பா(கு), பொரிவிளாங்காய், பனாட்டு என்பவற்றை செய்து வாணிபம் செய்தனர். இன்றும் போத்துக்கீசர், ஒல்லாந்தரால் அறிமுகப்படுத்தப்பட்ட உணவுத்தயாரிப்புக்களுடன் லட்டு, பகோடா, தட்டைவடை, முறுக்கு என்பனவும் பாரம்பரிய உணவு வகைகளாக தயாரிக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இற்றைவரைக்கும் காலை மற்றும் இரவு உணவுகள் தயாரிக்கப்பட்டு, வீடு வீடாகச் சென்று விற்பனை செய்யப்பட்டு வரும் போக்கும் தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கில் காணப்படும் கிராமங்களிடையே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது..

### நெசவு தொழிலும் ஒல்லாந்தர்களது புடவை வாணிபமும்

தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் ஆரம்ப காலத்தில் இருந்தே குடிசைகளில் வைத்து நெசவு செய்யப்பட்டது. நூல் நூற்றலுக்கான சாரீரப்பதனை இப்பள்ளத்தாக்கில் வீசும் காற்றுக் கொண்டிருப்பதனால் ஒல்லாந்தர் காலத்திலிருந்தே நூல்நூற்றலுடன் சாயமூட்டும் தொழிலும் நன்னிலையில் வளர்ச்சி பெற்றிருந்தது. மென்மையான ஈரப்பதன் கொண்ட வல்லையிலுள்ள காலநிலை இழையங்களை சிதைத்துவிடாது நூல்நூற்றலுக்கும் ஆடைநெய்தலுக்குமான சாதகமான சூழ்நிலையில் உள்ள காரணத்தினால் ஒல்லாந்தர் காலத்திலிருந்து ஆடை உற்பத்தித் தொழில் சிறப்படைந்திருந்தது ( கிருஸ்ணராசா, செ., வடஇலங்கைப் பண்பாட்டு உருவாக்கமும் உருவாக்கியவர்களும், 2014,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப.74). இதன் தொடர்ச்சியாகவே வல்லையில் மின்இயக்கமுறையில் ஆடைத்தொழிற்சாலை இயங்கிவந்தமையும் நினைவு கூரப்படவேண்டும். ஆனால் இன்று அத்தொழில் கைவிடப்பட்டு விட்டது. இருப்பினும் கரணவாய், கரவெட்டி மத்தி, அத்தாய் ஆகிய மையங்களில் நெசவுத் தொழில் சிறு அளவில் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. தச்சன் தோப்பு பிள்ளையார் கோவிலுக்கருகிலும் நெசவுத் தொழில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதில் அக் கிராமத்துப் பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். சாறி வகைகள், துவாய், பெட்சீட் என்பன பாரம்பரியமாகவே இங்கு நெசவு செய்யப்படுகின்றது. வடமராட்சியில் வியாபாரி மூலை என்ற கிராமம் புடவை வாணிபத்தில் 19ஆம் நூற்றாண்டு வரைக்கும் ஈடுபட்டு வந்திருந்தமை ஒல்லாந்தரது புடவை வாணிகத்தின் செல்வாக்கினையே காட்டுகின்றது.

**முடிவுரையாக**

மத்தியகால யாழ்ப்பாண வரலாற்றின் வளர்ச்சிக்கு நடுநாயகமாக அமைந்த தொண்டமானாற்றின் அமைவும் அதன் பள்ளத்தாக்கின் பங்களிப்பும் வடஇலங்கையில் வரலாற்றுப் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலியிருந்தமையுடன் பிராந்திய ரீதியான பண்பாட்டுத் தனித்துவத்தினை பேணுவதற்கு ஏற்றவகையிலும் இப்பள்ளத்தாக்கு அமைந்திருந்தமை ஒரு வரப்பிரசாதமாகும். அதனை வலியுறுத்தும் வகையில் தொடக்கத்தில் கருதுகோள்களாக குறிப்பிடப்பட்டனவற்றை இங்கு நினைவு படுத்துவது பொருத்தமாகும். அவையாவன:

1. பொருளீட்டத்திற்கான கனிய வளங்களைக் கொண்டுள்ள பௌதீக உறுப்பாக விளங்கி வருகின்றமை.
2. குடாநாட்டின் அரசியல், பண்பாட்டுத் தளநிலமையானது காலங்களினூடாக மாற்றத்திற்குள்ளாகி வந்திருந்த நிலையிலும் வடமராட்சி மரபுகளையும் அவற்றின் அடையாளங்களையும் தந்த பண்பாட்டுக் கிராமங்களைப் பேணிப்பாதுகாத்து வந்த ஓர் அரணாக விளங்கி வந்திருந்தமை.
3. உள்ளூர் உற்பத்திப்பொருளாதார வாணிபப்போக்குவரத்து இணைப்புக்கான ஒரு புவியியல் அலகாக விளங்கி வந்துள்ளமை.
4. மத்திய காலத் தென்னிந்திய - வட இலங்கையின் சமூக, பொருளாதார நிறுவனங்களை ஒன்றிணைத்திருந்தமை.

இந்த நான்கு செயற்பாடுகளையும் மேலே விபரிக்கப்பட்ட பொருளியல் தரவுகளூடாக தொண்டமானாற்றுப்பள்ளத்தாக்குடன் தொடர்புபடுத்தி பார்க்கமுடிகின்றது. வேதாரணியத்துடன் இப்பள்ளத்தாக்குக்குரிய தொடர்பானது பிராமணிய குடியேற்றத்திற்குரியதாக இருந்திருப்பினும், இங்கிருந்து கருவாடு வேதாரணியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முறையில் கோயிற் பண்பாட்டு நிறுவனங்களையும் தொண்டமானாறு தன்வசம் இணைத்திருந்தது என்பதனை உறுதிப்படுத்த முடிகின்றது என்ற தகவலினை வேதாரணியத்திலுள்ள பதிவுகள் தருகின்றன. தஞ்சாவூருடன் இப்பள்ளத்தாக்கு கொண்டிருந்த தொடர்புகள் மேலும் ஆராயத்தக்கன. யாழ்ப்பாண இராச்சியத்தின் இரண்டாம் தலைநகரம் என்ற நிலையை கோப்பாய் எனவும் சிலர் புட்டளை எனவும் இன்னும் சிலர் பொங்கொலிநீர்ச் சிங்கை நகரான வல்லிபுரமே எனவும் வாதிடுகின்றனர். பருத்தித்துறையிலுள்ள தும்பளை என்ற கிராமமும் யாழ்ப்பாண இராச்சியத்துடன் தொடர்பு பட்டதாக எடுத்துக்காட்டப்படுகின்றது. இவையாவும் தொண்டமானாற்றின் ஊடான போக்குவரத்து வலையமைப்பினூடாக இணைக்கப்பட்டுக் காணப்பட்டன என்பதும் இங்கு மனங்கொளத்தக்கது. இதனைவிட இவ்வாய்வில் தொண்டமானாற்றுடன் இணைந்த விஜயநகர்கால அரசியல், வர்த்தகப் பண்பாட்டுத் தொடர்புகள் எவையும் எடுத்துக்காட்டப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாற்றுப்பள்ளத்தாக்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமருங்கிலும் காணப்படும் கிராமங்களின் பெயர்கள் பெருமளவிற்கு சோழர் மற்றும் விஜயநகர் வம்சாதிக்கத்திற்குரிய பெயர்களாகவே காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. தொண்டைமானார் இராயப்பன் கொடுத்த நெல் 20 கலம் என்ற குறிப்பு இராமநாதபுரம் கோதண்டசுவாமி கோயிலில் வைக்கப்பட்டுள்ள 1715 ஆம் ஆண்டுக்குரிய சாக்காங்குடிச் செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. (சேதுபதி செப்பேடுகள் by புலவர் இராசு, 1994,பக்.270-271.) தொண்டைமான் சோழிய வரையனுக்கு முத்துரகுநாதசேதுபதியினால்( காத்ததேவர்)1763ஆம் ஆண்டில் ஈழமும் கொங்கும் யாழ்ப்பாணப்பட்டினமும் அளித்து நிர்வகித்த செய்தி அரியகுடிச்செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (STI, vol.III,Part-I p.1142.). இவ்வாதாரங்கள் தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்குப்பிரதேசம் முழுவதும் சோழர் காலத்திலிருந்து பொருண்மிய நடவடிக்கைகளுக்குட்பட்டு வந்திருக்கவேண்டும் என்பதனை உறுதிப்படுத்துவதாக உள்ளன. தஞ்சைப்பிருஹதீஜ்வரர் கோயிலுக்கு தொண்டமானாற்றில் விளைந்த உப்பு எடுத்துச் செல்லப்பட்டதாக கர்ணபரம்பரைக் கதைமரபுகள் எடுத்துக்காட்டுகின்றன. சோழங்கன், சோனப்பு (சோழஉப்புப் புலம்), சோழன்கட்டு, சோழன் தோட்டம், கங்குண்டான் ( கங்கை கொண்டான்), வீரணன்கல் (வீராணம்கால்வாய்,பெரியதோட்டம், மாவில், அந்தணன்திடல், அத்தாய் போன்ற மக்கள் குடியிருப்புக்கிராமங்கள் சோழர்காலத்து பொருண்மிய, பண்பாட்டு நிலைகளை உறுதிப்படுத்துவனவாக உள்ளன. எனவே இவ்வாய்வானது தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும் நிலையிலேயே மத்தியகால யாழ்ப்பாணத்தின் பொருளாதார வலைப்பின்னல் அமைப்பில் தொண்டமானாற்றின் பங்களிப்பினை மிகத் தெளிவாக கண்டு கொள்ள முடியும் .

**உசாத்துணை நூல்கள்**


1. இராசநாயகம்,செ.; யாழ்ப்பாணச் சரித்திரம் , (மீள்பதிப்பு), ஏசியன் எடுகேஷனல் சர்வீசஸ், சென்னை 2003
2. கணபதிப்பிள்ளை,க., ஈழத்துவாழ்வும் வளமும், (மீள்பதிப்பு), குமரன் புத்தக இல்லம் கொழும்பு – சென்னை, 2001.
3. கிருஷ்ணராசா, செ.; இலங்கைவரலாறுஇ பாகம் -2 பிறைநிலா வெளியீடு, 2005 .
4. குணசிங்கம். மு. இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறுஇ கி.மு. 300 கி.பி 2000) M.V வெளியீடு, தென் ஆசியாவின் மையம் சிட்னி, 2008.
5. சிவராசாசிங்கம்.ஏ் ஈழவரலாற்றுப் பதிவுகள்இ யுசசழறறநடீரடிடளைாநசளஇ வுழசழவெழ இ ஊயயெனயஇ 2003
6. தியாகராஜா. எஸ் ஈழத்தமிழரின் ஆதிச்சுவடுகள், தேசம் வெளியீடு, இலண்டன் 2004,
7. ஜெயக்கொடி,சிவகுமார்., 1973 யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடற்கரை பகுதியினது புவி வெளியுருவவியல் வடக்கே தொண்டமானாறு முதல் கிழக்கே சுண்டிக்குளம் வரை) (unpublished)
8. சூசை,ஏ.எஸ்., 1994. தொண்டமானாறு ஏரியும் அதன் புவியியல் பின்னணியும்,யாழ்ப்பாணப் புவியியலாளன் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.
9. இராஜேஸ்வரன்,எஸ்.ரி,பி., 2011.யாழ்ப்பாணக்குடாநாட்டினதும் அதன் அயலில் அமைந்துள்ள தீவுகளினதும் தோற்றம்,யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
10. வேலுப்பிள்ளை,க.,1918, யாழ்ப்பாணவைபவகௌமுதி ,சயஸ்ரீ சாரதா பீடேந்திரசாலை.
11. இந்திரபாலா,கா.,1972,யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்,யாழ்ப்பாணத் தொல்லியல் கழகம்,வட்டுக்கோட்டை.
12. சிவலிங்கராஜா,எஸ்.,1984, வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும், வடமராட்சிக்கல்வி வட்டம்.,கரவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சிவலிங்கராஜா,எஸ்.,2014, யாழ்ப்பாணப் பண்பாடு: மறந்தவையும் மறைத்தவையும், யாழ்ப்பாணம்
14. புஸ்பரட்ணம்,ப.,2012,யாழ்ப்பாணவாழ்வியல்,கலைக்கேசரி எக்ஸ்பிரஸ்.வெளியீடு
15. பாலசுந்தரம்,இ.,1989, இலங்கை இடப்பெயர் ஆய்வுகள்(வடமராட்சி-தென்மராட்சி),வல்லிபுரம் இந்து கல்வி கலாச்சார மன்றவெளியீடு.
16. சிவச்சந்திரன்.இரா.,1986,யாழ்ப்பாணப் புவியியலாளன்,இதழ் 4,யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.
17. விஜயகுமார்,சி.,2010 கரவெட்டியின் வாழ்வியல்,துரை பதிப்பகம்.,கரவெட்டி.
18. ஆனந்தகுமாரசுவாமி,க.,2009, தச்சைதிருப்பதி வரலாறு,பிள்ளையார்அச்சகம், கரவெட்டி.
19. கிருஸ்ணமூர்த்தி,ச.,திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள், சென்னை,2000
20. புதிய கட்டடத்திறப்பு,2005., விழா,சிறப்பு மலர்.,பிரதேச செயலகம் வடமராட்சி தெற்கு- மேற்கு, கரவெட்டி.
21. கலாமணி,த. (பதிப்பாசிரியர்), திருவுடையாள்,பிரதேசமலர் கலாசாரப்பேரவை 2007,2008,2011,2014, கரவெட்டி.
22. கிருஸ்ணராசா, செ.,தொல்லியலும் வடமராட்சியின் பண்பாட்டுத் தொன்மையும்,பிறைநிலா வெளியீடு, கோண்டாவில,2015.
23. சர்மா, R.S., இந்திய நிலமானியமுறை, NCBH வெளியீடு, 2009,சென்னை,
24. Thiagarajah, Siva., Peoples and Cultures of Early Sri Lanka, A Tamil Information Centre Publication, Greate Britain.
25. 28 Pathmanathan,S., HinduTemples in Sri Lanka,Kumaran Book House, Colombo, 2006. .
26. Mathanakaran,R., 'Geographical Background of Jaffna',Appendix-I in Early Settlement of Jaffna By Ragupathy,1987,
27. கிருஸ்ணராசா,செ., 'வடமராட்சியில் இனங்காணப்பட்ட தொல்லியல் சான்றுகளும் புராதன மையங்களும்', யா/ வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் 110 வது ஆண்டு நிறைவு மலர், 2004, பக்.92-113
28. Deraniyagala,S., Prehistoric basis for the rise of Civilization in Sri Lanka and Southern India, 2004, Chenni, p.4/ The Prehistory of Sri Lanka ,Part.I.,1992.
29. Deraniyagala,S., The Prehistory of Sri Lanka ,Part.I.,Colombo, 1992.
30. Anparasi,R., The Cultural Influences of the Dutch in Northern Sri Lanka – A Study.,unpublished M.A. Thesis, university of Jaffna, 2010.
31. சுந்தரலிங்கம்கணபதிப்பிள்ளை(பதிப்பாசிரியர்),வன்னிவரலாறும்பண்பாடும்,2014,சென்னை.
32. கிருஸ்ணமூர்த்தி, ச., திருவாவடுதுறை ஆதீனச்செப்பேடுகள், சென்னை, 2000.
33. விஜயகுமார் சின்னத்துரை(ப.ஆ), கரவெட்டியின் வாழ்வியல், அமரர் சித்தர் சின்னத்துரை நினைவு வெளியீடு,2010, கரவெட்டி.
34. கிருஸ்ணராசா, செ., வடஇலங்கைப் பண்பாட்டுத்தளத்தின் உருவாக்கமும் உருவாக்கியவர்களும்:தொல்லியல் மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு விளக்கம், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை-2014, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
35. லூயிஸ், ஜே.பி., இலங்கையின் வன்னி மாவட்டங்கள் ஒரு கையேடு (தமிழ் மொழிபெயர்ப்பு), சேமமடு பதிப்பகம், 2012
36. சிவக்குமார், ஜெ., குடாநாட்டின் கடற்கரையோர நிலவுருவங்கள்: தொண்டமானாற்றிலிருந்து சுண்டிக்ககுளம் வரைக்கும், 1973, (பிரசுரிக்கப்படாதது.)
37. South Indian Temple inscriptions, Vol III, Part I, P.,1142, Madras, 1937



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ. ஜீ பொன்னம்பலத்தின் அரசியல் தலைமைத்துவம் ஒரு விமர்சன ரீதியான மீள்பார்வை

சி. திருச்செந்தூரன்

**ஆய்வுச் சுருக்கம்**

1930களின் தொடக்கத்தில் அரசியலினுள் பிரவேசித்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் 1944 ஆம் ஆண்டு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியை தோற்றுவித்தார். இலங்கைத் தமிழர் அரசியல் செல்நெறியில் முதன் முதலாக தோற்றம் பெற்ற அரசியல் கட்சியான தமிழ்க் காங்கிரஸ், 1977 ஆம் ஆண்டு வரைக்கும் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தலைமைத்துவத்தின் கீழ் பல்வேறு தடங்களில் பயணித்து இற்றை வரைக்கும் இயங்கு நிலையில் உள்ளது. இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியில் சம பிரதிநிதித்துவ கோரிக்கையை முன்னிறுத்தி செயற்பட்ட ஜீ. ஜீ பொன்னம்பலம் சுதந்திரத்தின் பின்னர் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப்பகிர்வு என்ற கொள்கையை வலியுறுத்தினார். இருந்த போதிலும் 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் தனிநாட்டுக் கொள்கையை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தார். ஜீ. ஜீ. பொன்னம்பலம் 10 பொதுத்தேர்தல்களில் போட்டியிட்டு இதில் 6 தேர்தல்களில் எதிரணி வேட்பாளர்களைத் தோற்கடித்து வெற்றி பெற்றிருக்கின்றார். குறிப்பாக 1934 தொடக்கம் 1960 வரை தொடர்ச்சியாக 26 வருடங்கள் சட்டசபை உறுப்பினராக இருந்த சாதனைக்குரியவர். 1949 இற்கும் 1953 ற்கும் இடையில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் கைத்தொழில், கடற்றொழில் அமைச்சராக இருந்த காலத்தில், காங்கேசன்துறை சீமேந்துத்தொழிற்சாலை, வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை, போன்ற பல தொழிற்சாலைகள் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் திறக்கப்பட்டன. அதே வேளை ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் சமபிரதிநிதித்துவக் கோரிக்கை தொடர்பாகவும், இந்திய வம்சாவழியினரின் பிரஜாவுரிமை தொடர்பான ஜீ.ஜீ பொன்னம்பலத்தின் நிலைப்பாடு பற்றியும் சமூகத்தில் பல்வேறுபட்ட சந்தேகங்கள் நிலை பெற்றுள்ளன. இத்தகைய சந்தேகங்களை தெளிவுபடுத்தி, ஜீ.ஜீயின் பலம், பலவீனம் ஆகியவற்றை அடையாளப்படுத்தி அதனூடாக ஜீ. ஜீ பொன்னம்பலத்தின் அரசியல் ஆளுமையை மீள்பார்வை செய்கிறது.

**திறவுச் சொற்கள்:** அரசியல் தலைமைத்துவம், ஜீ. ஜீ. பொன்னம்பலம், இலங்கைத்தமிழர், பலம், பலவீனம்.

## 1) அறிமுகம்

ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களுடைய அரசியல் பிரவேசம் 1929ஆம் ஆண்டு இடம்பெற்றது. குறிப்பாக டொனமூர் குழுவினரின் சிபார்சுகள் தொடர்பாக இலங்கையர்களிடையே பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவி வந்தது. இந்நிலையில் அப்போதைய முக்கிய தலைவர் சேர். பொன். இராமநாதன் டொனமூர் சிபார்சுகளை ஆட்சேபிப்பதற்காக இலண்டன் பயணமானார். அதேவேளை 1929ஆம் ஆண்டில் கொழும்பில் சில தமிழ்ப் பிரமுகர்கள் கூடி சிபார்சுகளை ஏற்பதாகத் தீர்மானம் நிறைவேற்றினர். அக்கூட்டத்திற்கு வந்திருந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் திடீரென எழுந்து கமிசன் சிபார்சுகளால் ஏற்பட இருக்கும் தீமைகளைச் சுட்டிக்காட்டி சிபார்சுகளை ஏற்கக் கூடாதென்ற தீர்மானத்தை முன்மொழிந்தார். தீர்மானம் அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது. (சிவபாதம். ந,1977, ப.02) இத்தகைய பொன்னம்பலத்தின் செயற்பாடு 1929ஆம் ஆண்டிலிருந்து அவரை கவனிப்புக்குரியவராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றியது. அத்துடன் 1939ஆம் ஆண்டு இலங்கையின் அரசாங்க சபையில் எதிர்கால அரசியல் திட்ட சிபார்சுகளின்போது ஐம்பதுக்கு ஐம்பது என்ற சம பிரதிநிதித்துவ அடிப்படையில் சட்டசபைப் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும் என வாதிட்டுக் கொண்டார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கென சிறந்த கட்சி ஒன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் கொழும்பு மாநகரில் ஒரு மகாநாட்டைக் கூட்டினார். அம் மகாநாட்டிற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள முதிர்ந்த அரசியல்வாதிகளும், ஏனைய பகுதிகளிலிருந்து அநேக பிரதிநிதிகளும் வந்திருந்தனர். அம் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டபடி 1944ஆம் ஆண்டு ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசை ஸ்தாபித்ததோடு அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். (சிவபாதம். ந:1977, ப.04) 1947ஆம் ஆண்டு இடம்பெற்ற இரு சபைப் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒன்பது பேர் போட்டியிட்டு ஏழு பேர் வெற்றி பெற்றுக்கொண்டனர். குறிப்பாக யாழ்ப்பாணத் தொகுதியிலிருந்து ஜீ.ஜீ.பொன்னம்பலம், காங்கேசன்துறைத் தொகுதியிலிருந்து எஸ். ஜே.வி. செல்வநாயகம், வட்டுக்கோட்டைத் தொகுதியிலிருந்து கே. கனகரத்தினம் பருத்தித்துறைத் தொகுதியிலிருந்து எஸ்.இராமலிங்கம் கோப்பாய் தொகுதியிலிருந்து கு.வன்னியசிங்கம், சாவகச்சேரித் தொகுதியிலிருந்து வி.குமாரசாமி திருகோணமலைத் தொகுதியிலிருந்து கே. சிவபாலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். (சிவபாதம். ந:1977, ப.04)

1949ஆம் ஆண்டு இந்திய வம்சாவளித்தமிழர் தொடர்பான மசோதாவினை ஏற்றுக் கொள்வதா? நிராகரிப்பதா? என்றபிரச்சினையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான குழுவினர் கட்சியை விட்டு வெளியேறி பின்னர் 1949ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி தமிழ் அரசுக்கட்சியை உருவாக்கிக் கொண்டனர். ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் 1934 ம் ஆண்டு தொடக்கம் 1960 ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக சட்டசபைப் பிரதி நிதித்துவத்தை வகித்தவர் என்ற சிறப்புக்குரியவர்.

இலங்கை அரசியல் வரலாற்றில் அரசியல் தலைமைகளின் ஆளுமைகளையும் குறிப்பாக அவர்கள் எதிர்கொண்ட சவால்களையும் நெருக்கீடுகளையும் மதிப்பீடு செய்வது அரசியல் அபிவிருத்தி நோக்கில் மிகவும் அவசியமானதாகும் அந்த வகையில் இவ் ஆய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு முன்னெடுக்கப்படுகிறது எனலாம்.

- இலங்கைத் தமிழ் அரசியல் தலைமைத்துவம் என்ற என்ற வகையில் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் சிறப்புக்களை வெளிக் கொணர்தல்.
- ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் பலவீனங்களை அடையாளம் காணல்.
- ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் அரசியல் பணிகளை மதிப்பீடு செய்தல்.

**ஆய்வின் முறையியல்**

இவ் ஆய்வானது அரசியல் சமூகவியல் அணுகுமுறையின் ஊடாக முன்னெடுக்கப் பட்டுள்ளது. சமூக நிறுவனங்களையும், சமூகக் குழுக்களையும், தனிமனிதர்களையும் அவற்றிற்கிடையிலான அரசியல் தொடர்புகளையும் முதன்மைப்படுத்தி ஆய்வுசெய்யும் முறையே அரசியல் சமூகவியல் அணுகுமுறையாகும். "அரசியல் சமூகவியல் என்பது அரசறிவியல் சமூகவியல் ஆகியவற்றுக்கிடையே ஒரு இணைப்புப் பாலமாக அமைந்தது. அதனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தில் ஒரு "கைபிரிட்" கற்கைநெறி என அழைத்தனர். அரசியல் பிரச்சினைகள் பலவும் சமூகப் பிரச்சினையோடு தொடர்பு கொண்டவை என்ற அடிப்படையில் இரண்டு கற்கைநெறிகளும் இணைந்து செயற்பட வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். இவ்வாறான அணுகுமுறையினால் அரசறிவியல் மற்றும் சமூகவியல் கற்கை நெறிகள் பயன்பெறுகின்றன." (நாதன். கா.ச.2002, ப.11) இவ் அணுகுமுறையைப் பயன்படுத்தியவர்களில் மைக் ஐவர் (Maciver), டேவிட் ஈஸ்டன் (David Easton), அல்மண்ட் (Almond), டேவிட் ரூமன் (David Truman) போன்றவர்கள் முக்கியமானவர்கள். "இந்த வகையில் மனிதன் ஒரு சமூகப்பிராணி என்ற வகையில் அவனிடம் அரசியல் பிரச்சினைகள் எவ்வாறு தோன்றுகின்றன? அவற்றை எவ்வாறு தீர்த்து வைப்பது? என்ற யதார்த்த நோக்கோடு உருவாக்கம் பெற்றது அரசியல் சமூகவியல்" அணுகுமுறையாகும். (நாதன். கா.ச.2002, ப.15) இவ் ஆய்வின் முறையியலாக முதலாம் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் கொள்ளப்படுகின்றன.

முதலாம் நிலைத்தரவுகளாக The Marathan Crusade for "Fifty Fifty" (Balanced Representation) in the State Council – 1939. என்கின்ற ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் நூல், ஹன்சாட், தமிழ்க் காங்கிரசின் ஆண்டு மலர்கள் கொள்ளப்படுவதுடன் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் குடும்ப உறுப்பினர்களுடனான நேர்காணல்கள், ACTC உறுப்பினர்களுடனான நேர்காணல்கள், தமிழரசுக்கட்சி உறுப்பினர்களுடனான நேர்காணல்கள், ஏனைய அரசியல் பிரமுகர்களுடனான நேர்காணல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது மாத்திரமன்றி கட்டமைக்கப்பட்ட 100 வினாக்கொத்துக்கள் 18 வயதிற்கு மேற்பட்டவர்களிடம் விநியோகிக்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத்தரவுகளாக ஜீ. ஜீ. பொன்னம்பலம் பற்றிய நூல்கள், ஆய்வுச் சஞ்சிகைகள், தேசிய பத்திரிகைகள், அறிக்கைகள், இணையத் தகவல்கள் போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டு இவ் ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

**ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தலைமைத்துவச் சிறப்புக்கள்**

முற்போக்கான வகையில் ஒரு நாட்டின் தலைமைத்துவம், நல்ல கொள்கைகளை உருவாக்க முடியுமானால், அதனால் சிறப்பாக நாட்டை ஆளமுடியும். பிளவுகள், பின்னடைவுகள் இன்றி சமூக முன்னேற்றம் ஏற்படும். அந்தவகையில் இலங்கையின் சிறுபான்மை இனமான தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவங்கள், காலத்திற்குக் காலம் சிங்கள தலைவர்களால் ஏமாற்றப்பட்டு வந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இருந்த போதிலும் சில அரசியல் தலைமைத்துவங்கள் நெருக்கடிமிக்க காலகட்டத்திலும், பாதகமான களச் சூழ்நிலைகளிலும் குறிப்பிடத்தக்களவு நலன்களை தமது இனக்குழுமம் சார்பாக உறுதிப்படுத்தியுள்ளமையை அடையாளம் காணமுடிகிறது. அந்தவகையில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவராக இருந்த ஜீ. ஜீ. பொன்னம்பலத்தில் பின்வரும் தலைமைத்துவச் சிறப்பியல்புகளைக் காண முடிகிறது.

**(i) வசீகரத் தலைமைத்துவ இயல்பு**

பிரபல ஜேர்மனிய சமூகவியலாளரான மக்ஸ் வெபர் (Max Weber) அவர்களின் கூற்றுப்படி தலைமைத்துவத்தில் மூன்றுவகை உண்டு. பாரம்பரியத்தின் அடிப்படையில் தோன்றும் அதிகாரம் இவற்றுள் முதலாவது அதாவது அழிவற்ற பழைமையின் மீதும் போற்றப்படும் வழமைகள் மீதும் தோன்றும் அதிகாரம் இதுவாகும். இரண்டாவது சட்டபூர்வமான அதிகாரம், அதிகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அவ்வப்பொழுது நடைமுறையிலிருக்கும் சட்ட ஒழுங்கமைப்பின் வலுமீது நம்பிக்கையை வைத்துக் கொண்டிருக்கும் அதிகாரம். மூன்றாவது சமகால சமூகத்திற்கு வேண்டிய வசீகர அதிகாரம் ஆகும்.

வசீகரத் தலைவன் ஏனைய தலைவர்களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுவான். குறிப்பாக இத்தலைவனுக்கு மக்கள் காட்டுவது அன்பு மாத்திரமல்ல பக்தியுங் கூடவாகும். இரண்டாவதாக மக்கள் இத்தகையவர்களை வியந்து பாராட்டுவதுடன் மதிப்பச்சத்துடனும் நோக்குவார்கள். மூன்றாவதாக மதிப்பு உணர்ச்சியிலும் பார்க்க வணக்க உணர்ச்சியே மக்கள் மத்தியில் மேலோங்கி நிற்கும். மொத்தத்தில் வசீகரத் தலைவர் மீது மக்கள் ஈடுபாடு கொண்டிருப்பதை "நம்பிக்கை" என்று கூறுவதைவிட தலைவனை முழுமையாக விசுவாசிப்பது எனக் கொள்வதே பொருத்தமானது. வசீகரம் என்பது மானிட உயிர் ஒன்றின் புறநடைத் தன்மையான ஒரு குணாதிசயமெனக் கொள்ள வேண்டும் என மக்ஸ் வெபர் குறிப்பிடுகின்றார். குறித்த ஒரு மானிடத்தின் பண்புத் தரத்திலும், அசாதாரண புனிதத்திலும், அஞ்சா நெஞ்சத்திலும், முன்மாதிரியான குணாதிசயத்திலும் அவன் மீது தாம் கொண்ட அதீத நம்பிக்கைக் கூடாக மக்கள் அவனுக்குத் தம்மை அடிமையாக்கிக் கொள்வதும், அந்தத் தலைவன் அம் மக்களின் உள்ளத்திலும், அறிவிலும் அமர்ந்துவிடுவது வசீகரத் தலைமைத்துவத்தினது தன்மையாகும். மாறாக அதிகாரத்தைக் கைப்பற்றிய ஒரு தலைவன் அதனைப் பிரயோகித்து மக்களை மயக்குவதோ, பணியவைக்க நிர்ப்பந்திப்பதோ வசீகரத் தலைமைத்துவம் ஆகாது. (வில்சன், அ. ஜெ.1981, ப.01)

வசீகரத் தலைமைத்துவம் என்ற அபூர்வமான இயல்பு ஜீ. ஜீ. பொன்னம்பலத்திடம் காணப்படுகிறது. 1934இல் இருந்து 1960ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக 26 ஆண்டுகள் மக்கள் தமது பிரதிநிதியாக ஜீ. ஜீ. பொன்னம்பலத்தை பாராளுமன்றம் அனுப்பியிருந்தனர். ஏறக்குறைய 31 ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இவர் வகித்துள்ளார். 1934, 1936, 1947, 1952, 1956, 1965 என ஆறு தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ளமையைக் காண முடிகிறது. தமிழ் காங்கிரஸ் கட்சியின் தீவிர விசுவாசிகள் "எங்கள் பலம் பொன்னம்பலம்", "பாகிஸ்தானுக்கு ஜின்னா, இலங்கைக்கு பொன்னா" (குமரகுருபரன்,ந: 2014, நேரடி நேர்காணல்) என ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தலைமைத்துவத்தைப் புகழ்ந்து போற்றியுள்ளமையைக் காண முடிகிறது. ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட வினாக்கொத்து ஆய்வில் ஜீ. ஜீ. பொன்னம்பலத்திடம் வசீகரத் தலைமைத்துவ இயல்பு உண்டு என்பதனை 56% மானவர்கள் முழுமையாக ஏற்றுக் கொள்கின்றனர். 28% மானவர்கள் பெருமளவு ஏற்றுக் கொள்கின்றனர். 10% மானவர்கள் குறைந்தளவு ஏற்றுக் கொள்கின்றனர். 02% மானவர்கள் மிகக் குறைந்தளவு ஏற்றுக் கொள்கின்றனர். 04% மானவர்கள் முற்றாக நிராகரிக்கின்றனர். இதனை பின்வரும் வட்டவரைபின் ஊடாகக் காட்ட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஆதாரம்:- வினாக்கொத்து பகுப்பாய்வு**

(ii) **தர்க்கரீதியான பேச்சாற்றல்**

ஒரு தலைவனிடம் காணப்பட வேண்டிய முக்கியமான இயல்பு தான் கூறவந்த விடயத்தை மிகத் தெளிவாகக் கூறுகின்ற தர்க்கரீதியான பேச்சாற்றல் ஆகும். ஜீ. ஜீ. பொன்னம்பலத்திடம் இவ்வாற்றல் அதிகளவு காணப்பட்டது. பாடசாலைக் காலத்திலேயே சிறந்த பேச்சாற்றல் உடைய மாணவனாக ஜீ. ஜீ. பொன்னம்பலம் திகழ்ந்துள்ளார். இங்கிலாந்தில் சட்டக் கல்லூரியில் படித்த காலத்தில் இவ் ஆற்றல் புடம் போடப்பட்டு அதனை வெளிப்படுத்தும் காட்சிக் கூடமாக பாராளுமன்றத்தைப் பொன்னம்பலம் பயன்படுத்தியிருந்தார். எடுத்துக்காட்டாக 1958ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் அவசர காலநிலைமை தொடர்பான விவாதத்தின்போது திரு. ஜே. ஸீ. முனசிங்கா சிலாபத்தில் குழப்பங்கள் சம்பவிக்கவில்லையா? என வினவியபோது ஜீ. ஜீ. பொன்னம்பலம்.

"என்னைக் குறுக்கு
விசாரணை செய்ய
வேண்டுமென அவர்
எண்ணுவதனால் அதற்கு
அவருக்குரிய நேரம் வரும்
வரை காத்திருக்கட்டும் குறுக்கு
விசாரணை செய்யப்படுவதற்கு
நான் அவ்வளவு இலகுவான
பேர்வழி அல்லன்."
(Parliamentary Debates (Hansard),
*1958 - 1959*, Volume *31*, p.*150*)

நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் சென்று பரவிய குழப்பமும், கொந்தளிப்பும் முற்றிலும் உறுதியான கட்டுக்கோப்புடன் இருந்தது. பொதுவாக மக்களைத் தாக்கியவர்கள் வெளியூர்களிலிருந்து இதற்கொன்று வரவழைக்கப்பட்டவர்கள் என்பது பலர் கூறியதிலிருந்து தெரிகின்றது. எல்லாம் நடந்து முடிந்த பிற்பாடு உள்ளூர் வாசிகள் அவர்களைத் தங்கள் பாதுகாப்பாளர்களாக நம்பியதுதான் வேடிக்கை. பொலிஸ் உடையில்கூடப் பலர் கார்களில் அங்குமிங்கும் போய் மக்களை வெளியேறும்படி கேட்டுக் கொண்டார்கள். எதற்காக? வசதியாக வீடுகளை உடைத்துக் கொள்ளை அடிப்பதற்காக அதெல்லாம் மக்களுக்குத் தெரிந்தது தான். இன்னும் ஒரே ஒரு விடயம்தான் மக்களுக்குச் சொல்வதற்கிருக்கிறது. இத் தகாத சம்பவங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறத் தொடங்கியது முதலாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் உயிர்ச்சேதம் ஒன்றுகூடச் சம்பவிக்கவில்லை என்பதை எனது மக்கள் சார்பாக நான் பெருமையோடு சொல்லிக் கொள்ளக்கூடியதாயிருக்கின்றது. நாடு முழுவதிலும் இவ்வாறு பெருமையுடன் கூறக்கூடிய மாவட்டம் யாழ்ப்பாண மாவட்டமே ஆகும்' (Parliamentary Debates (Hansard), 1958 - 1959, Volume 31, p. 150) எனத் தெளிவாக, நேர்த்தியாக, எதிரணியின் தலையீடுகளை பேச்சின் தொடக்கத்திலேயே தடுத்து நிறுத்தி தான் கூறவந்த விடயத்தை முன்வைப்பதனைக் காண முடிகிறது.

*1965*ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் *21*ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஆற்றிய உரை சர்வதேசரீதியில் பாராட்டினைப் பெற்றது. இவ் உரையில்

"பேச்சு முடிந்ததுதான் தாமதம் ஒரு மந்திரத்தால் கட்டுண்டு போயிருந்த அந்த மாசபையினர் ஏகோபித்துக் கரகோசம் செய்து தமது மகிழ்ச்சியையும், கரிசனையினையும் தெரிவித்தனர். திரு. பொன்னம்பலத்தின் பேச்சு ஐ. நா. சபையின் பொதுச்சபை மண்டபத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் வெண்கல நாதமாக எதிரொலித்தது. எல்லோரும் சொக்கினாரென ஒரு பத்திரிகை நிருபர் குறிப்பிட்டுள்ளார். *117* உலக நாடுகள் கூடிய இச்சபையில் இதற்கு முன்பு எப்போதுமே ஒரு கன்னிப்பேச்சு. இப்படியான வரவேற்பையும், பாராட்டுதலையும் பெற்றதில்லை. இலங்கைக்கான அமெரிக்கத் தூதராக இருந்த செல்வி பிரான்சிஸ் வில்லியம், பொன்னம்பலம் பேசிவிட்டு உட்கார்ந்ததுதான் தாமதம் செல்வி வில்லியம் திரு. பொன்னம்பலம் அமர்ந்திருந்த இடத்திற்கு ஓடோடிச் சென்று அவர் கையைப் பற்றிக் குலுக்கிக் கொண்டே பிரமாதம், பிரமாதம் தங்களைப்பற்றி நான் மிகவும் பெருமையடைகின்றேன்". (வஸ்தியாம்பிள்ளை, ஏ,எஸ்:*1967*,பக் *68-69*) எனக் குறிப்பிட்டார்.

மேற்குறித்தவாறு ஜீ. ஜீ. பொன்னம்பலம் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் தனது தர்க்கரீதியான பேச்சாற்றலை வெளிப்படுத்தி வந்ததனை காணமுடிகிறது. இருந்த போதிலும் இவ் ஆற்றலினால் சிறுபான்மை இனக்குழுமங்களிற்கு பெரியளவில் எந்த நன்மைகளும் கிடைக்கவில்லை என்றே கூறவேண்டும். குறிப்பாக *1956*ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் கட்சி படுதோல்வியடைந்ததைத் தொடர்ந்து பாராளுமன்றில் செல்வாக்குச் செலுத்தும் வலிமையற்ற கட்சியாகவே தமிழ்க் காங்கிரஸ் காணப்பட்டது எனலாம்.

**(iii)விடாமுயற்சியுடன் காரியம் சாதிக்கும் இயல்பு**

ஜீ. ஜீ. பொன்னம்பலத்திடம் காணப்பட்ட மற்றுமொரு தலைமைத்துவப் பண்பு விடாமுயற்சியுடன் எடுத்த காரியத்தைச் சாதித்தல் ஆகும். தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதியில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றபோது தமிழரசுக்கட்சி திருகோணமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கப்படல் வேண்டும் என்ற கொள்கையில் விடாப்பிடியாக நின்றது. அதேவேளை தமிழ்க் காங்கிரஸ் கட்சி யாழ்ப்பாணத்தில் இந்தப் பல்கலைக்கழகம் அமைக்கவேண்டும் என்ற கொள்கையில் நின்று இறுதியாக ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் கோரிக்கை வெற்றி பெற்றது.

**(iv) அடிபணியாமை**

ஜீ. ஜீ. பொன்னம்பலத்திடம் காணப்பட்ட மற்றுமொரு இயல்பு அடிபணியாமை ஆகும். பாராளுமன்ற விவாதங்களிலும் சரி, கட்சிக் கூட்டங்களிலும் சரி ஏனையவர்களுக்கு அடிபணியாது காரிய மாற்றும் தலைமைத்துவமாக ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தலைமைத்துவம் காணப்பட்டது. எடுத்துக்காட்டாக *1958* ஆம் ஆண்டு வன்முறைகளை அடுத்து அவசரநிலை தொடர்பான விவாதத்தில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணகம் நூலகம்

"தயவுசெய்து பேச்சின் நடுவே தலையிட வேண்டாம். மக்களைப் பெருந்தொகையாக இவ்வாறு ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு அனுப்புவதற்குத் தமக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதாக முதலமைச்சர் கூறியது எனக்குக் கேட்டது. அதை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். ஆனால் மக்கள் என்னவோ தங்கள் ஊர்களுக்குப் போக விருப்பங் கொண்டிருக்கிறார்கள். கட்டவிழ்த்து விடப்படுகின்ற நரக இம்சைகளுக்கு விலகி நிற்கவே அவர்கள் விரும்புகிறார்கள். கலகங்கள் ஓய்ந்து பழைய நிலைக்குத் திரும்பவும், திருப்தியாக உண்ணக் கிடைக்காது போனாலும், ஆறுதலாக நீராடி அமைதியாக உறங்குவதற்குமே அவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் அனேகர் தமது உடமைகளை இழந்திருக் கிறார்கள். பலர் எவ்வளவோ துன்பங்களை அனுபவித்திருக்கிறார்கள். காணச் சகிக்காத பல கொடுமையான காட்சிகளைக் கண்டிருக்கின் றார்கள். பெருமை, செல்வாக்கு, அந்தஸ்து என்பன பற்றித் தயவுசெய்து போலி எண்ணங்கள் வைத்திருக்க வேண்டாம். நீங்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி இது விடயம் மக்களை ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்துக்கு அனுப்பும் இடமாற்ற பிரச்சினை ஆகாது. ஆதலால் பல கஸ்டங்களுக்கும், சங்கடங்களுக்கும் ஆளாகித் தங்கள் ஊர்களுக்குத் திரும்ப எண்ணும் அகதிகளுக்கு எவ்வித வசதி சலுகை களும் செய்து கொடுக்க மறுத்து மேலும் இடையூறுகள் விளைவிக்கும் அளவுக்குத் தவறான எண்ணங் கொள்ளக்கூடாது எனக் கேட்டுக் கொள்கின்றேன்" (Parliamentary Debates (Hansard), 1958 - 1959, Volume 31, p. 160)

என ஜீ. ஜீ. பொன்னம்பலம் நெருக்கடியான சூழலில் தனித்து நின்று அடிபணியாமையுடன் வாதிட்டதனைக் காணமுடிகிறது.

**2) ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தலைமைத்துவ பலவீனங்கள்**

ஜீ. ஜீ. பொன்னம்பலம் சிறந்த குற்றவியல் சட்டவிற்பனராகவும், 31 வருடங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போதிலும், இவருடைய காங்கிரஸ் கட்சிச் செயற்பாடும், கட்சிக்கு இவரால் வழங்கப்பட்ட தலைமைத்துவம் தொடர்பாக பலவிதமான விமர்சனங்கள் காணப்படுகின்றன.

**(i) தூரநோக்கற்ற தன்மையும் நிலையான கொள்கையின்மையும்**

இவருடைய தூரநோக்கு அற்ற தன்மை என்பது இவரது கொள்கையின் மூலம் வெளிப்படுத்தப்படுவதைக் காண்கின்றோம். அந்த வகையில் சம பிரதிநிதித்துவம் 50 : 50 என்ற கோரிக்கை கன்சவேட்டிக் கட்சியில் மிக பிற்போக்கான சிலர் ஆதரித்த ஒரு காலனித்துவ முறையாகும். அதாவது நிரந்தர காலனித்துவமுறை இருந்தால்தான் இது சரிவரும். இருந்தபோதும் ஜீ. ஜீ. பொன்னம்பலம் நிரந்தர காலனித்துவ ஆட்சியைப்பற்றி சிந்தித்தாரே தவிர சுய ஆட்சிபற்றி சிந்திக்கவில்லை.

1945இல் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி 50 : 50 என்ற கோரிக்கையை மிகத் தீவிரமாக வலியுறுத்தியது. பின்னர் அது சாத்தியமற்றுப்போக 1948இல் தமிழ் மக்களின் எதிர்காலம் பெரும்பான்மை இனத்தின் நல்லெண்ணத்திலும், ஒத்துழைப்பிலுமே தங்கியுள்ளது. (The Future of the Tamil People depends on the goodwill and Co-coperation of the majority Community) எனக் குறிப்பிட்டு UNP அரசாங்கத்துடன் இணக்க அரசியலை முன்னெடுத்தனர்.

"1953இல் டட்லி தமிழ் மக்களுக்கு நண்பன், கொத்தலாவலை விரோதி" என்ற அடிப்படையில் செயற்பட்ட பொன்னம்பலம் 1958ஆம் ஆண்டு அவசரகால நிலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான விவாதத்தில் உரிமைகள், வாழ்வதற்கான உத்தரவாதம் இல்லாதபோது தனிநாடு தவிர்க்க முடியாதது எனப் பாராளுமன்றத்தில் விவாதித்தார். பிற்பட 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை பண்ணாகத்தில் இடம்பெற்ற மாநாட்டில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தார்.

(ii) **உட்கட்சி ஜனநாயகம் கட்சியில் பின்பற்றப் படாமை.**

ஓர் அரசியல் கட்சியின் நிலைத்திருப்பிற்கும், வளர்ச்சிக்கும் உட்கட்சி ஜனநாயகம் அடிப்படையானதும், ஆதாரமானதுமான விடயமாகும். தமிழ்க் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் அங்கு உட்கட்சி ஜனநாயகம் பின்பற்றப்படவில்லை. 1944இல் கட்சி உருவாக்கப்பட்டதிலிருந்து 1977கள் வரைக்கும் ஜீ.ஜீ. பொன்னம்பலமே கட்சியின் தலைவராக இருந்து சகல நடவடிக்கைகளையும் தீர்மானிப்பவராக காணப்பட்டார். கா. சங்கரப்பிள்ளை, தா. திருநாவுக்கரசு, மு. சிவசிதம்பரம், த. சிவசிதம்பரம் போன்றோர் கட்சியில் பெயரளவு அதிகாரிகளாகவே காணப்பட்டனர். ஜீ. ஜீ. பொன்னம்பலம் மாத்திரமே உண்மை நிர்வாகியாகக் காணப்பட்டார். இத்தகைய போக்கானது 1977இற்கு பின் கட்சியில் பாரிய தாக்கத்தைச் செலுத்தியிருந்தது. குறிப்பாக கட்சியை வழிநடத்திச் செல்வதற்குரிய அனுபவமும், ஆளுமையும் மிக்க தலைமைத்துவங்கள் போதாமல் இருந்தமையால் கட்சி மிக மோசமான வீழ்ச்சியைச் சந்தித்தது.

(iii) **கட்சிச் செயற்பாடுகளை வடமாகாணத்துடன் பெருமளவு மட்டுப்படுத்தியமை.**

தமிழ்க்காங்கிரஸ் கட்சி 1947ஆம் ஆண்டுத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலைத் தொகுதியில் இருந்து ஓர் ஆசனத்தைக் கைப்பற்றிக் கொண்டது. எஸ். சிவபாலன் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். எனினும் பின்னர் இடம்பெற்ற எந்த ஒரு தேர்தலிலும் காங்கிரஸ் கட்சி கிழக்கு மாகாணத்தில் இருந்து எந்த ஒரு ஆசனத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. அதேவேளை கிழக்கு மாகாணத்தில் அரசியல்கட்சி செயற்பாடுகள், கூட்டங்களைக் கூட்டுதல், மாநாடுகளை முன்னெடுத்தல் போன்ற எந்த ஒரு செயற்பாட்டினையும் தமிழ்க்காங்கிரஸ் முன்னெடுக்கவில்லை.

(iv) **இந்திய வம்சாவளித் தமிழர்களதும் முஸ்லீம்களதும் நலன்கள் கவனத்தில் கொள்ளப்படாமை.**

1949இல் மலையகத் தமிழர்களின் பிரச்சினையால் பிளவடைந்த தமிழ்க் காங்கிரஸ் கட்சி மலையக மக்களின் நலன்கள் எவற்றையும் கவனத்தில் எடுக்கவில்லை. இதனை ஜீ. நடேசன் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு சிறுபான்மை பிரதிநிதிகள் எனப்படுவோர் கோடரிக் காம்புகளாகச் செயற்படும் வரலாறு இன்று நேற்றல்ல, சுதந்திரத்தின் ஆரம்பத்திலிருந்தே தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ் பிரதிநிதிகளின் இந்தத் தீர்க்க தரிசனமற்ற நடவடிக்கையின் காரணமாகவே இலங்கைத் தமிழ்த் தேசியம் என்ற வரையறைக்குள் மலையகத் தமிழர்கள் தம்மை உட்படுத்தாது தனித் தேசிய இனமாக தம்மை வரித்துக்கொள்ள சாபமிட்ட முதலாவது நிகழ்வாகும். இந்த நிகழ்வின் பின்பே தமிழரின் பலம் பாதிக்கப்படத் தொடங்கியது (நடேசன், ஜீ.2000: ப.29)எனக் குறிப்பிடுகின்றார்.

அதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் மாநகரசபை 14 ஆம் வட்டாரத்தில் உள்ள ஒரு சொற்ப அளவான முஸ்லீம்களுடன் மாத்திரம் தமிழ்க்காங்கிரஸ் கட்சி தனது அரசியலை நிறுத்திக் கொண்டது. எம். எல். சுலைமான் என்பவர் தமிழ்க்காங்கிரஸ் சார்பாக மேயராக தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் தேசியரீதியில் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த முஸ்லீம்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்களைக் கவனத்தில் எடுக்கவோ அல்லது அவர்களை இணைத்து அரசியல் பயணத்தை முன்னெடுக்கவோ காங்கிரஸ்கட்சி தவறியமை பாரிய வரலாற்றுத் தவறாகும்.

**(v) கிராமப்புற ஏழைமக்களின் நலன்களை கவனத்தில் எடுக்காமை**

ஜீ. ஜீ. பொன்னம்பலம் தேர்தல் காலங்களில் மட்டும் தமிழ்ப் பிரதேசத்தில் வாழ்ந்து தேர்தல் பிரசார நடவடிக்கையை மேற்கொண்டு வெற்றிபெறும் வரை யாழ்ப்பாணத்தில் இருப்பார். பின்பு கொழும்பு சென்று விடுவார் என்ற கருத்துநிலை காணப்படுகின்றது. குறிப்பாக ஆடம்பரவாழ்வும், சுகபோக சிந்தனையும் கொண்டவராக இவர் நோக்கப்படுகின்றார். மேலும் தமிழரசுக்கட்சி சமபந்தி போசனம், ஆலயப் பிரவேசம் போன்ற முற்போக்கான சாதி ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தபோது ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அவரது தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் அத்தகைய செயற்பாடுகள் எதனையும் முன்னெடுக்க முடியாமல் போயிற்று. இதனால் கட்சியானது ஓர் எல்லையைத் தாண்டி வளர முடியாமல் போயிற்று.

**முடிவுரை**

சில அசாதாரண திறமைகளை இயல்பாக பெற்றிருந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் தான் உருவாக்கி தலைமை தாங்கிய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை முன்னிலைப்படுத்துவதில் முனைப்பாக முயன்றார். இலங்கையில் சுதந்திரத்திற்கு முந்திய இரு தசாப்தங்களிலும், பிந்திய இரு தசாப்தங்களிலும் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தனது ஆளுமை வீச்சால் சில தடங்களைப் பதித்தது உண்மையாகும். ஆனால் தலைமைத்துவ ஆற்றலுக்கு சமாந்தரமாக அவரால் தனது கட்சியை நகர்த்திச் செல்ல முடியவில்லை. தமிழ்த் தேசியத்தை வலியுறுத்திய தமிழரசுக்கட்சியின் வளர்ச்சியும், சவால்களும் இதற்கு முக்கிய காரணமாகும். அவரது உயர்குழாம் மனோபாவங்களும் சில வழிகளில் இதற்கு துணையாக இருந்தது. தவிர, பெரும்பான்மையினத்தின் ஆதிக்கம் மிகுந்ததும் பன்மைச் சமூகங்களைக் கொண்டதும், ஜனநாயகத்தை பரீட்சித்து வருகின்றதுமான அபிவிருத்தி அடைந்துவரும் ஒரு நாடாகிய இலங்கையில் அதிகாரமற்ற சிறுபான்மை இனமொன்றின் தலைவர் என்ற ரீதியில் ஜீ. ஜீ. பொன்னம்பலத்திற்கு பல மட்டுப்பாடுகள் காணப்பட்டன. இதனால் ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஓர் அரசியல் தலைவராக ஏற்றுக் கொள்ளப்படும் அளவிற்கு, அவர் பாராளுமன்ற ஜனநாயகத்திற்கும் அதன்மூலம் இலங்கைத் தமிழர் அரசியல் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யவில்லை.

**உசாத்துணை நூல்கள்**


1. Ponnambalam, G.G., (2001), The Marathan Crusade for Fifty: Fifty (Balanced Representation) in the State Council -1939, Manimekalai Prasuram, Chennai.
2. Silva de, G.P.S.h;., (1979), A Statistical Survey of Elections to the Legislatures of Sri Lanka 1911-1977, Marga, Colombo.
3. Sirsiskar,V.M.,(1965), Political Behaviour in India, Manaktala and Sons, Bombay.
4. Wilson, A.J., (1994), S.J.V.Chelvanayakam and the Crisis of Sri Lankan Tamil Nationalism 1947-1977, C.h;urst & Co [Publishers] Ltd., London.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அருணாசலம், கு.,(2012), இலங்கை அரசியல் வரலாறு இழப்புக்களும் பதிவுகளும், மகாவெலி வெளியீடு, சாய்ந்தமருது.

6. நடேசன். ஜீ., (2000), இலங்கை இன முரண்பாடுகளின் வரலாறு, ஒரு ஆவணப் பதிவு, அபிராமி விளம்பர நிறுவனம், மட்டக்களப்பு.

7. பாலசுந்தரம், க., (2011), சாணக்கியன் வன்னியசிங்கம், 100வது ஆண்டு நினைவு மலர், ஏ. ரி. பப்பிளிஸ்ட் (பிறைவேட்) லிமிற்றெட், கொழும்பு.

8. புத்தொளி, (1977), தமிழர் தலைமகன், ஜீ. ஜீ. பொன்னம்பலம், சிவகுமாரன் அச்சகம், அச்சுவேலி.

9. முருகரத்தினம், க., (1967), தமிழரின் தலைசிறந்த தலைவர், உயர்திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் வாழ்க்கை வரலாறுச் சுருக்கம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், யாழ்ப்பாணம்.

10. விநாயகமூர்த்தி, அ., (2003), மாபெரும் தலைவர் சட்டமாமேதை அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் நினைவுக்கட்டுரைகள், யாழ்ப்பாணம்.

11. வில்சன், அ. ஜெ., (1981), சா.ஜே.வே.செல்வநாயகம்: நெருக்கடி காலத் தலைமைத்துவம் பற்றி நினைவு அலைகளின் உருவம் ஒன்றின் அடிப்படையினதோர் ஆய்வு, தந்தை செல்வா அறங்காவலர் குழு, யாழ்ப்பாணம்.

12. Parliamentary Debates (Hansard)., (1958 - 1959), Volume 31, Ceylon Government Press, Colombo.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன அரசியல் சிந்தனையில் அரசியல் அபிவிருத்தி என்ற எண்ணக்கரு - ஒரு விமர்சன ஆய்வு

தி.விக்னேஸ்வரன்

**ஆய்வுச்சுருக்கம்**

நவீன அரசியல் சிந்தனைகளில் அரசியல் அபிவிருத்தி என்கின்ற எண்ணக்கருவானது 1950களில் வளர்ச்சி அடைந்த போதும் இன்று அரசறிவியல் பாடப்பரப்பில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்கின்ற தளமாகவுள்ளது. இவ் எண்ணக்கரு தொடர்பான புரிதலானது வளர்ச்சி அடைந்த மேற்குலக நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்குமிடையில் வேறுபட்டதாகவுள்ளது. அதாவது அரசியல் அபிவிருத்தி என்பது மேற்குலக நாடுகள் தமது சிந்தனைகளினையும் அரசியல் நலன்களினையும் மூன்றாம் உலக நாடுகளுக்கு கடத்துகின்ற ஒரு எண்ணக்கரு என்கின்ற ஒரு நிலை உள்ளது. ஒரு நாட்டின் அரசியல் ஒழுங்கமைப்பு, பொருளாதாரக்கட்டமைப்பு மற்றும் சமூக முறைமைகளின் விருத்தியடைந்த நிலையினைப் பற்றிய ஆய்வாக அரசியல் அபிவிருத்தி இனங்காணப்படுகின்றது. இறைமையுள்ள ஒரு நாட்டின் எல்லைப்பரப்புக்குள் வாழ்கின்ற மக்களது அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியிலான வாழ்க்கைத்தரமானது உயர்ந்த தரத்தில் பேணப்பட வேண்டும் என்கின்ற நோக்கிலேயே அரசியல் அபிவிருத்தி என்கின்ற எண்ணக்கருவின் தோற்றம், வளர்ச்சி என்பன அடையாளப்படுத்தப்படுகின்றன. ஆனால் அரசியல் அபிவிருத்தி தொடர்பான நாடுகளுக்கிடையிலான மாறுபட்ட கருத்து நிலையே அரசியல் அபிவிருத்திக்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்களுக்கு பிரதான காரணமாக உள்ளது. அரசியல் அபிவிருத்தியிலுள்ள நேர்முறையான அம்சங்களினை தேசிய நலன்கள் மற்றும் பிராந்திய அரசியல் நலன்களுக்கு அப்பால் அனைத்து நாடுகளும் மக்களும் அனுபவிப்பதற்கான அரசியல் புறச்சூழ்நிலையானது தோற்றுவிக்கப்பட வேண்டும். இப் பின்னணியில் அரசியல் அபிவிருத்தி என்கின்ற எண்ணக்கருவானது இங்கு ஆராயப்படுகின்றது.

**திறவுச் சொற்கள் :** அரசியல் அபிவிருத்தி, மேற்குலக நாடுகள், வளர்முக நாடுகள், அரசியல் நலன்கள்

அரசியல் அபிவிருத்தி என்பது பொருளாதார ரீதியான அபிவிருத்தியில் இருந்து வேறுபட்ட ஒன்றாகவும் பொருளாதார அபிவிருத்தியின் சில விடயங்களினையும் சமூகம் சார் விடயங்களையும் உள்ளடக்கிய நிச்சயமற்ற பரந்துபட்ட பகுதிகளினை உள்ளடக்கிய செயற்பாடாகவும் அரசியல் அபிவிருத்தி அமைகின்றது. லூசியன் W.பை (Lucian W.Pye 1965) என்கின்ற அறிஞர் அரசியல் அபிவிருத்தி தொடர்பாக குறிப்பிடுகின்ற பொழுது "பொருளாதார முறைமை, சமூகக் கட்டமைப்பு மற்றும் அரசியல் கட்டமைப்பு என்பவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு முறைகளும் ஒரு வளர்ச்சி நிலையும் அரசியல் அபிவிருத்தி" எனக் கூறுகின்றார். (புஸ்பராஜ் 2011:152) சாமுவேல் P.கன்டிங்டன் (Samuel.P Huntingtion) அரசியல் அபிவிருத்தி தொடர்பாக குறிப்பிடுகின்ற பொழுது அரசியல் அபிவிருத்தியானது தனிமனிதனின் சிந்தனையுடன் இணைந்தது என்கின்றார். (Das & Choudhury 1997:117) ஸ்டெய்ன் (Stein, 1982) அரசியல் அபிவிருத்தி பற்றிய ஆய்வுகளில் அரசியல் அபிவிருத்தியானது வளர்ச்சி அடைகின்ற ஜனநாயகவாதம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப்பகுதி பொதுநூலகம்

ஒழுங்கமைப்பினைக் கொண்ட அரசியல், வேகமாக வளர்ச்சி அடைகின்ற பணியக அமைப்பு, அரசியல் தொழில்மயமாக்கல், அரசியல் ஈடுபாடுகளினால் ஏற்படுகின்ற அபிலாஷைகள், அரசியல் மயமாக்கல் செயற்பாடுகள் மேம்பாடடைந்த அடைவுகள் போன்ற அரசியல் நியாயதிக்கத்தினை உள்ளடக்கியதாகவும் ஊக்குவிப்பதாகவும் காணப்படுகின்றது என்கின்றார். (புஸ்பராஜ் 2011:154)

அரசியல் அபிவிருத்தி தொடர்பாக அறிஞர்கள் மத்தியில் ஒருமித்த கருத்து நிலைப்பாடு காணப்படாமையினாலும் அரசியல் அபிவிருத்தியானது பரந்தளவிலான விடயங்களினை உள்ளடக்கியுள்ளமையும் அரசியல் அபிவிருத்தியினை அளவிடுவது கடினமான ஒன்றாக உள்ளமையினாலும் அரசியல் அபிவிருத்தி என்றால் என்ன என்பதனை வரையறுப்பதில் பிரச்சினை காணப்படுகின்றது. (Manivasagar 1998:46) அரசியல் அபிவிருத்தியானது மனிதனது அரசியல் நடத்தைக் கோலங்களினை ஆய்வுக்குட்படுத்துகின்றமையினாலும், மனிதனது சமூக அடுக்கமைவுகள், பொருளாதார பின்புலங்களும் அரசியல் அபிவிருத்தியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் செல்வாக்குச் செலுத்தி வருவதனாலும் அரசியல் அபிவிருத்தி என்கின்ற கோட்பாட்டினை இன்று சமூகவியலாளர்களும் பொருளியலாளர்களும் கொள்கை உருவாக்க செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்கின்றார்கள். அரசியல் விஞ்ஞான ஆய்விலும் இன்று அரசியல் அபிவிருத்தியானது முதன்மையான பங்கினைக் கொண்டுள்ளது. இதற்கு உதாரணமாக அரசறிவியல் கற்கைநெறியில் ஒரு பிரதான பரிமாணமாக அரசியல் அபிவிருத்தி பல்கலைக்கழகங்களில் போதிக்கப்பட்டு வருவதனைக் கூறலாம். இவ் ஆய்வானது இரண்டாம் நிலைத் தரவுகளினை மையப்படுத்திய விமர்சன ஆய்வாகவுள்ளதுடன் நாடுகள் அரசியல் அபிவிருத்தியினை புரிந்து கொண்டுள்ள தன்மையின் அடிப்படையில் கருதுகோள் பரிசீலிக்கப்பட்டு ஆராயப்படுகின்றது.

இரண்டாம் உலகமகா யுத்தத்தினைத் தொடர்ந்து பல ஆசிய, ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகள் காலணித்துவத்தின் பிடியில் இருந்து விடுதலை பெற்று புதிதாக சுதந்திர அரசுகளாகத் தோற்றம் பெற்றமையும் சுதந்திரம் பெற்ற நாடுகள் தமது அரசியல், சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்புக்களில் பல்வேறு மாற்றங்களினை உள்வாங்கியமையும் ஐக்கிய நாடுகள் சபையினது தோற்றத்துடன் மனித உரிமைகள் சட்டம், ஜனநாயக விஸ்தரிப்பு போன்றன சர்வதேச ரீதியாகவும் பிராந்திய ரீதியாகவும் செல்வாக்குப் பெற்றமையும் தேசிய அரசுகளின் அரசியலிலும் சமூகத்திலும் பல்வேறு மாற்றங்களினை எற்படுத்தியதுடன் சர்வதேச ரீதியான உலக ஒழுங்கிலும் மாற்றம் ஏற்பட்டது. இவ்வாறான மாற்றங்கள் பல தொடர்ச்சியாக இடம்பெற ஆரம்பித்தன. குறிப்பாக பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் சமூகக்கட்டமைப்புக்களிலும் சமூகக்கட்டமைப்புக்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள் அரசியலிலும் தாக்கங்களினை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான மாற்றங்கள் தோற்றம் பெறுகின்ற சூழ்நிலையில் அரசியல் அபிவிருத்திக் கோட்பாடு தொடர்பாக தெளிவான பொருத்தமான எளிமையான வரையறைகளினை முன்வைப்பது கடினமானதாக உள்ளது.

லூசியன்.W.பை (Lucian.W.Pye) என்கின்ற அரசியல் சிந்தனையாளர் அரசியல் அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகளினை மேற்கொண்டு அரசியல் அபிவிருத்தியில் பின்வரும் மூன்று பண்புகளினை இனங்காண்கின்றார். (Das & Choudhury 1997:106)

- சாதாரண பாமர மக்கள் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் பால் வேறுபாடுகளுக்கு அப்பால் அரசியலில் பங்கெடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரசியல் செயற்பாடுகளது உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகள் சமூக மாற்றங்களினையும் பொருளாதாரத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கங்களினை ஏற்படுத்துகின்றன. இவற்றில் இருந்து அரசியல் செயற்பாடுகளினை வேறுபடுத்த முடியாது.

- அரசியல் முறைமையில் காணப்படுகின்ற வேறுபாடுகளும் அரசியல் அபிவிருத்தி செயற்பாட்டில் செல்வாக்கு செலுத்துகின்றது.

அரசியல் அபிவிருத்தி தொடர்பாக A.டெனிரன் (A.Deniran, 1975) குறிப்பிடுகின்ற போது அரசியல் அபிவிருத்தியானது அரசியல், சமூக மற்றும் பொருளாதாரம் சம்பந்தமான நாளாந்த விடயங்களுடன் தொடர்புபட்டுள்ளதனைப் போன்று சமூகப் புரட்சிகளும் அரசியல் அபிவிருத்தியுடன் நெருக்கமான தொடர்புகளினைக் கொண்டுள்ளன என்கின்றார். ஏனெனில் சமூகப் புரட்சிகளினால் ஏற்படுகின்ற விளைவுகளான புதிய சமூகக் கட்டமைப்புக்களும் வேறுபட்ட சமூகங்களும் அரசியல் அபிவிருத்தியினைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கின்றன என்கின்றார். (புஸ்பராஜ் 2011:155-156)

அரசியல் அபிவிருத்தியினை முதலாளித்துவ பொருளாதார முறைமையினை பின்பற்றுகின்ற அமெரிக்க தலைமையிலான மேற்குலக நாடுகளது மாதிரி, மார்க்சிச வாதிகளது மாதிரி என இரண்டாக வகைப்படுத்த முடியும். அமெரிக்க தலைமையிலான மேற்குலக நாடுகளது மாதிரி என்பது மேற்கத்தேய ஜனநாயக அம்சங்களினையும் மேற்கத்தேயத்துக்கு சார்பான சர்வதேச அரசியலின் வியாபகத்தினையும் கொண்டது. மார்க்சிச வகையிலான அரசியல் அபிவிருத்தி என்பது வகுப்பு வேறுபாடுகளும் பொருளாதார பாரபட்சமும் அற்ற சமூகத்தைக் காண விரும்புகின்றது. உற்பத்தி சாதனங்கள், சொத்துகள், அரசுடமையாக்கல் போன்ற விடயங்களினை உள்ளடக்கிய சமத்துவமான சமூகத்தினை உருவாக்குவதே அரசியல் அபிவிருத்தியின் பிரதான நோக்கம் என்கின்றது. மார்க்சிய அரசியல் அபிவிருத்தியானது சோசலிச அம்சங்களினை உள்ளடக்கிய சோசலிச சமூகத்தினை உருவாக்குகின்ற நோக்கிலானது.

அரசறிவியல் ஆய்வு செய்கின்ற விடயங்களில் சமகாலத்தில் அரசியல் அபிவிருத்தி என்கின்ற எண்ணக்கருவானது பிரதானமான ஒன்றாகவுள்ளது. அரசியல் அபிவிருத்தி என்கின்ற கோட்பாடும் சொல்லாடலும் இரண்டாம் உலக மகாயுத்தத்துடன் ஆரம்பமாகி இன்று எழுபது வருடங்களுக்கு மேலாக அரசியல் அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன் அரசியல் அபிவிருத்தி கோட்பாடு பிரபல்யம் அடையவும் வழிகோலியது எனலாம். சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தினது ஒப்பீட்டு விஞ்ஞான ஆய்வுக்குழு அரசியல் அபிவிருத்தியானது 1955ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே கோட்பாட்டு ரீதியிலான வளர்ச்சி நிலையினை அடைந்துவிட்டது என்கின்றது. இதனைத் தொடர்ந்து 1966 ஆம் ஆண்டு வருடாந்த அரசறிவியல் மாநாட்டில் அரசியல் அபிவிருத்திக்கான கோட்பாட்டில் நகரமயமாக்கம், சமூக ஒன்றுகூடல் மற்றும் அபிவிருத்தி என்பன சேர்க்கப்பட்டதனைத் தொடர்ந்து அரசியல் அபிவிருத்திக்கான ஆய்வுப்பரப்பானது விரிவுபடுத்தப்பட்டது எனலாம்.

அரசியல் அபிவிருத்தி கோட்பாட்டின் வளர்ச்சிப் பாதையில் வெவ்வேறு அறிஞர்களும் பங்காற்றியுள்ள போதும் அரசியல் அபிவிருத்திக்கான கேப்ரியல் A. ஆல்மண்ட் (Gabriel A. Almond) வழங்கிய பங்களிப்பானது அதிகமானது என அளவிடப்படுகின்றது. குறிப்பாக சமூகவிஞ்ஞான ஆய்வு மையத்தினது புதிய தலைவராக கேப்ரியல் A. ஆல்மண்ட் தெரிவு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து அரசியல் அபிவிருத்தி தொடர்பான கோட்பாட்டினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குவதில் முனைப்புடன் செயற்பட்டார். இவர் அரசியல் கலாசாரம், அரசியல் முறை என்பவற்றுடன் அரசியல் அபிவிருத்திக்கும் முக்கியத்துவம் கொடுத்திருந்தார். (புஸ்பராஜ் 2011:156) இவரினைத் தொடர்ந்து அரசியல் அபிவிருத்திக்கு பங்காற்றியவர்களில் முதன்மையானவர்களாக லூாசியன். W.பை, (Lucion W.Pye), டேவிட் ஈஸ்டன் (David Estan), லேனார்ட் - பைண்டர் (Leonard Binder) ஆகியவர்களது பங்களிப்புக்கள் மிக முக்கியமானதாக உள்ளது.

லேனார்ட் பைண்டர் (Leonard Binder)ன் கருத்தின் பிரகாரம் அரசியல் அபிவிருத்தியானது பின்வரும் விடயங்களினை உள்ளடக்கியுள்ளது என்கின்றார். (புஸ்பராஜ் 2011:159)

- அடையாள மாற்றம் - அதாவது சமயங்களி லிருந்து இனத்துவத்திற்கும் குறுகிய நிலையில் இருந்து சமூகம் சார்ந்த நிலைக்கும் மாற்றமடைவதனை குறிக்கின்றது.
- அரசியல் பங்குபற்றுதலில் மாற்றம் - அதாவது உயர் குழாமிலிருந்து சாதாரண மக்கள் குடும்பத்திலிருந்து குழுக்கள் வரையிலான மாற்றம்.
- பங்கீட்டு மாற்றம் - அந்தஸ்து மற்றும் சிறப்புரிமையில் இருந்து விடுபடாது காணப்படும்.
- நாட்டின் நிர்வாகம் மற்றும் சட்ட மாற்றம் - சமூக கட்டமைப்பு மற்றும் பின்தங்கிய சமயங்களினைக் கொண்டு காணப்படும்.

அரசியல் அபிவிருத்தியினது பரிணாம வளர்ச்சியில் அது அரசியல், சமூக மற்றும் பொருளாதாரம் சார் பல்வேறு விடயங்களினை உள்வாங்கி வந்துள்ளது. அந்த வகையில் அரசியல் அபிவிருத்தி ஆய்வு செய்கின்ற பரந்த விடயங்களில் பின்வரும் விடயங்கள் முதன்மையானவைாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன:-

- அனைத்துப் பிரஜைகளும் நிறம், மதம், இனம், மொழி போன்ற வேறுபாடுகளுக்கு அப்பால் சமமாக கணிக்கப்படுதல்
- சட்டங்கள் மக்களினால் தார்மீக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவற்றின் முழுமையான அமுலாக்கல் தன்மை காணப்படல்
- தேசிய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளூராட்சி அரசாங்கத்துக்கு கொடுக்கப்படும் மதிப்பானது உயர்வானதாகக் காணப்படல்
- மக்களது அரசியல் பங்குபற்றுதலானது உயர்ந்த அளவில் தொடர்ச்சியாகக் காணப்படுதல்
- கட்டுப்பாடு அற்ற வாதப்பிரதிவாதங்களும் விமர்சனங்களும் காணப்படல்
- பொது விவகாரங்களினை கையாள்வதில் அரசியல் முறைமையானது சிறப்பானதாக திகழ்தல்
- மக்களது கோரிக்கைகளும் அவற்றுக்கான பதிலீடுகளும் விரைவானதாகவும் மக்களினைத் திருப்திப்படுத்தக் கூடியதாகவும் காணப்படுதல்
- அமைப்புக்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையில் நிலவுகின்ற ஒருங்கிணைந்த செயற்பாடுகள்
- அரச செயற்பாடுகள் உயர்வாகவும் தனித்துவமானதாகவும் காணப்படல், பணியக அமைப்பு மற்றும் நீதித்துறையினது உயரிய தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமூக பொருளாதார அபிவிருத்தியின் சிறப்பான நிலை

மேற்குறிப்பிட்ட விடயங்களினை அரசியல் அபிவிருத்தி உள்ளடக்கியுள்ள போதும் அரசியல் அபிவிருத்தி தொடர்பாக ஆய்வுகளினை மேற்கொண்ட அறிஞர்களது கருத்துக்கள், வரைவிலக்கணங்கள் அரசியல் அபிவிருத்தி தொடர்பாக பின்வரும் சில விடயங்களினையே வலியுறுத்துகின்றன. அந்த வகையில் ஜனநாயகம் தொடர்பான மரபு ரீதியிலான கருத்துக்கள், அரசியல் ஜனநாயக கருத்துக்கள், அரசினைக் கட்டியெழுப்புதல், தேசியவாதம் தொடர்பான கருத்துக்கள், தேசியவாதமும் சமூகத்தொடர்பாடலும், பேரரசுகளில்இருந்து தேசியவாதம்வரையிலான நிலைமைகள், நவீனத்துவமும் அரசியல் அபிவிருத்தி கற்கையும், நவீனத்துவமும் சமூகங்களின் கட்டமைப்புக்களும், அரசியலில் நவீனமயமாக்கல் செயற்பாடு, சமூக மாற்றம் தொடர்பான கற்கையாக மாற்றங்களும் சமூகங்களின் அரசியல் ஒழுங்கும், இனத்துவம் அற்ற அபிவிருத்தி கோட்பாடு (புஸ்பராஜ் 2011:172) போன்ற விடயங்களினை அரசியல் அபிவிருத்தி தொடர்பாக ஆய்வுகளினை மேற்கொண்ட அறிஞர்களது கருத்துக்களில் காணப்படுகின்ற பொதுமைப்பாடான விடயங்களாக உள்ளன. ஆனாலும் மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு அப்பாலும் அரசியல், சமூக மற்றும் பொருளாதார ரீதியிலான விடயங்களினை அரசியல் செயற்பாடுகளுடன் இணைந்து ஆய்வு செய்கின்ற ஒரு கோட்பாடாக அரசியல் அபிவிருத்திக் கோட்பாடு பரிணமித்து வருவதனை சமகாலத்தில் காணலாம்.

அரசியல் அபிவிருத்தி என்கின்ற கோட்பா டானது வேகமாக வளர்ச்சி அடைந்து வருகின்றதுடன் வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ந்து வருகின்ற நாடுகளில் அரசியல் அபிவிருத்தியானது பல நேர்க்கணிய விளைவு களினையும், எதிர்க்கணிய விளைவு களினையும் தோற்றுவித்துள்ளமை உண்மையே. ஆனாலும் அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகள் பின்வரும் ஐந்து வகையான அணுகுமுறைகளினை அடிப்படையாகக் கொண்டே அரசியல் அபிவிருத்தியினை பார்க்கின்ற ஒரு பொதுமைப்பாடான நிலை உண்டு. (புஸ்பராஜ் 2011:176)

- சட்டபூர்வமான அணுகுமுறை
- நிர்வாக அணுகுமுறை
- அரசியல் கலாசார அணுகுமுறை
- பொருளாதார அணுகுமுறை
- சமூக முறைமை அணுகுமுறை

**சட்டபூர்வமான அணுகுமுறை :-** ஒவ்வொரு நாடும் தமது மக்களுக்கு பாரபட்சங்களினைக் கடந்து சுதந்திரம், உரிமை, சமத்துவத்தினை அரசியல் யாப்பு ரீதியாக வழங்கி நிற்பதனையே அரசியல் அபிவிருத்தி ஆரம்ப நிலையில் வலியுறுத்துகின்றது. இங்கு சட்டத்தின் முன்பு யாவரும் சமம், சட்டத்தின் ஆட்சி, சட்ட ரீதியிலான அதிகாரப்பகிர்வு, எழுத்துருவிலான அரசியல் யாப்பு போன்ற விடயங்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றன. (குணரத்தினம் 2009:09)பொருத்தமான சட்டங்களினை சட்டத்துறை உருவாக்குகின்ற வேளை அவற்றினை நேர்த்தியாகவும் முழுமையாகவும் அமுல்படுத்துவதற்கு நிர்வாகத்துறையினர் முற்படுகின்ற போது ஏற்படுகின்ற சட்டப்பிரச்சினைகளினை நீதித்துறையானது வலுவேறாக்கத்தத்துவத்தினை அடிப் படையாகக் கொண்டு நீதிபரிபாலனம் செய்ய முற்பட்டால் அது இயல்பாகவே அரசியல் அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும் எனப்படுகின்றது.

பல்லின சமூகத்தினைக் கொண்டுள்ள ஒரு நாட்டில் அரசாங்க இயந்திரம் சட்டத்துக்கு புறம்பாக பாரபட்சமாக செயற்படுமாயின் அங்கு அரசியல் அபிவிருத்தியாது நெருக்கடிக்குள்ளாகும். ஏனெனில் அரசியல் அபிவிருத்தியின் முன்நிபந்தனைகளாக சட்ட ரீதியிலான புறச்சூழ்நிலை காணப்படல், மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவமாக மக்கள் நடாத்தப்படுதல் என்கின்ற ஏற்பாடுகள் காணப்படுகின்றன. அரசியல் அபிவிருத்தியானது தேசிய அதிகாரத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டது. இத் தேசிய அதிகாரமானது வளப்பங்கீடுகள் தொடர் பாகவும் அதிக கரிசனையுடன் செயற்பட வேண்யுள்ளது.

**நிர்வாக அணுகுமுறை :-** ஓர் அரசாங்கம் உருவாக்குகின்ற கொள்கைகள், திட்டங்கள் மற்றும் சட்டங்களினை உரிய வகையில் அமுல்படுத்தி அவற்றினை வெற்றியடையச் செய்கின்றவர்கள் நிர்வாகத்துறையினர் என்கின்ற வகையிலும் உண்மையான ஜனநாயக விழுமியங்களது நிலைபேற்றுக்கும் நிர்வாகத்துறையினரது பங்களிப்புக்கள் உயர்வானதாக உள்ளது. எனவே அரசியல் அபிவிருத்தி செயற்பாடுகளினை நிர்வாகத் துறையினது பங்களிப்புக்கள் இன்றி வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாது. நிர்வாகத் துறையின் மையமாக திகழ்கின்ற பணியக அமைப்பானது அரசியல் கட்டமைப்புக்களிலும் செல்வாக்கினை செலுத்தவல்லது என்பதுடன் அரசியல் அபிவிருத்திக்கும் பணியக அமைப்பானது அடிப்படையானதாக உள்ளது. அரசியல் ரீதியிலான கொள்கைகள், தீர்மானங்களினையும் அமுல்படுத்துகின்றவர்கள் பணியக அமைப்பினராக உள்ளமையினால் இப்பணியக அமைப்பினர் பகுத்தறிவின் அடிப்படையில் நடுநிலையாக செயற்படாது அரசியல் கட்சிகள் மற்றும் அமுக்கக் குழுக்களது செல்வாக்குக்கு உட்பட்டு லஞ்சம், ஊழல், அதிகார துஷ்பிரயோக செயற்பாடுகளில் ஈடுபடுமாயின் அது அரசியல் அபிவிருத்தி செயற்பாடுகளினை நேரடியாக பாதிக்கின்ற ஒன்றாகவே அமையும்.

அரசியல் அபிவிருத்தியினை தோற்று விப்பதற்கு அறிவுபூர்வமான பணியக அமைப்பினரின் வினைத்திறன் வாய்ந்த செயற்பாடு அவசியமானதாக உள்ளது. ஏனெனில் அரசியல் அபிவிருத்தியினை உருவாக்குகின்ற செயற்திட்டங்கள் மற்றும் பொறிமுறைகள் என்பன பகுத்தறிவுடன் தொடர்புபட்டுள்ளமையினாலும் பணியக அமைப்பாளர்களது பகுத்தறிவினை பயன்படுத்தியே வளர்ச்சி அடைந்த மேற்குலக நாடுகள் அரசியல் அபிவிருத்தியினை சாத்தியப்படுத்தினார்கள் என்கின்ற அனுபவத் தின் ஊடாக அரசியல் அபிவிருத்தியினை உருவாக்குவதற்கு பகுத்தறிவுடன் கூடிய பணியக அமைப்பாளர்களது அர்ப்பணிப்பான பங்களிப்புக்கள் இன்றியமையாதவை.

**அரசியல் கலாசார அணுகுமுறை :-** நவீன அரசியல் விஞ்ஞான ஆய்வுகளில் அரசியல் கலாசாரத்திற்கான முக்கியத்துவமானது அதிகளவிலானதாக வழங்கப்பட்டு வருவதனைக் காணலாம். அரசியல் அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகளிலும் அரசியல் கலாசாரத்துக்கு தனித்துவமான இடம் வழங்கப்பட்டுள்ளது. சிட்னி வேர்பா (Sidney Verba) என்கின்ற அறிஞர் தனது அரசியல் கலாசாரக் கோட்பாடு (Theory of Political Culture) என்கின்ற கட்டுரையில் அபிவிருத்தியுடன் தொடர்புடைய பல விடயங்களில் அரசியல் அபிவிருத்தியும் அரசியல் கலாசாரமும் கொண்டிருக்கின்ற உறவானது மிக நெருக்கமானது என்கின்றார். (குணரத்தினம் 2007:117) அரசியல் அபிவிருத்தியிலுள்ள முக்கிய அம்சமாகிய அரசியல் பங்குபற்றுதல் கலாசாரமானது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக அரசியல் முறையில் முதன்மையானதாக உள்ளது.

அரசியல் கலாசாரம் தொடர்பாக மேற்குலக நாடுகளில் ஆய்வுகளினை மேற்கொண்ட பல அறிஞர்கள் அரசியல் அபிவிருத்தியானது கலாசாரங்களுடன் கொண்டுள்ள தொடர் பானது அதிகளவானது எனவும் அரசியல் கலாசாரம் உள்வாங்கியுள்ள பழைய மற்றும் புதிய மரபுகள் முக்கியமானவையாகவும் புதிய மரபுகள் பழைய மரபுகளின் ஒரு பகுதியாகக் காணப்படுவதுடன், அவை அரசியல் கட்டமைப்புக்களில் மாற்றங்களினை ஏற்படுத்துகின்றன என்கின்றனர். இவ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள் அரசியல் அபிவிருத்திக்கும் அந் நாடுகளின் சூழ் அமைவுகளுக்கும் மிகப் பொருத்தமானவையாக உள்ளன என்கின்றார்.

**பொருளாதார அணுகுமுறை :-** பொருளாதார வளர்ச்சிநிலையானது அரசியல் அபிவிருத்தியின் அளவுகோலாகப் பயன்படுத்தப்படுகின்றதன் பின்னணியில் அரசியல் அபிவிருத்திக்கான பொருளாதார அணுகுமுறையானது முதன்மையானதாக உள்ளது. கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து போன்ற அடிப்படை சமூகக்கட்டமைப்பு வளர்ச்சி நிலையினை எய்துவதற்கு பொருளாதார வளர்ச்சியானது அவசியமானதாக உள்ளது. புவியியல் ரீதியிலான காரணங்கள், அரசியல் எல்லைப்பரப்புக்கள், சனத்தொகை என்பவற்றுக்கு ஏற்ப பொருளாதாரத் தேவைகள் வேறுபட்டுக் காணப்படுகின்ற போது இவ் வேறுபாடுளினைக் கடந்து பொருளாதாரம் வளர்ச்சியடைகின்ற போது தான் ஒரு தேசமானது கட்டியெழுப்பப்படுகின்றது. இதுவும் அரசியல் அபிவிருத்தியினது பிரதான அம்சமாக உள்ளது. ஒரு நாட்டு மக்களது பொருளாதார ரீதியிலான பாதுகாப்பு மற்றும் தனிமனிதர்களது பொருளாதார ரீதியிலான உரிமைகளினை ஒரு அரசானது உறுதிப்படுத்துகின்ற போது அரசியல் அபிவிருத்தியினது நிலைபேற்றுத்தன்மையானது மீள உறுதிப்படுத்தப்படுகின்றன.

ஜனநாயக விழுமியங்களது அபிவிருத்தி நிலைக்கு பொருளாதார வளர்ச்சியானது அவசியமானதாக உள்ளது. பொருளாதார அபிவிருத்தி நிலைக்கும் மக்களது அரசியல் ரீதியிலான திருப்தி மட்டத்துக்கும் இடையே நேரடியான தொடர்பு உண்டு. பொருளாதார ரீதியாக மக்கள் தன்நிறைவான வாழ்க்கையினை வாழ்வார்களாயின் அரசுக்கு எதிராக புரட்சிகள், கிளர்ச்சிகளினை மேற்கொள்ள மாட்டார்கள். பொருளாதார விற்பனர்களது கருத்துக்களின் பிரகாரம் அமெரிக்க புரட்சி, பிரித்தானிய புரட்சி, பிரான்சிய புரட்சி, ரக்ஷ்ய புரட்சி என்பனவெல்லாம் பொருளாதார ரீதியிலான அதிருப்தி நிலைகளினாலேயே தோற்றம் பெற்றன என்கின்றனர். சில வளர்முக நாடுகளது கொள்கை வகுப்பாளர்கள் மேற்குலக நாடுகளது நலன்களுக்கு சார்பான வகையில் கொள்கைகளினை வகுப்பதனால் அது சாதாரண பாமர மக்களினை நேரடியாகப் பாதிப்பதுடன் அது அரசியல் அபிவிருத்தியிலும் தாக்கம் செலுத்துவதனை காணக்கூடியவாறு உள்ளது.

**சமூக முறைமை அணுகுமுறை :-** தேசிய அரசுகள் ஒவ்வொன்றிலும் மதம், சாதி, இனம், மொழி, பிராந்தியம், அந்தஸ்து, உப அரசியல் கலாசாரம், உப தேசியவாதம் போன்றவற்றினைக் கொண்ட பிரிவினர்களும் குழுக்களும் காணப்படுகின்றனர். இவை தேசிய அரசாங்கத்தினது செயற்பாடுகள் அனைத்திலும் எவ்வளவு தூரம்பங்கெடுக்கின்றனஎன்பதனைப் பொறுத்ததாகவே அரசியல் அபிவிருத்தியினது தரமானது நிர்ணயிக்கப்படுகின்றது. அரசியல் பங்கெடுப்பதற்கான வாய்ப்புக்கள் அனைவருக்கும் எவ்வகையான பாரபட்சமும் இன்றி வழங்கப்படுவதனை அரசுகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறான ஒரு புறச்சூழ்நிலையியேதான் அரசியல் அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் தெளிவாகக் காணப்படும். அரசியல் அபிவிருத்தியானது ஒரு சமூகத்தில் காணப்படுகின்ற தனிநபர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நிலவுகின்ற பரஸ்பர உறவினை விரிவாக ஆராய்வதாக உள்ளது. எனவே அரசியல் அபிவிருத்தியினை சமூகத்திலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாது.

ஒரு சமூகத்தில் மொழி, மதம் மற்றும் இன ரீதியிலான வேறுபாடுகள் ஆழமாக வேரூன்றிக் காணப்படுமாயின் அங்கு அரசியல் அபிவிருத்தி தொடர்பாக எதிர்மறையான விளைவுகளினையே காணலாம். இத்தகைய சூழ்நிலையில் ஆதிக்கம் செலுத்துகின்ற இனமானது அரசாங்கத்தினையும் நாட்டினது வளங்களினையும் தமது இனத்தினது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்களுக்காக மட்டும் இயக்குவிக்க முற்படுகின்ற போது அவற்றினால் பாதிக்கப்படுகின்ற சிறுபான்மை சமூகங்கள் அல்லது இனக்குழுக்கள் அரசாங்க செயற்பாடுகளில் இருந்து விடுபட்டும் உபதேசியவாதக் கோரிக்கையினை முன்வைத்தும் பிரதான தேசியத்துக்கு எதிராக தொழிற்பட விளையலாம். இத்தகைய நிலையின் தொடர்ச்சியும் பாதிப்புக்களும் உள்ளக முரண்பாடுகளினையும், புரட்சிகளினையும், உள்நாட்டு யுத்தங்களினையும் தோற்றுவிக்கலாம். இதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் அரசியல் அபிவிருத்தியினை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிப்பவையாகவும் காணப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையானது பல வளர்முக நாடுகளில் காணப்படுவதனால் அங்கு அரசியல் அபிவிருத்தியினை அடைந்துகொள்வது சவால்கள் மிக்கதாகவுள்ளது. எனவேதான் அரசியல் அபிவிருத்தியினை அடைந்து கொள்வதில் பல்லின சமூகங்களினைக் கொண்டுள்ள நாடுகளில் சம வாய்ப்புக்கள், பாரபட்சம் அற்ற தன்மை, சுதந்திரம், சுயாதீனம் போன்ற விடயங்கள் அங்குள்ள அனைத்து சமூகங்களும் சமமாகக் கிடைக்கின்றனவா என்பதனை முதலில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**அரசியல் அபிவிருத்தியும் நவீனமயமாக்கலும்**

நவீனமயமாக்கல் என்கின்ற விடயமானது 1950, 1960களில் அபிவிருத்தி பற்றிய கோட்பாடுகளுடன் பரவலடைந்த ஒன்றாகவுள்ளது. அரசியல் அபிவிருத்தி மற்றும் அரசியல் நவீனத்துவம் என்பதன் பொருளானது ஒன்றாகவுள்ளது. அவற்றினை வரையறுப்பதன் மூலம் மட்டும் சீராக விளங்கிக்கொள்ள முடியாது. ஆனால் அரசியல் அபிவிருத்தியின் முக்கிய உள்ளடக்கங்களாகிய கல்வி அறிவு, உயர் தொழில்நுட்ப வசதிகள், சுகாதார மருத்துவ வசதிகள், சீரான பொருளாதார வளர்ச்சி என்பவற்றினை நடைமுறைப்படுத்துகின்ற போது அரசியல் அபிவிருத்தியும் அரசியல் நவீனத்துவமும் ஒன்று என உணரலாம். ஆனாலும் அரசியல் அபிவிருத்தி மட்டத்தினை நவீனமயமாக்கல் செயற்பாட்டினைக் கொண்டு அளவீடு செய்து கொள்ள முடியும். இதனை சாமுவேல் P.ஹங்டிங்டன் (Samuvel.P.Hunitinton) தனது "Political Development and Political Decay" என்கின்ற தனது ஆய்வில் "நவீனமயமாக்கல் என்பது அரசியல் அபிவிருத்தியில் இருந்து வேறுபட்டது. ஆனால் அரசியல் அபிவிருத்தியினை அடையாளப்படுத்த மிகவும் உதவியது" என்கின்றார். (புஸ்பராஜ் 2011:180)

மேலும் நவீனத்துவத்திலும் அரசியல் அபிவிருத்தியிலும் சில பொதுவான பண்புகளினை அடையாளப்படுத்தக் கூடியதாக உள்ளது. சாதாரண மக்கள் மத்தியில் அரசியல் அபிவிருத்தி, நவீனமயமாக்கம், மேற்குலக மயமாக்கம் என்கின்ற விடயங்கள் தொடர்பாக தெளிவின்மை காணப்படுகின்றது. குறிப்பாக நவீனமயமாக்கல் செயற்பாட்டிற்கும் மேற்குலகமயமாக்கலுக்கும் வித்தியாசம் காணப்படாமையினாலேயே அரசியல் அபிவிருத்திக் கோட்பாடுகள் வளர்முக நாடுகளில் தோல்வி கண்டன எனவும் கூறப்படுகின்றன. ஏனெனில் சில வளர்முக நாடுகள் நவீனமயமாக்கல் என்கின்ற போர்வையில் தமது நாடுகளது சமூகக் கட்டமைப்பு மற்றும் அரசியல் கட்டமைப்புக்களில் மேற்கத்தேயமயமாக்கல் செயற்பாடுகள் ஊடுருவுவதாகவும் இதனால் பல்லின சமூகத்தினைக் கொண்டுள்ள தமது நாட்டில் பல்வேறு முரண்பாடுகளும் பிரச்சினைகளும் காலத்துக்கு காலம் தோற்றம் பெறுகின்றன என சில மூன்றாம் உலக நாடுகள் நம்புகின்றன.

ஒரு சமூகத்தில் அல்லது ஒரு இனத்திடம் சுயாட்சிக்கான அடையாளங்களும் இயல்புகளும் காணப்படுமாயின் அத்தகைய அடையாளங்களும் இயல்புகளும் நன்கு வளர்ச்சியடைந்த அரசியல் அபிவிருத்தியினை நோக்கி உந்துகின்றன எனலாம். இதற்கு சான்றாக தாராண்மைவாத நாடுகளில் சுயாட்சியின் அடித்தளத்திலேயே அரசியல் அபிவிருத்தி இலகுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்பப்பட்டுள்ளமையினைக் கூறலாம். அரசியல் அபிவிருத்தியினை அடைந்து கொள்வதிலும் அதனைப் பாதுகாப்பதிலும் ஜனநாயக விழுமியங்களுக்கு தனித்துவமான பங்குண்டு. எனவே தான் அரசியல் அபிவிருத்தியானது ஜனநாயக விழுமியங்களினை அடிப்படையாகக் கொண்ட சிறப்பான அரசியல் கட்டமைப்புடன் கூடிய அரசியல் செயல்முறைகளில் இழையோடியுள்ளது என்கின்றனர். இவ்வாறு ஜனநாயக விழுமியங்களுடன் தொடர்புபட்டுள்ள அரசியல் அபிவிருத்தியானது நன்கு வளர்ச்சியடைந்து நிறுவனமயமாக்கல் வரையில் வளர்ச்சி அடைந்துள்ளமையினையும் தாராண்மை வாத நாடுகளில் காணலாம்.

அரசியல் அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு ஆய்வுகளினையும் வரைவிலக்கணங்களினையும் முன்வைத்த அல்மொன்ட் மற்றும் பவல் (Almond and Powell) ஆகிய அறிஞர்கள் அரசியல் அபிவிருத்தியானது பின்வரும் பிரச்சனைகளினை எதிர்நோக்கி வருகின்றன என குறிப்பிடுகின்றனர். (Das & Choudhury 1997:119)

- அரசினை கட்டியெழுப்புதல் பற்றிய பிரச்சினை
- தேசத்தினை விருத்தி செய்தல் பற்றிய பிரச்சினை
- பங்குபற்றுதலில் உள்ள பிரச்சினை
- பங்கீடு செய்தல் பற்றிய பிரச்சினை

அரசினைக் கட்டியெழுப்புதல் பற்றிய பிரச்சனையானது அரசியல் அபிவிருத்தி எதிர்நோக்குகின்ற பிரதான பிரச்சினையாகக் காணப்படுகின்றது. ஏனெனில் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் ஒரு அரசுக்கு பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு பிரச்சினைகளும் சவால்களும் காணப்படு வதனால் தேசிய அரசு ஒன்றினது நிலைபேற்றுத்தன்மையினை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. பிராந்திய அரசியல் மற்றும் சர்வதேச அரசியலின் போக்குகளினால் ஏற்படுகின்ற மாற்றங்கள் போன்றவற்றினால் அதிகாரத்திலுள்ளவர்களுக்கு ஏற்படுகின்ற அச்சுறுத்தல்கள், வளப்பங்கீடு, அபிவிருத்தி செயற்பாடுகள், மத்திய மயப்படுத்தல் போன்ற காரணங்களினால் அரசினை கட்டியெழுப்புகின்ற செயற்பாடானது அரசியல் அபிவிருத்தியில் சவால்கள் நிறைந்தன வாகவுள்ளது.

தேசத்தினை விருத்தி செய்தல் பற்றிய பிரச்சினையானது அரசுடனும் பிரஜைகளுடனும் தொடர்புபட்டவையாகக் காணப்படுகின்றது. அதாவது மக்களது அரசியல் பங்குபற்றுதல் மற்றும் தேசத்தின் மீதான விசுவாசம் என்பன கிராமத்தில் இருந்து மத்திய அரசினை நோக்கியதாக அமைய வேண்டும் எனவும் பிரஜைகள் தமக்குள்ளான வளப்பங்கீடு மற்றும் பரிமாற்றங்கள் தேசவிருத்தியின்பால் அமைய வேண்டும். அரசினை விருத்தி செய்தல், தேசத்தினை விருத்தி செய்தல் என்பதனை இணைந்த வகையிலும் வேறுபட்ட வகையிலும் ஆராயலாம். ஆனால் பல நாடுகளில் அரசினை கட்டியெழுப்புவதன் மூலம் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட வரலாறும் உண்டு. எனவே தான் அரசியல் அபிவிருத்தியில் தேசத்தினை விருத்தி செய்தல் பற்றிய பிரச்சினையும் பிரதானமானதாக உள்ளது.

பங்குபற்றுதலில் உள்ள பிரச்சினை என பார்க்கின்ற போது ஒரு சமூகத்தில் குறிப்பாக ஒரு பல்லின சமூகத்தில் பல்வேறு நோக்கங்களினையும் தேவைகளினையும் கொண்ட குழுக்கள் ஆர்வத்துடன் காணப் படுகின்றன. இவை அரசாங்கத்தினது கொள்கை உருவாக்கம், தீர்மானம் எடுத்தல் செயற்பாடுகளில் பங்காளர்களாக மாற்றுவிக்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட குழுக்களுடன் இணைந்த வகையில் அரசியல் செயற்பாட்டு அம்சங்களான அரசியல் கட்சிகள், நிறுவனங்கள் போன்றன பங்கெடுக்கின்ற போது அரசு உருவாக்குகின்ற கொள்கைகள், திட்டங்கள் சிறப்பானதாகவும் அனைத்து மக்களது விருப்புக்களினையும் பாரபட்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்றவகையில் பூர்த்திசெய்வதாகவும் காணப்படும். இத்தகைய ஆரோக்கியமான அரசியல் பங்குபற்றுதலானது அரசியல் அபிவிருத்தியினை துரிதப்படுத்தும்.

பங்கீடு செய்தல் பற்றிய பிரச்சினை என்கின்ற போது அதாவது தேசிய வருமானம் மற்றும் குறித்த அரசினது வளங்கள், செல்வங்கள் மக்கள் மத்தியில் பங்கீடு செய்துகொள்ளுதல் வேண்டும். இவ்வகை பங்கீட்டின் போது தோலினது நிறவேறுபாடு, இன வேறுபாடு, மொழி வேறுபாடு மற்றும் மத வேறுபாடு போன்றவற்றுக்குஅப்பால்செயற்பட வேண்டும். திறமை மற்றும் தகுதி போன்றவற்றுக்கு உரிய மரியாதையும் கௌரவமும் வழங்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட விடயங்களே பிரஜைகளுக்கு பாரபட்சம் அற்ற சமத்துவமான வாய்ப்பு உள்ளது என்பதனை உணர்த்துகின்றன. இத்தகைய நிலையானது அரசியல் அபிவிருத்திக்கும், நலன்புரி அரசினை நோக்கியும் குறித்த நாட்டினை வேகமாக நகர்த்தி செல்வதாகக் காணப்படுகின்றன.

அரசியல் அபிவிருத்தி என்கின்ற எண்ணக்கருவானது வேகமான வளர்ச்சியுடன் பல்வேறு அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடயங்களினை உள்ளடக்கியுள்ள கோட்பாடாக வளர்ச்சியடைந்ததன் பின்னணியில் தேசிய அரசுகள் தமது நாடுகளில் அரசியல் அபிவிருத்தியினைத் தோற்றுவிப்பதற்காக பல்வேறு முயற்சிகளினையும் மேற்கொண்டு வருகின்றன. ஆனால் உலக நாடுகள் மத்தியில் அரசியல் அபிவிருத்தியினை அளவிட்டுக் கொள்வதற்கான பொதுமையான அளவீட்டு பொறிமுறையினை உருவாக்க முடியவில்லை. இதன் காரணமாக உலக நாடுகள் அடைந்துள்ள அரசியல் அபிவிருத்தியினை மதிப்பீடு செய்து கொள்வது முழுமையான ஒன்றாக அமையாது. ஏனெனில் அரசியல் அபிவிருத்தியினை அரசியல் பெறுமானங்களினை மட்டும் கொண்டு விளக்கவோ மதிப்பீடு செய்து கொள்ளவோ முடியாது. அரசியல் அபிவிருத்தியினையும் பொருளாதார மற்றும் சமூகக் குறிகாட்டிகளினை அடிப்படையாகக் கொண்டே அளவீடு செய்து கொள்ள முடியும். அரசியல் அபிவிருத்தி குறிப்பிடுகின்ற சமூகத்தினை நாடுகள் மத்தியில் இனங்காண்பதும் பிரச்சினைக்குரியதாகின்றது. ஏனெனில் வளர்ச்சி அடைந்த சமூகம் என்று எவ்வாறு கூறுவது என்பது பற்றியும் அது பொதுமைப்பாடான ஒன்றாக அமையுமா என்பது பற்றியும் கேள்விகள் உள்ளன. ஏனெனில் ஒரு சமூகத்தில் உள்ள மனிதனுக்கு தனது சமூகமும் அது கொண்டுள்ள சமூகப்பெறுமானங்களுமே உயர்வானவையாகக் காணப்படும். ஒரு அரசாங்க முறை அல்லது அரசியல் முறைக்குள் வாழ்கின்றவனுக்கு அது சிறப்பான ஒன்றாகவும் மற்றயவர்களுக்கு அவற்றினை விட சிறப்பான அரசியல் முறையும் அரசாங்க முறையும் உள்ளன என தோன்றலாம். இது மனிதனது மாறுபட்ட நடத்தைக் கோலங்களுடன் தொடர்புபட்ட ஒன்றாகவுள்ளது. 1960களில் உயர்ந்த ஜனநாயக விழுமியங்களினைக் கொண்டுள்ள நாடுகள் என கூறுகின்ற மேற்கத்தேய நாடுகளினை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் அடைய வேண்டிய இலக்குகளினை கொண்ட சமூகமே சிறந்த சமூகம் எனவும் இதுவே அரசியல் அபிவிருத்தி எதிர்பார்க்கின்ற அளவீட்டினைக் கொண்ட சமூகம் என வரையறுக்கப்பட்டது. இந் நிலைப்பாடு தொடர்பாகவும் வாதப்பிரதி வாதங்கள் காணப்படுகின்றன.

லிப்செட் (Lipset) என்கின்ற அறிஞர் பொருளாதார அபிவிருத்தி எனப்படுவது தேசிய அரசியல் முறைமையில் ஏற்படுத்தும் தாக்கத்தினை புள்ளிவிபர ரீதியான அளவீட்டினை மேற்கொண்டு விளக்க முற்பட்டிருந்தார். இது அரசியல் அபிவிருத்தியினை அளவீடு செய்கின்ற போது கல்வி, பொருளாதாரம், தொடர்பாடல், நகரமயமாக்கம், தனி மனிதனது அரசியல் பங்குபற்றுதல் போன்ற தரவுகளினை அரசியல் அபிவிருத்தி அளவீட்டிற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தியிருந்தார். (Das & Choudhury 1997:125) இன்று அரசியல் அளவீட்டினை மேற்கொள்வதற்காக அரசியல் செயற்பாடுகள், சமூக செயற்பாடு, கட்சிகளினது வளர்ச்சி நிலை, மக்களின் பங்குபற்றுதல், வளப்பங்கீட்டிற்கான ஏற்பாடுகள், சமூகப் பாதுகாப்பு, பொது நலன்கள், சிறுபான்மை, சமூகங்களது உரிமைகள், சட்டத்தின் ஆட்சி, சுகாதாரம், கல்வி, பொருளாதார வளர்ச்சி, அரசியல் சமூக பொருளாதார சுதந்திரம் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு அரசியல் அபிவிருத்தியானது இன்று அளவீடு செய்யப்படுகின்ற போதும் இம்முறை பொதுமைப்படான ஒன்றாக அனைவரினாலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**முடிவுரை**

அரசியல் அபிவிருத்தி தொடர்பான பூரணமான வரைவிலக்கணம் இன்று வரையில் காணப்படாமையினாலும் அரசியல் அபிவிருத்தி கோட்பாடு உள்ளடக்கியுள்ள விடயங்களில் அவற்றின் நோக்கங்கள் தெளிவாகக் காணப்படாமையினாலும் அரசியல் அபிவிருத்தி கோட்பாடு பலவீனப்படுவதற்கு பிரதான காரணங்களாக உள்ளன. மேலும் அரசியல் அபிவிருத்தி கோட்பாடானது உலக நாடுகளுக்கு பொருந்தக்கூடிய பொதுமைப்பாடான ஒரு முறையினை முன்வைக்கவும் இல்லை. (Abhayewardhana, Nanayakkara, Hettige, Keertiratne & Selvakumaran 1999:27)

அரசியல் அபிவிருத்தியினை ஒப்பீடு செய்தல் அல்லது எந்த அடிப்படையில் ஒப்பீடு செய்தல் என்பது தொடர்பான கேள்விகளும் இக்கோட்பாட்டினை பலவீனப்படுத்தியுள்ளது. ஒரு சமூகத்தில் அல்லது ஒரு நாட்டில் ஏற்படுகின்ற அரசியல் மாற்றங்களுக்கும் அரசியல் அபிவிருத்திக்கும் அரசியல் காரணிகள் முதன்மையானவையாகக் காணப்படுகின்ற போதும் அதற்கு அப்பால் சமூக, பொருளாதார காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனையே பேராசிரியர் எஸ். பி.வர்மா (Prof.S.P.Varma) சமூக, பொருளாதார, நிர்வாக, கலாசார வேறுபாடுகள் அரசியல் அபிவிருத்தியில் பிரதான இடத்தினைக் கொண்டுள்ளது. இவற்றினை வேறுபடுத்துவது கடினம். இவை புலமைசார் ஆய்வுக்கு உதவுகின்றன என குறிப்பிடுகின்றார். (Abhayewardhana, Nanayakkara, Hettige, Keertiratne & Selvakumaran 1999:28)

பொருளாதார ரீதியில் மாக்சிச சிந்தனையினைக் கொண்டுள்ளவர்கள் அரசியல் அபிவிருத்தி என்பது உலக நாடுகளுக்கு பொதுவான ஒரு மாதிரியாக இல்லாமையினால் இதனை நாடுகள் அமுல்படுத்த விளைகின்ற போது பல்வேறு அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் தலையெடுக்கின்றன என விமர்சிக்கின்றனர். அரசியல் அபிவிருத்தி கோட்பாடும் அதன் அணுகுமுறையும் முழுக்க முழுக்க மேற்கத்தேய மாதிரியினைக் கொண்டது எனவும் மேற்கத்தேய சமூகத்தினை உயர்வாகக் காட்டி மூன்றாம் உலக நாடுகளது சமூகங்களினை தாழ்வாகக் காட்டுவதற்கான ஒரு அளவீடாக அல்லது பிரித்துக் காட்டுகின்ற ஒரு கருவியாகவே உள்ளது எனக் கூறப்படுகின்றது.

எது எவ்வாறான போதும் அரசியல் அபிவிருத்திக் கோட்பாட்டினை புலமைசார் நோக்கில் பார்க்கின்ற போது பரந்த விடயங்களினையும் அணுகுமுறைகளினையும் கொண்ட கோட்பாடாகவும் இது அரசியல் நிலமைகளினையும் முறைமைகளினையும் கற்பதன் மூலம் மூன்றாம் உலக நாடுகளில் புதிய விருத்தி அடைந்த சமூகத்தினை உருவாக்குவது தொடர்பாக ஆராய்கின்றமையும் இக் கோட்பாட்டிற்கு அரசியல், சமூகவியல், பொருளியல் அறிஞர்களது பங்களிப்புக்கள் காணப்படுகின்றமையும் வரவேற்கத்தக்கதாகவும் ஆராய்வுக்கு வேண்டியதாகவும் உள்ளது. ஆனால் மறைமுகமாக அரசியல் அபிவிருத்தியினைக் கொண்டு வளர்ச்சி அடைந்த மேற்குலக நாடுகள் அரசியல் அபிவிருத்தியில் தாம் முன்னோடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும், வளர்முக நாடுகளில் உள்ள சமூகங்கள் அரசியல் அபிவிருத்தி அடையாத பின்தங்கிய சமூகங்கள் எனவும் அடையாளப்படுத்தவும் வேறுபடுத்தவும் அரசியல் அபிவிருத்தி என்கின்ற எண்ணக்கருவினை பயன்படுத்துகின்றன. துரதிஷ்ட வசமான ஒன்றாகவுள்ளது.

**உசாத்துணை நூல்கள்**


1. Das.H.H., Choudhury.B.C., (1997), Introduction to Political Sociology, Vikas Publishing house PVT.LTD, New Delhi, P.117.
2. Abhayewardhana. H.A.P., Nanayakkara. G., Hettige. S.T., Keertiratne. J.G., Selvakumaran. N., (1999), Report of the Commission of Inquiry on Local Government Reforms, The Department of Government Printing, Sri Lanka, P.27.
3. Manivasagar.A.V., (1998), Current Political Models, Social Scientist Publications, University of Jaffna, Sri Lanka.
4. புஸ்பராஜ்.சி., (2011), அரசியல் சமூகவியல்- ஓர் அறிமுகம், காயத்திரிபப்ளிக்கேஷன், தெஹிவளை, இலங்கை.
5. குணரத்தினம். வே., (2009), அரசியல் விஞ்ஞான ஆய்வில் அணுகுமுறைகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
6. குணரத்தினம். வே., (2007), அரசறிவியலில் நடத்தைவாத எண்ணக்கருக்கள், கிருஷ்ணி வெளியீடு, கொழும்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பினைத் தீர்மானிப்பதில் கல்வித்தரத்தினதும் வயதினதும் வகிபாகம்

## (கரைச்சி பிரதேசத்தின் வட்டக்கச்சி கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

சு.சி. உதயகுமார்

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையின் வடக்கே வட மாகாணத்தின் மத்தியில் கிளிநொச்சி மாவட்டத்தின் தெற்குப் புறமாக கரைச்சிப் பிரதேசமானது அமைந்துள்ளது. இது 42 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இந்தவகையில் ஆய்விற்கெனத் தெரிவு செய்யப்பட்ட பிரதேசம் கரைச்சிப் பிரதேசத்திலுள்ள வட்டக்கச்சி கிராமமாகும். இங்கு எளிய வீதாசார படைமுறைமுறை மாதிரித் தெரிவின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 31 குடும்பங்களுக்கே வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு அவை ஒழுங்குபடுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் சார்ந்த மாறியாக வேலைவாய்ப்பும் சாராத மாறிகளாக கல்வித்தரம் மற்றும் வயது மாறிகளும் காணப்படுகின்றன. வேலைவாய்ப்பு மற்றும் கல்வித்தரம் என்பவற்றுக்கிடையிலான இணைவானது 62% ஆகக் காணப்படுவதுடன் வேலைவாய்ப்பு மற்றும் வயது என்பவற்றுக்கிடையிலான இணைவானது 41% ஆகவும் காணப்படுகின்றது இவற்றிற்கிடையிலான தாக்கமானது முறையே 51%,-88% மாகக் காணப்படுகின்றது என்பதனையும் எடுத்துக்காட்டுவதுடன் இவற்றிற்கிடையிலான P-Value 0.000 என்பதாகக் காணப்படுகின்றது. இவ்வகையில் ஆய்வுப்பிரதேசத்தில் வேலை வாய்ப்பிற்கும் கல்வித்தரத்திற்கும் இடையே நேரான தொடர்பு காணப்படுகின்ற அதே நேரம் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதில் வயது என்பது எதிரான தாக்கத்தையே ஏற்படுத்துகின்றது.

**முக்கிய திறவுச்சொற்கள்:** வேலைவாய்ப்பு, கல்வித்தரம், வயது, வாழ்வாதாரம்,

### ஆய்வின் அறிமுகம் (Introduction)

இலங்கையின் வேலைவாய்ப்பினை வழங்குவதில் தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் அரச துறை நிறுவனங்கள் என்பன முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. அந்தவகையில் போரின் வடுக்களையும் எச்சங்களையும் தாங்கி நிற்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேசத்தில் தற்போது இடம் பெற்று வருகின்ற அபிவிருத்தி செயற்பாடுகளின் பிரதிபலனாக தனியார் துறை, அரச துறை நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் வகிபாகம் அதிகம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது அந்தவகையில் குறித்த பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் வேலைவாய்ப்பினைத் தீர்மானிக்கின்ற பிரதான காரணங்களாக கல்வித்தரமும் வயதும் காணப்படுகிறன.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவானது 42 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு பிரதேசமாகும். இப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள வட்டக்கச்சி கிராமமே ஆய்விற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் வாழும் மக்கள் அதிகளவாக தென்னை சார் உற்பத்தியிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுகின்றார்கள். அதாவது போரினால் பாதிக்கப்பட்டு அதிகளவான மூலதனப் பற்றாக் குறையினை எதிர் நோக்கியுள்ள போதிலும் அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றிலிருந்து கிடைக்கும் உதவிகள், வாழ்வாதாரங்கள் போன்றவற்றின் ஊடாக சுய தொழில் வேலை வாய்ப்புக்களிலும் ஈடுபடுகின்றனர். கடந்த 30 வருட கால யுத்தத்தினால் உட்கட்டுமானம், வீட்டு வசதி என்பன அதிகளவில் பாதிப்படைந்துள்ளன. கடந்த 2015/2016 அறிக்கையின் படி (கிராம சேவகர் அறிக்கை) 70 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் வறியவர்களாக வசிக்கின்றார்கள் என்பது தெரியவந்துள்ளது.

குறித்த பிரதேசத்தில் காணப்படுகின்ற வேலைவாய்ப்பினைத் தீர்மானிப்பதில் கல்வித்தரத்தினதும் வயதினதும் வகிபாகம் பற்றிய இந்த ஆய்வில் சார்ந்த மாறியாக (Dependent Variable) வேலைவாய்ப்பும் சாராத மாறிகளாக (Independent Variables) கல்வித்தரம் மற்றும் வயது என்பனவும் காணப்படுகின்றன.

$$Y = f(X_1, X_2)$$

Y : சார்ந்த மாறி - வேலைவாய்ப்பு

$X_1, X_2$: சாராத மாறிகள் - கல்வித்தரம் மற்றும் வயது


வேலைவாய்ப்பு $= f(X_1, X_2, ....n)$

## ஆய்வுப்பிரதேசம் (Research Area)

இலங்கையின் வடக்கு மாகாணமானது 05 மாவட்டங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வகையில் வடக்கு மாகாணத்தின் மத்தியில் விளங்குகின்ற கிளிநொச்சி மாவட்டமானது கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி, என்ற நான்கு பிரதேச செயலர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இருப்பினும் கிளிநொச்சி மாவட்டத்தின் மத்தியில் விளங்குகின்ற கரைச்சிப் பிரதேசமானது ஏனைய பிரதேசங்களை விட அதிகளவான மக்களையும் தனியார் துறை நிறுவனங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. அத்துடன் பிரதான வீதியான A9 பாதையானது அப்பிரதேசத்தை ஊடறுத்துச் செல்வதனாலும் தரவுகளையும் பெற்றுக் கொள்வதன் இலகு தன்மை கருதியும் இது ஆய்வுப் பிரதேசமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. கரைச்சிப் பிரதேசமானது கிளிநொச்சி மாவட்டத்தின் தெற்குப் புறமாக அமைந்துள்ளது. ஆய்விற்கெனத் தெரிவு செய்யப்பட்ட வட்டக்கச்சி கிராமமானது

வடக்காக : சிவிக்சென்றரையும்
தெற்காக : தருமபுரத்தையும்
கிழக்காக : மாயவனூாரையும்
மேற்காக : திருவையாறையும்

கொண்டுள்ள போதிலும் இக் கிராமமானது கிட்டத்தட்ட 3.21சதுரகிலோமீற்றர் பரப்பளவினைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.




**மூலம் : கரச்சி பிரதேச செயலர் அறிக்கை -2015**

### ஆய்வின் நோக்கங்கள்

இந்த ஆய்வின் பிரதான நோக்கம் மற்றும் துணை நோக்கங்கள் என்ற வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரதான நோக்கம்**

- வேலை வாய்ப்பினைத் தீர்மானிப்பதில் கல்வித்தரம் மற்றும் வயது என்பன எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை இனங் காணுதல்

**துணைநோக்கங்கள்**

- கல்வித்தரம் அதிகரிக்கும் போது வேலை வாய்ப்பிற்கான சந்தர்ப்பம் அதிகரித்துச் செல்கிறதா என்பதை இனங்காணுதல்
- வயது அதிகரிக்கும் போது வேலை வாய்ப்பு வழங்கும் தன்மை எவ்விதம் காணப்படுகிறது என்பதை இனங் காணுதல்
- வேலை வாய்ப்பினைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணங்களை இணங்காணுதல்
- வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள் வதில் மக்கள் எத்தகைய பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர் என்பதனை இனங்காணுதல்
- மேற்படி பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தகுந்த தீர்வுத் திட்டங்களை முன்வைத்தல்.

**ஆய்வின் கருதுகோள்கள்**

- வேலை வாய்ப்புக்கும் தொடர்பாக கல்வித் தரத்திற்கும் இடையே நேரான தொடர்பு காணப்படுகிறது.
- வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதில் வயது என்பது எதிரான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

Joanna Barsh மற்றும் Lareira Yee என்பவர்கள் இணைந்து (2011April) "Unlocking the full Potential of Women in the US Economy" என்ற கட்டுரையில் இன்று பல தனியார் துறை நிறுவனங்கள் பெண்களின் வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்றாற் போன்றே வேலைவாய்ப்பினை வழங்கி வருகின்றன. பெண்கள், குடும்பம் மற்றும் வேலைச்சுமை என்ற இரட்டைப் பொறுப்புக்களினைச் சுமந்து வாழ வேண்டிய சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் அடிமைத்தளையில் இருந்து நீக்கி உண்மையான சாதனைகளை நிகழ்த்தியுள்ளனர் என்பது தெரிய வருகின்றது. அதாவது அமெரிக்காவின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த பொருளாதார வளச்சியானது முக்கியமான இலக்குகளினை அடைந்து கொள்வதற்கு உளகளாவிய ரீதியில் கோப்புத் தன்மையானது இருக்க வேண்டும். இது பாலினம் பற்றிய கருத்துக்களினை இணைத்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

Phino Martin, Antoni Barnard என்பவர்கள் (28 June 2013) "The experience of Women in Male – dominated Occluded theory inquiry" என்ற நூலில் கோட்பாடு மற்றும் கட்டமைப்பு ரீதியாக நோக்குகின்ற போது ஆண்களின் ஆதிக்கத்திற்கும், ஆக்கிரமிப்புக்கும் சார்ந்த தன்மையினையும் பெண்கள் தாங்கிக் கொள்ளவும் பின்டைவுகளினை எதிர் கொள்ளவும் என முதன்மையான கருப்பொருட்கள் மற்றும் துணைக் கருப் பொருட்களினையும் பின்பற்ற முனைந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.


நடராஜா யோகேஸ்வரி (2006) "யாழ் மாவட்டத்தின் கல்வியும் தொழில் சார் விருத்தியும்" என்று தலைப்பிடப்பட்ட ஆய்வினை விபரண ரீதியான அணுகு முறை களினை கையாண்டு பெண்களிற்கான கல்வியும் வேலைவாய்ப்பும் எவ்விதம் காணப்படுகின்றது என்றும் கல்வித்தராதரங்கள் அதிகரிக்கின்ற போது பெண்களிற்கான வேலைவாய்ப்பும் மேல் நோக்கி நகரும் என குறிப்பிட்டுள்ளார்.

தணிகாசலம் (2002) "பெண் விடு தலை வேண்டும்" என்ற கட்டுரையில் பெண் கள் விடுதலை பெற வேண்டுமென்ற குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உலகின் பல பாகங்களிலும் பரவலாக ஒலித்து வருகின்றது. சமூதாய நலனிலும் முன்னேற்றத்திலும் அக்கறையுள்ள அரசியலாளர்கள் மாதிரி இயக்க முன்னோடிகள் அனைவரும் இதனை முதன்மைப் படுத்துகின்றனர். புதிய சமூக அமைப்பினை உருவாக்கும் நோக்குடன் போராடிக் கொண்டிருக்கும் விடுதலை அமைப்புக்கள் அனைத்துமே பெண் விடுதலையையே தம் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாகக் கொண்டுள்ளனர். என குறிப்பிட்டுள்ளார்.

எண்ணக்கருச்சட்டவாக்கம்





(மூலம்: ஆய்வாளரால் தொகுக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி எடுப்பு முறை

இந்த ஆய்வில் எளிய வீதாசார படைமுறை மாதிரி எடுப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.




இவ்விதமாக வினாக்கொத்தானது எளிய எழுமாற்று வீதாசார அடிப்படையிலான படைமுறை மாதிரி எடுப்பினூடாக கரச்சி பிரதேசத்தில் உள்ள வட்டக்கச்சி கிராமத்தில் உள்ள வட்டக்கச்சி மத்தி (94 குடும்பங்கள்) வட்டக்கச்சி வடக்கு (91 குடும்பங்கள்) வட்டக்கச்சி தெற்கு (120 குடும்பங்கள்) ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய KN/38 கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் 305 குடும்பங்களில் 10 சதவீதமான குடும்பங்களை படைமுறை மாதிரி எடுப்பினூடாக தெரிந்தெடுக்கப்பட்ட 31 குடும்பங்களுக்கே வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டுள்ளன.

**வினாக் கொத்து வழங்கப்பட்ட முறை**

| | |
|---|---|
| தனியார்துறை நிறுவனங்களில் தொழில் புரிபவர்கள் | 08 |
| அரசதுறை நிறுவனங்களில் தொழில் புரிபவர்கள் | 08 |
| சுய தொழில்புரிபவர்கள் | 08 |
| ஏனையவர்கள் | 07 |

என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 31 குடும்பங்களுக்கே வினாக்கொத்தானது வழங்கப்பட்டுத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன

**தரவு சேகரிப்பு முறை**

தரவுகள் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மூலங்களில் இருந்து சேகரிக்கப்பட்டுள்ளன. முதலாம் நிலை தரவு மூலங்களாக வினாக்கொத்து, நேர்காணல் என்பன ஆய்விற்கென தெரிவு செய்யப்பட்டுள்ளன. வினாக்கொத்து மூலமாக பெற்ற தரவுகள் நம்பகத்தன்மை வாய்ந்ததாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுவதுடன், ஆய்வாளனினால் களத்திற்கு நேரடியாகச் சென்று பெறப்பட்ட தரவுகளாகவும் காணப்படுகின்றன. நேர்காணல் என்பது ஆய்வுப்பிரதேச மக்களிடம் ஆய்வு தொடர்பாகக் கலந்தாலோசித்து பெறப்பட்ட தகவல்களாகவும் காணப்படுகின்றன.

இரண்டாம் நிலை தரவுகள் என்கின்ற போது வட்டக்கச்சி கிராம அலுவலர் அறிக்கை பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், இவ் ஆய்வு தொடர்பான நூல்கள், இணையத்தள கட்டுரைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**தரவுப் பகுப்பாய்வும்**

தெரிவு செய்யப்பட்ட கிராமத்தில் வினாக் கொத்து மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளினை ஆய்வு செய்வதற்கென புள்ளிவிபரவியலுக்கான கணித மென்பொறி (SPSS) பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக இணைவுக்குணகம், பிற்செலவு மாறிகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டு முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன.

ஆய்விற்கென இருமாறிகள் முன்வைக்கப் பட்டுள்ளன. சார்ந்த மாறியினை அளவீடு செய்வதற்கு (Measure) பின்வரும் மூலங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வேலைவாய்ப்பு = f (தொழிலின் வகை, தொழில் செய்யும் காலம் …….. n )

சாராத மாறிகளாக கல்வித்தரம் மற்றும் வயது மற்றும் ஏனைய காரணிகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

$$Y= f(\beta_0+\beta_1 X_1+ \beta_2 X_2, U)$$

இங்கு,

Y= வேலைவாய்ப்பு (Dependent Variable)

F = தொழிற்பாடு

$X_1$= கல்வித்தரம் (Independent Variable)

$X_2$= வயது (Independent Variable)

U= வழுக்கள் (Error)


$\beta_0, \beta_1, \beta_2$= பீற்றாக்குணகங்கள்

$\beta_0$ என்பது ஏனைய காரணிகளின் தாக்கம் இல்லாத போதும் குறிப்பிட்டளவு தாக்கம் சார்ந்த மாறியில் காணப்படும் என்பதை இது காட்டுகிறது.

வேலைவாய்ப்பினைத் தீர்மானிக்கின்ற காரணிகளை நோக்கின்

**தொழில் நிலை**

மக்கள் செய்கின்ற தொழிலின் அடிப் படையில் பிரிக்கப்பட்டுள்ளது. இங்கு கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான தென்னை சார் உற்பத்தி நடைபெறும் பிரதேசமாக இக் கிராமம் காணப்படுகிறது. அத்துடன் சிறி கைத்தொழில்களில் ஈடுபடும் தன்மையும் சுய தொழில் முயற்சிகளும் அதிகமாக காணப்படுகின்றன.




மூலம் - களஆய்வு


ஆய்வுப்பிரதேசத்தில் அதிகளவான மக்கள் சுயதொழில்களிலேயே ஈடுபடும் தன்மை காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழில் செய்யும் காலம் (சேவைக் காலம்)**

அதாவது போரிற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் அதாவது கடந்த 2009 ம் ஆண்டு மீள் குடியேறியதன் பின்னர் என இது கணிப்பிடப்பட்டுள்ளது.




அதிகளவாக சுயதொழில்களில் ஈடுபடும் மக்களே நீண்டகாலமாக இத்தொழிலிலேயே இருக்கின்ற தன்மை காணப்படுகிறது. இருப்பினும் இவர்களுக்கான மூலதனம் உதவிகள் மூலமே பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளன.


சாராத மாறிகளை ஆய்வு செய்கின்ற போது

**கல்வித்தரம்**

குறித்த பிரதேசத்தில் வேலைவாய்ப்பானது என்ன அடிப்படையில் வழங்கப்படுகிறது என்பதை ஆய்வு செய்வதற்காக கல்வித் தரத்தினை பற்றி நோக்குதல் அவசியமாகும். ஆய்வுப் பிரதேசத்தில் அதிகளவாக காணப்படும் சாதாரண தரத்திற்கு உட்பட்ட கல்விமட்டத்தை கொண்டவர்களே சுய தொழில்களில் ஈடுபடுகின்றனர் எனவம் அதற்கு மேல் படித்தவர்கள் ஏனைய நிறுவனங்களில் தொழில் புரிபவர்களாகவம் காணப்படுகிறனர்.

**வயது**

குறித்த ஆய்வுப் பிரதேசத்தின் வயதின் அடிப்படையினை பின்வருமாறு நோக்க மடியும்.




வயது அதிகரிக்கின்ற போது தொழிலில் ஈடுபடும் நாட்டம் குறைவாக ாகணப்படுகிறது.

**ஏனைய காரணிகள்**

இங்கே வேலைவாய்ப்பினை தீர்மானிக்கின்ற குறிப்பிட்ட காரணிகள் தவிர்ந்த ஏனைய காரணிகளின் தாக்கமும் காணப்படும் என்பதனால் ஏனைய காரணிகளாக சூழல், குடும்ப நிலை, பரம்பரைத் தன்மை போன்றனவும் காணப்படுகின்றன. இருப்பினும் இதனை இங்கே ஆய்விற்கு உட்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**கருதுகோள் பரிசீலனை**

**H1**: வேலை வாய்ப்பிற்கும் கல்வித்தரத் திற்கும் இடையே நேரான தொடர்பு காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**H2:** வேலைவாய்ப்பினை பெறுவதில் வயதானது எதிரான தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளது

சார்ந்த மாறியான (Dependent Variable) வேலை வாய்ப்புக்கும் சாராத மாறிகளாகிய (Independent Variable) கல்வித்தரத்தரம், வயது என்பவற்றிற்குமிடையே எவ்வகையான தொடர்பு காணப்படுகின்றது என்பதனை புள்ளிவிபரவியலுக்கான கணித மென்பொறி (SPSS) பயன்படுத்தப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. மாறிகளுக்கிடையேயான தொடர்பினை பின்வரும் அட்டவணை எடுத்துக் காட்டுகின்றது.

**Reliability Statistics**

| Cronbach's Alpha | N of Items |
|---|---|
| .620 | 2 |

இங்கு No of Items என்பது வேலைவாய்ப்பு மற்றும் கல்வித்தரம் என்ற இரு மாறிகளினையும் எடுத்துக் காட்டுகின்றது. இவை இரண்டும் 62% மான தொடர்பினை எடுத்துக் காட்டுகின்றது. இந்த மாதிரி (Model) மிகவும் fit ஆன very good மாதிரியாகக் காணப்படுகின்றது.

**Reliability Statistics**

| Cronbach's Alpha[a] | N of Items |
|---|---|
| -.059 | 2 |
| | |

இங்கு No of Items என்பது வேலைவாய்ப்பு மற்றும் வயது என்ற இரு மாறிகளினையும் எடுத்துக் காட்டுகின்றது. இவை இரண்டும் -.059% மான தொடர்பினை எடுத்துக் காட்டுகின்றது. இந்த மாதிரி (Model) மிகவும் fit ஆன very less மாதிரியாகக் காணப்படுகின்றது.

இம் மாறிகளிகளிற்கு இடையிலான இணைவுக் குணகத்தினை (Correlation) எடுத்து நோக்குகின்ற போது சார்ந்த மாறியாகிய வேலை வாய்ப்புக்கும் சாராத மாறிகளாகிய (Independent Variables) கல்வித்தரத்தரம், வயது என்பவற்றிற்குமிடையேயான தொடர்பினை நோக்கின்

**Correlations**

| | | Employment | Education |
|---|---|---|---|
| Employment | Pearson Correlation | 1 | .519* |
| | Sig. (2-tailed) | | .000 |
| | N | 31 | 31 |
| Education | Pearson Correlation | .519* | 1 |
| | Sig. (2-tailed) | .000 | |
| | N | 31 | 31 |

*. Correlation is significant at the 0.05 level (2-tailed).

இவ்விரு மாறிகளுக்குமான இணைவானது 52% மாகக் காணப்படுகின்றது. இவ் இணைவானது இவ்விரு மாறிகளும் ஓரளவான தொடர்பினை கொண்டுள்ளன என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

Direction: Positive

Strength: Strong (0.519)

எடுத்துக் கொள்ளப்பட்ட இணைவுக்குணக அட்டவணையினை நோக்குகின்ற போது P-Value 0.000 ஆகக் காணப்படுகின்றது. இங்கு $P < 0.05$ ஆகக் காணப்படுகின்றது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட கருதுகோளை ஏற்றுக் கொள்வதாகும். எனவே எடுத்துக் கொள்ளப்பட்ட கருதுகோளானது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**Correlations**

| | | Employment | Education |
|---|---|---|---|
| Employment | Pearson Correlation | 1 | .417* |
| | Sig. (2-tailed) | | .019 |
| | N | 31 | 31 |
| Age | Pearson Correlation | .417* | 1 |
| | Sig. (2-tailed) | .019 | |
| | N | 31 | 31 |

*. Correlation is significant at the 0.05 level (2-tailed).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு மாறிகளுக்குமான இணைவானது 41% மாகக் காணப்படுகின்றது. இவ் இணைவானது இவ்விரு மாறிகளும் ஓரளவான தொடர்பினை கொண்டுள்ளன என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

Direction: Negative

trength: Strong (0.417)

எடுத்துக் கொள்ளப்பட்ட இணைவுக்குணக அட்டவணையினை நோக்குகின்ற போது P-Value 0.000 ஆகக் காணப்படுகின்றது. இங்கு $P > 0.05$ ஆகக் காணப்படுகின்றது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட கருதுகோளை ஏற்றுக் கொள்வதாகும். எனவே எடுத்துக் கொள்ளப்பட்ட கருதுகோளானது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

சார்ந்த மாறியாகிய வேலை வாய்ப்புக்கும் சாராத மாறியாகிய (Independent Variable) கல்வித்தரத்திற்குமிடையேயான தொடர்பினை பிற்செலவு மாதிரி (Regression) யின் மூலமாக எடுத்து நோக்க முடிகின்றது.

$$Y = a + b*X + e$$

Y = வேலை வாய்ப்பு

a = Intercept (constant)

b = Slope

X= கல்வித்தரம், வயது

e = Error

முன்வைக்கப்பட்ட இரு என்ற கருது கோளினை ஏற்றுக் கொள்வதற்கு பின்வரும் மாதிரியினைப் பயன்படுத்த வேண்டும்.

**Model Summary**

| Model | R | R Square | Adjusted R Square | Std. Error of the Estimate |
|---|---|---|---|---|
| 1 | .455[a] | .407 | .150 | .743 |

a. Predictors: (Constant), Age, Education

அட்டவணையில் R.Squre என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக காட்டப்பட்டுள்ளது. இங்கு 0.407 என்பது 40.7% மான தாக்கத்தினை வேலை வாய்ப்பில் கல்வித்தரமும் வயதும் தாக்கம் ஏற்படுத்தியுள்ளது. ஆனால் 59.3% மான அளவு ஏனைய காரணிகள் ஆகும்.

**ANOVA[b]**

| Model | | Sum of Squares | df | Mean Square | F | Sig. |
|---|---|---|---|---|---|---|
| 1 | Regression | 4.035 | 2 | 2.017 | 3.656 | .000[a] |
| | Residual | 15.449 | 28 | .552 | | |
| | Total | 19.484 | 30 | | | |

a. Predictors: (Constant), Age, Education

b. Dependent Variable: Employment

இங்கு Sig என்ற பகுதி முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக காட்டப்பட்டுள்ளது. இணைவுக் குணகத்தில் P-Value என்ற பகுதியே இதுவாகும். இங்கு sig என்பது 0.000 என்பது இம்மாதிரியின் good and fit இனை எடுத்துக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணையில் காட்டப்பட்டுள்ள constant என்பது அதாவது Intercept 1.101 ஆகும். இதுவே Regression coefficients ஆகும். கல்வித்தரத்தின் தாக்கமானது வேலைவாய்ப்பில் 0.511 ஆகும். ஆனால் வயதின் தாக்கமானது - 0.008 ஆகும்.

$Y = a + b*X_1 + b**X_2 + e$

$Y = 1.101+.511$ Education$+-.088$Age $+ e$

கல்வித்தரமானது அதிகரிக்கும் போது வேலைவாய்ப்பினை வழங்கும் தன்மையானது அதிகமாகக் காணப்படும் அதேவேளை வயதானது அதிகரிக்க வேலையினை பெற்றுக் கொள்ளும் தன்மை குறைவாக காணப்படுகிறது என்ற நிலையினை அவதானிக்க முடிகின்றது.

**முடிவுரை**

எடுத்துக் கொள்ளப்பட்ட கருதுகோள்களின் படி கல்வித்தரமானது அதிகரிக்கும் போது வேலைவாய்ப்பினை வழங்கும் தன்மையானது அதிகமாகக் காணப்படும் அதேவேளை வயதானது அதிகரிக்க அதிகரிக்க வேலையினை பெற்றுக் கொள்ளும் தன்மையானது குறைவாகக் காணப்படுகிறது இவ்வகையில் ஆய்வுப்பிரதேசத்தில் கல்வித்தரத்திற்கும் வேலைவாய்ப்பிற்கும் இடையில் 52 சதவீதமான நேரான இணைபும் வயதிற்கும் வேலைவாய்ப்பிற்கும் இடையில் 41 சதவிதமான எதிரான தொடர்பும் காணப்படுகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1. ரோசவின்ட் மைக்கல் (2001) உலக வரலாற்றில் பெண்கள், நியூசெஞ்சரி புக்ஹவுஸ் வெளியீடு, அப்புத்தூர், சென்னை.
2. புள்ளி விபர அறிக்கை (2013) கிளிநெச்சி மாவட்டஅபிவிருத்தி நிலையம்
3. புள்ளிவிபர அறிக்கை (2013) திட்டமிடல் பகுதி, மாவட்டச் செயலகம் கிளிநெச்சி
4. புள்ளிவிபர அறிக்கை (2015) திட்டமிடல் பகுதி, கரச்சி பிரதேச செயலகம்
5. கிராமசேவகர் அறிக்கைகள் (2012 - 2015) வட்டக்கச்சி கிராமம்
6. Department of census and statistics: census of population (2011) Labour force and Socio, Economic Survey, Sri Lanka.
7. The council for education (2012) Research Educational Research. Vol. I. No .1 Quarterly Research Journal Maharagama, November (magazine)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிப்பிற்கான மாற்று அணுகுமுறைகள் : கலையரசு சொர்ணலிங்கத்தின் அரங்க நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

க. ரதிதரன்

**ஆய்வுச்சுருக்கம்**

சொர்ணலிங்கத்தின் பலவேறு அரங்க நுட்பங்களில் நடிப்பிற்கான முறைமைகளை விளங்கிக்கொண்டு ஆராய்வதன்மூலம் ஈழத்தரங்கில் ஏற்பட்ட புதிய மாற்றங்கள், உள்வாங்குதல்களை அரங்க கற்கை நெறிக்கும் பயிற்சிக்கான பிரயோகங்களிற்கும் எவ்வகையில் பயன்படுத்த முடியும் என்பதை கருத்தில் கொள்வதோடு அம்முறைமைகள் நவீன அரங்கக் கோட்பாடுகளோடு எவ்வகையில் தொடர்புற்றிருக்கிறது என்பதும் பரிசீலிக்கப்படுகிறது. விதேசியப்பண்பாடும் சுதேசியப்பண்பாடும் இணைந்துருவாகும் அரங்கமுறைமையில் பண்பாட்டுக்காலநிலைக்கேற்ற வெளிப்பாடு அமைந்த முறை உற்றுநோக்கப்படுகிறது.குறிப்பாக நடிப்பின் குரல் சார்ந்த உடல்மொழிசார்ந்த முறைமைகள், உணர் திறன்கள் மற்றும் உணர்ச்சி வெளிப்படுகைகள், பாத்திரப்பண்புருவாக்கங்கள், ஒழுங்கும் கடமையும், பார்ப்போருடனான ஆற்றுவோரின் ஊடாட்டம், ஆற்றுகைப்பயிற்சியின் தனித்துவம், கலைஞரின் நீண்ட கால திறன் வளர்ச்சிப்பின்புலத்தை குறுங்கால கற்றல் செயற்பாட்டிற்கு உபயோகிப்பதற்கான ஆய்வின் முன்வைப்புக்கள் என்பன இவற்றுள் அடங்கும். இவ்வாய்வு நிகழ்கால சவால்களை கடந்த கால அனுபவங்கள் மூலம் தீர்ப்பதை முன்மாதிரியாகக்கொள்கிறது.

**திறவுச் சொற்கள்:** நடிகன், பயிற்சி, பாத்திரமயமாக்கல், அரங்கத்தொடர்பாடல், உணர்ச்சி வெளிப்பாடு.

**அறிமுகம்**

இலங்கைத்தமிழ் அரங்க நடிப்பிற்கான அரங்க நுட்பங்களை ஆய்விற்குட்படுத்தும்போது நடிகர்களின் தனிப்பட்ட நடிப்புக்கலை வெளிப்பாடுகள் பற்றி புலனுசாவுதல் அவசியமாகிறது. அந்த வகையில் சொர்ணலிங்கத்தின நடிப்பு வெளிப்பாட்டு முறைகள் ஆய்வுப்பரப்பில் முக்கியத்துவம் வாய்ந்ததோடு அவரது நடிப்பிற்கான பயிற்சியும் கற்றலும் எவ்வாறிருந்ததென பின்நோக்கித்தேடப்படல் வேண்டும். அப்பரப்பின் பின்நோக்கிய தேடலில் அரங்க வரலாறு முக்கியத்துவம் பெறுகிறது. ஆனால் இலங்கைத்தமிழ் அரங்க வரலாறோ முழுமைப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளது. தமிழ் அரங்க வரலாற்றை விபரமாக ஆய்வு செய்வதற்கான காலம் வந்துள்ளது (Shanmugalingam 2012: 63). ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகள் மற்றும் பதிவுகள் அடிப்படையில் பெறப்படும் தகவல்கள், மேற்கத்தைய ஆட்சிக்கு பிற்பட்டவைகளே ஓரளவு ஆதாரங்களோடு இருப்பதையும் அதற்கு முற்பட்டவைகளோ பெரும்பாலும் ஊகங்கள் சார்ந்தவைகளாக இருப்பதையும் அவதானிக்கலாம். குறிப்பாக சடங்குகள், கூத்துகள் பற்றியவை அதன் இருப்பையும் தொடர்ச்சியையும் வைத்துக்கொண்டு பின்நோக்கி அனுமானம் செய்யப்பட்டவையாகக்காணப்படுகின்றன. குறிப்பாக நாட்டுக்கூத்து எக்காலந்தொடக்கம் ஆடப்படுகிறது என்பதற்கு போதிய சான்றுகள் இல்லை என சொக்கலிங்கம் குறிப்பிடுகிறார் (சொக்கலிங்கம் 1968: 24). ஆதார அடிப்படையில் 16ம் நூற்றாண்டின் முற்பகுதியில் றோமன் கத்தோலிக்க மதம் அறிமுகமாகி அக்காலத்தில் நிலவிய நாட்டுக்கூத்துக்களை அம்மதப்பிரச்சாரத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தினர் (Prerera 1971: 82). ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1700 ஆம் ஆண்டளவில், இந்தியாவில் மகிழ் வளிப்பை ஊடகமாகக்கொண்ட அரங்கு அறிமுகமாகியது (Chandradasan 2010: 47). இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வரலாற்றுத்தொடர்பு இராமாயண இலக்கியத்தில் காணப்படுவது போல் வெவ்வேறு காலங்களில் வேறுபட்ட வகைகளில் அமைந்திருந்தது. தமிழ்நாட்டு கூத்திற்கும் இலங்கைத் தமிழ் கூத்திற்குமுள்ள தொன்மை தொடக்கமான தொடர்புகள் பற்றி ஆழமான ஆய்வுகள் இன்னமும் செய்யப்படவேண்டியுள்ளது. மேற்குலகின் செல்வாக்கோடு உருவான இந்திய அரங்கு குறிப்பாக தென்னிந்திய அரங்கு இலைங்கையிலும் புதிய மாற்றங்களோடு தோற்றம்பெற்றது. (பார்சி அரங்கு -Parsi theatre- என்றும் இது அழைக்கப்பட்டது.). மேற்கத்தைய செல்வாக்கிற்குட்பட்ட சனரஞ்சகமான நாடக வடிவம் தோற்றம் பெற்றது (சுந்தரம்பிள்ளை 1990: சிவத்தம்பி முன்னுரை xi). உரையாடல்களை முதன்மைப்படுத்திய அரங்கு தமிழகத்தில் பம்மல் சம்பந்த முதலியாரோடு அறிமுகமாகி அது இலங்கைக்கு வந்து சேர்ந்து பரவியது (சொக்கலிங்கம் 1977: 13, 15). இலங்கைத்தமிழ் அரங்கில் அந்த உரையாடல் அரங்கின் முக்கியமானவராக கலையரசு சொர்ணலிங்கம் (1889-1982) திகழ்ந்தார். அவர் நவீன நாடகத்தின் முன்னோடியாகக்கருதப்பட்டார் (மௌனகுரு 1985: 55). அவரைப்பற்றிய ஆய்வில் அவருக்கு முன்னோடியான தமிழ் நாட்டின் சம்பந்த முதலியாரின் (1873-1964?) ஆற்றுகை நுட்பங்களும், சம்பந்த முதலியாருக்கு முன்னோடியாகவிருந்த அரங்க அனுபவங்களும் கருத்திற்கொள்ளப்படும்.

## முறையியலும் ஆய்வின் பிரச்சினைகளும்

அடிப்படைத் தகவல் மூலமாக கலையரசு சொர்ணலிங்கத்தால் எழுதப்பட்ட "ஈழத்தில் நாடகமும் நானும்" என்ற நூலிலும்[1] மற்றும் தொடர்புடைய நூல்களில் இருந்தும், சொர்ணலிங்கத்தோடு இணைந்து நடித்த கலைஞர்கள் மற்றும் அவரது நாடகங்களை பார்த்தோரது அபிப்பிராயங்கள் என்பன செவ்வி அடிப்படையில் பெறப்பட்டு சமகால நடிப்பு மற்றும் பயிற்சி முறைகளுடன் ஒப்பிட்டு பண்புசார் விபரிப்பு ஆய்வு அணுகுமுறை மூலம் (Qualitative descriptive research approach) ஆராயப்படுகிறது. அரங்கமுறையியலின் ஒரு உத்தியாக 'ஆய்வாக செயன்முறை' (Practice as research) என்பதின் அடிப்படையில் ஆய்வாளனின் அனுபவங்களும் தகவல் பெறும் மூலகமாக உட்படுத்தப்படுகிறது. சொர்ணலிங்கம் எவ்வகையான நடிப்பு நுட்பங்களை கையாண்டார்? அவற்றிற்கான அனுபவப் பின்புலம் எவ்வகையில் அமைந்திருந்தது? அவர் நடிப்பு பயிற்சி மையம் தேவையில்லை என்று குறிப்பிடுவதன் பின்புலம் பயிற்சியை நிராகரிக்கிறதா? வடிவங்கள் நுட்பங்கள் சமகால பயில்விற்கு எவ்வகை பொருத்தப்பாடுகளுடன் காணப்படுகின்றன? போன்ற கேள்விகள் ஆய்விற்கான தேடலிற்கு வழிவிடுகின்றன. நடிப்பு நுட்பங்கள் அதற்கான கற்கைச் செயற்பாடுகள் கண்டறியப்படுதலும், அரங்கக்கல்வியில் பயிற்சி முறைகளை மேம்படுத்தவும், அரங்காற்றுகை நடிப்பை வளர்க்கவும் வழிகோலுதலே ஆய்வின் நோக்கங்களாக கருத்தில் கொள்ளப்படுகின்றன.

## நடிப்பிற்கான சொர்ணலிங்கத்தின் நுட்பங்கள்

ஒரு நடிகன் எவ்வாறு உருவாகிறான் அல்லது உருவாக்கப்படுகிறான் என்பதற்கு சொர்ணலிங்கத்தின் அனுபவங்களை பரிசீலிப்பது மற்றும் கோட்பாட்டுமயப்படுத்துவது (Theorization) என்பவை மிக முக்கியமானவைகளாகும். பல்வகைத்திறமைகளை நடிப்பில் கொண்டிருக்கும் அரங்கவியலாளனிடமிருந்து செயன்முறைக்கு (Practice) உகந்த அனுபவங்களைப் பெறுவது எதிர்கால அரங்க நடிப்பு முறைமையை வளப்படுத்த உதவும். குழந்தை ம. சண்முகலிங்கம் கலையரசின் நடிப்பைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் போது. "முகத்தின் ஒவ்வொரு அசைவும் நடிக்கும். ஒரு நடனகாரன் போல உடனே முகத்தை எந்த பாத்திரத்திற்கும் மாற்றிப்பிடிப்பார்"[2] என்றார். நாடகத்தில் ஒரு நடிகன் பாத்திரமாக மாறும் நடைமுறையில் நிலை (Posture) நடை – (Walk) பார்வை (Look: facial Expression) பாவனை (Imitation) அங்கஅசைவு (Gesture) (சொர்ணலிங்கம் 1968: 187) போன்றவற்றின் பயில்வை வலியுறுத்துகிறார். மேற்படி ஒவ்வொன்றும் கருத்துச்சொல்ல வேண்டும் என குறிப்பிடுவது பாத்திரஉடல்மொழியைக்கவனத்தில் கொண்டேயாகும். இதே விடயங்கள் ஸ்ரனிஸ்லவஸ்கியும் தனது நூலான "ஒரு நடிகன் தயாராகிறான்" (An Actor Prepares) என்பதில் நடை, அசைவு, இருத்தல், படுத்தல், பார்த்தல், கிரகித்தல், கேட்டல் என்பன வாழ்விலிருந்த போதும் பார்வையாளனுக்கு முன்னிலைப்படுத்தும்போது பயிலப்பட வேண்டியவைகளாகின்றன (Stanislavski 1936: 73). நடிப்பு என்பது செய்கையாகும் அது பௌதீக செய்கையிலும் பெரும்பாலும் தங்கியிருக்கும் (Grandstaff 1991: 12). சமகால அரங்கப்போக்கில் உடல்சார் வெளிப்பாட்டு அம்சம் முதன்மை பெற்ற போதும் சொர்ணலிங்கம் காலத்து அரங்கு உரையாடல் முறைமையை மையப்படுத்தியபோதும் உடல்மொழி வெளிப்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுத்ததை அவதானிக்கலாம்.

பாத்திரத்தை ஏற்கும்போது ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு உருமாறும் செயற்பாட்டை சுயத்திலிருந்து ஆரம்பிப்பதை வலியுறுத்துவார். நவீன கோட்பாட்டில் உண்மையான நானிலிருந்து (Real "I") நாடகத்திற்கான நானிற்கு (Dramatic "I") உருமாறுதல் குறிப்பிடப்படுகிறது (Benedetti 1998: 04). தனது சுயத்திலிருந்து பாத்திரத்தை உருவாக்காது மற்றவரைப்பார்த்து கிளிப்பிள்ளை போல (Parrot – Fashion) பாவனை பண்ணுதலை ஸ்ரனிஸ்லவஸ்கி நிராகரிக்கிறார் (Stanislavski 2008: 612) தனது காலத்து நடிகர்கள் மீதான குறைபாடாக அவர்கள் தங்கள் மனம் போன போக்கிலும் சினிமா நடிகரை மனதில் வைத்தும் நடியாது நடிப்பில் பாத்திரங்களிற்கு ஏற்பவும், நன்றாக உணர்ந்தும் நடிக்க வேண்டும் என்கிறார் (சொர்ணலிங்கம் 1968 : 51). பாத்திரங்களை சுயத்தில் இருந்து இயல்போடு படைக்கப்படல் வேண்டும் என்பது இன்றும் எதிர்கொள்ளப்படும் பெரிய சவாலாகும்.

**பாத்திரப் பண்புருவாக்கம்** (Character Embodiment)

கலையரசு சொர்ணலிங்கம் பாத்திரங்களை வடிவமைத்த முறைமை ஆழமான நோக்கு வாய்ந்தது. யதார்த்தவாத அரங்கிலே பல பிரயோகங்கள் பாத்திர உருவாக்க முறைமைக்கு கையாளப்பட்டதற்கு ஈடாக இவரால் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக தத்தன், கூனி, செம்படவன், விசுவாமித்திரர் போன்றவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும். நடிகனின் சுயத்திலிருந்து (Self) நாடக நானிற்கு (Dramatic "I") அதாவது பாத்திரத்தை உருவாக்கும் நடைமுறைக்கு போகும்போது சுயானுபவமும் மற்ற மனிதர்களது தோற்றம், நடத்தை, குரல்வாகு என்பனவும் அவதானிக்கப்படும். ஒரு மனித பாத்திரத்தை உருவாக்க பல மனிதர்களது (சிறியவர், பெரியவர், வயோதிபர் என எல்லாத்தரப்பினரும்) பண்புகள், பொலிவுகள், போக்குகள் உள்வாங்கப்பட்டு அப்பாத்திரத்தின் பண்பு பொதுமைப்படுத்தப்படும். அந்தவகையில் ஒரு பாத்திரத்தின் குரல் சார்ந்த பௌதீகம் சார்ந்த, உளவியல் சார்ந்த பண்புகள் எவ்வாறு முறைப்படி அவதானிக்கப்பட்டு உருவாக்கப்பட்டன என்பது கீழ்வரும் விளக்கங்களில் தெளிவுபடுத்தப்படும்.

"வேதாள உலகம்" எனும் நாடகத்தில் வரும் தத்தன் எனும் பாத்திரத்தின் பேச்சு முறைமை தென்னிந்திய நாட்டுப்புறப்பேச்சு என்பதால் சொர்ணலிங்கத்திற்கு அது கடினமாக இருக்கவே ஒரு பால்க்காரனின் மகன் அவ்வாறு பேசுவதை அறிந்து அவனோடு பலமுறை பேசிப்பழகி அந்த பேச்சு முறையைப் பெற்றுக்கொண்டார் (சொர்ணலிங்கம் 1968: 60, 61), அதே போல பாத்திரத்தின் தோற்றத்திற்கும் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுணுக்கங்களைக் கையாண்டார். ஐந்து அடி பதினொரு அங்குலம் உயரம் கொண்ட மெல்லிய தோற்றமுடையவரான இவர் தொப்பைப் பாத்திரமான தத்தனை சிருக்ஷ்டிக்க உடம்பானவர்களின் நிலை, திரும்பல் போன்றவற்றை அவதானித்து, காலை அகட்டி நிற்கும் தன்மையையும் கண்டறிந்தார். அதே போல பருத்த உடம்பிற்கு பருத்த தொனி இருக்கும் என்பதனையும் கண்டறிந்தார். ஒரு பழமொழியையும் குறிப்பிடுகிறார். "Heavy bodies stand on broad bottoms" (பாரமான பொருட்கள் அகன்ற அடிப்பகுதிமீது நிறுத்தப்பட வேண்டும்). ஓர் உடல்பருத்த நாடக பாத்திரத்தின் புகைப்படத்தையும் சேக்ஸ்பியர் காலத்து உடுப்பையும் உள்வாங்கி பருத்த தேகத்தை உடையால் உருவாக்கினார் (சொர்ணலிங்கம் *1968 : 60,61,62*).

முற்காலங்களில் கூனியை அற்ப பாத்திரமாக காட்டுவர் உதாரணமாக ஒருவர் தலையை சேலையால் மூடி வந்து அப்பாத்திரத்தை செய்துவிட்டுப் போனதை சொர்ணலிங்கம் ஒரு தோற்றப்பொலிவுமிக்க தன்னிலக்குமிக்க பாத்திரமாக உருவாக்க விரும்பினார். அவரது தேடலுக்கு அமைய பல்வேறு வயோதிபப்பெண்களை அவதானித்தார். முதலில் மூக்கால் பேசி, புறுபுறுத்து வெற்றிலை விற்கும் வயோதிபப் பெண்ணை ஒரு மாதம் அங்கு வெற்றிலை வாங்கி அப்பெண்ணின் பேச்சு, முகபாவங்கள் போன்றவற்றை அவதானித்து அதன் மாதிரிக்கு (Model) ஏற்ப ஒத்திகை செய்தார். பின்னர் ஒரு விபத்தாக தன் வீட்டருகில் யாரோ ஒரு வயோதிபப்பெண் பேசுங்குரல் கேட்டு அங்கு போய் அப்பெண்ணிடம் கதைகொடுத்து அந்தப் பேச்சின் தன்மைகளை உள்வாங்கி ஒத்திகையில் செய்து பார்த்தார். இவ்வாறு இவர் ஒவ்வொரு நாளும் அவதானிப்பதை உடனேயே அன்று அதை மீள செய்து பார்த்து விடுவார். அசாதாரண வயோதிபப் பெண்களை எங்கே கண்டாலும் அவர்களின் வாயசைவு, கையெடுப்பு, முதலியவற்றை அவதானித்து கற்பனை செய்து அவற்றை தன்னிலைப்படுத்தி உருவம்கொடுத்தார். தனது வீட்டிற்கு வரும் பேத்தியின் சிரிப்பையே கூனியின் சிரிப்பாக வடிவமைத்தார். எல்லாமாக இருபத்தைந்து, முப்பது வயோதிபப் பெண்களை அவதானித்து சேர்த்த படைப்புத்தான் கூனிப் பாத்திரமாகும். முகச்சுருக்கு விழுந்த தோற்றமுடைய படங்களைப் பார்த்து சுருக்கு விழுவதை முகத்தில் மட்டுமன்றி கைகள், புஜங்கள் போன்றவற்றிலும் சுருக்கு விழுவது போல் ஆக்கினார். தனது படிக்கும் காலத்து அனுபவம் ஒன்றால் ஒட்டை விழுந்த பல்லையும் வடிவமைத்தார் (சொர்ணலிங்கம் *1968:79,80,81*). இங்கு 'கற்பனை செய்து' என்பது பாத்திரவுருவாக்கத்தில் மிக முக்கியமானதாகும். அதாவது காண்பவற்றை கற்பனை செய்து வளர்த்து தன்னிலைப்படுத்தல் மிக முக்கியமான அம்சமாகும்.

செம்படவன் எனும் பாத்திரத்தை கடற் கரையில் வாழ்பவர்களின் தோற்றத்தோடு பொருந்துமாறு உருவாக்கினார். அத்தோடு மேலதிகமாக பாத்திரத்தின் முழங்கையில் சிரங்குப் புண்போலவும் செய்தது மாத்திரமன்றி அடிக்கடி அதை சொறிந்தும்கொள்வாராம், சிலர் அதை உண்மையான புண் என்றே நம்பியும்விட்டனராம் (சொர்ணலிங்கம் *1968: 111,112*). விஸ்வாமித்திரர் பாத்திரத்தை நடிப்பதற்கு அவரது உடம்பு ஆரம்பகாலத்தில் மெல்லியது என்பதால் ஓவியத்தில் கையாளும் வெண்மை, கருமையை தேகத்தில் ஏற்படுத்தி தூரத்தே சற்றுப்பெரிதாகத் தெரியும்படி ஆக்கினார். அதே போல நாடகம் நடிப்பதற்கு முதன்நாள் 'தண்டா எடுத்து' (பாரம் தூக்கும் உடற்பயிற்சி) உடம்பு அடுத்த நாள் நிமிர்ந்து நிற்க உடலில் ஒரு நோ விறைப்பை உண்டு பண்ணினார். (சொர்ணலிங்கம் *1968: 121*). "என்னால் நடிக்கப்பட்ட நாற்பத்தைந்து, ஐம்பது பாத்திரங்களுள்நான் பெருமைப்படுவது விசுவாமித்திரன் பாத்திரமே. இதுவே மிகக் கடினமானதும்" (சொர்ணலிங்கம் *1968 : 120*). D.S சேனநாயக்கா பாத்திரம் ஒரு பொது நிகழ்விற்காக நிகழ்த்தப்பட்டது. ஒரு நிகழ்வில் இவர் சேனநாயக்காவின் நிற்பு, அசைவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகநிலை போன்றவற்றைக் கவனித்து அது போலவே பாவனைபண்ணி செய்தாராம். (சொர்ணலிங்கம் 1968 : 177). வழமையில் ஒரு பாத்திரத்தை உருவாக்க பலரிடமுள்ள பண்புகளை இணைத்துக்கொள்வார் ஆயினும் இப்பாத்திர உருவாக்கம் ஒருவரை அப்படியே முன்னிலைப்படுத்துவதாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பாத்திரங்களின் தோற்றங்களை ஒரு ஓவியம் போல ஆக்கியிருக்கிறார். புகைப்பட அனுபவமும், ஒரளவு சித்திரக்கலை ஞானமும் இவருக்கு உதவியிருக்கிறது. விஸ்வாமித்திரர் பாத்திரத்தை ஆக்குவதில் ஒரு ஒவிய நுட்பத்தைக் கையாண்டுள்ளார். ஓவியத்திலும் புகைப்படத்திலும் ஒளியாலும் நிழலாலும் தோன்றும் பாத்திர தோற்றப்பொலிவு வேறுபாட்டை அரங்க வேட உடை ஒப்பனையில் கையாண்டார். அவரது கருத்துப்படி ஆராட்சியும் அனுபவமும் இதற்கு வேண்டும் என்று வலியுறுத்துகிறார். எனினும் உண்மையில் அவருக்கு அதனோடு கூடவே அவதானமும், ஆக்கத்திறனும் (Creativity), கற்பனையும் கூடவே அதிகம் இருந்திருக்கிறது. அவைகள் கலை ஈடுபாட்டிற்கு அத்தியாவசியமானவைகளாகும். பாத்திரத்திற்காக ஒரு நடிகன் உடலையும் மனத்தையும் தயார்ப்படுத்தினாலும் இரண்டாம்தர மூலக்கூறான ஒப்பனை எவ்வாறு பாத்திரத்தினுள் உள்நுழைய உதவும் என்பதனை "...ஒப்பனை செய்யும் போதே ஒரு நடிகன் தனது பாத்திரத்தின் குணங்களை உணர்ந்து அதற்கேற்றவாறு செய்வான். அதனால் அவன் அந்தப் பாத்திரமாகவே மாறிவிடுவான் என்று சொல்லலாம்..." என்று குறிப்பிடுகிறார்.

அடுத்து, சம்பந்த முதலியார் தனது பாத்திர உருவாக்கத்தில் எவ்வகையான நுட்பங்களைக்கையாண்டார் என்று பார்ப்பது சொர்ணலிங்கத்தின் பாத்திரவுருவாக்க முறைமையை விளங்கிக்கொள்ள உதவிபுரியும். சம்பந்த முதலியார் முகம் மெலிந்த தோற்றமுள்ள பாத்திரமாக நடிப்பதற்காக ஒரு மாத காலம் ஒரு வேளை உணவுடன் இருந்து, மெலிந்தபின்னர் அப்பாத்திரமேற்று நடித்தார் (சம்பந்த முதலியார் 1998டி: 116). தூக்கத்தில் நடக்கும் வியாதி கொண்ட பெண் பாத்திரமாக நடிப்பவருக்கு அப்பாத்திரத்தின் பண்புகள் பற்றிக் கூறுவதற்காக பல ஆங்கில வைத்திய நூல்களில் இந்நோய் பற்றிய விடயங்களையும், அறிகுறிகளையும் வாசித்து அறிந்து பின்னர் அப்பாத்திரத்தை ஏற்று நடிப்பவருக்கு அதைப் பற்றி தெளிவுபடுத்தி அப்பாத்திரம் யதார்த்தபூர்வமாக உண்மைத் தன்மையோடு அமைவதற்கு வழிவகை செய்தார் (சம்பந்த முதலியார் 1998டி: 276). சுந்திராத்தித்தயன் என்கின்றபாத்திரம்உளநோயால்பாதிக்கப்பட்டு இருந்ததால் சம்பந்த முதலியார் இந்த பாத்திரத்தை நடிப்பதற்காக சென்னையிலுள்ள உளநோய் வைத்திய சாலைக்குச் சென்று உளநோயால் பாதிக்கப்பட்டவர்களது நடத்தைக் கோலங்களை அவதானித்ததோடு தெருவில் அநாதரவாகத் திரியும் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களை பின்தொடர்ந்து அவதானித்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் செலவழித்து தனது பாத்திரத்தை உருவாக்கினார் (சம்பந்த முதலியார் 1998டி: 222).

#### பாத்திர தேர்விற்கான நுண்ணறிவு

பாத்திர தேர்வு (Audition) பல்வேறு வழிமுறைகளில் செய்யப்படுகிறது. தொழில்முறை அரங்குகளில் (Professional theatre) அது கடுமையான தேர்வாகவும் பயில்முறை அரங்குகளில் (Ameteur theatre) சற்று தளர்வாகவும் கைக்கொள்ளப்படுகிறது. நிறுவனம் சார்ந்த தொழில்முறை அரங்குகளில் தேர்வில் நடிகனிடம் புத்திக்கூர்மை, உணர்ச்சி, நேர்மை, வேறுபடும் தன்மை, எளிமை, ஆய்வுமனப்பாங்கு, நகைச்சுவை, தைரியம், சக்தி, திறன், கூட்டுறவு, நெகிழ்ச்சி (Merlin 2010: 81) என்பனவும், அதேபோல திறன் அறியும் நோக்கில் சிறு நிகழ்த்திப்பார்த்தலின்போது, செவ்வியல் நாடக பகுதியும் நவீன நாடகப்பகுதியும், நகைச்சுவைபகுதியும் சோகபகுதியும்நிகழ்த்திப்பார்க்கப்படும்(Griffiths 1998: 56). "சிறிய புதிதளித்தலாலேயே நடிகரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனையை பரீட்சிக்கவும் அவரது உடல்சார் உணர்ச்சிசார் வரையறைகள் வெளிப்படவுமம் முடியும்" (Cohen and Harrop 1984: 225). குழந்தை ம. சண்முகலிங்கம் தனது தேர்வு முறையில் எழுத்துரு வாசிப்பைக்கொண்டும் நடிகரின் தனிப்பட்ட திறன்களை தெரிந்து வைத்துக்கொண்ட முறையிலும் பாத்திரத்தை தெரிவதோடு எதிர்மாறாக நடிகர்களிடமே தமக்கு பொருத்தமான பாத்திரத்தை தேர்வு செய்யும்படிவிட்டும் பல வழிகளில் மேற்கொள்வார்[3]. சிதம்பரநாதன் நடிகரின் தனிப்பட்ட திறன்களைத் தெரிந்து வைத்திருப்பினும் முழுமையாக புதிதளித்தல் முறைமையையே அதிகம் கையாள்வார[4]. நடைமுறையில் சில வேளைகளில் தேர்வு முறைகளில் சிக்கல்களும் ஏற்படுவதுண்டு. சண்முகலிங்கத்தின் கருத்துப்படி தேர்வில் சிறப்பாக வெளிப்படுத்தும் நடிகர் விதிவிலக்காக ஒத்திகை மற்றும் ஆற்றுகையில் துலங்காது போகும் சந்தர்ப்பமும் உண்டு என்று குறிப்படுகிறார்[5]. எனவே ஒட்டுமொத்தமாக தேர்வை செய்வதற்கு மிகுந்த நுண்ணறிவு தேவைப்படுகிறது. அந்தவகையில் சொர்ணலிங்கத்தின் அணுகுமுறை அக்காலத்திலேயே முதிர்ச்சியுடன் இருந்ததை கண்டுகொள்ளலாம். அதாவது அவர் தேர்விற்கான அறிவை ஒரு 'ஞானம்' என்கிறார் (சொர்ணலிங்கம் *1968: 38*).

> "எவரொருவருக்கு எந்தெந்தப் பாத்திரங்கள் பொருந்துமென்று அறிவதற்கு ஓர் இயற்கையான நுண்ணறிவு வேண்டும். இந்த அறிவு எல்லோரிடத்திலுமிருக்கலாம் என்று சொல்ல முடியாது. புத்தகத்திலிருந்தோ அல்லது மற்றவர்களின் போதனையில் இருந்தோ கற்றுக்கொள்ளக் கூடியதுமல்ல, அவதானத்தில் இருந்தே அந்த அறிவு பிறக்க வேண்டும். நாடகத்தையோ அல்லது அதன் பாத்திரங்களது குணங்களையோ நன்றாக படித்து உணராதவர்களாலும், நடிகரின் தன்மைகளை அவதானியாதவர்களாலும், நடிகரைத் தேர்ந்தெடுக்க முடியாது. அத்தோடு பாத்திரங்களுக்கான நடிகரைத் தெரியும் போது குறித்த நடிகரில் அந்த பாத்திரத்திற்கான தோற்றம், நிலை, நடை, பேச்சு, அபிநயம், குணத்தை சித்தரிக்கும் வல்லமை என்பனவற்றை அவதானிக்க வேண்டும்" (சொர்ணலிங்கம் *1968: 38*).

பொதுவாக சொர்ணலிங்கத்தின் பாத்திர தெரிவில் ஏற்கனவே தான் காணும் ஆட்களையெல்லாம் அவர்களது தோற்றம், சுபாவம், பேச்சு மூலம் அவர்கள் என்ன பாத்திரங்களுக்கு பொருந்துவார்கள் என கவனித்து வைத்துக்கொள்வார். குழந்தை ம. சண்முகலிங்கம் திருநெல்வேலியில் அமைந்துள்ள YMCA யில் மேடையமைத் துக்கொண்டு நிற்கும் போது விளையாட்டாக பேசிய வசனத்தை மனதில் வாங்கி எதுவும் காட்டாது இருந்துவிட்டு பல நாட்களின் பின்னர் "தேரோட்டி மகன்" என்கிற நாடகத்தில் அர்ச்சுனன் பாத்திரம் ஏற்று நடிப்பதற்கு அவரை அழைத்திருந்தார்[6]. அதே போல ஒரு பெண் பாத்திரம் நடிப்பதற்கு பாலசிங்கம் என்பவரை முன்னர் கண்டு நினைத்தபடியால் அவரைத் தேடிச் சென்று பெண்ணாக நடிக்க இணங்குவித்தார். (சொர்ணலிங்கம் *1968:86*) யாரையும் திருப்திப்படுத்துவதற்காக பாத்திரம் கொடுப்பதையோ அலல்து கொடுத்து பொருந்தாவிடின் மாற்றுவதையோ அவர் விரும்பவில்லை. (சொர்ணலிங்கம் *1968: 53*) சில விடயங்களை புதிதளித்தல் போல உடனே அந்த இடங்களில் கண்டுபிடித்துச்செய்யும் ஒரு வழக்கு இவரிடம் காணமுடிகிறது. உதாரணமாக *101* வியாதிக்கிழவனை நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றி அமைத்து செய்திருக்கிறார். (சொர்ணலிங்கம் *1968:148*) அதே போல பொது நிகழ்வில் உடனே ஒரு பாத்திரம் செய்யவேண்டி இருந்ததால் செங்கல்தூள், கரி, சுண்ணாம்பு இவற்றை பூசி சனக்கூட்டத்துள் போர்வையால் போர்த்தி சுருட்டும் பற்றிக்கொண்டு நிற்க கண்காணிப்பாளர் அவரை கலைக்க வெளிக்கிட்டனராம் பாத்திரத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவில் முற்கூட்டிய அவதானிப்பும் பொருத்தப்பாட்டையும் கருத்தில் கொண்டதோடு முகமென்பார்த்தலை அறவே நிராகரித்தார். அத்தோடு பாத்திரங்களை வழங்கி, நடித்துப்பார்த்துவிட்டு மாற்றும் முறையை விரும்பாதிருந்தார். அதற்கு காரணம் அம்முறை மனக்கசப்பை ஏற்படுத்தும் என்கிறார் (சொர்ணலிங்கம் *1968:38*).

**குரல் வெளிப்பாட்டுத்திறனும் குறைபாடுகளும்**

இத்தாலிய பெரும் நடிகன் சல்வினியிடம் (Tommaso Salvini 1829-1915) "நீங்கள் ஒரு நடிகனாய் இருப்பதற்கு உங்களிற்கு என்ன தேவைப்பட்டது?" என்று கேட்ட போது அவரது பதில் "குரல், குரல்; இன்னும் அதிக குரல்" எனப்பதிலளித்தார் என ஸ்ரனிஸ்லவஸ்கி தனது நூலில் (An Actor's Work) குறிப்பிடுகிறார் (Stanislavski 2008: 382). இலங்கைத்தமிழ் சமகால அரங்கில் இளைய தலைமுறையினர் எதிர்கொள்ளும் பெரிய பிரச்சனை குரலாகும். வாய்பேசத் தொடங்கியதும் முதற்காட்சியின் உயர்ச்சி மெதுவாய் கீழிறங்கத் தொடங்கிவிடும். நடிகர்கள் சொர்ணலிங்கத்தின் குரல்சார்ந்த விடயங்களில் கற்றுக்கொள்ள வேண்டியதில் அவர் வலியுறுத்துவது சங்கீத அறிவையாகும். நடிகராக வரவிரும்புவபர் அல்லது அரங்கப்பயில்வோர் அடிப்படைச் சங்கீதம் கற்பது குரலை செழுமைப்படுத்தும் என்பது சொர்ணலிங்கத்தின் முன்வைப்பாகிறது. அரங்கப்பாடவிதானத்தில் நடிப்புப்பகுதியின் ஒரு அங்கமான குரல்பயிற்சியில் சங்கீதப்பயிற்சியானது குரல் விருத்திக்கு உதவிசெய்யும். இது ஒலிபெருக்கியில்லாது நீண்ட வசனம் பேசி நாடகம் நடிப்பதற்கான சுவாச வடிவமைப்பை அதிகரிக்கும். சொர்ணலிங்கத்தின் குரல் மண்டபத்தில் எவ்வளவு தூரத்தில் பின்னிற்கு இருப்பவருக்கும் அட்சரசுத்தியோடு கேட்கும் அளவிற்கு திறம்பட இருந்ததாக கலையரசு தனது காலத்து இளம் நடிகர்களுக்கு குறிப்பிடுகிறார் "...மண்டபங்களிலும் நாடகங்கள் நடக்கும் போது ஒலிபெருக்கியில்லாமல் நடிக்கப் பின்வாங்குகிறார்கள்" (சொர்ணலிங்கம் *1968: 05*). தனது அனுபவத்தின் படி தன் சிறுவயதில் சாமிநாத முதலியாரின் பாட்டு முக்கால் மைல் தூரம் வரை கேட்டதாக குறிப்பிட்டிருக்கிறார். பதினெட்டு விதமான குரல்களில் பேசக்கற்றுக்கொண்டிருக்கிறார். மாறுபாடான குரலில் பேசினால் அதே மாதிரிக் குரலில்தான் பாடியுமிருக்கிறார் (சொர்ணலிங்கம் *1968: 61*). அவ்வாறு பாடுவதால் குரலில் அதாவது நான்கு கிழவர், மூன்று கிழவிகள், ஒரு கணக்குபிள்ளை என்போரை வெவ்வேறான வயோதிபக் குரல்களில் தனியனாய் பேசிக்காட்டுவது என்பது உண்மையான ஆற்றலை வெளிப்படுத்துகிறது. *(1968 : 192)*. குரல் பயிற்சிகளின்போது வேறுபட்ட குரலில் பேசும் பயிற்சிகள் கவனத்தில் கொள்ளப்பட வேணடும். ஏனெனில் சமகால பயில்வுகளில், பாத்திரவேறுபாடுகளிற்கியைந்த குரல் வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப் படுவதில்லை மாறாக ஒரேமாதிரியான குரலிலேயே (stereotype) பேசப்படுவது ஒரு குறைபாடாகும்.

**உணர்ச்சியும் உணர்திறனும்** (Emotion and sensibility)

சொர்ணலிங்கம் நடிகனின் உணர்வார்ந்த வெளிப்பாடுகள் எதிர்வினைகள் எப்படி அமைந்திருக்க வேண்டும் என்பது பற்றி தனது நூலில் பல இடங்களில் குறிப்பிடுகிறார். நேரடியாக நவீன அரங்கக்கோட்பாடுகளில் கூறப்படுவதுபோலில்லாவிட்டாலும் அதன் சாரம் புலப்படுமாறு விளக்கங்கள் தந்துள்ளார். நுடிகனின் உணர்ச்சி வெளிப்பாட்டுக்கலை பற்றி பல்வேறு விஞ்ஞான ஆய்வுகள் வெளிவந்திருக்கின்றன. "உண்மை வாழ்க்கை உணர்ச்சி வெளிப்பாடும் கலைத்துவமாய் ஆக்கப்பட்ட உணர்ச்சி வெளிப்பாடும் ஒரு உடலியல்சார் தொடர்பை இரண்டுமே வைத்திருக்கின்றன. ஆயினும் இரண்டுமே வேறுபட்டவைகளாகும்." (Zarrilli 1998: 84). இம்மேற்கோளின் தொடர்ச்சியில் வாழ்வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் ஒரு உணர்ச்சி நிலை உடனே மாற்றமுடியாததாகவும் ஆனால் நடிகனால் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு மாறிச்செல்ல முடியும் எனப்படுகிறது. சொர்ணலிங்கத்தின் நடிப்பில் 'மனோகரா' நாடகத்தில் மாலையிடும் காட்சியில் உணர்ச்சிகளை அடிக்கடி பலதாய் மாற்றும் இடமாகையால் சிருங்காரம், சோகம், அனுதாபம், வெறுப்பு, கோபம், வீரம் போன்ற உணர்ச்சிகளை மாற்றி மாற்றி நடித்ததாக குறிப்பிடுகிறார். இவரது நடிப்பில் பண்பாடு சார்ந்து வரும் பரத நடன மூலமான முக வெளிப்பாடு இவரிடம் செல்வாக்கு செலுத்தியிருக்கிறது. உண்மையில் உணர்ச்சி வெளிப்பாட்டின் காட்டி முகமாக இருக்கிறது. செயற்கை பாங்கின்றி உணர்வோட்டம் கலந்தே வெளிப்பாடுகள் இருந்திருக்கின்றன என்பது பல இடங்களில் வரும் உதாரணங்கள் மூலம் அறியமுடிகிறது. ரசம் துலங்க தொனி அமைத்து பேசவேண்டும் என்பதை சம்பந்த முதலியாரிடம் எழுதிக் கேட்டறிந்துகொண்டதாக குறிப்பிடுகிறார் (சொர்ணலிங்கம் *1968: 85*)

நடிகன் ஒரு பாத்திரம் ஏற்க வேண்டுமாயின் முதலில் சமநிலை பெறவேண்டும். அதன்பின் தான் நடிகன் பாத்திரமாக மாறமுடியும் "நடிக்கப்போகும் போது நடிகனின் மனதில் எவ்வித கிலேசமுமிருக்கக் கூடாது. இருக்குமானால் எப்படி நடித்தாலும் திருப்தி ஏற்படாது" (சொர்ணலிங்கம் *1968:102*). நடிப்பில் ஒரு கண நேரம் (Timing) பற்றி குறிப்பிடுகிறார். இதுவும் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். கொடுத்தல் வாங்கலில் (Taking and giving) ஒரு கணம் பிந்தினால் அதன் அர்த்தமும், இயல்பும், உண்மையும் குழம்பிவிடும். அவர் பிரதானமாக வலியுறுத்துவது கணம் பிந்தினால் அதன் உணர்ச்சி கெட்டுப்போகும் என்பதாகும் (சொர்ணலிங்கம் *1968: 55*). இந்த கண நேரம் என்பது தாளத்துடன் தொடர்புபட்டது. நடிகரின் தாளகதி அவரது சுவாசத்துடன் தொடர்புபட்டது. உணர்ச்சிசார்ந்த ஆய்வுகளில் சுவாசகதியும் வாயின் திறபடு மூடுபடு நிலையும் உணர்ச்சி நிலைகளுக்கமைய வேறுபட்டிருக்கும் (Bloch and others 1998: 201,202). அதாவது உணர்ச்சி சுவாச, தாளகதி வேறுபாடுகளையும் அவ்வேறுபாடுகள் கண நேர மாறுபாடுகளோடும் தொடர்புற்றிருக்கும். சரவணமுத்து கைகேகியாகவும் இவர் கூனியாகவும் நடித்த போது இருவரிடையேயும் நல்ல விளக்கம் இருந்ததால் செயலும், எதிர்வினையும் (Action and reaction) சரியாக வெளிப்படுத்துவார்களாம். இவர் எதிர்வினையை By- play என்று குறிப்பிடுகிறார் (சொர்ணலிங்கம் *1968: 81*). இதே விடயத்தை சம்பந்த முதலியாரும் குறிப்பிடுகிறார் (சம்பந்த முதலியார் *1998டி: 309*). ஒருவர் பேசும் போது அது தரும் பொருளையும் உணர்வையும் மற்றவர் முகத்தில் காட்டும் நுட்பம் நடிப்பில் முக்கியத்துவப்படுத்தப்பட்டடிருந்தது. அதாவது தனிப்பட்ட முறைசார் தாளம் மட்டுமன்றி அவை கூட்டாகவும் மேடையில் முன்னிலைப்படுத்தப்படும்.

சோக உணர்ச்சியென்றால், அதைக் கடுமையாக பயின்று அது பார்போருக்கு ஏற்படுமாறு செய்திருக்கிறார் (சொர்ணலிங்கம் *1968: 64*). நாடகங்களில் உணர்ச்சிகளை தீவிரப்படுத்துவதற்கே பாட்டுகள் சேர்க்கப் படுகின்றன என்கிறார். அந்தப் பாட்டும் சங்கீத வித்துவான்களிடம் பாடிப்பழக வேண்டும் என்பதோடு சினிமாவில் வாயாட்டி பாட்டின் ரசத்தை (உணர்ச்சியை) கொண்டு வர முடியாது என்பது அவரது கருத்து நிலையாகக்காணப் பட்டது. (சொர்ணலிங்கம் *1968: 53*).

**கட்டுப்பாடொழுங்கும் அர்ப்பணிப்பும்.**

நடிகரடம் இருக்க வேண்டிய முக்கிய பண்பாக மூலக்கூறாக ஒழுங்கை (discipline) சொர்ணலிங்கம் வலியுறுத்துகிறார். றொபேட் கொகென் (Robert cohen) என்கிற அரங்க நிபுணர் தனது நூலான "அரங்கு: சுருக்கம்" (Theatre: Berief) என்பதில் நடிகனின் சாதனமாக (The Actor's Instrument) இரண்டு விடயங்களைக் குறிப்பிடுகிறார்: நிர்வாக ஒழுங்கு – நாடக ஒத்திகைக்கு ஒப்பனைக்கு நேரத்திற்கு நிற்க வேண்டும். (செர்ணலிங்கம் காலத்தில் மணி அடிக்கப்படும்.) மற்றது கலைத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கு அதாவது நினைத்ததெல்லாம் நடிப்பதல்ல பாத்திரத்திற்கு, நாடகத்திற்கு, நெறியாளரின் வியாக்கியானத்திற்கு ஏற்ப நடித்தலாகும். அதேநேரம் "நடிகனின் செயல் எல்லை" (Actor's orbit) இருக்கிறது. அதற்குள் நெறியாளனோ யாரோ உள்நுழையக்கூடாது. சொர்ணலிங்கத்திடம் இந்த ஒழுங்கு முதன்மை பெறுவதைக் காணமுடியும். இதைப்பற்றி சொர்ணலிங்கத்தின் நூலுக்கு ஆசியுரை வழங்கிய பொ.செல்வரத்தினம் அவர்கள் குறிப்பிடும் போது நடிகனின் ஒழுங்கு மட்டுமல்ல பொறுப்பும், கடமை உணர்வும் வேண்டும் என்பதில் சொர்ணலிங்கம் அக்கறை கொணடிருந்தார் எனறு குறிப்பிடுகிறார்.

ஒரு நாடகம் மேடையேற ஒன்பது நாட்கள் முன்னராக கலையரசின் அண்ணன் இறந்துவிட்டார். நடிப்பதா இல்லையா என்று தனது தந்தைக்கு கடிதம் எழுதிக் கேட்க தந்தை ஆங்கிலத்தில் பதில் கடிதம் எழுதினார். "If you have attended your office after your brother's death, I see no reason why you should not act in this play. The duty is the same in both cases. The only difference is in one place you are paid and in the other you do not receive a payment" ("உன் சகோதரன் மரணமடைந்த பின் நீ உன் அலுவலகத்திற்குப் போயிருப்பாயாயின் இந் நாடகத்தில் ஏன் நடிக்கக்கூடாது? இரு இடங்களிலும் கடமை ஒன்றுதான் வித்தியாசம் என்னவென்றால் ஒர் இடத்தில் நீ சம்பளம் வாங்குகிறாய், ஆனால் மற்றவிடத்தில் இதை பெறவில்லை (சொர்ணலிங்கம் 1968: 50).

நடிகர்களுக்கு தவிர்க்க முடியாத பெரும்நெருக்கடிகள் மேடையேற முன்னர் வருவதுண்டு. மேற்படி சம்பவம் போல சொர்ணலிங்கத்தின் சக நடிகருக்கு தாய் இறந்துவிட்டார் என்ற செய்தி அறிந்தும் சில நிமிடம் அழுதுவிட்டு, அந்நடிகர் மேடையேறி நகைச்சுவைப் பண்பு கொண்ட நாடகத்தை நடித்து முடித்தார். இவ்வாறானதொரு பொறுப்புணர்வு அரங்கில் முக்கியமாகிறது. இதே போன்ற சம்பவம் வந்தால் வேறு துறையில் தவிர்த்துக் கொள்ளலாம். ஆனால் அரங்கில் தவிர்க்க முடியாது. எனவே கட்டுப்பாடும் ஒழுங்கும் அரங்கில் சிறப்பிடம் பெறுகிறது. "நாடக வாழ்க்கை இலேசானதாக இருக்காது. போராட்டம் நிறைந்தது எனினும் எல்லாவற்றையும் தாங்கும் ஓர்மம் இருக்க வேண்டும்" என்கிறார். (சொர்ணலிங்கம் 1968: 41). அவர் குறிப்பிடும் நாடகம் மேடையேறமுன் வருமிடர்கள்: நடிகன் விலகிச் செல்வான், உறவுக்கு மரணம் வரும், நடிகைக்கு கடும் நோய் வரும், குரல் அடைக்கும், நாட்டு, இயற்கைச் சூழல் மாறும், குடும்ப இடையூறு வரும், நாடகதட்டிகள் கூட கழன்று விழும். ஆனால் எல்லாவற்றையும் சமாளித்து எதிர் கொண்டு நாடகத்தை மேடையேற்றுவது கடமையாக கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

**பார்ப்போர் நடிகர் இடைவினை** (Interaction of Spectator and Actor):

ஆற்றுவோருக்கும் பார்வையாளாருக்கும் இடையிலான ஊடாட்டம் அரங்க ஆற்றுகையில் மிகமுக்கியமானதாகும். ஏனெனில நாடகம் இரத்தமும் சதையுமான உயிருள்ள பார்ப்போர் ஆற்றுவோர் தொடர்பாடலைக்கொண்டுள்ளது. குறோட்டவஸகி கூறுகிறார் " ஒரு பார்வையாளனும் இல்லாமல் அரங்கு இருக்க முடியுமா? ஆற்றுகையை நிகழ்த்துவதற்கு குறைந்தத ஒரு பார்வையாளனாவது தேவைப்படுகிறான்" (Grotowski 2002: 32). குறோட்டவஸ்கி என்பவர் ஸ்ரனிஸ்லவஸ்கி குறிப்பிடும் பௌதீகச்செயலை (Physical action) நடிகருக்கும் பார்ப்போருக்கும் இடையிலான உறவாக வலியுறுத்துகிறார் (Merlin 2010: 190). பேர்டால் பிரச்ட் (Bertolt Brecht) தனது பார்வையாளரை அந்நியமாதல் முறைமையில் வைத்திருக்க விரும்வினார். சொர்ணலிங்கமும் நடிகர் நடிக்கும்போது பார்வையாளரின் நேரடித்தொடர்பையும் ஊடாட்டத்தையும் விரும்பினார். பார்வையாளர் தெரியும்போதுதான் நடிக்கும் உந்துவிசை பிறக்கிறது என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார். "...தாம் நடிப்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசிகர் எவ்வாறு உணருகிறார்கள் என்பதை நாடக நடிகர் அறிய வேண்டியதவசியம். அப்பொழுதுதான் தாமும் உணர்ச்சியுடன் நடிக்க முடியும். சும்மா இருட்டில் நின்று நடிப்பதால் உணர்ச்சி எப்படி வரும், முகபாவங்கள் எப்படி அமையும்? இயந்திரங்கள் போல நடமாட வேண்டியதுதான்." (சொர்ணலிங்கம் 1968: 74). இலத்திரனியல் ஊடகங்களின் நடிப்புப் போலல்லாது பார்ப்போர் முன்னிலையிலான நடிப்பு வேறுபட்டிருக்கிறது. அவர் ஆங்கிலத்தில் குறிப்பிடும் பார்பபோரிடத்திலிருந்து பெறும் தூண்டல் முக்கியமானதாகும். ("An actor often draws his inspiration from the audience") (சொர்ணலிங்கம் 1968: 74). ஒரு நடிகன் தன் அகத்தூண்டலை பார்ப்போனிடமிருந்து உருவாக்குகிறான். நடிகன் தன் பாத்திரத்தின் உருவாக்கத்தையும் செம்மைப்படுத்தலையும் பார்ப்போரின் அபிப்பிராயங்களாலும், எதிர்வினைகளாலும் மேம்படுத்துவர். ஒரு நடிகன் உருவாக்கத்திற்கு இது முக்கியமானது. "இன்றைய பார்வையாளனது நுண்ணறிவு நல்ல நடிப்பை இரசிப்பதில் போதாமல் இருப்பதாயும் அவர்கள் வெறும் நகைப்பை பார்த்து பழக்கப்பட்டு விட்டார்." என்றும் குறிப்பிடுகிறார். (சொர்ணலிங்கம் 1968: 81).

ஒரு நடிகனுக்கு புகழ் ஒரு தூண்டியாகவும், வெகுமதியாகவும் இருக்கிறது. அத்தூண்டலே படைப்பாக்கத்திற்கான ஒரு உந்து சக்தியாகவும் கொள்ள முடியும். அதை ஒரு கேவலமான உணர்வாகக் கொள்ளக்கூடாது. அது பற்றி சொர்ணலிங்கம் குறிப்பிடுவது: "...ஒரு நடிகன் பெரிய பொற்குவியலைப் பெறுவதைப் பார்க்கிலும் தான் செய்து காட்டியதை மற்றவர்கள் அவதானித்து இரசித்தார்கள் என்று அறியும் போது அளவிறந்த சந்தோஷ மடைவான்" (சொர்ணலிங்கம் 1968: 81).

ஒரு நடிகர் தான் ஏற்கும் பாத்திரத்தின் முதலாவது பார்வையாளர் அவராகவே இருக்கிறார், இரண்டாவது பார்வையாளர் நெறியாளராக இருக்கிறார் மூன்றாவது பார்வையாளர்தான் பொதுப்பார்வையாளராக இருக்கின்றனர். "மனோகரா" நாடகத்தில் சங்கிலி அறுக்கும் காட்சியில் எல்லோர் கண்களிலும் நீர்வடியும், பார்த்தவர் மட்டுமல்ல மேடையில் நின்றவரும், அங்கே அப்பாத்திரத்தை நடித்த தனக்கே அழுகை வந்து, அதை அடக்கி பின் பாத்திரத்தின் வசனத்தை பேச ஆரம்பித்தாராம். இங்கு நடிகன் தானாகவும் அதே நேரம் புறவயமாக நிற்பதையும் அவதானிக்கலாம். இந்த உணர்ச்சிப் பரிமாற்றுகைதான் அரங்கின் மைய ஓட்டமாகும். அந்தப் பரிமாற்றுகை பார்போனுக்கும் ஆற்றுவோனுக்கும் இடையில் நடப்பது. இட்டும் கொடுத்தும் வாங்கும் செயற்பாடு இருக்கிறது. அதனால் கலையரசு எப்போதும் மண்டபத்தின் பார்ப்போர்கூடம் தெரியும்படி சிறிது ஒளியுடன் விடப்பட வேண்டும் என்கிறார்.

**பயிற்சியும் பயிற்சி மையமும்**

பயிற்சி என்பது நடிகருக்கு இருக்கும் தன்திறனை மேம்படுத்த உதவுகிறது. "நாடக பயிற்சியில் நடிகருக்கு இருக்கும் திறமைகள் வளர்க்கப்படுகின்றன." (மௌனகுரு 2010: 26). எந்த வகைசார்ந்த அரங்கமுறையாயினும் பயிற்சி இன்றியமையாததாகிறது. பிரயோக அரங்கிலும்கூட பயிற்சி முக்கியத்துவப் படுத்தப்பட்டுள்ளது. 'தமிழில் நவீனநாடகம்' என்ற நூலில் தாசீசியசின் ஒரு செவ்வியில், பிரயோக அரங்கில் பயிற்சியின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகையில் "... உடனடி அரங்கு ஒரு வளம் மிக்க நாடகக் குழுவின் எதிர்கால அரங்காக அமையும். ஆனால் பயிற்சி இல்லாமல் அதைக் கையாண்டால் குரங்கின் கை மாலையாகச் சீரழியும்" (286) என்று குறிப்பிடுகிறார். நடிகர்கள் சுயத்திலிருந்து நடியாது பழைய நடிகர்களை பாவனை செய்தலை ஸ்ரனிஸ்லவஸ்கி விமர்சிக்கிறார் (Beneditti 1998: xix). எனவே நடிகன உருவாக்கப்படுகின்ற முறைமை முக்கியமானது. ஒரு நடிகன் உருவாக்கப்படுகின்ற நடைமுறைகள் பல்வேறு வடிவங்களைக் கொண்டது: சிறுவயதில் இருந்து சூழல் காரணமாக உருவாக்கப்படல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிகள் மூலம் ஒரு கற்கைச் செயற்பாட்டில் உருவாக்கப்படல் என இரு வழிகள் உள்ளன. சொர்ணலிங்கத்தின் அணுகுமுறையில் முதலாவது மட்டுமே இருந்ததது.

நாடக பயிற்சி கலாசாலை அமைக்கக் கேட்டபோது அது சாத்தியப்படாது. ஏனெனில் எல்லோருக்கும் ஒரே மாதிரி பயிற்சி பொருந்தாது என்றும் ஒரு பாத்திரத்திற் கான நடிப்பைப் வெவ்வேறு நடிகர்களுக்கு சொல்லிக்கொடுக்கும் போது அங்கு வேறுபாடுகள் இருக்கின்றன என்கிறார். அது பற்றிக் கூறும் போது- "...வெவ்வேறு நடிகருக்குச் சொல்லிக் கொடுக்கும் போது அவரவர்களின் இயற்கையான தத்துவங்களை அவதானித்து அவைக்கேற்றவாறு சில மாற்றங்களுடன் சொல்லிக்கொடுக்க வேண்டி வரும்..." (சொர்ணலிங்கம் 1968: என்னுரை). அடுத்ததாக இவரது கருத்துப்படி பயிற்சி என்பதற்கப்பால் தகுந்த இயக்குனரின் கீழ் இரண்டு மூன்று பாத்திரங்களை நன்றாக படித்து விளங்கி குணச்சித்திரப்படி நடித்தால் ஓரளவு நடிப்புக்கலையில் அனுபவம் வரும் என்பதை வலியுறுத்துகிறார். எல்லோருக்கும் ஒரேவிதமான பயிற்சி, எல்லா நடிப்பு நுட்பங்களுக்கும் பொருத்தமானதல்ல ஏனெனில் உடலியல் (Physiology) சார்ந்த விஞ்ஞான ஆய்வுகளின்படி உடலின் மூலம் வெளிப்படும் உடல்சார் உணர்ச்சி வெளிப்பாட்டுத்திறம் ஆளுக்காள் தேகத்திற்கு தேகம் வேறுபடும். (Merlin 2010: 17). (ஆய்வாளன் என்கின்ற தனிப்பட்ட எனது செயன்றை வகுப்பு அனுபவத்திலும் பயிற்சிகளின்போது இந்நிலைக்கு மாற்றீடாக அவரவர் சுய வெளிப்பாட்டிற்கு இடமளிக்கப்படும். ஏனெனில் வேறுபட்ட நடிப்பு பயிற்சியில் ஒவ்வொருவரும் வெவ்வேறுபட்ட பகுதிகளில் முதன்மைத்துலங்கல்களைக்காட்டுவர். நாடகமொன்றை நடித்துக்கொண்டே பயிற்சிகளை வழங்குவது இக்குறைபாட்டை அகற்ற உதவியிருக்கிறது. நாடகம் நடிப்பதன் மூலம்தான் நடிப்பு வரும் என்பது ஒரு நடைமுறை உண்மையாகும்.)

சொர்ணலிங்கத்தின் பயிற்சி மையம் பற்றிய கருத்திற்கு மாறாக அவர் குருநாதர் சம்பந்த முதலியாரின் கருத்து அமைந்திருந்தது. நடிப்பென்பது ஒருவருக்கு சுயமாகவே வந்துவிடும் என்ற எண்ணப்பாங்கை சம்பந்த முதலியார் நிராகரிக்கிறார். வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வழக்குரைஞர்கள், ஆசிரியர்கள் என்போர் பல வருடகால பயிற்சியினதும் அதனைத் தராதரப்படுத்தும் பரீட்சை வாயிலாகவுமே தோற்றம் பெறுகின்றனர். (சம்பந்த முதலியார் 1998b: 222) என்பது சம்பந்த முதலியாரின் வாதம் மட்டுமல்ல ஒரு நடைமுறை உண்மையுமாகும். இவரது கருத்துப்படி பயிற்சி மிக முக்கியமானதென்பதோடு அக்காலத்திலேயே நாடகநடிப்பிற்கு பல்கலைக்கழகம் (கலாசாலை) கட்டாயம் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தவர் சம்பந்த முதலியார் அவர்களாவார். சொர்ணலிங்கம் தன்னை நிலைக்கண்ணாடி முன்நின்று எல்லோரும் படுத்து உறங்கியபின் பார்த்து பயிற்சி செய்திருக்கிறார். இது அரங்க பயிற்சியில் பொது வழக்கமாகும். ஸ்ரனிஸ்லவஸ்கி தனத குறிப்புரையிலும் இதனைச்சுட்டிக்காட்டுகிறார். அதே போல ஒப்பனை முடிந்த பின்னர் நிலைக்கண்ணாடி முன்னின்று பாத்திரங்களை வகித்துக்கொள்ள ஏதுவாய் இருக்கும் என்று குறிப்பிடுகிறார். (சொர்ணலிங்கம் 1968: 66). தற்கால பயிற்சி முறைகளில் உடல் வெளிப்பாடுகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டு நடிகருக்கு போட்டுக்காட்டும்போது தமது நடிப்பை நடிகர் சீர்செய்யும் வாய்ப்பிருக்கிறது[7].

சொர்ணலிங்கம் தனது பயிற்சியின் வழிமுறையாக ஒத்திகையையே பயன்படுத்தினார். அதனடிப்படையில் நீண்ட ஒத்திகையின் அவசியம் முன்னிலைப்படுத்தப்படுகிறது. முறையான பயிற்சியில்லாது மேடையேறலை சுட்டிக்காட்டுகிறார் "...இந்தக்காலத்து நடிகர்கள் என்றால் நாடகம் மேடையேறும் போது பார்த்துக்கொள்ளலாமென்றும் விட்டுவிடுவார்கள். இப்போதுள்ளவர்கள் தங்களுக்கு எல்லாம் தெரியும், கேட்டுப்பழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்ற அவசியமில்லை யென்றிருப்பதை காணும் போது மனத்திற்கு வருத்தந்தான்" (சொர்ணலிங்கம் 1968: 43) அதேபோல "கடைசி நேரத்தில் அவசர அவசரமாக ஒத்திகை செய்து நடிப்பவர்களால் எப்படித் தமது பாத்திரங்களை உணர்ந்து விளக்கிக் காட்ட முடியும்?" (சொர்ணலிங்கம் 1968: 43) என்றும் குறிப்பிடுகிறார். உடல்சார்ந்த அதன் அசைவுசார்ந்த நெறிமுறைகளை அறிதல் என்பது ஒரு தனித்துவமான கற்றல் செயற்பாடாகும்[8]. நடனக்கற்கை போல நாடகமும் பயிற்சியுடன்கூடிய உடல்சார்ந்த கற்றலை வேண்டி நிற்கிறது.

**பின்புலமும் இயற்கைப் பயிற்சி முறையும்**

சொர்ணலிங்கத்திற்கு கல்வி, பொருளாதாரம் இரண்டும் இருந்தது அவரின் நோக்கை முதன்மைப்படுத்த உதவி இருக்கிறது. அதைவிட ஸ்ரனிஸ்லவஸ்கியும் இருந்தார். இதன் அர்த்தம் வசதி வாய்ப்புதான் திறன் மேம்பாட்டுக்கு மூலகாரணம் என்று பொருள்கொள்ள முடியாது: ஸ்ரனிஸ்லவஸ்கி காலத்தவரான ரகூஷ்யாவைச் சேர்ந்த வெடோர் சாலியப்பின் (Feodor Chaliapin– 1873 – 1938) சிறுவயதிலும் இளமையிலும் வறுமைக்குட்பட்டு தற்கொலை செய்யும் நிலைக்கு சென்று பின்னர் அதிலிருந்து மீண்டு சிறந்த இசை நாடக நடிகரானார் (Opera actor). எனவே கல்வி பொருளாதாரம் நீங்கலாக ஒரு நடிகரின் உருவாக்கத்தில் காணப்படும் வேறு பின்புலங்களை நோக்குதல் அவசியமாகும். அந்த வகையில் சொர்ணலிங்கத்தைப்பற்றி நோக்கும்போது அவர் இயல்பாகவே மிகுந்த ஞாபக சக்தி கொண்டவராக இருந்தது அவரது நூலின் மூலம் அறிய முடிகிறது. கலையரசு சிறு வயதில் அரங்கிற்கு தேவையான பயிற்சிகளை இயல்பாக பெற்றிருப்பதைக் காணலாம்: மூன்று வயதில் இருந்து நாடகம், கூத்துக்கள் பார்த்தமை, சங்கீதப் பின்னணி, ஆடிப்பழகிய அனுபவம்,, வாள் சண்டை அறிவு, பரியோவான் கல்லூரியில் ஆங்கில நாடகங்களில் திரைக்கு பின்னால் உதவியமை, கிரிக்கெட் கப்ரினாக இருந்தமை, தனது பன்னிரண்டாவது வயதில் தேவதாசனாக நடித்தமை, இயல்பிலேயே ஆட்களை பாவனை பண்ணிக்காட்டல், 1911ல் சம்பந்த முதலியாரின் "சுலோசனா அல்லது இருசகோதரிகள்" நாடகம் பார்த்தமை, தமிழ்நாட்டு நாடக கோஷ்டிகள் இவரது வீட்டில் தங்கியமை, தந்தையாரின் ஆதரவும் ஊக்கப்படுத்தலும், ஓரளவு சித்திரக்கலைஞானம், புகைப்பட நுட்பம் பற்றிய அறிவு என பல காரணங்கள் பின்புலமாக அமைந்திருந்தன. ஓட்டுஅமாத்தமான இவரது எல்லா அணுகுமுறைகளும் நிகழ்கால பயில்விற்கான பல முன்னோடியான வழிகளைத்திறக்கின்றன.

அதேபோல ராவ் பகதூர் பம்மல் சம்பந்த முதலியார் அரங்கில் ஈடுபாடு வருவதற்கு பல பின்புலங்கள் காரணமாயிருந்தன. சிறுவயதில் தாய் சோறுாட்டும்போது சொன்ன கதைகள் பின்நாளில் நாடகமெழுத உதவியாய் இருந்தனவாம் (சம்பந்த முதலியார் 1998டி: 05). தகப்பனின் வீட்டு நூல்நிலையத்தில் சேக்ஸ்பியரின் நாடகங்களையும் நாடக கதைகளையும் வாசித்தமை (06), பாடசாலையில் நாடகம்பார்த்து பின் அதை வீட்டில் சகோதரர்களுடன் நடித்து பார்த்தமை, தெலுங்கு நாடக கம்பனி போட்ட நாடகம் பார்த்து நாடகத்தில் விருப்பு வந்தமை சம்பந்த முதலியார் 1998டி: 07), சிறுவயதிலேயே பாரம் துாக்குதல், மல்யுத்தம், சிலம்பம் போன்ற கலைகளைக்கற்றிருந்தார். அவர் "நாடக மேடைமீது ஆடவிரும்பும் ஒருவனுக்கு எந்த வித்தையும் ஏதாவதொருசமயம் பிரயோசனப்படாமல் போகாதெனபதேயாம்" (சம்பந்த முதலியார் 1998டி: 267) என்று குறிப்பிகிறார். அத்தோடு ஆங்கிலப்புலமையும், ஆழமான வாசிப்பும், எழுத்தாற்றலும் இருந்திருப்பதோடு மேலும் அவர் வழக்கறிஞர், நீதிபதி, மதுவிலக்கு பேரவை அங்கத்தவர், விளையாட்டுக்கழக உறுப்பினர், பல்கலைக்ககங்களில் பேரவை உறுப்பினர், அன்னதானசபையின் அங்கத்தவர் என பல்வேறுவகைத்துறை ஈடுபாடுகொண்டிருந்தார். உதாரணமாக ஸ்ரனிஸ்லவஸ்கியின் நடிப்புப்பின்புலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு நடனம், உடல்வலுப்பயிற்சி (Gymnastic), பாடுதல், வாள்ச்சண்டை, குதிரைச்சவாரி, சிறுவயதில் வீட்டில் நடித்துப் பார்த்தமை (Benedetti 1998: xix) போன்றன அவருக்கு உடல்சார்ந்த சமநிலைத்திறன் மற்றும் தறன்கள் வளரக்காரணமாயமைந்தன.

சொர்ணலிங்கத்தின் நுட்பங்களில் முதலியாரின் செல்வாக்கிருந்த காரணத்தால் முதலியாருக்கு மேற்கத்தைய செலவாக்கு எப்படியிருந்தது என்று பார்ப்பதவசியமாகும். முதலியரால் சேக்ஸ்பியரின் "ஹம்லட்" பாத்திரத்தை நடிப்பதற்காக பல நூல்கள் வாயிலாக நிறைய விடயங்களை வாசித்துப் பெற்றுக்கொண்டார். அதில் எட்வின் பூத் (Edwin Thomas Booth 1833 – 1893) என்ற நடிகன் ஹம்லட் பாத்திரத்தை என்ன நுட்பங்களைப் பயன்படுத்தி நடித்தார் என்பதை வாசித்து அம்முறைகளை தானும் உள்வாங்கிக்கொண்டார். குறிப்பாக ஒரு அருவத்தை பார்த்து பின் தொடர்வது போன்ற இடங்களில் வரவேண்டிய நுட்பங்களை கற்றுக்கையாண்டார். (சம்பந்த முதலியார் 1998டி: 320) எட்வின் பூத் என்பர் அமெரிக்காவில் அக்காலங்களில் ஹம்லட் பாத்திரத்தை நடித்தவர்களுள் சிறந்தவராவார். இவர் மிகவும் இயற்கையாக இந்தப் பாத்திரத்தை நடித்ததாக குறிப்பிடப்படுகின்றது[9]. அத்தோடு முதலியார் மேலும் ஹம்லட் பாத்திரம் நடித்த பல நடிகர்களின் அனுபவங்களையும் வாசித்தறிந்தார் உதாரணமாக எட்மன் கீன், கெம்பில், சேர் ஹென்றி இர்விங், சேர் பீபோம் ரீ, சேர் வொம்ஸ் ரெபேட்சன், சேர் பென்சன் போன்றோர் குறிப்பிடத் தகுந்தவர்கள் (சம்பந்த முதலியார் 1998டி: 299) முதலியார் ஹம்லட் பாத்திர நடிப்பு நுட்பங்களை பலதை கற்றறிதிருந்ததால் எம்முறையைக்கையாள்வது என்று குழம்பினார் எனினும் அவர் ஹம்லட்டை நடிக்க தொடங்கும் முன்னர் தான் கற்றவற்றையெல்லாம் மறந்ததுதான் தான்செய்த சிறந்தவேலை என்று குறிப்பிடுகிறார். இங்கு மறந்தது என்பது மற்றவர் அனுபவங்கள் பயனற்றுப் போனது என்பது பொருளல்ல மாறாக அவையெல்லாம் செரிமானம் பெற்று சுயவெளிப்பாடாக வரும் என்பதுதான். சில நுட்பங்களைப் பார்க்கும்போது ஸ்ரனிஸ்லவஸ்கி நினைவிற்கு வரினும் நூற்றகவல்களின்படி முதலியார் ஸ்ரனிஸ் லவஸ்கியின் கோட்பாடுகள்பற்றி அறிந்த மைக்கான எந்த தகவல்களும் இல்லை. அதேபோலவே சொர்ணலிங்கத்தின் அவரது தொடர்பிற்குட்பட்டவர்களின் தகவல்களின் படியும் இல்லை என்ற முடிவுக்கு வரலாம்.

**நிறைவுரை**

சொர்ணலிங்கம் தனது காலத்தின் முறைமையினுள் இறுகிகொள்ளாது அடுத்த தலைமுறையோடு கொண்ட தொடர்விற்கு சாட்சியாக பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகமான "உடையார் மிடுக்கை" நெறியாள்கை செய்தமை அமைந்திருந்தது. சொர்ணலிங்கத்திற்கு பின்னர் அவரது நடிப்பபு நுட்பங்களையும், அனுபவங்களையும் உள்வாங்கி பலர் தோன்றினர். குறிப்பாக அரசையா, குழந்தை ம. சண்முகலிங்கம், செல்வரத்தினம், நவாலியூர் நடராசன், பிரான்ஸிஸ் ஜெனம் என்போர் குறிப்பிடத்தகுந்தவர்களாவார்கள். சொல்சார்ந்த தொடர்பாடலில் குரல் விருத்திக்கு அடிப்படைச்சங்கீத அறிவும் பலவேறுபட்ட குரலிலல் பேசும் குரலேற்ற இறக்கங்களும் முக்கியத்துவப்படுத்தப்பட்டிருப்பது பயில்விற்கான ஒரு நல்ல உத்தியாக அமைந்திருக்கிறது. பாத்திரத்தெரிவில் நடிகரின் நிஜவாழ்வின் உடல்சார் உணர்ச்சிசார் நடத்தைக்கோலங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டது, தேர்வு அணு குமுறையில் ஒரு மாற்று வழிமுறையாக அமைவதைக் காணலாம். உணர்ச்சி வெளிப்பாட்டிற்கு முன்னர் மனச்சமநிலை வலியுறுத்தப்படுவது பாத்திவுருவாக்கத்தின் யதார்த்த நிலையை கட்டியெழுப்ப உதவிபுரியும். அதே போல இரசபாவ மாற்றங்கள் சரியாகப்பயிலப்படும்போது அது உணர்ச்சி நிலைகளுடன் தானாகவே தொடர்புபடுத்தும். (மேயகோல்டின் உடற்பொறிமுறை மனதிற் கொள்ளத்தக்கது). ஒழுங்கும் அர்ப்பணிப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிகனுக்கு இன்றியமையாதது, பயிற்சி, ஆற்றுகை இரண்டிலுமே நெருக்கடிகள் எவ்வாறு கையாளப்பட்டன என்பது இங்கு ஒரு பாடமாக அமைகிறது. நடிகனுக் கும் பார்ப்போருக்குமிடையிலான உயிர்ப் புடன்கூடிய ஊடாட்டம் மேடையில் வெளிப்பாட்டுத்திறனை அதிகரிக்கும் என்பது நவீன அரங்கக்கோட்பாட்டில் முக்கியம்பெறுகிறது. அதே விடயத்தை சொர்ணலிங்கத்தின் முறையிலும் காணலாம், பயிற்சிகளில் ஆளுக்காள் வேறுபடுதன்மை காணப்படுவதால் அதற்கான மாற்றீடு மற்றும் சுயாதீன வெளிப்பாட்டிற்கு இடமளிக்கப்படுதல் வேண்டும். அத்தோடு அரங்கக்கற்கை நெறிக்கான பாடவிதான தயாரிப்புக்களில் சொர்ணலிங்கத்தின் திறன் மற்றும் அறிவு வளர்ச்சியில் பங்காற் றிய அவரது பின்புலங்கள் கருத்தில் கொள்ளப் படுவதன் மூலம் நடிகர்கள் மற்றும் அரங்கக்கற் போரிடையே அவ்வகையான திறன் விருத்தியை மேற்கொள்ள முடியும். அது தமிழ் அரங்கை செழுமைப்படுத்த உதவிபுரியும்.

**உசாத்துணை நூல்கள்**


1. Babbage, Frances. (2010) "Augusto Boal and The Theatre of The Oppressed", Alison h;odge, *21th Crntury Actor Training*. London: Routledge.
2. Benwdetti, Jean. (1998) *Stanislavskin & The Actor*. London: Methuen Drama.
3. Bloch, Susana. and Others (1998) "Effector Patterns of Basic Emotion". *Acting (RE) considered: A theories and practices*. Ed. Phillip B Zarrilli London: Routledge, 197-218.
4. Boal, Augusto. (1998) " Forum Theate", Philip B. Zarrilli , *Acting (Re) Considered: Theories and Practices*, London: Routledge, 251-261.
5. Chandradasan, (2010)"The Politics of Western Pedadogy in the Theatre of India". Ed. Ellen
    1. Margolis *The Politics of American Actor Training*. London: Routledge, 46-59.
6. Cohen, Robert and John h;arrop. (1984) *Creative Play Direction*, USA: Prentice-h;all.
7. Cohen, Robert. (2000) *Theatre Brief Version*, 5th edn, NewYork: McGrow h;ill.
8. Grandsaff, Russell J. (1991) *Acting & Directing*, USA: National Textbook Company.
9. Griffiths, Trevor R., (ed) (1998) *Stagecraft*, London: Phaidon Press Limited.
10. Grotowski, Jerzy. (2002) *Towards A Poor Theatre*, edited by Eugenio Barba. New York: Routledge.
11. Merlin, Bella. (2010) *Acting: the basis*, London: Routledge.
12. Perera, M. J. (1971) "Popular theatre and dance in Ceylon". Ed. James R. Brandon. *The performing arts in Asia*. Paris: Unesco, 79-87.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. Shanmugalingam, M. (2012)" Introduction to the Theatre Traditions of Tamils of Sri Lanka", *Golden Prism*. Eds. Anislie Joseph, P.S. Alfred and Valluvan Swaminathan, Jaffna: Centre for Performing Arts, 63-84.

14. Stanislavski, Konstantin. (2008) *An Actor"s Work*. Trans. Jean Benedetti, London: Routledge.

15. ______(1936) *An Actor Prepares*. Trans. Elizabeth Reyholds h;aphood. New York: Theatre Arts Books.

16. Zarrilli, Phillip B.(1998)"Introduction". *Acting (RE)considered: A theories and practices*). Ed. Phillip B Zarrilli, London: Routledge, 71-84.

17. அண்ணாமலை, சி. (1996)(பேட்டி) "எனது நாடகப்பார்வை- தாசிசியஸ்" உலகத்திழாராச்சி நிறுவனம், தமிழில் நவீன நாடகம். சென்னை: உலகத்தமிழாராச்சி நிறுவனம். பக். 275-288.

18. மௌனகுரு, சி. (1985) "ஈழத்து தமிழ் நாடக மரபின் தோற்றம்", சிந்தனை, இதழ்- ஆடி ஆவணி, யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம். பக் 53-71.

19. மௌனகுரு, சி. (2010) அரங்கியல், கொழும்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை.

20. சம்பந்த முதலியார், பம்மல். (1998ய) பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள், சென்னை: உலகத்தமிழாராச்சி நிறுவனம்.

21. சம்பந்த முதலியார், பம்மல் (1998டி) நாடக மேடை நினைவுகள், சென்னை: உலகத்தமிழாராச்சி நிறுவனம்.

22. சுந்தரம்பிள்ளை, செ. (1990) ஈழத்து இசை நாடக வரலாறு, யாழ்ப்பாணம்: யாழ் இலக்கிய வட்டம்.

23. சொக்கலிங்கம், க. (1977) ஈழத்து தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி, யாழ்ப்பாணம்: முத்தமிழ் வெளியீட்டுக் கழகம்.

24. சொர்ணலிங்கம், க. (1968) ஈழத்தில் நாடகமும் நானும், யுாழ்ப்பாணம்: ஆசிர்வாதம் பதிப்பகம்.

**குறிப்புகள்**

1. சம்பந்த முதலியார் 1932 இற்கும் 1938 இற்கும் இடையில் தனது அனுபவங்களை 'நாடகமேடை நினைவுகள்' என்ற ஐந்து பாகங்கள் கொண்ட நூலை எழுதினார். சொர்ணலிங்கம் தனது நூலை 1968 இல் எழுதினார். ஆதலால் முதலியாரின் நூல் அனுபவங்கள் இவருக்கு உதவியிருக்கலாம். இருவருக்கிடையிலும் கடிததொடர்பாடல் இருந்தது. எனினும் சொர்ணலிங்கத்தால் எழுதப்பட்ட "ஈழத்தில் நாடகமும் நானும்" என்ற நூலில் வரும் தகவல்கள் அவருடன் இணைந்து செயலாற்றியோரிடமும் நூல்கள்வாயிலாகவும் சரிபார்க்கப்பட்ட அதேவேளை நூலாசிரியர் தனது காலத்தின் தனதல்லாத பிற அரங்குகள் பற்றி பதியப்பாடாமையால் ஒப்பிட்டுப்பார்க்க இயலாமல் இருந்தது.
2. குழந்தை ம. சண்முகலிங்கத்துடனான சொர்ணலிங்கத்தின் நடிப்புப்பற்றிய கலந்ரையாடல் 2009.
3. குழந்தை ம. சண்முகலிங்கத்தின் பாத்திரத் தெரிவு முறையை நேரடியாக அவதானித்த, பங்கேற்ற தகவல்களின் அடிப்படையில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. விரிவுரையாளர் க. சிதம்பரநாதனின் பாத்திரதெரிவு மற்றும் நாடக ஆற்றுகையில் பங்கேற்றதன் அடிப்படையில் பெறப்பட்ட தகவல்கள்.

5. 'ஈடிப்பஸ் மன்னன்' நாடக பாத்திர தெரிவுபற்றிய சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் குழந்தை ம. சண்முகலிங்கத்துடனான கலந்துரையாடலில் அறிந்தது.1997. ஆய்வாளராகிய எனது அனுவத்தில் பாத்திரத்தின் உளவியல் முரண்பாடும் நடிகரின் தன்ப்பட்ட உளமுரண்பாடும் சேரும் போது நடிகர் அப்பாத்திரத்தை நடிக்காது தவிர்க்க முனைந்தனர்.

6. குழந்தை ம. சண்முகலிங்கத்துடனான சொர்ணலிங்கத்தின் நடிப்புப்பற்றிய கலந்ரையாடல் 2009

7. விரிவுரையாளர் க. சிதம்பரநாதனினன் நெறியாள்கையிலான "பொய்க்கால்" என்ற நாடகத்தில் ஆற்றுவோனாக பங்கேற்ற அனுபவத்திலிருந்து. 1993.

8. உடல்மொழி மற்றும் அசைவுகளுடன் கூடியகற்றல், மனதில் பதித்தல் தொடர்பானது Kinesthetic learning என்ற முறைமையுனுள் நோக்கப்படுகிறது.

9. https://en.wikipedia.org/wiki/Edwin_Booth accessed on 25.10.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பிரமணிய பாரதியார் சுட்டிய யாழ்ப்பாணத்துச் சுவாமி

நா. ஞானக்குமாரன்

**ஆய்வுச் சுருக்கம்:-**

*மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தனது பாரதியறுபத்தாற்றில் மூன்று சுவாமிகள் பற்றிப் பாடியிருப்பது அறிதற்குரியதாகும். குள்ளச்சாமி, கோவிந்தசாமி, யாழ்ப்பாணத்துச்சாமி என அம் மூன்று பேரும் எடுத்தாளப்படுகின்றனர். இம் மூன்று பேரில் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் பற்றி பாரதியார் "ஜகத்தினிலோர் உவமையில்லா யாழ்ப்பாணத்துச்சாமிஜி என வெகுவாகப் போற்றிச் சிலாகித்துக் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கதாகும். இவ்வாறு பாரதியாரால் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் எனக் குறிப்பிடப்படுபவர் யாரெனும் கேள்வி இந்தியாவில் உள்ள அறிஞர்கள் மத்தியிலும் இலங்கை வாழ் அறிஞர்கள் மத்தியிலும் ஆராயப்பட்டு வந்துள்ளமை காணலாம். இலங்கைக்கும் இந்தியவிற்குமிடையில் பன்னெடுங்காலமாக அறிஞர்கள், சித்தர்கள் சுவாமிகள் மத்தியில் நெருங்கிய தொடர்பு பேணப்பட்டு வந்துள்ளமை காணலாம். இவ்வகையில் யாழ்ப்பாணத்துச் சுவாமி எனப் சுப்பிரமணிய பாரதியாரால் கருதப்பட்டவர் யாரெனும் கேள்விக்கு விடைகாண முயல்வதாக இவ் வாய்வு அமைகின்றது. பாரதியார் அமரத்துவம் அடைந்து ஏறத்தாள நாற்பது ஆண்டுகளுக்குப் பிற்படவே யாழ்ப்பாணத்துச் சுவாமி யாரென்ற பிரக்ஞை இலங்கையில் அறிஞர்கள் மத்தியில் எழுந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும். அதன் தொடர்ச்சியில் பல துண்டுப்பிரசுரங்கள், கட்டுரைகள், புத்தகங்கள் வெளிவந்துள்ளமை சுட்டத்தக்கதாகும். இவ்வாய்வானது இது தொடர்பான கருத்துக்களைத் தொகுத்து பகுத்தாராய்வு செய்து சுப்பிரமணிய பாரதியார் எடுத்தாண்ட யாழ்ப்பாணத்துச் சுவாமிகளை இனங்காட்ட முயல்கின்றது. இவ்வாய்வானது வரலாற்றாய்வு முறையியலையும் பகுத்தாராய்வு முறையியலையும் புத்தாக்க ஆய்வுமுறையியலையும் கைக்கொள்வதாக அமைகின்றது.*

**திறவுச் சொற்கள்:** - பாரதியறுபத்தாறு, யாழ்ப்பாணத்துச்சாமி, அருளம்பலசுவாமிகள்,

ஈழவளநாட்டினை ஞானபூமி எனக் குறிப்பிட்ட திருமூலரின் வாக்கிற்கமைய எண்ணற்ற சித்தர்கள், சுவாமிகள் வாழ்ந்து மக்களின் ஆன்மிக வளர்ச்சிக்கு வளமூட்டிய வகையில் விளங்கியமை காணலாம். இந்தியாவில் பதினெண் சித்தர்கள் முதலாக எண்ணுக்கணக்கற்ற சித்தர்கள், சுவாமிகள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பது வரலாற்று உண்மையாகும். இன்றும் பலர் இலைமறை காயாக வாழ்ந்து வருகின்றனர். அது போல குறிப்பாக யாழ்ப்பாணத்திலும், மலையகத்திலும், மட்டக்களப்பிலும் பலர் வாழ்ந்துள்ளமை அறிதற்குரியதாகும். எனினும் ஈழத்தில் இவ்வாறு வாழ்ந்த சுவாமிகள் பற்றிய செய்திகள்முறையானவகையிலும்முழுமையான நிலையிலும் எடுத்தாளப்படவில்லை யென்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் அறிஞர்கள், சுவாமிகள் மட்டத்திலும் ஈழத்தவர்களுக்கும் தமிழகத்தவர்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பிருந்தமை காணக்கூடியதாகும். சில சித்தர்கள், சுவாமிகள் தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்து தங்கியவர்களாகவும் சிலர் இங்கிருந்து தமிழகம் சென்று சில காலம் தங்கி வாழ்ந்து திரும்பி வந்தவர்களாகவும் விளங்கினர். இவ்வகையில் தமிழ் வளர்த்த அறிஞர் பெருமக்களும் உள்ளடங்குவர். இத் தன்மைக்குரிய ஒருவராகவே யாழ்ப் பாணத்துச் சுவாமிகளும் விளங்குவது குறிப்பிடத்தக் கதாகும்.

'பாரதி அறுபத்தாறில்' "ஜகத்தினிலோர் உவமையில்லா யாழ்ப்பாணத்துச் சாமி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பாரதியாரால் எடுத்தாளப்பட்ட சாமி யாரென இனங்காண முற்பட்ட வகையில் பல்வேறுபட்ட ஆய்வுகள் சமீப காலங்களில் இலங்கையிலும் இந்தியாவிலும் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாய்வானது இலங்கையிலும் இந்தியாவிலும் பாரதியார் எடுத்தாண்ட யாழ்ப்பாணத்துச் சாமி யாரென்ற வகையின் எழுந்த பல கருத்துக்களைத் தொகுத்து ஆராய்வதே முதன்மையான நோக்கமாக கொண்டமைகின்றது. தக்க சான்றுகளின்றி இவரே மகாகவி சுப்பிரமணிய பாரதியார் குறிப்பிட்ட யாழ்ப்பாணத்துச் சாமியென இனங்கண்ட முயற்சிகள் கற்றோர் மத்தியில் ஆய்வுக்குட்பட வேண்டியதும் அதன் வழி அவர் எவரென நிறுவ வேண்டியது இத் துறை சார்ந்தோரின் கடனாகும். இவ்வகையில் இவ்வாய்வானது வரலாற்று ஆய்வுமுறையியலையும் பகுத்தாய்வு முறையியலையும் புத்தாக்க ஆய்வு முறையியலையும் அடிப்படையாகக் கொண்டராய்வதாக அமைந்துள்ளது.

'பாரதி அறுபத்தாறு' எனும் பாடலில் பாரதியார் யாழ்ப்பாணத்துச் சாமி பற்றிப் பாடுகையில்,

**"கோவிந்த சாமி புகழ்சிறிது சொன்னேன்**
**குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பாணத்தான்**
**தேவிபதம் மறவாத தீர ஞானி**
**சிதம்பரத்து நடராஜ மூர்த்தி யாவான்**
**பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி**
**பரமபத வாயிலெனும் பார்வையாளன்**
**காவி வளர் தடங்களிலே மீன்கள் பாயும்**
**கழனிகள் சூழ் புதுவையிலே அவனைக் கண்டேன்"**
**"தங்கத்தாற் பதுமை செய்தும் இரதலிங்கம்**
**சமைத்துமவற் றினிசன் தாளைப்போற்றும்**
**துங்கமுறு பக்தர் பலர் புவிமீதுள்ளார்**
**தோழரே எந்நாளும் எனக்குப் பார்மேல்**
**மங்களஞ் சேர் திருவிழியால் அருளைப் பெய்யும்**
**வானவர் கோன் யாழ்ப்பாணத்தீசன் தன்னைச்**
**சங்கரரெனன் றெப்போதும் முன்னே கொண்டு**
**சரணடைந்தால் அதுகண்டீர் சர்வசித்தி"**
(பாரதியறுபத்தாறு-40-41) எனவும்

இவற்றைவிட குவளைக் கண்ணன் புகழ் அடுத்து வரும் பாடலிலும் யாழ்ப்பாணத்துச் சாமி பற்றி பின்வருமாறு எடுத்தாள்வது காணலாம்.

**"மகத்தான முனிவரெல்லாம் கண்ணன் தோழர்**
**வானவரெல்லாம் கண்ணன் அடியராவார்**
**மிகத்தானுமுயர்ந்த துணிவுடைய நெஞ்சின்**
**வீரன் பிரான் குவளையூர்க் கண்ணன் என்பார்**
**ஜகத்தினிலோர் உவமையில்லா யாழ்ப்பாணத்துச்**
**சாமிதனை யிவன்னென்றன் மனைக் கொணர்ந்தான்**
**அகத்தினிலே அவன் பாத மலரைப்பூண்டேன்**
**அன்றேயப் போதேவீ டதுவே**
வீடு"(பாரதியறுபத்தாறு-43) எனவும்

உயர்வுற எடுத்தாண்ட சொல்லாட்சிகள் பாரதியார் யாழ்பாணத்துச் சுவாமி மீது கொண்டிருந்த ஆழமான, காத்திரமானநிலையை உணர்த்தவல்லதாகும். இத்தன்மையினால்தான் யாழ்ப்பாணத்தில் இருந்தவர்களும் இந்தியாவில் சிறிது காலம் தங்கி வாழ்ந்தவர்களும் பாரதி சுட்டிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகளோ இவர் என இனங்காண முற்பட்ட தன்மை பலரிடம் அமைந்துள்ளமையைக் காணக் கூடியதாகவுள்ளது.

அறுபதுகளில் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் பற்றிய பிரக்ஞை கொண்டு பல கட்டுரைகள் வெளிவந்தமை கவனத்திற்குரியதாகும். திரு.இ.ந.கந்தசாமி என்பவர் 1961 ஆகஸ்ட் 'ஸ்ரீ லங்கா' இதழில் 'ஞானம் வளர்த்த புதுவை' எனும் கட்டுரையில் யாழ்ப்பாணத்துச் சுவாமி பற்றி கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளிக்கும் வகையில் திரு.பொ.சபாபதிப்பிள்ளை அவர்கள் 'ஸ்ரீ லங்கா' 1962 ஏப்பிரல் மாத இதழில் 'பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச் சாமி' எனும் தலைப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கட்டுரையினை வெளியிட்டிருந்தார். இக் கட்டுரைவழி வியாபாரிமூலையைச் சார்ந்த அருளம்பல சுவாமிகளே பாரதியின் ஞானகுரு எனும் வகையில் குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்ததாக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1963ல் அல்வாய் வடக்கு வியாபாரிமூலை அருளம்பல சுவாமிகளே பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச் சுவாமி என்பதனை வெளிப்படுத்தும் வகையில் ஒருபொதுக்கூட்டத்தினை வியாபாரிமூலையில் 07.05.1963ல் நடத்தினார்கள். இதில் முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் கா.சிவத்தம்பி, மற்றும் முன்னாள் தமிழ்த் துறைப் பேராசிரியர் க.கைலாசபதி போன்றோர் மேற்படி கருத்தினை இக் கூட்டத்தில் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். இவ் விழாவினை முன்னிட்டு அன்றைய தினகரன் பத்திரிகை (07.05.1963) யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் நினைவிதழ் ஒன்றினை வெளியிட்டது. 09.05.1963ல் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் பாரதியாரின் ஞானகுரு யாழ்பபாணத்துச் சுவாமிகளே என வெளியிட்டிருந்தது. இதற்கு பிற்பட 15.05.1963ல் வெளிவந்த ஆத்மஜோதி மாத இதழ் பாரதியாரின் ஞானகுரு யாழ்ப்பாணத்துச்சுவாமி அருளம்பலம் எனும் கூற்றுடன் அவரது படத்தினையும் அட்டையில் பிரசுரித்திருந்ததுடன் அதன் ஆசிரியரான திரு. க. இராமச்சந்திரன் அவர்கள் அருளம்பல சுவாமிகளே யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் எனச் சுட்டியுள்ளார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் கூட்டிய கூட்டத்தின் தொடர்ச்சியாக ஈழத்துச் சோமு (ஈழநாடு -5.5.63), பரசுராமமூர்த்தி (சுதந்திரன்-5.5.63), சிவஞானசுந்தம் (ஈழநாடு - 6.5.63), கைலாசபதி. க,(தினகரன் 7.5.63), சிவத்தம்பி.கா(தினகரன்-7.5.63), இராமச்சந்திரன்.க (ஆத்மஜோதி-15.5.1963), ஞானபாஸ்கரன்.க (சுதந்திரன்-19.5.1963), ஆகியோர்கள் யாழ்ப்பாணத்துச் சாமியார் தொடர்பான கருத்தாடல்களினை அன்றைய நாளிதழ்களில் வெளியிட்டமையைக் குறிப்பிடலாம்.

'ஸ்ரீ லங்கா' 1962 ஏப்பிரல் மாத இதழில் 'பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச் சாமி' எனும் தலைப்பில் ஒரு கட்டுரையினை வெளியிட்ட பொ.சபாபதிப்பிள்ளை 1979ல் 'புற்றளைக்கரசே' எனும் நூலை வெளியிட்டார். இந்நூல் ஆசிரியர் சபாபதிப்பிள்ளையவர்கள் அதில் தமக்கும் அருளம்பல சுவாமிகளுக்கிடையில் இருந்த தொடர்பைச் சுட்டியதுடன் அருளம்பல சுவாமிகளே யாழ்ப்பாணத்துச் சுவாமி என்பதனை வலியுறுத்திப் பல தகவல்களை வழங்கி நின்றார். இவற்றைத் தொடர்ந்து 22.11.1981ல் வீரகேசரி இதழில் சி.மு.தம்பிராசா 'பாரதி வர்ணித்த ஜகத்தினிலோர் உவமையில்லா யாழ்ப்பாணத்துச்சாமி எனும் தலைப்பில் அமைந்த ஒரு கட்டுரை மூலம் அருளம்பல சுவாமிகளே யாழ்ப்பாணத்துச் சுவாமி என்பதனை மேலும் வலிறுத்தி நின்றார். திரு.ஆ.சபாரத்தினமும் 31.01.1982ல் வெளிவந்த தினகரன் வாரமஞ்சரியில் 'தமிழ்க் கவிதை வரலாற்றில் பாரதிக்கு முன்னும் பின்னும்' என்னும் கட்டுரையில் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் அருளம்பல சுவாமிகளே எனக் குறிப்பிட்டிருந்தனர். அம்பிகைபாகனும் 07.02.1982 வீரகேசரி இதழில் 'பாரதியும் பல ஞானசித்தர்களும்- பாரதி சந்தித்த யாழ்ப்பாணத்துச் சுவாமி யார்? எனவும் இரு கட்டுரைகளை இக் காலகட்டங்களில் பிரசுரித்திருந்தார்( வீரகேசரி - 31.1.1982, 07.02.1982). இந்து கலாசார திணைக்களகத்தின் இந்து கலைக்களஞ்சியத்தின் பதிப்பாசிரியரான பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் அவர்களும் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் வியாபாரிமூலையைச் சார்ந்த அருளம்பல சுவாமிகளே என எடுத்தாண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபையினரின் வேண்டுகோளுக்கமைய 1991ல் தொடங்கிய ஆய்வானது 'பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்' எனும் நூலாக 1992ல் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபையினரால் வெளியிடப் பெற்றது. யாழ்ப்பாணத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் - 'சித்தர் மரபு வளத்துக்கான ஒரு பலகணி' எனும் முன்னாள் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் முன்னுரையான குறிப்பினையும் உள்ளடக்கியதான இந் நூல் அருளம்பல சுவாமிகளின் வாழ்க்கை, பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகள், அருளம்பல சுவாமிகளின் நூல் விபரங்களும் நூற்பொருளமைவும் எனும் மூன்றம்சங்களினை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது (ஞானகுமாரன்.,நா-1992-42-43). இந் நூல்வழி அருளம்பல சுவாமிகள் வெளியிட்டதான பதின்னான்கு நூல்கள் பற்றி குறிப்பிட்டமை காணலாம். 'அருளம்பலம் சந்தேக நிவிர்த்தி', 'கற்பு நிலை', 'அநாதிபோதம்', 'சங்கவினாவிடை', 'சைவவினாவிடை', 'தர்க்கசாஸ்திரம், 'அருவாசக தேவஆரம்', 'சீவதரிசி', 'நாகை நீலலோசனி அம்மன் பேரில் தோத்திரம்', 'நாகை நீலலோசனி அம்மை ஊஞ்சல்', 'கற்பு நிலைச் சுருக்கம்', 'பழைய ஏந்பாட்டுடன்படிக்கை;, 'ஆதிபுராணம்', 'ஆதிநீதி', என்பன இவரால் ஆக்கப்பட்டனவாகும். 'ஆதிபுராணம்', சிலோனில்(இலங்கையில்) பிரசுரிக்கப்பட்டதாகும். 'அநாதிபோதம்', 'சங்கவினாவிடை', 'சைவவினாவிடை', 'தர்க்கசாஸ்திரம்' ஆகிய நூல்கள் கைக்குக் கிடைக்கவில்லை. இவை எங்கு வெளியடப்பட்டதென்பது அவரது இலங்கை இந்தியத் தொடர்பினை மேலும் வலியுறுத்த வல்லதாக அமையும். அருளம்பல சுவாமிகளின் நூற்களானவை அவரது ஆன்மிக அறிவனுபவத்தின் ஆழத்தினைப் புலப்படுத்துவனவாக விளங்குகின்றன. குறிப்பாக 'அருளம்பலம் சந்தேக நிவிர்த்தி' எனும் நூல் சுவாமிகளின் பரவெளிச் சிந்தனைகளையும் பரந்த நூலறிவினையும் புலப்படுத்தவல்லதாகும். இவ்வகையான ஆழ்ந்த புலமையே பாரதியாரைச் சிறப்புறப் போற்ற வைத்ததென எண்ணத் தோன்றுகிறது. மேலும் வேறெந்த சுவாமிகளும் இவ்வாறான படைப்புக்களை வெளியிட்டமையைக் காணமுடியவில்லை.

இந் நூல் வழி இதுவரை காலமும் ஆதாரப்படுத்தப்படாது எடுத்தாளப்பட்டு வந்த தவறான கருத்துக்களைத் தெளிவாக நிராகரிக்கப்பட்டு பாரதி எடுத்தாண்ட யாழ்ப்பாணத்தச் சாமி என்பவர் வியாபாரி மூலையை பிறப்பிடமாகவுக் கொண்டு புதுவையிலும் நாகையிலும் முப்பது வருடங்களுக்கு மேலாக வாழ்ந்தவரான அருளம்பலசுவாமிகளே என்பது ஆதாரப்படுத்தப்பட்டதாக அமைந்தது. மேற்சுட்டிய நூலில் பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமி என்பதினை விரிவுற, ஆதாரங்களுடன் எடுத்தாண்டமை காணலாம் (ஞானகுமாரன்.,நா-1992-23-41). இந்நூல்பாரதியார் கையாண்ட சொற்பதங்களை துல்லியமாக எடுத்தாண்டு அவர் குறிப்பிட்ட மூன்று சுவாமிகளில் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் எவ்வாறு வேறுபட்ட வகையில் பாரதியாரால் எடுத்தாளப்பட்டிருந்தார் என்பதும் பகுத்தாராயப்பட்டிருந்தமை காணலாம். மேலும் இந்நூல் வியாபாரிமூலையில் அமைந்த மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்துச் சுவாமிகளான அருளம்பல சுவாமிகள் இதர சுவாமிகள் போலன்றி பதினான்கு நூல்களை வெளியிட்டவரென்பது 'பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்' எனும் நூலின் வாயிலாக வெளிப்பட்டது. இந்நூற்பட்டியலில் நான்கு நூல்கள் தவிர்ந்த ஏனையவை கைக்கெட்டிய நிலையில் அவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திலும் பிரதி பண்ணப்பட்டு மேல்நிலை ஆய்வுக்கு உதவும் வகையில் பேணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந் நூல்களில் 'அருளம்பலம் சந்தேகநிவிர்த்தி', 'கற்பு நிலை', 'அருவாசக தேவஆரம்', 'சீவதரிசி' ஆகியன புதுவையிலும் 'நாகை நீலலோசனி அம்மன் தோத்திரம்;, 'நாகை நீலலோசனி அம்மன் ஊஞ்சல்', 'கற்பு நிலைச் சுருக்கம்', 'பழைய ஏற்பாட்டுடன் படிக்கை', 'ஆதி நீதி' ஆகியன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகையிலும் பிரசுரமானவையென்பது கவனத்திற்குரியதாகும். 'ஆதி புராணம்' இலங்கையில் உள்ள காமினி அச்சுக்கூடத்திலும் பிரசுரமாகியுள்ளது. இதனை விட சில ஆக்கங்கள் கையெழுத்துப் பிரதிகளாகவே இருந்தமையினால் யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் அனுசரணையுடன் அருளம்பல சுவாமிகளின் 'மண் விண் வினாவிடை' எனும் தலைப்பில் இந்நூல் 2000ம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டு வியாபாரிமூலையில் வெளியிடப்பட்டது (ஞானகுமாரன் பேராசிரியர். நா (பதிப்பாசிரியர்) சி.வே.அருளம்பல சுவாமிகள் அருளிச் செய்த மண் விண் வினாவிடை 2000). இந் நூலில் அருளம்பல சுவாமிகளின் ஆக்கங்களான மண்விண் வினாவிடை, கலியாண அறிவிக்கை, நாச்சியார் பேரில் விண்ணப்பம்(பாடல்), முகில் பூமாதேவிக்கு புலம்பல் (பாடல்) ஆகியனவும் நாகைப்பட்டணம் ஸ்ரீலஸ்ரீ மௌன சுவாமிகள் மடாலயத்தில் அருளம்பலசுவாமிகள் மீது 1943ல் பாடப்பெற்ற 'அருள் அம்பல ஆனந்தஜோதி' பாடலும் அருளம்பலசுவாமிகள் முன்னர் பாடிய தோத்திரமும்' மீள் பதிப்பிக்கப்பட்ட வகையில் வெளிவந்தது.

இவ்வகையில் வியாபாரிமூலையைச் சார்ந்த அருளம்பலசுவாமிகளே பாரதியார் போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் என விரிவாக எடுத்தாளப்பட்ட போதிலும் காலத்துக் காலம் சில அறிஞர்கள் முன்வைத்த கருத்துக்கள் இக் கருத்துக்களை நிராகரிக்கும் வகையில் அமைந்திருந்தமை காணக் கூடியதாகவுள்ளன. இவ்வகையில் 'பாரதி கண்ட சித்தர்கள்' எனும் நூலை மார்கழி 2002ல் எழுதி வெளியிட்ட இந்திய அறிஞர் சி.எஸ். முருகேசன் அந் நூலின் ஐந்தாவது இயலில் யாழ்ப்பாணத்துச் சாமியார் என ஸ்ரீ கதிர்வேலு சுவாமிகளை எடுத்தாண்டமை குறிப்பிடத்தக்கதாகும் (முருகன்.சி.எஸ்.,2002-92-98). இக் கதிர்வேலு சுவாமிகள் யாழ்ப்பாணத்தைப் பூர்விகமாகக் கொண்டவரெனவும் வடலூார் வள்ளல் இராமலிங்க சுவாமிகளைச் சந்திக்கும் நோக்குடன் வந்தவரெனவும் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர விரிவான எத்தகவல்களோ அல்லது பாரதியாருடன் அவருக்கிருந்த தொடர்புகளுக்கான சான்றுகளோ வழங்கப்படவில்லை. மேலும் ஸ்ரீ கதிர்வேலு சுவாமிகள் தைப்பூசத்தில் புதுவை பிருந்தாவனத்தில் சமாதியடைந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிதம்பரத்தில் உள்ள ஸ்ரீ கதிர்வேலு சுவாமிகளது சகோதரி மகனொருவரே குருபூசை நடாத்துவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இதுவரை இலங்கையில் வாழ்ந்த சித்தர்கள், ஞானிகள் பற்றி எழுந்த நூல்கள், குறிப்புக்கள் எதிலும் இக் ஸ்ரீ கதிர்வேலு சுவாமிகள் பற்றி எத் தகவல்களும் இதுவரை கிடைத்திலது. இதே செய்தியானது சி.எஸ். முருகேசனின் மற்றுமொரு நூலான 'புதுச்சேரி சித்தர்கள்' என்பதிலும் யாழ்ப்பாணத்துச் சாமியாராக ஸ்ரீ கதிர்வேலு சுவாமிகள் பற்றிச் சுட்டப்படுவதனைக் காணலாம் (முருகேசன்,சி.எஸ்-2003-18-22). இதில் ஸ்ரீகதிர்வேலு சுவாமிகள், ஸ்ரீகதிர்வேல் சுவாமிகள் எனும் நாமம் ஒருவராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந் நூலில் இருபத்தாறு புதுச்சேரிசித்தர்களில் ஒருவராக யாழ்ப்பாணம் ஸ்ரீகதிவேலு சுவாமிகளை எடுத்தாளுவது காணலாம். இதில் ஸ்ரீ கதிர்வேலு சுவாமிகள் ஒரு மூதாட்டிக்கு இரசவாத சக்தியால் பத்து நாட்களாக ஒரு ரூபாய் நாணயம் கொடுத்த செய்தி சுட்டப்பட்டுள்ளதுடன் பாரதியாருக்கு குண்டலினி யோகத்தை பாரதியாருக்கு அறிமுகப்படுத்தியவராகவும் குறிப்பிடப்பட்டுள்து. எனினும் இவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவரா? அல்லது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரா? என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் கிடைத்திலது. இது தவிர இவ்விரு நூல்களினுடாகவும் ஸ்ரீ கதிர்வேலு சுவாமிகளே பாரதியார் குறிப்பிட்ட யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் என்பதனை நிறுவ போதிய ஆதாரங்கள் வழங்கியதாயில்லை. அதேவேளை பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமி யார்; என்ற தலைப்பில் ஞானகுமாரன் எழுதிய தொடர் கட்டுரையானது தொண்டமனாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம வெளியீடான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச் சுடரில் அருளம்பல சுவாமிகளை சான்றுகளுடன் இனங்காட்டிய வகையில் 2007 ஐப்பசி, கார்த்திகை மாதமலர்களில் வெளிவந்தமை சுட்டுதற்குரியதாகும்.

யாழ்ப்பாணத்துச் சுவாமிகளான அருளம்பல சுவாமிகள் 1942ல் சமாதியடைந்தபோது அவர் இந்தியாவிலிருந்து கொண்டு வந்த சமாதிக்கான பொருட்களைப் பயன்படுத்தி அவரது அன்பர்களால் கருங்கல்லான சமாதியாலயமானது அமைக்கப்பட்டது. அறுபது வருடங்களுக்குப் பிற்பட தென்னிந்தியாவில் வாழ்ந்துவருகின்ற சுவாமி அருளானந்தாவின் தலைமையில் சமாதியாலயம் புதுப்பிக்கப்பட்டு 25.11.2004ல் குடமுழுக்குச் செய்யப்பட்டது. அன்றைய தினமே "யாழ்ப்பாணத்து மௌனகுருவின் சரித சுருக்கம் - மீண்டும் அருள் தர வந்தேன்" எனும் தலைப்பில் சுவாமி அருளானந்தாவினால் ஒரு நூல் வெளியிடப்பட்டது (அருளானந்தா சுவாமி-2004). இந்நூல் மீண்டும் பாரதியின் ஞானகுரு அருளம்பல சுவாமிகளே என்பதனை வலியுறுத்துவதாக அமைந்தது. இந்நூல் பெரிதும் ஞானகுமாரனால் எழுதப்பெற்ற 'பாரதி போற்றிய அருளம்பலசுவாமிகள்' எனும் நூலின் கருத்தம்சங்களையே பெரிதும் எடுத்தாண்ட வகையில் விளங்கிய போதிலும் ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் வழிபாட்டிற்கான அஸ்டோத்திர நாமாவழி, ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் வழிபாட்டிற்கான 108 நாம அர்ச்சனை ஆகியனவும் இணைந்து அமைந்துள்ளமை நோக்கத்தக்கதாகும். 2006ம் ஆண்டு வைகாசி மாதத்தில் வெளியான ஆத்மஜோதி மாத இதழில் 'மகாகவி பாரதி போற்றிப் பாடிய யாழ்ப்பாணத்துச் சுவாமி இவரே' எனும் எட்டுப் பக்கக் கட்டுரை ஒன்று வெளியானது (ஆத்ம ஜோதி - 2006-23-29). இதில் பாரதி போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமி வியாபாரி மூலையைச் சார்ந்த அருளம்பல சுவாமிகளே என்பதனை சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்து விளக்கி நின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ விவகாரக் குழுவின் பதினான்காவது இதழான நல்லைக்குமரன் மலரில் 'யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமிகள்' என்ற ஏழு பக்கக் கட்டுரை ஒன்று மறைந்த கலாநிதி குணராசாவால் வரையப்பட்டிருந்தது (குணராசா,க-2006). இதே கட்டுரையானது சில படங்களையும் இணைத்து சிறு நூலாக 'பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமி' என்ற தலைப்பை முகப்பட்டையில் தாங்கியவாறு யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமி அறக்கட்டளை சபையினால் வெளியிடப்பட்டது (குணராசா,க-2006). எனினும் புத்தகத்தின் தலைப்பானது 'யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமி' என உள்புறத்திலும் நூல்விபர அட்டவணையிலும் குறிப்பிட்டுள்ளமை அவதானிக்கத்தக்கதாகும். இத்தலைப்பே நல்லைக்குமரன் மலரிலும் சுட்டப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்கதாகும். இந்நூலின் பிரசுரத்திற்கு பிற்பட திரு.க.சந்திரமௌலிஸ்வரன் தினக்குரல் நாளாந்தப் பத்திரிகையில் நான்கு வார இதழ்களில் தொடர்ந்து 'பாரதியார் போற்றும் யாழ்ப்பாணத்துச் சுவாமி யார்?' எனும் தலைப்பில் ஆராய்ந்துள்ளமை நோக்கத்தக்கதாகும் (சந்திர மௌலிஸ்வரன்-தினக்குரல்-17.12.2006 24.12.2006 31.12.2006 7.1.2007). இவ் ஆராய்ச்சியும் தொடர் கேள்வியினையும் எழுப்பியதாக அமைந்ததே தவிர முழுமையான தகவல்களினை வழங்கியதாகத் தெரியவில்லை.

பாரதியினால் புகழ்ந்து பாடப் பெற்ற யாழ்ப்பாணத்துச் சுவாமி யார்? எனும் கேள்வியினை இ.ந.கந்தசாமி என்பவர் 1961 ஆகஸ்ட் 'ஸ்ரீ லங்கா' இதழில் 'ஞானம் வளர்த்த புதுவை' எனும் கட்டுரையில் எழுப்பியிருந்தார் என்பதனை ஏலவே சுட்டியிருந்தோம். இதற்குப் பதிலாக பொ.சபாபதிப்பிள்ளை அவர்கள் 'ஸ்ரீ லங்கா' மாத இதழில் 1962 ஏப்பிரல் 'பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச்சாமி' எனும் தலைப்பில் ஒரு கட்டுரையினை வெளியிட்டார். இதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளம்பலசுவாமிகளே 'யாழ்ப்பாணத்துச்சாமி' என்பதனை முதற்தடவையாக வெளிக் கொணர்ந்த தென்பதும் வரலாற்று உண்மை யென்பது வரலாற்று ரீதியாக பார்க்க முற்பட்ட சந்திரமௌலிஸ்வரனுக்குத் தெரியாமற் போனது துரதிஸ்டவசமானதாகும். மேலும் ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அருளம்பல சுவாமிகளே யாழ்ப்பாணத்துச்சாமி என எடுத்தாண்டமை ஒரு திருப்புமுனையாக அமைந்த போதிலும் முழுமையான ஆய்வு நிலையாக அன்றைய காலகட்டத்தில் கைலாசபதி போன்றோரின் எழுத்துக்கள் அமையவில்லை என்பது 1992ல் யாழ்ப்பாணத்துச்சுவாமிகள் சபையினரால் வெளியிடப் பெற்ற 'பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்' எனும் நூலில் எடுத்தாளப்பெற்றமையினையும் சந்திரமௌலிஸ்வரன் அறியவில்லைப் போலும். ஏனெனில் அவ்வாறு நூல் வெளிவந்த தென்பதனை எவ்விடத்திலும் இக் கட்டுரையாளர் அறிந்திருக்கவில்லை யென்பது புலனாகின்றது. சபாபதிப்பிள்ளையின் 'புற்றளைக்கரசே' எனும் நூலுக்குப் பிற்பட பல கட்டுரைகளும் நூல்களும் இது தொடர்பில் வெளியானது தெரியாமற் போனது கட்டுரையாளரின் இவ்விடயத் தேடல் நிலையின் போதாத்தன்மையை வெளிப்படுத்துகின்றதெனலாம்(பருத்தித்துறை பிரதேச மலர்-1999, பேராசிரியர் சண்முகதாஸின் மணி விழா மலர்-2001).

எனினும் இக்கட்டுரையாசிரியர் தனது கட்டுரையில் குணராசா குறிப்பிட்ட கருத்துக்களை சீர்தூக்கி நோக்கும் தன்மை அவர் குறிப்பிட்ட செய்திகளையோ தகவல்களையோ ஆதாரமின்றி எடுத்தாள்வது அதன் பொருத்தமுடைத்தன்மைக்குரியதா எனும் வகையில் தனது கருத்துக்களை முன்வைப்பது நுண்ணியதான ஆராய்ச்சிப் போக்கிற்குரியதாகும். இலங்கையிலிருந்து இந்தியாவிற்குச் சென்ற பலரையும் யாழ்ப்பாணத்தார் என இந்தியர்கள் அழைப்பது சாதாராணமான தொன்றே. இவ்வகையில் கலட்டியிலிருந்து சென்று அற்கு சமாதியடைந்த ஆறுமுகசாமியையும் யாழ்ப்பாணத்துச்சாமி என அங்குள்ளவர்களால் அழைக்கப்பட்டிருத்தல் வியப்பிற்குரியதொன்றல்ல. இக்கருத்தினைக் கட்டுரையாளர் நியாயமானதெனவும் மரபுரிமையானதுமென எடுத்தாள்வது ஏற்கக்கூடியதே(சந்திர மௌலிஸ்வரன் - தினக்குரல்-07.01.2007). அதேவேளை அதற்காக அவரை யாழ்ப்பாணத்தச் சாமியாரென எடுத்தாள்வது கேள்விக்குரியதெனக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். புதுவையில் ஆறுமுகசாமியைப் பாரதி சந்திக்க வைப்பதாக எடுத்தாளும் கட்டுரையாசியர் 'குணராசாவின் எழுத்தின் நவீனத்துவத்தின் புனைவியல் யுக்திகள் மேலோங்கி நிற்பதை அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமிகளின் வைப்புக்கள் கற்பனை கலந்த கருத்தியலாகவே அமைந்துவிடுகின்றது' எனச் சுட்டுவது கட்டுரையாளனின் ஆய்வின் தர்க்கநிலைப்பாட்டைப் புலப்படுத்துகின்றது. மேலும் ஆதாரமற்ற அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட முயற்சியாகவே இது எடுத்தாளப்படலாம். இதனாலேயே குணராசாவின் முயற்சியை சந்திரமௌலிஸ்வரன் 'தனக்கு உறவினரான யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமியை பாரதியாரின் யாழ்ப்பாணத்துச் சுவாமியுடன் இனங்காட்டிப் பெருமை தேடிக் கொள்ள மேற்கொண்ட பகீரதப்பிரயத்தன முயற்சி யென்றே குறிப்பிடலாம்' எனச்சுட்டுதல் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அதே வேளை குணராசா தனது தேடலுக்கு முன்னோடிகளாக அமைந்த விடயங்களைக் குறிப்பிட்டிருக்க வேண்டும் எனும் கட்டுரையாளரின் கருத்தானது ஒருவகையில் இக்கட்டுரையாளருக்கும் பொருத்திப் பார்த்தல் பொருத்தமானதேயாகும்.

சண்தொலைக் காட்சியில் ஒளிபரப்பப் பெற்ற சித்தர்கள் பற்றிய விவரணச் சித்திரத்தில் கதிரவேலு சுவாமிகளின் சமாதி ஆலயத்தைக் காண்பித்து அதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியார் குறிப்பிட்ட யாழ்ப்பாணத்துச் சாமியாரெனச் செய்தித் தொகுப்பாளரினால் ஆவணி 2011ல் குறிப்பிடப்பட்டமை கவனிக்கத்தக்கதாகும். இத் தகவலானது ஏலவே முருகேசனால் எடுத்தாளப்பட்ட கருத்தினடிப்படையிலேயே அமைந்தது போல் விளங்கியது. இங்கும் யாழ்ப்பாணச்சாமி யாரென எடுத்தாளப்பட்டமைக்கு எந்தவொரு காத்திரமான ஆதாரம் எடுத்தாளப்படாமை குறிப்பிடத்தக்கதாகும். இத் தன்மைபோலவே இலங்கை அரசாங்கக் கல்வி வெளியீட்டுத் திணைக்கழகத்தின் பத்தாம் வகுப்பு சைவநெறிப் பாடப் புத்தகத்தில் (8ம் பாடத்தில்) எங்கள் ஞானியர் பற்றிக் குறிப்பிடுகையில் கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகசுவாமிகள் என்றொரு ஞான பரம்பரையைப் பெற்றுள்ளோம் எனச் சுட்டப்பட்டுள்ளது (சைவநெறி, பத்தாம் வகுப்பு-1985-40). இலங்கையிலே இத்தகைய ஞானநிலையை அடைந்த ஒரு ஞான பரம்பரைக்கு வித்திட்டவர் யாழ்ப்பாணத்துக் கடையிற்சுவாமி என்பவராவர் என ஒரு பந்தியில் ஆரம்பித்துவிட்டு, பாரதி அறுபத்தாறில் வரும் யாழ்ப்பாணத்துச் சாமி பற்றிய பாடலடியான,

**...குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பாணத்தான்**
**தேவிபதம் மறவாத தீர ஞானி**
**சிதம்பரத்து நடராஜ மூர்த்தி யாவான்**
**பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி**
**பரமபத வாயிலெனும் பார்வையாளன்**
**காவி வளர் தடங்களிலே மீன்கள் பாயும்**
**கழனிகள் சூழ் புதுவையிலே அவனைக் கண்டேன்"**
**"தங்கத்தாற் பதுமை செய்தும் இரதலிங்கம்**
**சமைத்துமவற் றினிசன் தாளைப்போற்றும்**
**துங்கமுறு பக்தர் பலர் புவிமீதுள்ளார்**
**தோழரே எந்நாளும் எனக்குப் பார்மேல்**
**மங்களஞ் சேர் திருவிழியால் அருளைப் பெய்யும்**
**வானவர் கோன் யாழ்ப்பாணத்தீசன் தன்னைச்**
**சங்கரரெனன் றெப்போதும் முன்னே கொண்டு**
**சரணடைந்தால் அதுகண்டீர் சர்வசித்தி"**

எனும் பாடலினைப் பிரசுரித்துள்ளனர். இதனைப் படிப்பவர்களுக்கு கடைச் சுவாமிகளும் யாழ்ப்பாணத்துச் சுவாமிகளும் ஒருவரோ எனும் மயக்கநிலைக்கு இட்டுச்செல்ல வாய்ப்பாயுள்ளது. இந் நூலைவிட வேறு எவரும் இவ்வாறான கருத்தினைக் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. பாடநூற் குழுவினர் எவ்வகையில் இவ்வாறான கருத்தினைப் பெற்றுக் கொண்டார்களென்பதற்கும் தக்க ஆதாரமில்லை. இவ்வாறான கருத்தின் சாத்தியத் தன்மையை ஆராய்ந்து நோக்கின் யாழ்ப்பாணத்துக் கடைச்சுவாமிகள் யாழ்ப்பாணத்துச் சுவாமிகளாக இருத்தல் அசாத்தியமென்பனைக் காணலாம். கடைச் சுவாமிகளின் பிறந்த ஆண்டு தெரியாவிடினும் அவர் ஏறத்தாள 1862ம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்தவரென்பதும் முப்பது ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்ததுடன் 1891ம்புரட்டாதிச்சதயத்தில்சமாதியடைந்தமை அறியத்தக்கதாகும் (குலரத்தினம், கா.சி-1975-14). அதேவேளை மார்கழி 1882ல் பிறந்த பாரதிக்கு கடைச்சுவாமிகள் சமாதியடைந்தபோது ஒன்பது வயதாகவே இருந்திருக்க வேண்டும். பாரதி புதுவையில் வாசம் செய்த காலம் 1908 இலிருந்து பத்து வருடங்களே. எனவே ஷபுதுவையில் அவனைக் கண்டேன்; எனும் பாரதியின் கூற்றுக்கு இந் நிகழ்வு பொருந்தாதென்பது தெட்டத் தெளிவாகும். அதேவேளை தற்சமயம் பயன்பாட்டிலுள்ள இலங்கை அரசாங்க வெயியீட்டுத் திணைக்கழகத்தின் 11ம் தரம் சைவநெறிப் புத்தகத்தில் (14ம் அத்தியாயத்தில்) முற்படக் குறிப்பிட்ட கருத்திலிருந்து மாற்றமுற்றதுடன் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் பற்றி பாரதியார் பாடிய இரு பாடல்களையும் குறிப்பிட்டு யாழ்ப்பாணத்துச் சுவாமியார் பருத்தித்துறையில் வியாபாரிமூலையில் வாழ்ந்த அருளம்பல சுவாமிகளா? அல்லது கலட்டியில் வசித்த ஆறுமுக சுவாமிகளா? எனக் கேள்வி எழுப்பி அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துண்டென எடுத்தாளப்பட்டமை காணலாம்(சைவநெறி, தரம் 11-2009- 89-90).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரையில் நோக்கிய கருத்துக்களிலிருந்து பாரதியாரின் யாழ்ப்பாணத்துச் சுவாமியுடன் இனங்காட்ட முற்பட்ட கதிரவேலு சுவாமிகளும் பொருத்தமானவர்களாக அமையவில்லையென்பது தெளிவிற் குரியதாகும். பாரதியாரின் யாழ்ப்பாணத் துச்சுவாமி அல்வாய் வடக்கு வியாபாரி மூலையைச் சார்ந்த அருளம்பல சுவாமிகள் என்பதில் ஐயமில்லை. இதனையே "பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்" நூலில் 'தயக்கம் வேண்டாம்' எனும் உப தலைப்பின் கீழ் "இதுகாறும் கூறிய கருத்துக்கள் அனைத்தையும் ஒருங்கே கொள்ளும் போது பாரதியாரால் பாடப்பட்ட யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் அருளம்பல சுவாமிகளே எனக் கொள்வதில் தவறாகாது எனக் கொள்ளும் முடிவிலே எந்தவித தயக்கமும் கொள்ள வேண்டியதில்லையன்றோ? தக்க தடைகளும் சான்றுகளுடன் கூடிய மறுப்புக்களும் இருப்பின் அறிஞர் அவற்றைக் கூறுவதற்குத் தயங்க வேண்டா" (ஞானகுமாரன்.நா-1992-41)எனக் குறிப்பிடப்பட்டுந்தது. அருளம்பல சுவாமிகள் சமாதியடைந்து எழுபத்தைந்து ஆண்டுகள் பூரணமாகின்ற இவ்வாண்டிலாவது யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் அருளம்பல சுவாமிகளே எனும் முடிவில் ஆய்வாளர்கள் தெளிவுடையவர்களாகுக.

**உசாத்துணை நூல்கள்**


1. அருளானந்தா,சுவாமி, யாழ்ப்பாணத்து மௌனகுருவின் சரித சுருக்கம் - மீண்டும் அருள் தர வந்தேன் 2004, வியாபாரிமூலை, பருத்தித்துறை. குணராசா க, யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமிகள் யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமிகள் அறக்கட்டளை சபை ஆகஸ்ட் 2006

2. குலரத்தினம், கா.சி, கடையிற்சுவாமிகள், மில்வைட் வெளியீடு, யாழ்ப்பாணம் 1975

3. சைவநெறி, பத்தாம் வகுப்பு, கல்விவெளியீட்டுத் திணைக்கழகம், கொழும்பு, 1985

4. சைவநெறி, தரம் 11, கல்வி வெளியீட்டுத் திணைக்கழகம், கொழும்பு, பதிப்பு -3, 2009

5. ஞானகுமாரன்.நா., பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள் 1992 யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபை, பருத்தித்துறை.

6. -------------------------------- (பதிப்பாசிரியர்) சி.வே.அருளம்பல சுவாமிகள் அருளிச் செய்த மண் விண் வினாவிடை 2000 இந்துசமயப் பேரவை யாழ்ப்பாணம்

7. முருகன்.சி.எஸ். 'பாரதி கண்ட சித்தர்கள்' 2002 குறிஞ்சி, சென்னை

8. ------------------------ 'புதுச்சேரி சித்தர்கள்' 2003 கிருஸ்ணா பிரஸ், சென்னை

9. பாரதியார் பாடல்-பாரதி அறுபத்தாறு

10. அம்பிகைபாகன், வீரகேசரி பத்திரிகை, 31.1.1982, 07.02.1982

11. இராமச்சந்திரன்.க, பாரதியார் யார்? ஆத்ம ஜோதி 15.5.1963

12. ------------------ ஆத்ம ஜோதி மாத இதழ் 'மாகாகவி பாரதி போற்றிப் பாடிய யாழ்ப்பாணத்துச் சுவாமி இவரே" சித்திரை 2006 ஒளி 13 ப 23-29

13. ஈழத்துச் சோமு, 'புதுயுக எழுச்சி பாடும் ஈழத்து இலக்கிய மாநாடு' ஈழநாடு -5.5.63


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. குணராசா க, யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமிகள், நல்லைக்குமரன் மலர் இதழ் 14- 2006

15. கைலாசபதி.க, ஞானியரின் நட்புறவு-தினகரன் 7.5.63

16. சந்திர மௌலிஸ்வரன், பாரதியார் போற்றும் யாழ்ப்பாணத்துச் சுவாமி யார்? தினக்குரல்-
17.12.2006 24.12.2006 31.12.2006 7.1.2007

17. சிவத்தம்பி.க, இலக்கிய வளர்ச்சியில் இன்னொரு கட்டம்- தினகரன் 7.5.63

18. சிவஞான சுந்தரம், மக்கள் இலக்கிய விழா - ஈழநாடு – 6.5.63

19. ஞானபாஸ்கரன்.க, யாழ்ப்பாணத்துச் சாமியார் பருத்தித் துறையை சேர்ந்தவரே –சுதந்திரன் - 19.5.1963

20. பரசுராம மூர்த்தி, பாரதியாருக்கு இழுக்கேற்படுத்தவா பருத்தித் துறையில் மாநாடு? சுதந்திரன்-5.5.63

21. பருத்தித்துறை பிரதேச மலர்(1999)பருத்தித்துறை, பேராசிரியர் சண்முகதாஸின் மணி விழா மலர் (2001)
நெல்லியடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்துவெளி நாகரிகம் பற்றிய ஆய்வாளர்களின் கருத்துக்கள் - ஒரு மீள் பரிசீலனை

கலைவாணி இராமநாதன்

**ஆய்வுச்சுருக்கம்:**

மிக நீண்ட காலமாக இந்து நதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்களால் உருவாக்கப்பட்டு, வளர்த்தெடுக்கப்பட்டிருந்த நகர நாகரிக வாழ்வின் அடியாகத் தோற்றுவிக்கப்பட்டிருந்த இந்திய சமய முறையானது இந்தோ - கங்கைப் பள்ளத்தாக்கில் இரண்டாவது தடவையாக நகரமயமாக்கல் முறையினைஉருவாக்கித்தந்தஇந்தோ-ஆரியஇனமக்களால்அழித்தொழிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனைஇவ்வாய்வுக் கட்டுரை உறுதிப்படுத்த முயல்கின்றது. ஆனால் திராவிடர்- ஆரியர் என்ற இனவேறுபாட்டினை மட்டும் மையப்படுத்திய வகையில் இந்து நதிப் பள்ளத்தாக்கு நாகரிக வாழ்வின் வீழ்ச்சிக்கும், முடிவுக்கும் ஆரியர் படையெடுப்புக்கள் காரணமா அமைந்திருந்தன என்ற வரலாற்றாசிரியர்களின் கூற்றுக்களை இருக்குவேத கால பாசுரங்களில் இடம்பெற்றுள்ள வரலாற்றுச் செய்திகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இக் கட்டுரை மறுதலிக்க முயல்கின்றது. இருக்குவேத சமய பாசுரங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள வரலாற்றுக் குறிப்புக்களை சிந்துவெளியில் தொல்லியல் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்களுடன் ஒப்பிட்டு சிந்துநதிப் பள்ளதாக்கு மக்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இன்னொருகட்ட பண்பாடே இருக்கு வேத கால இந்துதோ - கங்கைப் பள்ளத்தாக்கு வாழ்க்கை முறையாகும் என இக் கட்டுரை உறுதிப்படுத்துகின்றது. சிந்துவெளி நகர வாழ்விற்கும் வேத கால நாகரிக வாழ்விற்கும் தொடர்பே இல்லையென்று இருந்த காலகட்டம் இன்று விலகி, சிந்து வெளி நாகரிக மக்களின் சமய - சித்தாந்த - தத்துவார்த்த சிந்தனைகளை வெளிப்படுத்தும் ஒரு திறவுகோலாக இருக்கு வேதபாசுரங்கள் இன்று கையாளப்பட்டுக்கொண்டு வரப்படுவதனை பரவலாக காணமுடிகிறது. இக் கருத்தோட்டத்தினை நிறுவுவதாகவே இவ் ஆய்வுக் கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள் :** தகவல்மையம், திறவுகோல், ஆத்மா, உருத்திரன், ஹரியூபா, ஹரப்பா, நாகவழிபாடு, லிங்க வழிபாடு, தாய்த்தெய்வழிபாடு, மத்தியதரைப்பண்பாடு, ரிஷிகள், லிங்க யோனி வழிபாடு, தஸ்யூக்கள், புரந்தரன், ஆரியர்

## 1. அறிமுகம்

இந்திய வரலாற்றிலே திராவிட மக்களதும் அவர்கள் இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஆற்றிய அரும்பெரும் பணிகள் பற்றியும் ஆய்வுகள் இற்றைவரை சரிவர அமையவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் தமிழ் ஆய்வியலாளர் மத்தியிலே கணிசமாக நிலவுகின்றன (வித்தியானந்தன்,சு., *1954*,ப. *13*).

இந்திய உபகண்டத்தில் தமிழரது மூதாதையர்களான திராவிடர்கள் தனிப்பட்ட சால்பினை உடையவராக வாழ்ந்து ஆரியமக்களின் பண்பாட்டு வளர்ச்சிக்கும் பலபல வழிகளில் துணைபுரிந்து இந்தியப் பண்பாட்டினைக் கட்டியெழுப்பியதுடன் இவ்விரு கூட்டத்தாருக்கும் ஒருங்கே உரிய பண்பாடு உருவானது இந்துநாகரிக உருவாக்கத்திற்கு வித்திட்ட பழம்பெரும் நாகரிகங்களில் சிந்துவெளி நாகரிகத்தின் பங்கு தலையாயது. உலகின் காலத்தால் முற்பட்ட நாகரிகங்களில் நாகரிகங்களில் ஒன்றான இந்நாகரிகம் ஸக.மு. 4500 ஆண்டுகட்கு மேற்பட்ட பழமை வாய்ந்துள்ளது. இந்துநதிப் பிரதேசத்தில் (தற்போது பாகிஸ்தானின் பகுதிகளாகஉள்ளவை) நிகழ்த்தப்பட்ட அகழ்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராய்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்கள் இப்பண்பாட்டின் தொன்மைக்கு சான்று பகர்கின்றன.

சிந்துவெளித் தொல்லியல் காட்டிய நகரங்களின் எச்சங்களை ஆராய்ந்த தொல்லியல் ஆய்வாளர் பலரும் இந்தியப் பண்பாடு, நாகரிகக் கூறுகள் பலவற்றிலும் காணப்படும் நம்பிக்கைகள் - குறிப்பாக சிவவழிபாடு, லிங்க வழிபாடு பேரன்னை வழிபாடு, இயற்கை வழிபாடு முதலியவற்றின் மூலக்கூறுகளை அந்நாகரிகத்திலும் கண்டு இனங்காட்டியுள்ளனர். அது மட்டுமன்றி மேற்படி எச்சங்களிற் காணப்படும் எழுத்துக் குறியீடுகளை இந்திய மொழிக்குடும்பங்களில் ஒன்றான திராவிடமொழியுடன் தொடர்பு படுத்தியும் ஆய்வுகள் நடத்தி யிருந்தனர். இவ்வாறு தொடர்பினை நிலைப் படுத்தும் ஆராய்ச்சிகள் சமீபகாலங் களில் வலு வடைந்து வருகின்றன. அத்தகைய ஆய்வுகளின் அடிப்படைத் தரவுகளில் ஒன்றாக இருக்குவேதம் தரும் குறிப்புக்கள் அதிகளவு அறிஞர்களது ஆய்வுகளில் முக்கியத்துவம் பெற்றுவருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சிந்துவெளி நாகரிகத்தின் தொன்மையினை அதன் சமய நம்பிக்கைகளை பண்பாட்டு அம்சங்களை உறுதிப்படுத்தும் எழுத்திலக்கிய ஆதாரங்கள் அறியப்படவில்லை என வாதிடும் காலம் மறைந்து இருக்கு வேதமே சிந்து வெளிப் பண்பாட்டின் தொன்மைக்கான மூலாதாரமாக அமைகின்றதோ என்னும் ஆய்வினை அறை தூண்டிவிடுவதாகவும் அமைந்துள்ளன.

பண்டைக் காலத்தில் மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர்? அவர்களது கலாசாரம், பண்பாடு எப்படி அமைந்திருந்தது? அவர்களது உணவு, உடை, தொழில், கல்விமுறை பற்றி ஏதாவது எழுதி வைத்திருந்தால் அதனைப் புரிந்து கொள்ளலாம். வரலாறு என்னும் வடிவில் இல்லாவிடினும், இலக்கியம் இதிகாசம், கல்வெட்டு தரும் சமிக்ஞை மூலமும் இவை கிடைக்கத்தான் செய்கின்றன. இந்தவகையில் இருக்குவேதமே இந்தியாவின் மிகப் புராதன இலக்கியப்படைப்பாகவுள்ளது. இது சுமார் கி. மு. 3500 வருடப் பழமை வாய்ந்த தென்பர் (பரமேஸ்வரன், எம்.பி., 1990, ப. 19).

எகிப்திய நாகரிகம் தொடர்பான இலக்கியத் தரவுள் கி.மு 5000 வருடப் பா;மை கொண்டவை. ஆனால் சிந்துவெளி நகரங்களில் அத்தகைய தஸ்தாவேஜீக்கள் கிடைக்கவில்லை. 5000 வருடங்கட்கு முன் எழுதுவதனால் ஏதாவதொரு மொழியில் எழுத வேண்டும். ஆனால் பேசும் மொழிகள் முதல் முதல் உச்சரிப்புடன், வாய்மொழிகளாய் மட்டும் இருந்திருக்க வேண்டும். அதனை வரமொழி என்கிறார்கள். அது உருவம் பெற சுமார் 5000 ஆண்டுகள் சென்றிருக்கலாம் (பரமேஸ்வரன், எம்.பி., 1990, ப. 19).

அதுமட்டுமன்றி அவர்கள் விட்டுச் சென்ற கருவிகள், பாத்திரங்கள், அணிகலன்கள், பதுமைகள், கல்லறைகள் மூலமும் அவர் கள் வாழ்க்கை, பண்பாடு பற்றி அறிய உதவுகின்றன. இத்தகைய ஆய்வு 'விஞ்ஞானம்' எனில் தொல்பொருள் விஞ்ஞானத்தின் உத வியுடன் பயிலும் வரலாறு பண்டைக்கால வரலாறு எனப்படும் இது எழுதப்பட்ட வரலாற்றினை விட காலத்தைவிடப் பன் மடங்கு நீண்டு செல்வதாகும். பூமிக்கடி யிலிருந்து பழங்கால வரலாற்றினை அறியும் முறை ஏற்பட்டு 200 வருடங்கள் தான் ஆகின்றன. கிரேக்க, ரோமானிய, எகிப்திய மொசப் பெத்தேமிய சிந்துநதி நாகரிகங் களில் நிலவிய புராதன நாகரிகங்கள் பற்றி இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டதை தொல் பொருட்களிலிருந்துதான் அறிய முடிந்தது. ஒரு பாத்திரம், எலும்புத்துண்டு, நகை இவற் றினை வைத்து 3500, 1500 வருடப் பழமை வாய்ந்தது என காலப்பா;மையினை ரேடியோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்ரிவிற்றியைப் பயன்படுத்தியே அறிந்து கொண்டனர். இவ்வாறு காலப்பழமையினைக் காலநிர்ணயம் செய்து காட்டும் முறை 'ரேடியோகார்பன் காலம் அளத்தல்' எனக் கூறப்பட்டது (பரமேஸ்வரன், எம்.பி., *1990*, ப. *27*).

*1921 - 22* இல் சிந்து நதிக்கரைநாகரிகம் வெளிப்படுத்தப்பட்டபோது களிமண்ணால் செய்யப்பட்ட படிமங்களும், சில முத்திரைகளும் கல்வெட்டெழுத்துக்களுமே ஒட்டுமொத்தமாகக் கிடைத்தன. எழுத்திலக்கிய ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. சிந்துவெளி முத்திரைகளில் காணும் லிபி வியாபார சம்பந்தமான கணக்குகள் - புரியமுடியாத வரிவடிவங்கள் எனப்பட்டன. அந்தநிலையில் மொகஞ்சதரோ ஹரப்பா நாகரிகங்களின் ஆரம்ப வடிவங்கள் கி.மு *2500 - 3000* ஆண்டுகட்கு முற்பட்டவை என அறியப்பட்டன. ஆனால் பிரமாண்டமான நகரங்களையும் கட்டிடத் தொகுதிகளையும் கொண்ட அவர்கள் நாகரிகம் முற்றிலுமாக வீழ்ச்சி அடைந்து காணப்பட்டது. இக்காலகட்டத்தில்தான் ஆரியமக்களுடைய வருகை அமைகின்றது.

**சிந்து முத்திரைகள் காட்டும் மொழி பற்றிய ஆய்வுகள்**

'ஆரிய மக்கள் இந்தியாவுக்கு வரமுதலே சிந்துநதிப் பள்ளத்தாக்கில் மெசப்பெடேமியருக்கு சமகாலத்தவராகிய ஒரு நாகரிக இனத்தவர்கள் வாழ்ந்தனர். அவர்கள் தந்தைவழிச்சமுதாயத்தவரான ஆரியர்களைவிட நாகரிகத்தில் உயர்ந்தவராயிருந்தனர். அவர்களை கி.மு. 1800 அளவில் ஆரியர் தோற்கடித்து அங்கு தமது அதிகாரத்தை நிலைபெறச் செய்தனர் என ராகுல் சாங்கிருத்தியாயன் என்ற அறிஞரும் குறிப்பிட்டுள்ளனர். சிந்துவெளி அழிவிற்குப் பின்னர் அதே இடங்களில் ஆரியர்கள் குடியிருந்தனர் என்பதனை பல அறிஞர்களும் எடுத்துக்காட்டியுள்ளனர் (ராகுல் சாங்கிருத்தியாயன்., *1985*, ப. *02*).

இங்கு 'திராவிட'என்னும் பதம் ஒரு குறிப்பிட்ட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஓரினத்தவரையும், 'ஆரியர்' என்னும் பதம் இன்னோர் மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இனத்தவரையும் குறிக்கும் பதமாகக் கையாளப்படுகின்றது. 1970ஆம் ஆண்டு முதலே சிந்துவெளி எழுத்துக்கள் கணினிக் கருவி மூலம் ஆராயப்பட்டு வந்துள்ளது. தொறொஸொவ் தலைமையிலான ரஷ்ய ஆய்வுக்குழுவினர் இவ் எழுத்துக்களின்படி இது திராவிட மொழியினருக்குச் சொந்தமான நாகரிகம் எனக் குறிப்பிட்டுள்ளனர். (சிவசாமி, வி., *1973*, பக். *06 - 07*).

எனினும் சிந்துவெளி நாகரிகத்தை உருவாக்கல் பற்றிய தொன்மை, முடிவு, அழிவு அதனை ஆக்கிய மக்கள், இனம்,மொழி என்பன கடந்த 50 வருடங்கட்கும் மேலாகக் கேள்விக்குரியனவாகவே இருந்து வருகின்றது. இதற்கு முற்றுப்புள்ளி வைப்பது போன்று தற்போது 15 வருடங்களாகவரும் ஆய்வுகள் அவற்றைத் தெளிவுபடுத்த முயல்கின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது சிந்துவெளி மக்கள் ஆரியரா? ஆரியரல்லாதவரா அல்லது திராவிடமக்களா? என்பதேயாகும். இந்தியத் துணைக்கண்டத்திலும், ஐரோப்பிய நாடுகளில் சிலவற்றிலும் உள்ள தொல்பொருள் ஆய்வுத்துறை அறிஞர்களும், மொழியியல் நிபுணர்களும் இத்திசைநோக்கித் தமது ஆய்வுகளைத் திருப்பியுள்ளமை அதன் ஆய்விலே பயன்தரும் தகவல்கள் வெளியிடப்படக் காரணமாயுள்ளன.

20ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த ஆய்வுகளில் ஒன்று சிந்து வெளி நாகரிகம் பற்றியதாகும். கோபன்கேகனில் உள்ள ஆய்வுக்கட்டுரை ஒன்றில் இந்தநாகரிகம் திராவிடநாகரிகம்எனகம்பியூட்டர்மூலம்அதன் எழுத்துக்களை ஆராய்ந்து அறிவித்துள்ளன. இதே முடிவினை தமிழக அறிஞர் ஐராவதம் மகாதேவனும் துணிந்து வெளியிட்டுள்ளார்

உசாத்துணைப்பகுதி
யாழ்ப்பாணப் பொது நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Astoparpolo, *1969'* Mahadevan,I, *1977 - 1978*, PP-32 - 42). சிந்துவெளி எழுத்துக்களைப் படிப்பதில் ஹெரஸ் பாதிரியார் முதல் ஐராவதம் மகாதேவன் வரை பலரும் பீனிஷ் குழுவினரும் சோவியத் ஆய்வுக் குழுவினரும் தமது கணிப்பொறி ஆய்வில் சிந்துவெளி எழுத்து திராவிடம் என உறுதிசெய்தனர். பேராசிரியர் இந்திரபாலாவும் ஆனைக்கோட்டை செப்பேட்டின்படி சிந்துவெளி தமிழ் - பிராமி என இரு மொழி முத்திரையாகலாம் என்றார் (மதிவாணன், இரா., *1991*, ப. *52*).

பாக்கிஸ்தானின் சிந்துப்பள்ளத்தாகில் வாழும் மக்கள் சிந்துமொழி பேசுவோர் பற்றி இஸ்லாமாபாத் பல்கலைக்காழக துணைவேந்தர் தமது ஆய்வில் "சிந்துமொழி திராவிட மொழிகளில் ஒன்று அது இலக்கண அமைதியிலும் மொழியியல் அமைப்பிலும் திராவிட மொழிகளை ஒத்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். சிந்துவெளி எழுத்தினை அறிதல் வெற்றிபெறாது என்ற நிலையில் அதனை அவரது கட்டுரை மாற்றியமைத்தது (Allan,DR., *1962*).

வரலாற்றிலே பல இனங்கள் தமது தாய் மொழிகளைக் கைவிட்டுப் பிறமொழிகளை ஏற்றுள்ளனர். இந்து ஆரிய திராவிட மொழிகளிலே விற்பன்னரான பேராசிரியர் பறோ (Burrow) இருக்கு வேதத்தில் 25 திராவிட மொழிச் சொற்கள் இருப்பதாகக் காட்டியுள்ளார். (Burrow,T., *1968*, ப. *309*). அவரது ஆய்வினையே Dr. அவானவின் ஆய்வு உறுதி செய்வதாக உள்ளது. எனவே ஆரியமக்கள் வருகைக்கு முன்னரே திராவிடர் மத்தியதரைப் பிர தேசத்திலிருந்து இந்தியா வந்திருப்பர். இரு இனத்தாருக்கும் இனம், கலாசாரம் தொடர்பாகப் போர்கள், கலகங்கள் நிகழ்ந் திருக்கலாம். இதன் எதிரொலிகளையே இருக்கு வேதத்திற் காண்கின்றோம் என அறிஞர் பலர் கருதுகின்றனர். (Burrow,T., *1968*, ப. *309*). ஆதலால் இருக்குவேதம் தரும் சிந்துவெளி நாகரிகம் பற்றிய தகவல்களை அறிவது மிகவும் இன்றியமையாததாகும்.

சரித்திரம் எழுதுவது இருக்குவேதகால ரிஷிகளின் நோக்கமல்ல. இயற்கையைப் போற்றி வழிபடும் அக்கால மக்கள் அதன் தொடர்பால் 'நிலவியல்' புவியியல் போன்ற விடயங்களையும் ரிக்வேதத்தில்ப குறிப்பிடபட்டுள்ளனர். அதனாலேயே ரிக்வேதத்தின் மதிப்பு பன்மடங்காக உயர்ந்து விட்டது. தந்தையும் மகனுமான திவோதாணும் அதாணும் ரிக்வேதத்தின் தலைசிறந்த கதாநாயகன் என்பர் ராகுல்ஜி. (ராகுல் சாங்கிருத்தியாயன்., *1991*, பக். *6-7*). அந்தக்காலம் பற்றி மிகவும் மதிப்புள்ள செய்திகளை ரிக்வேதம் தெரிவிக்கின்றது. சுமார் *3000* ஆண்டுகளின் வரலாறும் இதில் பத்திரமாக பாதுகாக்கப்படுகின்றது. ஆரியருக்கு முந்திய வரலாறு பற்றி எழுத்து வடிவத்தில் இல்லை எனக் கூறுவது முற்றிலும் உண்மையல்ல. ஏனெனில் மொகஞ்சதரோவிலும் ஹரப்பாவிலும் ஆயிரக்கணக்கான முத்திரைகள் கிடைத்துள்ளன. அவற்றிலே எழுத்துக்களுமுள்ளன. எனவே அவற்றினை வாசிக்க முடியவில்லை என்பது இன்றைய தலைமுறையினரினரின் குறைபாடே தவிர அதனைச் சாட்டாக வைத்து சிந்துவெளிகளின் வரலாற்றினை இருட்டடிப்புச் செய்வது வரலாற்றினைத் திரிபுபடுத்துவதாகும்.

மொகஞ்சதரோ மக்கள் தாமிர, பித்தளை யுகத்தினையும் கடந்து செல்வம் கொழித்த மாளிகைகளில் சுகாதாரமான வாழ்வினை மேற்கொண்டனர். சிந்துவெளி நகரங்களின் சிறப்பான காலம் கி.மு 2500 எனப்படும். அதற்குப் பின் சில ஆயிரம் வருடங்களின் பின்னரே சிந்துப் பிரதேசத்தில் ஆரிய மக்கள் பிரவேசித்தனர். ஆரியருக்கும் பழய சிந்து மக்களுக்குமிடையே நடந்த சண்டைகளே தேவாசுர யுத்தமாக ரிக்வேதத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளன (ராகுல் சாங்கிருத்தியாயன்., *1991*, ப.*7*).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் ஹரப்பா கலாசார முடிவு கி.மு 1500 ஆரியர் வருகையுடன் முடிகிறதென மாட்டிமர் வீலர் பறோ, ஸ்ருவட் பிகொற் போன்றோரும் வற்புறுத்தியுள்ளனர். எனவே ரிக்வேத ஆரியர்கள் கிராதகர், ஆதிவாசிகளுடன் போரிடவேண்டிய நிலை ஏற்பட்டமை பற்றிய தகவல்களை அறிவதும் அவசியமானது.

**இருக்குவேதம் தரும் போர்ச் செய்திகள்**

சிந்து நகரங்களின் வீழ்ச்சி பற்றி குறிப் பிடும்போது பூமியில் ஏற்பட்ட இயற்கை யான பௌதீக அழிவும், இயற்கையுடன் ஏற்பட்ட போராட்டமும் கூட ஒரு காரணமா கலாம். இயற்கை அழிவுகட்கு எதிராக நிற்கும் பலமும் குறைந்து சென்றிருக்கலாம். இறுதியில் ஆரியர் வருகையுடன் அவர்களது தாக்குதல்களும் சேர்ந்து கொண்டன. அடுக்கடுக்காக அமைந்து காணப்படும் சில உரையாடல்களும் இத்தகைய செய்திகளுடன் ஒத்துப் போவதாக இருக்கின்றன மோதல் பயந்து ஓடுதல் - ஆகியவற்றின் அடையாளங்களும் டசின் கணக்கான எலும்புக் கூடுகள், வாள்வெட்டில் காயமடைந்த மண்டை யோடுகள் தெருக்களில் அறைகளில் செத்துக் கிடந்த எலும்புக்கூடுகளுடன், முறைப்படி அடக்கம் செய்யப்பட்ட எலும்புக் கூடுகளும் காணப்பட்டன. மிகக் குறுகிய காலத்தில் நடைபெற்ற ஒரு யுத்தத்தை அங்கு காண முடிகிறது. ரிக்வேதம் இந்திரனை புரந்தரன் என அழைக்கப்படுகின்றது. புரந்தரர் என்பதன் பொருள் நகரங்களைத்தகர்ப்பவன் என்பதாகும். எனவே அவர்கள் தகர்ந்த நகரங்களில் ஒன்றின் பெயர் 'ஹரியூபா' என்றுள்ளது. இது இன்றைய ஹரப்பாவாக இருக்க வேண்டும். (பரமேஸ்வரன், எம்.பி., சிவசாமி, வி., 1973, பக். 21-23).

ரிக்வேதம் 6ஆம் மண்டலத்தில் 765 பாடல்கள் உள்ளன. இதில் பெரும்பகுதி பரத்துவாஜரால் பாடப்பட்டது. அவர் சப்தரிஷிகளில் ஒருவர் (6.3.2) இவற்றிலே ஆரிய மக்களுடன் போரிட்ட வீரர்கள் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. ரிக்வேதம் 2.16 4.30 6.27 7.99 ம் சூக்தம் ஆகியவற்றில் காணப்படும் பாடல் கள் தருகின்ற செய்திகள் ஹரப்பா நாகரிகப் புதிருக்கு விடையளித்துள்ளன. எனக் கருதலாம். ரிக்வேதம் 2ம் மண்டல 400க்கு மேற்பட்ட பாடல்கள் கிருத்ஸமதன் ஒருவனே பாடியவையாக உள்ளன. அவர் தாசர்களை - தஸ்யுக்களை அதிகமாக வெறுத்தவனாகக் காணப்படுகின்றான். (ஜம்புலிங்கம் பிள்ளை. எம்.ஆர்., 1977).

ஆரிய மக்கள் சிந்து இனமக்களை விரோதிகளாக ஆரம்பத்தில் நடத்திய பாடல் களில் கருப்புதாசர்களை இந்திரன் அழித்தான் (2.20.7) எனவும் இந்திரன் கரியமேனியைக் கொண்டவர்களைக் கொன்றான் எனவும் (1.130.8) தாசர்களின் இணையற்ற அரசன் சம்பரனை திவோதாஸ் வெற்றி கொண்டான் எனவும் (சிவசாமி, வி., 1973, ப.39).

சம்பரனின் 99 கோட்டைகளை அழித்தது பற்றி கிருத்ஸமனும் (2.19.4) இந்திரனும் 50 கருப்பர்களையும் அவர்களது புரங்களையும் (கோட்டைகள்) அழித்ததாக (4.16.13) ரிஷிவாமதேவரும் இந்திரன் தாசதளபதி பிப்ருவுடன் நடைபெற்ற யுத்தத்தில் ரிஷிஸ்வா என்ற ஆரியவீரனைக் காப்பாற்றினான் என (1.51.5) ஆக்ரஸரும் குறிப்பிட்டுள்ளனர். சம்பர மன்னர் யுத்தம் போல பத்து மன்னர் யுத்தமும் பேர்பெற்ற யுத்தமாகும். இந்திரனும் வருணனும் பத்து மன்னர்களால் தாக்கப்பட்ட சுதாஸை சேர்ந்து காப்பாற்றினர் (7.83.6.7) என்கிறார் வசிட்டர். மற்றோர் இடத்திலும் (7.83.8, 7.18.5) மற்றோர் சுதாஸை இந்திரன் முதலிய தேவர்கள் காப்பாற்றினர் என விரிவான தகவல்களைத் தந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தாஸமன்னன் வரசிகளையும் அவனது மக்களையும் உத்விரஜ நாட்டில் நடந்த யுத்தத்தில் திவோதாஸ் என்ற ஆரியத் தலைவன் கொன்றான் என காக்கினும், வசிட்டரும் கூறுவர். (6.42.21, 7.99.5) அவர்களது கூற்றிலிருந்து நூறாயிரம் வீரர்களுடன் சேர்ந்து வரசினன் கொல்லப்பட்டான் என்னும் போது பெரும் எண்ணிக்கையில் தாசர்கள் போரில் கொல்லப்பட்டார்கள் என அறியமுடிகிறது. (ராகுல் சாங்கிருத்தியாயன்., 1991, ப.107). இதனை கிருத்ஸமனும் (2.14.6) (2.12.14) வாமதேவரும் கூடக் குறிப்பிட்டுள்ளனர். (4.30.15) ஹரியூபா என்ற இடத்தில் ஆரியத்தலைவன் வரசினனை யும் புதல்வர்களையும் கொன்றதாக 6ஆம் மண்டலத்தில் வரும் குறிப்புக்கள் கூறுகி ன்றன.

மேற்படி கூறப்பட்ட தகவல்களின்படி ரிக்வேத உரையாசிரியர்களான சாயனர், வெங்கட மாதவன், வில்சன், கிரிபித் போன்றோர் ஹரியுபாவைத் தலைநகராகக் கொண்டு வரசினன் ஆண்டான் எனவும் கருதமுடியும் என்பர். ஹிரியூபா நகரத்தில் வரசினனும் அவனது சந்ததியினரும் அழிக்கப்பட்டனர் ஏனையோர் அடிமையாக்கப்பட்டனர் (6.27.6.7) என ஒரு குறிப்பும் காணப்படுகின்றது. ஹரியூபா என்ற சொல் ஹரப்பா என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம் என சாயனர் உரை கூறும் (Rigveda Samhita, Vol.III 6-8). ஹரியூப்பியா (Haryupiya) நகரில் வரசிகனின் மகன் விருசிவானுடைய முன்னணிப் படையினை இந்திரன் கொன்றான் (6.27.5) அதல்விஜய நாட்டில் பணமே குறியாகக் கொண்ட தாசர்கள் வரசினனையும் சம்பரனையும் இந்திரன் அடித்தான். (6.47.21.) என்ற செய்திகளில் இருந்து தாசர்கள் என்பது திராவிடர்கள் என ஒரு சாராரும், கிரதாகர்கள் (மலை சாதியினர்) ஆகலாம் என ஒரு சாராரும் கருதுகின்றனர். ஆனால் கிரதகர் கருப்பரல்ல மஞ்சள் நிற மங்கோலியர். இன்றும் திபேத்தின், முண்டா ஆதிவாசிகளில் இச்சாயலைக் காணலாம். ஆரியர்களோ இருவரையும் சேர்த்தே தாசர்கள், தஸ்யூக்கள் என வர்ணித்தனர் (ராகுல் சாங்கிருத்தியாயன்., 1991, ப.7). எப்படியிருப்பினும் ஆரி மக்களது வருகைக்கு முன்னர் வடமேற் இந்தியாவில் ஆரியரல்லாத சிந்துவெளிப் பூர்வீகக் குடிகள் வாழ்ந்தனர் என்பது புலனாகின்றது அவர்களை ஆரியர்கள் தாஸர்கள், தஸ்யூக்கள் என அைா;த்தனர் என்பது புலனாகின்றது. அவர்களை ஆரியர்கள் தாஸர்கள், தஸ்யூக்கள் என அழைத்தனர் என்பது மேற்கூறியவற்றிலிருந்து தெளிவாகின்றது.

அவ்வாறாக சிந்தவெளி மக்களது கலாசார வீழ்ச்சிக்கு யுத்தமும் ஒரு காரணம் எனவும் மேற்போந்த செய்திகளால் அறியப்படுகின்றது. மேலும் அவர்களது பொருளியல் வளர்ச்சி பற்றி சுருக்கமாக நோக்கினால் அவர்கள் பெரும் செல்வந்தர்கள் எனவும் ஆய்வாளர் எடுத்துக் காட்டினர். இது பற்றிய குறிப்புக்களையும் ரிக்வேதம் தரத்தவறவில்லை. தாசர்கள் 'பணி' எனப்படும் செல்வந்தர்களாகவும் விளங்கினர். அவர்கள் வணிகராக செல்வந்தராக ஆரியரல்லாதவராகவும் கூறப்பட்டுள்ளனர். (ராகுல் சாங்கிருத்தியாயன்., 1991, பக்-79-85)ரிஷி கிருத்ஸமன் கூற்றுப்படி 'பணி'களின் செல்வத்தை ஆரியஞானிகள் அடைந்தான் (2.24.5) பணிகளின் பசுக்களையும் செல்வத்தையும் இந்திரன் திருடிச் சென்று கிருத்ஸமரிடையே விநியோகித்தான் என (5.34.7) சம்வரணர் கூறுகிறார். இவ்வாறு பணிகள் (வியாபாரிகள்) பற்றி (1.33.3, 6.51.14) பல குறிப்புக்கள் உள்ளன. இவற்றினால் சிந்துவெளி மக்கள் செல்வத்தில் சிறந்திருந்தனர் என்பதும் பதிவாகியுள்ளது. 'பணி' இனத்தவர்கள் செல்வச் செழிப்புடன் இருந்தவர்கள். அவர்களுடன் நிறையப் பசுக்கள் இருந்தன. அவர்களிடம் ஆரியர்கட்கு அவ்வப்போது சச்சரவுகளும் நடந்துள்ளன. 'பணி' என்றால் பண்ய (விற்பது) ஆப்பண் (கடைவீதி) வணிக்(பணியா,வியாபாரி) எனப் பல்வேறு சொற்கள் தோன்றின. ரிக்வேதம் பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்தவர்கள் பற்றி பல்வேறு இடங்களில் பேசுகின்றது. 'பணி இக மக்கள் 'ஆட்சியை இா;ந்தாலும் உயர்ந்த கலாசாரத்தைக் கொண்ட சிந்து இனத்திற்கு மிகவும் பொருத்தமானரே' இப் பணி இனத்தவரே சிந்துவெளி நகரத்தின் பிரதிநிதிகள் என்பர் ராகுல்ஜி. (ராகுல் சாங்கிருத்தியாயன்., *1991*, பக்-*79-85*)

**சிந்து மக்களின் சமய கலாசாரம்**

அடுத்து மேற்குறிப்பிட்ட சிந்து இன மக்களின் சமய கலாசாரம், பண்பாடு பற்றியும் ரிக்வேதம் தரும் செய்திகளைச் சுருக்கமாக ஆராய்வது அவசியமாகும். ஆரிய மக்கள் தமது பகைவர்களை 'தஸ்யூக்கள்' எனக் குறிப்பிடுகின்றனர். தாசர்கள் மலைவாழ் ஆதிவாசிகள் என்பது பொதுவான கருத்து. அவர்களை பிற்கால ஆய்வாளர்கள் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு திராவிடரது முன்னோடிகள் என்பர். இந்தக் கருப்பு தாசர்களை இந்திரன் அழித்தான் (*2.20.7*) இந்திரன் கருநிறம் கொண்டவர்களைக் கொன்றான் (*1.130.8*) வசிட்டர் அவர்களைச் சிஷ்னாதேவர் எனக் (*7.21.5*) குறிப்பிடுவார் சிஷ்ணதேவர் என்போர் லிங்க யோனி வழிபாடு உடையவர். சிவலிங்கத்தை வழிபடுவோர் மலையில் வாழ்பவர்(*10.99.3*) அவர்களால் பூசிக்கப்பட்ட கற்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. எனவே லிங்கயோனியை வழிபடுபவர் ரிக்வேத சத்தியத்தை அழித்துவிடுவாரோ எனவும் கவலைகொண்டனர். அதனை வடக்கு விரோதிகளின் மாயாஞாலம் மந்திரதந்திரமென்றும் (*7.18.21*, *2.9.10.11*) எனவும் அவர்கள் பயந்தனர். இந்திரன் கருப்பர்களின் கற்கோட்டைகளை அழித்தான் என கிருத்ஸமத் (*2.20.8*) திவோதாஸ் தாஸர்களுடன் ஜீவமரணப் போராட்டம் நடத்தியபோது குறிப்பிட்டுள்ளார். (சிவசாமி. வி., *1973*, பக்-*99-100*)

சிவலிங்கத்தை வழிபடுவோர் மலையில் வாழ்பவராவர் (*10.99.3*) இவ்வாறு ரிக்வேதகால மக்கள் ஆரம்பநிலையில் புராதன இந்தியப் பா;ங்குடிமக்களை பகைவர்களாகக் கருதியமை ரிக்வேத பாடல்களால் அறியப் படுகின்றது. காலப்போக்கில் இரண்டு இனக் குழுவினருக்குமிடையே உறவுமுறை, புரிந்துணர்வு, ஒத்துழைப்பு என்ற பண்புகள் மேலோங்கியபோது இருவரதும் சமய வழிபாடுகள், பண்பாடுகள் என்பனவும் ஒன்றிணைந்து வளர்ச்சி கண்டமையினை பிற்பட்ட வேதமான யசுர் வேதகாலத்தில் காணமுடியும். யசுர் வேதகால பாடல்கள் காட்டும் ருத்ர சிவவழிபாடு, ஸ்ரீருத்திரம் பகுதி, நமசிவாய என்னும் சிவமந்திரம் போன்ற யாவும் ரிக்வேதகாலம் பகைமையுடன் பார்க்கப்பட்ட ருத்திரக் கடவுள் யசுர் வேதகாலம் தலைமைக் கடவுளாக உயர்த்தப்பட்ட நிலையினைத் தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளன. இத்தகைய பண்பாட்டு கலாசார வளர்ச்சிகளின் கூட்டுறவு, பரிமாணங்கள் என்பவற்றின் அம்சங்களாகவே பிற்காலம் இதிகாசபுராணங்கள் பெருவளர்ச்சி கண்டன. இவற்றிலே வேதகால ரிஷிகள் சிவனைப் பரம்பொருளாகவும், ஸ்ரீகிருஷ்ணனை அவதாரமூர்த்தியாகவும் பாடிப்பரவிய நெறிமுறைகள் பெரு வளர்ச்சியடைந்தன.

எனவே 'சிந்துவெளி நகரங்களை ஆரியமக்கள் அழித்தனரே தவிர அவர்களது நாகரிகங்களை அல்ல' என்பது இதனால் வெளிப்படுகின்றது. பெருங்கற் பண்பாட்டு வளர்ச்சி தொடர்பாக இரும்பினையும் செம்பினையும் சமகாலத்தில் இணைத்துப் பாவித்த ஒரு பண்பாடப்க அக்காலம் விளங்குகின்றது. ஆரிய சமூகம் உபயோகிக்காத 'மட்பாண்ட அலகினை' அடித்தளமாகக் கொண்டே தீபகற்ப இந்தியாவில் இப்பண்பாடு முகிழ்த்திருந்தால் இவை தென்னாட்டுப் பண்பாட்டு மூலக்கூறுகளுடன் அடையாளம் காணப்படுகின்றது. எனவே பெருங்கற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடு. திராவிடருக்குரியதென்பதனை முதன் முதல் ஆணித்தரமாக எடுத்துக்காட்டியவர் Christopvon furer Haim ehdosh என்பாராகும். (கிருஷ்ணராசா. செ., *1999*, *ப.88*). திராவிடரும் மலைவாசிகளும் ஒருவரா என்ற ஆய்வும் சில சமயங்களில் வரும்காலத்தில் எழுந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. எது எப்படியாயினும் சிந்துவெளி இனமக்களின் பண்பாடு, வழிபாடுகள் தீபகற்ப இந்தியாவின் முதலாவது நாகரிகத்தின் திறவுகோல் என்பது மட்டுமன்றி புராதன இந்துக்களின் புகழ்பூத்த நாகரிகம் என்பதனை மேற்குறிப்பிடும் செய்திகள் அறிவிக்கின்றன என்பதில் ஐயமில்லை. சிந்துவெளி நாகரிகமும்சரி வேத கால நாகரிகமும் சரி இரண்டுமே அந்திய நாகரிகங்கள் இந்துக்களின் நாகரிகங்கள் என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது.

ரிக்வேதத்தில் சிந்துவெளி மக்களின் வாழ்க்கைமுறையும், வழிபாட்டுச்சின்னங்களும் ஒருவித கசப்பு மனப்பான்மையுடன் நோக்கப்பட்டுள்ள சாயல் தெரிவதனை எந்த ஆய்வாளரும் மறுக்கவில்லை என்பது ஓர் வரலாற்றுண்மையாகும். காலப்போக்கில் சிந்துவெளிப் பண்பாட்டில் எந்தெந்த அம்சங்களை ஆரியமக்கள் வெறுத்தனரோ அவையாவும் முன்னுரிமை பெற்று முழு நிறைவுடன் ஆரிய மக்கள் கலாசாரத்தில் முழுமைபெற்றமையினை பிற்பட்ட வேதகால இலக்கியங்கள் துல்லியமாகத் தெரிவிக்கின்றன. அதிலும் குறிப்பாக ரிக்வேதத்தில் சிவவழிபாடு சக்திவழிபாடு என்பன பெரிதும் பிரபல்யம் பெற்றிராத காலம். ஆனால் ஹரப்பா கலாசாரத்தில் தாய்மை வழிபாடு பிரபல்யம் பெற்றிருந்தது. ஆனால் பிற்பட்ட வேதநூல்களில் உதாரணமாக யசுர்வேதம். சத்ருத்திரியம், சாமவேதம் அதர் வேதம் - பசுபதி வழிபாடு, உபநிடதங்களில் பிரமம் - நிர்குணம், சகுனம் இப்படியான சிந்தனை வளர்ச்சியில் சுவேதஸ்வதரம் உருத்திரசிவனை பரப்பிரம்மமாகவும் விளக்கியது.

உருத்திர சிவவழிபாட்டினை விளக்கிய மார்ஷல் என்பார் குறிப்பிட்ட சிவன் திரிசூலம் எருது ஏனைய விலங்குகளின் கூட்டத்துடன் சேர்ந்த யோகியின் அடையாளமுடைய முத்திரை வேதங்களில் வர்ணிக்கும் பசுபதியான உருத்திரசிவனே என தக்காரே என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார் இதனை பலரும் ஏற்பர். (தக்காரே. க. வா., *1990*, *ப.01*) முந்துசிவன் (proto - Type of Shiva) முத்தலையுடைய சிவன் நடராஜராகவும் வழிபடப்பட்டவர் என மாஷல் கூறுவர். அத்துடன் சிந்துவெளியில் லிங்க வழிபாடும் தலைசிறந்ததாக மார்சல் மட்டுமன்றி தற்கால ஆய்வாளர்கள் பலரும் ஏற்கின்றனர். லிங்க வழிபாடு தொடர்பான தற்கால ஆய்வுகள் அதன் தொன்மையினை வலியுறுத்துவனவாக வெளிப்படுகின்றன.

சிந்துவெளியில் சிவலிங்கவழிபாடு நிலைபெற்றிருந்ததாகக் கூறும் மார்ஷலின் குறிப்பினை ரிக்வேதம் சிஷ்ணதேவர்களை வழிபடுவோர் எனக் கேலியாகக் கூறியதுடன் ஒப்பிடலாம். அவர்களது சமய வழிபாட்டு முறைகள் தமக்கு தேவையற்றவை எனவும் ரிக்வேதக் கூற்றுக்கள் அமைந்தன. அதனைப் தக்காரே போன்றவர் ஏற்கமறுத்தாலும் (Marshal Sri John., *1930*, *p.52*) இத்தகைய கருத்து ஆதாரமற்றது என்பதனை பயசேவிஸ் (Fair Services. W. 1971) என்பார் தகுந்த ஆதாரத்துடன் நிறுவியுள்ளார். இவ் ஆய்வாளரால் ஹரப்பாவில் பானை ஒன்றில் பத்திரமாக வைக்கப்பட்ட லிங்கமும் அதனுடன் சேர்ந்த ஆவுடையாரும் கண்டுபிடிக்கப்பட்டமை லிங்க வழிபாட்டின் தொன்மையினை மேலும் உறுதிப்படுத்துவதாக அமைந்தது. (சிற்றம்பலம், சி.க., *1985*, *ப.84*).

சிந்துவெளி சிவலிங்க வழிபாடு பற்றி புதிய கற்கால நாகரிகம் பற்றி ஆராய்ந்த Allchin B என்பாரும் ஆல்சின் F.R. போன்றோர் வாயிலாகவும் இங்கு காணப்படும் ஆண் பெண் உருவங்களும் அருவுருவ நிலையில் உள்ள லிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடும் காணப்பட்டதாகவும் செய்திகள் உள்ளன. தென்னகத்திலும் புதிய கற்கால மக்கள் லிங்கவழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர் என்பதனை புறுஸ்பூற் என்பாரும் கர்நாடகமாநிலம் பெலரி மாவட்டத்தில் புராதன கல்லில் வடித்த சிவலிங்கச் சிற்பங்கள் காணப்படுகின்றன எனக் கூறுகின்றார். (சிற்றம்பலம், சி.க., 1991, பக்.29,30,51).

இவற்றால். சிந்துவெளி மக்கள் வழிபாட்டினை புராதன அம்சங்களைத் தாமதாக்கியும் கொண்டனர். இவற்றில் குறிப்பாக சிவன், சக்தி, லிங்கவழிபாடு, உருவவழிபாடு, பக்திமார்க்கம் என்பன படிப்படியாக வேதஇலக்கியங்களான பிராமணங்கள், உபநிடதங்கள், இதிகாச புராணங்களில் ஏற்கப்பட்டு சங்கமித்தன என்பதனை சுனில்குமார் சட்டர்ஜி, ஜடம்தார் போன்றோர் நன்கு விளக்கியுள்ளனர். இதனால் புராதன வேதகலாசார அம்சங்கள் எவைஎனக் கண்டுபிடிப்பதே மிகச் சிரமமான காரியம் என தனிநாயகம் அடிகளும் குறிப்பிட்டுள்ளார். இவ்விதமாக கலாசார ரீதியில் சிந்துவெளிக் கலாசாரம் மத்தியதரைப்பண்பாடுகளைக் கொண்டதாக இருப்பதனையும் அறிஞர் பலர் எடுத்துக் காட்டியுள்ளனர். (சிற்றம்பலம், சி.க., 1985, பக்.142 - 145).

அடுத்து தாய்த்தெய்வ வழிபாட்டினை நோக்கினால் புதிய கற்காலமான விவசாய சமூகத்தில் நிலமகளைத் தெய்வமாக உருவகப் படுத்தி வணங்கும் வழிபாடும் காணப்பட்டது. புராதனகாலம் பெண் வெறும் இனவிருத்தியின் அம்சமாகவே மதித்து வழிபடப்பட்டாள். சிந்துவெளித் தாய்த் தெய்வ முத்திரைகளில் சிறிவத்ஸவ என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகளில் ஒன்று தலைகீழாக தத்தம் பெண்ணின்(வயிற்றிலிருந்து)கர்ப்பத்திலிருந்து கிளம்பும் செடி, மற்றொன்று ஆண் பெண் உருவங்களில்ஒருகையில்கொழுவும்மறுகையில் பிடிமண்ணும் உள்ள வடிவமுமாகும். உா;வர் சமூகத்தில் இது இனவிருத்தியுடன் கலப்பையும் மண்ணும் விவசாய பொருளாதாரத்தையும் புலப்படுத்தும் குறிப்பாகும். இவை யாவும் இனவிருத்தியில் பங்குகொண்ட அன்னையின் சிறப்பென்பர். (Sri Vatsava., M.C.P., 1978). இவ்வாறே தலைவிரிகோலத்துடன் தலையில் கொம்புடனும் ஒரு பெண், மரத்தின் அருகில் முழந்தாளிட்ட பக்தனும், ஆடும். ஏழு பெண்வடிவங்களும் உள்ளன. இதனைத் துர்க்கையும் சப்தமாதர்களும் எனவும் வியாக்கியானம் கொடுப்பர். இத்தகைய பெண் தெய்வங்க.ள எகிப்திய நாகரிகங்களிலும் உண்டு. வேதகாலம் இடம் பெற்ற பெண் தெய்வங்களில் உமை, அதிதி, பிருதுவி என்பன குறிப்பிடத்தக்கவையாகும் வைகறைப் பொழுதை உஷையாகவும் சூரியன் சிவனின் காதலனாகவும் சிவனே சராசரங்களின் தலைவனாகவும் அங்கு வர்ணிக்கப் படுகின்றான். இதுவும் இனவிருத்திக் கோட்பாட்டைப் புலப்படுத்துவதாகவும் கொள்ளலாம் (சிற்றம்பலம், சி.க., 1985, பக்.84 - 85).

மேற்காசிய நாடுகளில் புராதன காலத்தில் தாய்வழி உரிமைச் சமூக அமைப்பு நிலவியது. திராவிட சமூகத்திலும் இம்முறை காணப்பட்டது. இன்னும் திராவிட இந்தியாவில் இம்முறைகளின் எச்சங்கள் உள்ளன. நாகவழிபாடு, லிங்கவழிபாடு மேற்காசிய நாடுகள் பலவற்றிலும் காணப்பட்டன. ரிக்வேத ஆரியர் லிங்க வழிபாட்டினைக் கண்டித்துள்ளமை மேற்கூறப்பட்டது. தாய்கடவுள் வணக்கமும் மேற்காசியா, ஹரப்பா, தென்னிந்தியாவிலும் சிறப்புப் பெற்றது. மா - என்பதும் உமா என்னும் பதத்தினை நினைவூட்டும். சுமேரி யர்களின் கோயில் அமைப்புக்கள், பூசை முறைகள், அமுதுபடைத்தல் என்பன இன்னும் தென்னகக் கோயில்களின் வழக்கங்களை நினைவூட்டுகின்றன. (சிவசாமி.வி., 1973, பக்.9 - 12). குறிப்பாக தாய்த் தெய்வவழிபாடானது பிற்பட்ட வேதகால மக்களிடையேயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் பெற்றமையினை தேவீசூக்தம், துர்க்கா சூக்தம், ஸ்ரீசூக்தம்கேன உபநிடதம் ஆகிய வற்றிலிருந்து உணரமுடியும்.

இறந்தோரை அடக்கம் செய்யப்பட்ட முறை, கல்லறைகளின் அமைப்புமுறைகளை அவதானித்தால் அம்மக்கள் ஓர் உயர்ந்த நாகரிகமுடையவர்கள் எனவும் திராவிட மொழிகளைப் பேசினர் எனவும் முடிவு ஏற்படும். கற்காலங்களில் நிலவிய கிரியைகள், நம்பிக்கை மரபுகள், ஒரு மனிதனைச் சிறப்பாக அடக்கம் செய்யும்விதம் என்பனவற்றை காணும்போது ஒருவனது உடல் அழிவதே தவிர ஆத்மா அழிவதில்லை என்ற நம்பிக்கை யின் வெளிப்பாடுகள் போல் அவை தோன்று கின்றன.(சிற்றம்பலம், சி.க., *1991*, ப.*53*).

**முடிவுரை**

இதுவரை கூறப்பட்டவற்றிலிருந்து சிந்துப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மனிதர் மொசப்பட்டேமியா, எகிப்திய மக்களைப் போல் தனித்தனிக் கடவுளரை வழிபட்டனர் என்பதும். வெளிப்படுத்தப்படுகின்றன. ஆனால் ஆரிய வர்த்தகத்தில் வாழ்ந்த ஆரிய மக்கட்கு அவை எல்லாம் பிடிக்கவில்லை. குறிப்பாக சிந்துமக்களின் இலிங்க வழிபாட்டையே கேலிபேசியவர்களாக முற்பட்ட வேதகால மக்கள் இருந்தனர் என்பதும் ரிக்வேதம் தரும் செய்திகளில் இருந்தே பெறப்படுகின்றன.

சைவமும் சிவவழிபாடும் வேதகாலத்தில் தான் தோன்றியது என்று சொல்பவர்கள் கூட சிந்து நிலப்பரப்பில் வாழ்ந்த மக்களின் தெய்வமான சிவனுடன் வைதிக சமயத்து உருரத்தின் இணைக்கப்பட்டான் என்பதனை ஒப்புக் கொண்ட பின்பும் சிந்துவெளி நாகரிகம் பண்பாடு தொல்பொருட்கள் என்பன காட்டும் பண்பாடு கற்பனைச் சித்திரம் என்று சொல்வது மிகவும் வேடிக்கையானது. இருக்குவேத உருத்திரன் சிவனுக்கு முற்பட்டவன் என்று சொல்லும் அறிஞர்கள் இன்று பலர் உள்ளனர். ஹரப்பா என்னும் நகரமே ரிக்வேதம் கூறும் ஹரியூபா (RV.*6.27.5*) எனவும் அறிஞர் ஏற்றுள்ளனர். (Nilakanda Sastri,K.A., *1963*, p.*18*). சிவன் என்னும் சொல் திராவிடச் சொல் இது பிற்காலத்தில் வடமொழி அறிஞராலும் ஒப்புக்கொள்ளத்தக்க வகையில் விளக்கப்பட்டுள்ளன.

சிந்துவெளியில் உயர்நாகரிகத்தைக் கட்டி யெழுப்பிய மக்கள் ஆரியரல்லாதார் அவர்கள் திராவிடர்கள் (கிராதகர்கள், தேவவாசிகள்) அவர்களது தலைநகரங்களுள் ஒன்று ஹரியூபா எனப்படும் ஹரப்பா என்பதும் அவர்களது மொழி திராவிட மொழிக்குடும்பம் சார்ந்தது என்பதுவும் இருக்குவேதம் தரும் அகச்சான்றுகளிலிருந்தே பெறப்பட்டுள்ளன. அதனை மார்ஷல் முதல் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் வரை(சித்தலிங்கையா, ரி.பி., *1998*, பக்.*10 -11*, *1-2*). ஆராய்ந்து கூறியுள்ளனர் எ ன்பதும் இங்கு புலப்படுகின்றது. அதனால் சிந்துவெளி மக்கள் திராவிடரா அல்லாதாரா என்பதனைவிட அவர்கள் மத்தியதரைக் கடற்பிரதேசத்திலிருந்து இந்தியாவிற்கு வந்த புராதன இனமக்கள் என்பது ரிக்வேத பாடல்களால் உறுதிசெய்யப்பட்டிருப்பது சிந்துவெளி நாகரிகம் பற்றிய கற்பனைச் சித்திரத்தினை உறுதிப்படுத்தும் முக்கிய ஆவணமாகவும் கருதப்படக்கூடிய வலிமை வாய்ந்தது எனலாம். எனவே சிந்துவெளி நாகரிகமானது இந்தியமக்கட்குச் சொந்தமான உலகின் முன்னோடியான நாகரிகமாகவும் இந்து நாகரிகத்தின் முன்னோடியாகவும் முதல் மூத்த நாகரிகமாகவும் விளங்கிய பெருமையினை இருக்குவேதபாடல்கள் உடன்பாடாக அன்றி - எதிர்மறை மொழிகளால் வலுப்படுத்தியிருப்பது திக்வேதமே சிந்துவெளியின் ஓர் சிறந்த இலக்கிய ஆதாரமாக ஏன் கொள்ளக்கூடாது. ஏன் சிந்தனையை தோற்றுவிப்பதாக உள்ளது. சிந்து வெளி நாகரிகத்திற்கான இலக்கிய ஆதாரம் ஆரிய மக்களுடைய இருக்குவேதத்திலேயே கிடைத்துவிட்டது என இனிப் புதிய வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதும் காலம் எளிதில் கைகூடலாம் என்பதே எதிர்கால இந்துக்களின் வேணவா ஆகும்.

1990 வரை சிந்துளி நாகரிகத்திற்கும் இந்து நாகரிகத்திற்கும் தொடர்பில்லை என்றகாலமே இன்று மாறிவருகின்றது. சிந்துவெளி நாகரிகம் பற்றிய தகவல்கள் 1980களிலிருந்து ஆய்வுகளாக வெளிவரத் தொடங்கிவிட்டன. இருபத்தைந்து வருடங்களில் சிந்துவெளி நாகரிகத்திற்கு இருக்குவேதமே திறவுகோலாக - ஆதார இலக்கியமாக அமைந்துள்ளமையினை மேற்குறித்த அறிஞர், ஆய்வாளர் தகவல்கள் வெளிக்கொணர்வதற்காகவுள்ளன. 1990 இல் T.V தகாரே என்பார் சிவவழிபாடு சிவயோகி வழிபாகடுகெட்கு எந்த ஆதாரமுமில்லை என எழுதும் போது 1999 இல் ராகுல் சாங்கிருத்தியாயன் என்பார் இருக்குவேதமும் சிந்துவெளி நாகரிகத்தின் தகவல்மையமே பல என்பதனைப் பல தகவல் தேடல்களுடன் வெளிக்கொணர்ந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். (ராகுல் சாங்கிருத்தியாயன்., 1991, பக்.4 - 12). இவை பற்றிய ஆராச்சிகள் மேலும் மேலும் ஆய்வுப்பொருளாக இருப்பதனால் புதிய தகவல்களைப் பொறுத்திருந்து அவதானிக்க வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


தமிழ்

1. வித்தியானந்தன்.சு. தமிழர்சால்பு. தமிழ் மன்றம். கண்டி. 1954.

2. சுப்பிரமணியன். நா. கௌசல்யா சுப்பிரமணியன். இந்தியச் சிந்தனைமரபு. சவுத் ஏசியன் புக்ஸ். சென்னை. 1993.ப. பரமேஸ்வரன்.எம்.பி. சிந்துவின் கதை. சென்னை. 1990.

3. ராகுல் சாங்கிருத்தியாயன். இந்து தத்துவ இயல். நியூசெஞ்சுரி புக்ஹவுஸ். சென்னை. 1985.

சிவசாமி. வி. ஆரியர் ஆதிவரலாறும் பண்பாடும். இலங்கை. 1996.

4. சிவசாமி. வி. திராவிடர் ஆதிவரலாறும் பண்பாடும். யாழ்ப்பாணம். 1973.

குருமூர்த்தி. சா.. தொல் பொருளாய்வும் தமிழர் பண்பாடும் சென்னைப் பல்கலைக்கழகம். 1974

5. சிற்றம்பலம். சி.க. பண்டைய தமி;கம். யாழ்ப்பாணப் பல்கலைக்கா;கம். 1991

6. மதிவாணன். இரா.சிந்துவெளி எழுத்தின் திறவு. சைவ சித்தாந்த நூறபதிப்புக்கா;க வெளியீடு. 1991

ராகுல் சாங்கிருத்தியான். ரிக்வேதகால ஆரியர்கள். தமிழில்: ஏ.ஜி. எத்திராஜலு. சென்னை. 1991.

7. சிவசாமி. வி. திராவிடர் ஆதிவரலாறும் பண்பாடும். யாழ்ப்பாணம். 1973

கிருஷ்ணராசா. செ. இலங்கை வரலாறு. பாகம் 1. யாழ்ப்பாணம். 1999

8. தக்காரே. க. வா. டாக்டர் சைவதத்துவம் (தமிழில்) கா.ஸ்ரீ.ஸ்ரீனிவாசன். சென்னை. 1990.

9. சி.க சிற்றம்பலம்.. 'தாய்மை வழிபாட்டின் தொன்மை'. சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள். சிவத்தமிழ்ச் வொ்லவி மணிவிழாச்சபை வெளியீடு தெல்லிப்பழை. 1985

10. சிற்றம்பலம். சி.க பண்டைய தமிழகம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 1991

சைலாசபதி. க. பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும். நியூ செஞ்சரி புக்ஹவுஸ். சென்னை. 1991. பக் 6 - 10

11. லீலாவதி இராமநாதன்.. கைலாசநாக் குருக்கள். கா. இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகள். பெருமாட்டி நினைவுப் பேருரை. 1985.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. சித்தலிங்கையா, ரிபி, சைவசயத் தோற்றமும் வளர்ச்சியும், சென்னை, 1998

13. மதிவாணன், டாக்டர், இரா. சிந்துவெளி எழுத்தின்திறவு, சென்னை, 1991

ஆங்கில நூல்கள்

1. Wheeler, M., The Indus Civilization, 1947 New Delhi.

2. Gorden Childe, The Aryans, 1970, Oxfort University Press, Londan.

3. Astoparrolo, Seppo Koskenniemi and others Decipherment of the proto Dravidians Inscsiptions of the Indus Civilization, Copenhagen,1969,2 Part.

4. Mahadevan, I., 'Recent Advances in the study of Indus Script', 'Puratattva, No. 9, 1977 - 78.

5. Allana, Dr, Vice Chancellor of Islamabad University, pakistan, Antiguity of S.indhi Research paper)

6. Borrow, T. Collected papers or Dravidian Lingustic, Annamalai Nagar, 1968

7. Rigveda Samhita with Syanachenya Commenty, Vol.III, 6-8, Mandalas. Rigveda by venkata madhava, prt IV,V,VI

8. Marshal, Sir John., Mohanjadro and Indus Civilization, Vol. I, London 1921-1930

9. Vedic ege, History and Culture of the indian Peple/ Vol.I Bharathiya Vidyabhavan/ Bomby1965 Plate VII

10. Vats M. S., Excavations at Harrappa, Calcutta, 1940.

11. Srivatsava, M.C.P., 'Mother Goddess in indian Art', New Delhi, 1978.

12. Nilankanda Sastri, K.A., Devolopment of Religion in south india, 1963.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்ஸ்கிருத காவியவியல் நூல்களுள் அதிகமான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை வரைவிலக்கணப்படுத்தும் குவலயானந்தம் - ஓர் ஒப்பியலாய்வு

S. நவநீதகிருஷ்ணன்

**ஆய்வுச்சுருக்கம்**

*சம்ஸ்கிருத காவியவியல் நூல்களுள் குவலயானந்தம் அதிக எண்ணிக்கையான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை விளக்கியுள்ளது என்பதை ஒப்பீட்டு ரீதியில் நிறுவுதலை நோக்காகக் கொண்ட இவ்வாய்வானது விவரண முறைமையினை அடிப்படையாகக கொண்டுள்ளது. சாத்ருஸ்யகர்ப்ப வகை சார்ந்த ஒற்றுமைத் தன்மையை அடிப்படையாகக் கொண்ட அலங்காரங்களாக முப்பத்தியொரு அலங்காரங்கள் கூறப்படுகின்றன. அவையாவன உபமா, உபமேயோபமா, அநன்வய, ஸ்மரண, ரூபக, பரிணாம, ஸந்தேஹ, ப்ராந்திமத், உல்லேக, நிஸ்ச்சய, அபஹ்நுதி, உத்பிரேஷா, அதிசயோக்தி, துல்யயோகிதா, தீபக, ப்ரதிவஸ்துாபமா, த்ருஷ்டாந்த, நிதர்சனா, வ்யதிரேகா, ஸஹோக்தி. விநோக்தி, சமாசோக்தி, பரிகரா, ஸ்லேஷ, அப்ரஸ்துதப்ரசம்சா, அர்த்தாந்தரநியாஸ, பர்யாயோக்த, வ்யாஜஸ்துதி, ஹேது, அனுகூல, ஆக்ஷேப என்பனவாகும். இவற்றுள் நிஸ்ச்சய, அனுகூல ஆகிய இரு அலங்காரங்களைத் தவிர ஏனைய இருபத்தொன்பது அலங்காரங்களையும் குவலயானந்தம் விளக்குவதால் அதிக எண்ணிக்கையான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை குவலயானந்தம் வரைவிலக்கணப்படுத்தியுள்ளமை ஒப்பீட்டு ரீதியில் நிறுவப்பட்டுள்ளது.*

திறவுச் சொற்கள் - சம்ஸ்கிருத இலக்கணம். சம்ஸ்கிருத காவியம். அலங்காரங்கள். த்வனிக்கோட்பாடு. நியாயமூலங்கள்

**சம்ஸ்கிருத காவியவியல் - அறிமுகம்**

சம்ஸ்கிருத காவியவியல் என்பது மிகப்பரந்து விளங்கும் பலகோட்பாடுகளின் தொகுதியாக அமைவது. இச்சிந்தனையின் தோற்றுவாய் குறித்து நோக்கும் போது சமஸ்கிருத காவியவியல் நூல்களின் தோற்றத்தினைத் தோற்றுவாயாகக் கொள்வதா அல்லது படிப்படியாக உருமாற்றம் பெற்ற அல்லது சிந்தனை முதிர்ச்சியின் விளைவாலேற்பட்ட மாற்றங்களை உள்ளடக்கிய கோட்பாடுகளின் அடிப்படையாக அமைந்த எண்ணங்களின் தோற்றத்தைத் தோற்றுவாயெனக் கொள்வதா? என்பது ஆய்வுக்குரியதாகும். கலைநோக்கில் கோட்பாடுகள் உணர்வுடன் தொடர்புபட்டவையாகக் காணப்படுவதால் உணர்வின் அடிப்படையில் ஏற்பட்ட எண்ணங்களின் விளைவே கலைக்கோட்பாடுகளின் உருவாக்கம் என்ற சிந்தனை பொருத்தமானதாகவே காணப்படுகிறது. மனிதனின்சிந்தனையுட்புகுந்த இக்கோட்பாடுகள் செம்மையாக்கப்பட்ட பின் எழுத்துருப்பெற்றிருக்க வாய்ப்பிருப்பதால் "தோற்றம்" என்ற ஆழ்ந்த பொருள் தரும் சொல் எண்ணங்களின் தோற்றத்தையே உணர்த்தி நிற்பதாகக் கொள்வதில் தவறில்லை. இவ்வகையில் இத்தகைய எண்ணங்கள் எப்போது தோற்றம் பெற்றன என்பது அடுத்துச் சிந்திக்க வேண்டிய விடயமாகிறது. சமஸ்கிருத காவியவியலாளர்கள் தத்தமது கோட்பாடுகளை வலியுறுத்த காவியம் என்றால் என்ன? காவியத்தின் நோக்கம் அல்லது பயன் என்ன? காவியத்தின் அடிப்படையான பண்புநலன்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவை? காவியத்தின் உயிர் அல்லது ஆத்மா எது? காவியத்தின் கருப்பொருளாக அமையத்தக்கது எது? போன்ற வினாக்களுக்கு விடைகூறும் வகையில் சிந்தித்திருப்பதை அவதானிக்கையில் காவியத்தை உருவாக்கிய கவிஞர்களின் உள்ளங்களிலும் இத்தகைய சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் இருந்த காரணத்தினால் தான் அவர்களால் கட்டுக்கோப்பான காவியங்களைப் படைக்க முடிந்தது என்ற முடிவுக்கு வரலாம். இதற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் காவியவியலாளர்கள் இவ்வினாக்களைத் தத்தமது கோட்பாடுகளுக்கு உறுதுணையாகப் பயன்படுத்தினர் என்பதையும் நாம் அறியலாம்.

இவ்வகையில் காவ்யம் ஒன்றின் அழகு அலங்காரம் குணம் ஆகிய இரண்டிலுமே தங்கியுள்ள போதிலும் இது தவிர அட்சரசங்காதம், சோபா, உதாஹாரண, த்ருஷ்டாந்த, ப்ரபத்தி, ஹேது, சம்சய, நிருக்த, சித்தி, அதிசய, அனன்வய, மனோரத, குணகீர்த்தன, சாரூப்ய, ப்ரியோக்தி ஆகிய சிறப்புடைய பண்புகள் காவியத்திற்கு அழகு சேர்ப்பனவாகக் கொள்ளத்தக்கன. (Warder, 1989) குறிப்பாக அலங்காரம் காவியத்தின் இன்றியமையாத அம்சம் என்ற சிந்தனை பலராலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அக்னி புராணத்தில் அலங்காரங்களோடு கூடியதும் குற்றமற்றதும், இடையீடு இல்லாத அழகிய சொல்வரிசையை கொண்டதுமான ரசிகனுக்கு மகிழ்ச்சி ஊட்டுவதே காவியமாகும் என கூறப்படுகின்றது.

संक्षेपाद्वाक्यमिष्टार्थ व्यवच्छिन्नापदावलि।
काव्यं स्फुरदलंकारं गुणवद्दोषवर्जितम्।

Agnipurana CCCXXXVII 6-7

வாமனர் அலங்காரங்களோடு கூடியதே காவியம். தோஷமற்ற சௌந்தர்யமே அலங்காரம் என்றும் கூறுகின்றார்.

काव्यं ग्राह्यमलंकारात्। सौन्दर्यमलंकारः।
स दोषगुणालंकारहानादानाभ्याम्।

Vamana, *Kavyalankarasutra 1.I.1-3*

போஜர் அலங்காரங்களால் அழகுபெற்ற ரசத்தோடு கூடிய குற்றமற்ற நற்குணங்கள் நிறைந்ததே காவியம் என்கிறார்.

निर्दोषं गुणवत्काव्यमलंकारैरलंकृतम्। रसान्वितं......।

Bhoja, *Sarasvatikanthabharana*, I-7

மம்மடர், காவியம் குற்றமற்றதாக சொல்லும் பொருளும் இணைந்து அலங்காரங்களால் அழகு பெற்று விளங்க வேண்டும் என்கிறார்.

तददोषौ शब्दार्थौ सगुणावनलंकृती पुनः क्वापि।

Mammata, *Kavyaprakasa*

ஹேமசந்திரர், வித்தியாநாதர், வாக்படர், ஆகியோரும் மேற்குறித்த கருத்துடன் ஒத்த நிலையில் காவியத்தை வரைவிலக் கணப்படுத்துகின்றர்.

अदोषौ सगुणौ सालंकारौ च शब्दार्थौ काव्यम्।

Hemachandra, *Kavyanusasana*

गुणालंकार सहितौ शब्दार्थौ दोषवर्जितौ काव्यम्।

Vidyanatha, *Prataparudrayasobhusana*

साधुशब्दार्थसन्दर्भं गुणालंकारभूषितम्।
स्फुटरीतिरसोपेतं काव्यं कुर्वीत कीर्तये।

Vagbhata, *Vagbhatalankara* I -2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில் எழுச்சிபெற்ற பல்வேறு காவியவியல் கோட்பாடுகளின் மூலக் கோட்பாடாக நாம் பொதுவாக அலங்காரக் கோட்பாட்டை கூறமுடியும். நாடகத்தின் வளர்ச்சியுடனே ரசக்கோட்பாடு எழச்சி பெறுகிறது. உரைநடை இலக்கியங் களின் எழுச்சியுடன் ரீதி மற்றும் குணக் கோட்பாடுகள் எழுச்சிபெறலாயின. இவற்றுக்கிடையிலான ஆழந்த தன்மை தொடர்பான ஆய்வின் வெளிப்பாடாக த்வனிக் கோட்பாடு அமைந்துள்ளது. பிற்காலத்தில் த்வனிக்கோட்பாட்டிற்கு மேலதிகமாக ஔசித்தியம் எனப்படும் பொருத்தப்பாடும் வக்ரோக்தி என்ற அழகும் இணைந்து காவியத்திற்கான அடிப்படை பண்புகளைச் செப்பனிட்டன. மிக அதிகமான காவியவியல் நூல்கள் கோட்பாடுகளை வலியுறுத்தவும், மறுத்துப் பேசவுமாக எழுச்சி பெற்றன. இதனால் சம்ஸ்கிருத காவியவியல் பரந்து விரியலாயிற்று. இவ்வகையில் காவியவியலாளர்கள் தாம் எடுத்துக்கொண்ட இலக்கியப்பொருளே இலக்கியத்திற்கு உயிரோட்டம் அளிப் பதென விவாதித்திருந்தாலும் இவர்களும் அலங்காரங்களுக்கு தனியிடம் அளித்துள்ளனர். எனவே அலங்காரங்களின் முக்கியத்துவத்தை இவர்களாலும் கூட மறுக்கமுடியவில்லை யென்பது தெளிவாகிறது. (சிவச்சந்திரன், 1989)

**சம்ஸ்கிருத அலங்காரங்களின் வகையீடு**

காவியவியல் வளர்ச்சியில் தனியிடம் பெறுகின்ற அலங்காரக் கோட்பாட்டிற்கமைய அலங்காரங்கள் முப்பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவையாவன சப்தாலங்காரங்கள், அர்த்தாலங்காரங்கள், மிஸ்ராலங்காரங்கள் என்பனவாகும். இவற்றுள் அலங்காரத்தை விளக்குகின்ற பெரும்பாலான காவியவியலாளர்கள் முதலிரு வகையினையே முதன்மைப்படுத்திக் கூறுவர். குறிப்பாக சப்தாலங்காரங்களை விட அர்த்தாலங்காரங்களே நுணுக்கமான வேறுபாடுகளைக் கொண்டு பலவாறு வகைப்படுத்தப்படுகின்றன.

காவிய வியலாளர்கள் தர்க்க ரீதியாகவும் விரிவாகவும் சம்ஸ்கிருத அர்த்தாலங்காரங்களை வகைப்படுத்தியுள்ளனர். அவற்றுள் முதன்மையான இரு வகையீட்டு முறைமை களாக பின்வருவன அமைகின்றன.

1. வித்யாநாதரின் ப்ரதாபருத்ரியத்தியம் கூறும் வகைப்பாடு
2. ருய்யகர் விஸ்வநாதர் வித்யாபூஷனர் ஆகியோரால் பின்பற்றப்பட்ட வகைப்பாடு

வித்யாநாதரின் ப்ரதாபருத்ரியத்தியம் கூறும் வகைப்பாட்டிற்கு அமைவாக 55 அர்த்தாலங்காலங்கள் சாதர்மிய மூலம், அத்யவசாய மூலம், விரோத மூலம், வாக்யநியாய மூலம், லோகவியவகார மூலம், தர்க்கநியாய மூலம், சிருங்கலாவைச்சித்ய மூலம், அபஹ்னவ மூலம், விசேஷ ணவைசித்திரிய மூலம் என ஒன்பது பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

ருய்யகர் விஸ்வநாதர் வித்யாபூஷணர் ஆகிய காவியவியலாளர்களால் இவை எட்டு பிரதான வகைகளாகப் பகுக்கப்பட்டன. அவையாவன சாத்ருஸ்யகர்ப்பம், விரோதகர்ப்பம்; சிருங்கலாபந்தம், தர்க்க நியாயமூலம், வாக்யநியாயமூலம், லோக நியாயமூலம், கூடார்த்தப்ரத்திமூலம், சம்ஸ்லேஷ மூலம் ஆகியனவாகும். இவ்வகையீடானது குறித்தஅலங்காரங்களுக்குரிய பண்புகளை அடிப்படையாகக் கொண்டதாக அமைவதைக் காணமுடிகிறது.

இவ்வாய்வினை மேலும் தெளிவுபடுத்தும் வகையில் இரண்டாவது வகையீட்டின் உட்பிரிவுகளை விரிவாக நோக்குமிடத்து இவற்றுள் சாத்ருஸ்யகர்ப்பம் என்ற முதலாம் வகை சார்ந்த ஒற்றுமைத் தன்மையை அடிப்படையாகக் கொண்ட அலங் காரங் களாக முப்பத்தியொரு அலங்காரங்கள் இனங்காணப்படுகின்றன. அவையாவன உபமா, உபமேயோபமா, அநன்வய, ஸ்மரண, ரூபக, பரிணாம, ஸந்தேஹ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ராந்திமத், உல்லேக, நிஸ்ச்சய, அபஹ்னுதி, உத்பிரேஷா, அதிசயோக்தி, துல்யயோகிதா, தீபக, ப்ரதிவஸ்துாபமா, த்ருஷ்டாந்த, நிதர்சனா, வ்யதிரேகா, ஸஹோக்தி. விநோக்தி, சமாசோக்தி, பரிகரா, ஸ்லேஷ, அப்ரஸ்துதப்ரசம்சா, அர்த்தாந்தரநியாஸ, பர்யாயோக்த, வ்யாஜஸ்துதி, ஹேது, அனுகூல, ஆஷேப என்பனவாகும்.

இரண்டாவதாக அமையும் விரோதகர்ப் பவகையைச் சார்ந்தனவாக பன்னிரண்டு அலங்காரங்களை ஆசிரியர் கூறுகிறார் அவையாவன. விரோதம், விபாவனா, விசேஷோக்தி, அதிசயோக்தி, அசங்கதி, விஷமம், சமம், விசித்திரம்அதிகம் அன்யோன்யம் விஷேம், வ்யாகாதம் என்பனவாகும். சிருங்கலாபந்தம் வகையுள் நான்கு அலங்காரங்களை ஆசிரியர் கூறுகிறார். அவையாவன காரணமாலா, ஏகாவளி, மாலாதீபகம் உதாரம் ஆகியனவாகும். காவ்யலிங்கம், அநுமானம் ஆகிய இரண்டும் தர்க்க நியாயமூலவகையீட்டினுள் இடம்பெறுகின்றன. வாக்யநியாய மூலவகையீட்டினுள் எட்டு அலங்காரங்கள் இடம் பெறுகின்றன. அவையாவன யதாசங்க்யம், பர்யாயம், பரிவிருத்தி, பரிசங்க்யா, அர்த்தாபத்தி, விகல்ப்பம், சமுச்சயம், சமாதி என்பனவாகும்.

ஆறாவது லோக நியாயமூலவகைசார்ந்த அலங்காரங்களாக ஏழு அலங்காரங்கள் இடம் பெறுகின்றன. அவையாவன ப்ரத்யானீகம், ப்ரதீபம், மிலிதம், சாமான்யம் தக்குணம் அதத்குணம் உத்தரம் என்பனவாகும். கூடார்த்தப்ரத்திமூலவகைசார்ந்த அலங்காரங்களாப் பதின்மூன்று அலங்காரங்கள் கூறப்படுகின்றன. சூஷ்மம், வாயஜோக்தி, வக்ரோக்தி, ஸ்வபாவோக்தி, பாவிகம், உதாத்தம், ரசவத், ப்ரேயஸ், ஊர்ஜஸ்வி, சமாஹித, பாவோதயம், பாவசக்தி, பாவசபலதா ஆகிய அலங்காரங்களே அவையாகும். இறுதியாக அமையும சம்ஸ்லேஷ மூல வகையில் ஸம்ஸ்ருஷ்டி, சங்கர ஆகிய இரு அலங்காரங்களுமே இடம் பெறுகின்றன.

**ஆய்வின் முக்கியத்துவம்**

அலங்காரக்கோட்பாட்டினைமையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்ஸ்கிருத காவியவியல் கோட்பாடுகளில் ஆரம்ப கோட்பாடுகளாக கொள்ளத்தக்கது அலங்காரம், குணம் ஆகிய இரண்டுமேயாகும். பின்பு வக்ரோக்தி த்வனி, போஜகத்துவ கோட்பாடுகள் எழுச்சி பெற்றன. பிற்காலத்தில் அலங்காரக் கோட்பாட்டுடன் ரசம் ரீதி, த்வனி, வக்ரோக்தி, ஒளயுச்சிய அனுமிதி, ஆகிய கோட்பாடுகள் பரந்து எழுச்சி பெற்றன. (Mukundamadava Sarma, 1968) காவியம் ஒன்றை விளங்கிக் கொள்வதற்கான அல்லது அழகுபடுத்துவதற்கான அடிப்படையான அம்சம் என்ன என்பது தொடர்பான வினா பாமகரால்பின்வருமாறுவரையறுக்கப்பட்டது. “ பெண்ணின் முகமானது ஆபரணங்கள் இன்றி பிரகாசிக்காது அதேபோல் ரூபகம் முதலான அலங்காரம் இன்றி காவியம் அழகுபெறமாட்டாது. பாமகரின் இக்கருத்தின் சப்தாலங்காரங்கள், அர்த்தலங்காரங்கள் ஆகிய இரண்டும் மையப்படுத்தப்படுகின்றன. வாமனரின் குணம், ஆனந்த வர்த்தனரின் த்வனி ஆகியன அலங்காரங்களே என்பது ஆய்வுக்குரிய கருத்தாகும். (Nobel, 1925)

பலரால் படிப்படியாக வளர்த்தெடுக்கப் பட்டுள்ள அலங்காரக் கோட்பாட்டின் முக்கிய அம்சமான அலங்காரங்களை மிகவிரிவாக பகுப்பாய்வு செய்து அதிக அலங்காரங்களை வரைவிலக்கணம் செய்து நுணுக்கமான எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்கியவர் அப்பையதீட்சிதர் ஆவார். இவரது குவலயானந்தம் ஜயதேவர் எழுதிய சந்திராலோகத்தின் வழிநூலாக இருந்த போதிலும் அதனைவிட அதிகமான 15 அலங்காரங்கள் உட்பட சுமார் 115 அலங்காரங்களை வரைவிலக்கணப்படுத்தி விளக்குகிறது. இவரது சிந்தனைகள் 16ம் நூற்றாண்டுக்குரியனவாக கருதப்படுகின்றன.ஜ1ஸ இவ்வகையில் இவ்வாய்வானது குவலயானந்தம் ஏனைய காவியவியல் நூல்களோடு ஒப்பிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அர்த்தாலங்கார வகையில் ஒன்றான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை அதிகமாக வரைவிலக்கணப்படுத்தியுள்ளதென்பதை ஒப்பீட்டு ரீதியில் நிறுவும் வகையில் இவ்வாய்வு முதன்மைபெறுகிறது.

**ஆய்வின் நோக்கம்**

ஏனைய காவியவியல் நூல்களோடு ஒப்பிடும் போது குவலயானந்தம் அதிக எண்ணிக்கையான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை வரைவிலக்கணப்படுத்துகிறது என்பதை ஒப்பீட்டு ரீதியில் நிறுவுவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். சம்ஸ்கிருதக் காவிய வியல் கோட்பாடுகளுள் அலங்காரக் கோட்பாட்டின் முதன்மையையும் அலங்காரக்கோட்பாட்டின் வளர்ச்சியில் அப்பையதீட்சிதரின் குவலயானந்தத்தின் வகிபாகத்தை வெளிப்படுத்துதல் இதன் துணை நோக்கங்களாகும்.

**இலக்கியமீளாய்வு**

சம்ஸ்கிருத காவியவியல் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. அவற்றுள் P.V.Kane, S.K.De, V.Ragavan, Kuppuswamisastri, K.Krishnamoorthy, Keith ஆகியோரின் ஆய்வுகள் மிக ஆழமான பங்களிப்பை வழங்கவல்லன. இவர்களுள் முன்னோடியான இந்திய அறிஞரான P.V.Kane காவியவியலின் ஒவ்வொரு கோட்பாடுகள் தொடர்பாகவும் வரலாற்று ரீதியாக விரிவாக ஆராய்ந்து அவற்றின் வளர்ச்சியினை ஆதார பூர்வமாக நிறுவியுள்ளார். இலங்கையைச் சேர்ந்த விஜயவர்த்தன 1970 களில் மேற்கொண்ட ஆய்வில் சமஸ்கிருத காவியவியல் கோட்பாடுகளான அலங்காரம், குணம், ரீதி ரசம், த்வனி, வக்ரோக்தி, ஔச்சித்யம் போன்ற கோட்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்துள்ளார் இதில் குறிப்பாக பயன்பாட்டு நிலையில் இருக்கும் அலங்காரங்கள் கொள்கை ரீதியில் பாமகருடன் ஆரம்பமாகி படிப் படியாக உத்படர், தண்டி, போன்றோரால் வளர்த்தெடுக்கப்பட்டு அதன் சீரானதும் செழுமையானதுமான எழுச்சி பண்டிதராஜ ஜெகந்நாதரின் ரசகங்காதரத்துடன் சற்று குறைவடைந்த நிலை காணப்படுவதையும் விளக்கிக் கூறுகிறார. (Vijayavardhana , G,1970)

வீரதுங்க என்பவரால் 1969ல் மேற்கொள்ளப் பட்ட ஆய்வொன்று சமஸ்கிருத காவியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து ஆராய்கிறது. காவியத்தின் தோற்றம் கவிதை உருவாக்கத்தின் மீது அலங்கார, ரஸ, வக்ரோக்தி, ஆகிய கோட்பாடுகள் கொண்டிருந்த ஆதிக்கம் குறித்தும் அது பேசுகின்றது. ருத்ரதாமனின் கிர்னார் சாசனம், காரவேலனின் வராதிகும்பா சாசனம், சமுத்ரகுப்தனின் அளகாபாத் சாசனம், வீர சேனனின் கல்வெட்டு, மண்டசோரிலுள்ள வத்ஸபட்டியின் கல்வெட்டு ஆகியவற்றிலுள்ள கவிதைப் பண்புகள் குறித்தும் விளக்கியுள்ளார். (Weerathunge , S ,1969)

மற்றொரு ஆய்வாக அமைவது கமகேடொன் விஜயவர்த்தன என்ற அறிஞரால் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப்பட்ட ஆய்வுக்காக மேற்கொள்ளப்பட்ட "முற்கால சிங்களக்கவிதை இலக்கியங்களில் சமஸ்கிருத அலங்கார சாஸ்திரங்களின் செல்வாக்கு" என்ற தலைப்பில் அமைந்த ஆய்வாகும். காவியத்தின் சரீரம், ஆத்மா என்பன குறித்த வினாக்களுடன் ஆரம்பிக்கும் இவரது ஆய்வில் சமஸ்கிருத காவியவியல்கோட்பாடுகள் தனித்தனியாக விளக்கப்பட்டு, சிங்கள கவிதைக்கோட்பாடு, ஜாதகக் கதைகள் ஆகியவற்றிலுள்ள காவியவியற்சிந்தனைகள் ஒப்பிட்டு விளக்கப் படுகின்றன. (Wijayawardhana , G.D 1990)

அலங்காரங்களுள் குறிப்பிட்ட ஒரு வகை சார்ந்த அல்லது தனி அலங்காரங்கள் தொடர்பாகவும் ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. இவற்றுள் உத்பிரேக்ஷாலங்காரம் குறித்த தனிநிலை ஆய்வொன்று ஞாரமடய என்ற அறிஞரால் 1982ல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது ஆய்வில் ஒவ்வொரு அலங்காரிகர்களும் உத்பிரேக்ஷாலங்காரத்தை எவ்வாறு வரைவிலக்கணப்படுத்துகின்றனர் என்பதை விளக்கிக் கூறி அதன் வகைகளையும் எடுத்துக் காட்டுகிறார். வரைவிலக்கணங்களை விளக்கும் போது சோபாகரர் மம்மடர் ஜயரதர் ஆகியோரின் வாத நியாயங்களை எடுத்துக்காட்டி அவர்களின் கருத்துக்களை பரிசீலிக்கிறார். முடிவாக ருய்யகரின் வரைவிலக்கணத்தை ஜகந்நாதர் மறுதலிப்பதையும் விளக்கிக் கூறுகிறார். (Shukla, 1982)

அலங்காரசாஸ்திரங்களில் ரூபக அலங்காரம் குறித்த வரலாற்றுப்பார்வையுடன் கூடிய கலாநிதிப்பட்ட ஆய்வொன்று 1982ல் Biswanath Bhattacharya வினால் மேற்கொள்ளப்பட்டது. அலங்காரக் கோட்பாடு குறித்த அறிமுகத்துடன் ஆரம்பித்து ரூபகாலங்காரத்தின் தோற்றுவாய், சொல்லுருவாக்கம், அதன் பல்வேறு வரைவிலக்கணங்கள் குறித்த நுண்ணாய்வு, ரூபகத்தின் வகைகளும் பயன்பாடும் ரூபகமும் சம்ஸ்கிருத இலக்கணமும் ரூபகமும் ஏனைய அலங்காரங்களும் ரூபகாலங்காரத்தின் குறைபாடுகள் என்பவற்றை மிக விரிவாக ஆய்வு செய்துள்ள ஆய்வாளர். தேவையான இடங்களில் மூலநூல்களிலிருந்து மேற்கோள்களையும் எடுத்தாண்டுள்ளார். (Bhattacharya, 1982)

வ்யாஜோக்தி தொடர்பான ஆய்வொன்று 1994ல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் வாமனர் முதன்முதலில் இவ் அலங்காரத்தை எடுத்துக் கூறுவதைக் காட்டி தொடர்ந்து தண்டி மம்மடர் முதலியோரால் இது எவ்வாறு விளக்கப்படுகிறது இதற்கும் அவஹ்னுதி அலங்காரத்திற்கும் உள்ள வேறுபாடு வ்யாஜோக்தியின் வகைகள் என்பன கூறப்படுகின்றன. முதன்முதலில் வ்யாஜோக்தியில் நான்கு வகைகளைக் கூறியவர் சோபகரர் எனவும் ஏனையோர் பெரும்பாலும் இதனை வகைப்படுத்தவில்லை எனவும் கூறும் ஆய்வாளர் அவருக்குப் பின்னர் அப்பைய தீட்சிதரே இதனை வகைப்படுத்திக் கூறவதாக எடுத்துக்காட்டி விளக்குகிறார். (Tapasvi Nandi,1994)

**ஆய்வு முறைமை**

இந்த ஆய்வில் ஆய்வுமுறைமையானது விளக்கிக்கூறும் விவரண முறைமையினை அடிப்படையாகக கொண்டுள்ளது. தனியே விவரண முறைமையினை மாத்திரம் பின்பற்றின் அது காவியவியல் நூல்களிடையேயான ஒப்பீட்டினை வெளிப்படுத்தத் தவறிவிடும் என்பதால் ஒப்பியலாய்வு முறைமையும் தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டுள்ளது.

ருய்யகர் விஸ்வநாதர் வித்யாபூஷணர் ஆகிய காவியவியலாளர்களால் பகுக்கப்பட்ட சாத்ருஸ்யகர்ப்பம், விரோதகர்ப்பம; சிருங்கலாபந்தம், தர்க்க நியாயமூலம், வாக்யநியாயமூலம், லோக நியாயமூலம், கூடார்த்தப்ரத்திமூலம், சம்ஸ்லேஷமூலம் ஆகிய சம்ஸ்கிருத அர்த்தாலங்கார வகையீட்டினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அலங்காரக்கோட்பாட்டினை விளக்கும் முதன்மை நூல்களான காவ்யாலங்காரம், காவ்யாதர்சம், அலங்காரசாரசங்கிரகம், காவ்யப்பிரகாசம், அலங்காரசூத்ரம், சந்திராலோகம், ப்ரதாபருத்ரீயம், குவலயானந்தம், ரசகங்காதரம் ஆகிய ஒன்பது நூல்களும் ஒப்பியலாய்விற்கு எடுத்தாளப்படுகின்றன.

குறிப்பிட்ட அலங்காரம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்ட அலங்கார சாஸ்திரநூல்களில் எவ்விடத்தில் எடுத்து விளக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கும் வகையில் குறிப்பிட்ட நூலின் பெயர் சுருக்கமாகவும் அந்நூலின் உட்பிரிவுகளைக் குறிப்பிட உரோமன் இலக்கங்களும் சூத்திரங்கள் அல்லது சுலோகங்களை குறிப்பிட இந்துஅராபியஇலக்கங்களும் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான சில இடங்களில் சுலோகங்களின் வரிகளைக் குறிப்பிட சிறிய ஆங்கில அகரவரிசை எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வுமுடிவுகள்**

அலங்காரக்கோட்பாட்டினை விளக்கும் முதன்மை நூல்களான காவ்யாலங்காரம், காவ்யாதர்சம், அலங்காரசாரசங்கிரகம், காவ்யப்பிரகாசம், அலங்காரசூத்ரம், சந்திராலோகம், ப்ரதாபருத்ரீயம், குவலயானந்தம், ரசகங்காதரம் ஆகிய ஒன்பது நூல்களிலும் குறிக்கப்பட்டிருக்கும் சாத்ருஸ் யகர்ப்ப அலங்காரங்களாக உபமா, ரூபக, அபஹ்னுதி, உத்பிரேஷா, அதிசயோக்தி, துல்ய யோகிதா, தீபக, வ்யதிரேகா, ஸஹோக்தி, சமாசோக்தி, ஸ்லேஷ, அப்ரஸ்துதப்ரசம்சா, அர்த்தாந்தரநியாஸ, பர்யாயோக்த, வ்யாஜஸ்துதி, ஆஷேப ஆகிய 16 அலங்காரங்கள் மாத்திரமே அமைகின்றன.

ஏனைய சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களான உபமேயோபமா, அநன்வய, ஸந்தேஹ, ப்ரதிவஸ்துாபமா, நிதர்சனா, த்ருஷ்டாந்த, ஸ்மரண, ப்ராந்திமத், விநோக்தி, பரிகரா, பரிணாம, உல்லேக, ஹேது ஆகியன மேற் குறித்த ஒன்பது நூல்களில் சிலவற்றில் குறிப்பிடப்படவில்லை. குறிப்பாக நிஸ்ச்சய, அனுகூல அகிய இரு அலங்காரங்களும் இவ்வகையீட்டில் அடங்குகின்ற போதிலும் மேற்குறித்த நூல்களில் எவற்றிலுமே குறிப்பிடப்படவில்லை.

முற்குறித்த உபமா, உபமேயோபமா, அநன்வய, ஸ்மரண, ரூபக, பரிணாம, ஸந்தேஹ, ப்ராந்திமத், உல்லேக, நிஸ்ச்சய, அபஹ்னுதி, உத்பிரேஷா, அதிசயோக்தி, துல்யயோகிதா, தீபக, ப்ரதிவஸ்துாபமா, த்ருஷ்டாந்த, நிதர்சனா, வ்யதிரேகா, ஸஹோக்தி. விநோக்தி, சமாசோக்தி, பரிகரா, ஸ்லேஷ, அப்ரஸ்துதப்ரசம்சா, அர்த்தாந்தரநியாஸ, பர்யாயோக்த, வ்யாஜஸ்துதி, ஹேது, அனுகூல, ஆஷேப என அமையப்பெற்ற முப்பத்தியொரு சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களுள் காவ்யாலங்காரத்தில் பாமஹர் 22 அலங்காரங்களையும்[5], காவ்யாதர்சத்தில் தண்டி 18 அலங்காரங்களையும் [6] அலங்காரசாரசங்கிரகத்தில் உத்படர் 21 அலங்காரங்களையும்[7], மம்மடர் தனது காவ்யப்பிரகாசத்தில் 26 அலங்காரங்களையும் [8] விளக்கியுள்ளனர். ருய்யகர் தனது அலங்கார சூத்ரத்திலும்[9] ஜயதேவர் தனது சந்திராலோகத்திலும் [10] வித்யாநாதர் தனது ப்ரதாபருத்ரீயத்திலும் [11] ஜகந்நாதர் தனது ரசகங்காதரத்திலும் [12] இவற்றுள் 28 அலங்காரங்களை விளக்கி வரையறை செய்துள்ளனர். ஆயினும் நிஸ்ச்சய, அனுகூல ஆகிய இரு அலங்காரங்களைத் தவிர ஏனைய இருபத்தொன்பது அலங்காரங்களையும் குவலயானந்தம் [13] விளக்குகிறது. (அட்டவணை1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை1

காலந்தோறும் முக்கிய காவியவியலாளர்கள் விளக்கிக் கூறியுள்ள சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்கள்

| சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரத்தின் பெயர் | காவ்யாலங்காரம்:பாமஹர் (பரிச்சேதம். ஸ்லோகம்) | காவ்யாதர்சம்:தண்டி (பரிச்சேதம். ஸ்லோகம்) | அலங்காரசாரசங்கிரகம்:உத்படர் (வர்கம். ஸ்லோகம்) | காவ்யப்பிரகாசம்:மம்மடர் (உல்லாசம்.ஸ்லோகம்.வரி) | அலங்காரசூத்ரம்:ருய்யகர் (சூத்ரம்) | சந்திராலோகம்:ஜயதேவர் (மயூகம்.ஸ்லோகம்) | ப்ரதாபருத்ரீயம்:வித்யாநாதர் (ப்ரகரணம். ஸ்லோகம்) | குவலயானந்தம்:அப்பையதீக்ஷிதர் (ஸ்லோகம்) | ரசகங்காதரம்:ஜகந்நாதர் (ஆனனம்.ஸ்லோகம்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| உபமா | II.30 | II.14 | 1.15 | X. 1a | 11 | V.11 | VIII.1 | 6 | II.17 |
| உபமேயோபமா | III.3,37 | | 5.65 | X. 5d | 13 | V.13 | VIII.3 | 11 | II.18 |
| அநன்வய | III.3,45 | | 6.71 | X. 5abc | 12 | V.12 | VIII.2 | 10 | II.19 |
| ஸ்மரண | | | | X. 46abc | 14 | V.31,32 | VIII.4 | 24,25 | II.22 |
| ரூபக | II.21 | II.66 | 1.11 | X. 7ab | 15 | V.18 | VIII.5 | 17 | II.23 |
| பரிணாம | | | | | 16 | V.22 | VIII.10 | 21 | II.28 |
| ஸந்தேஹ | III.3,43 | | 6.69 | X. 6cd | 17 | V.31,32 | VIII.11 | 24,25 | II.29 |
| ப்ராந்திமத் | | | | X. 46cd | 18 | V.31,32 | VIII.12 | 24,25 | II.30 |
| உல்லேக | | | | | 19 | V.23 | VIII.14 | 22 | II.31 |
| நிஸ்ச்சய | | | | | | | | | |
| அபஹ்னுதி | III.2,21 | II.304 | 5.54 | X. 10ab | 20 | V.24 | VIII.13 | 26 | II.32 |
| உத்பிரேக்ஷா | II.91 | II.221 | 3.39 | X. 6ab | 21 | V.29 | VIII.15 | 32 | II.33 |
| அதிசயோக்தி | II.81 | II.214 | 2.34 | X. 14,15 | 22 | V.46 | VIII.14 | 36 | II.34 |
| துல்ய யோகிதா | III.2,27 | II.330 | 5.58 | X. 18cd | 23 | V.51,52 | VIII.36 | 44 | II.35 |
| தீபக | II.25 | II.97 | 1.14 | X. 17 | 24 | V.53 | VIII.37 | 48 | II.36 |
| ப்ரதிவஸ்தூபமா | II.34 | | 1.22 | X. 15d,16ab | 25 | V.55 | VIII.38 | 51 | II.37 |
| த்ருஷ்டாந்த | | | 6.75 | X. 16cd | 26 | V.56,57 | VIII.39 | 52 | II.38 |
| நிதர்சனா | III.2,33 | II.348 | | X. 11cd | 27 | V.58 | VIII. | 53 | II.39 |
| வ்யதிரேகா | II.75 | II.180 | 2.29 | X. 19ab | 28 | V.59 | VIII.41 | 57 | II.40 |
| ஸஹோக்தி | III.3,39 | II.351 | 5.66 | X. 26cd | 29 | V.60 | VIII.17 | 58 | II.41 |
| விநோக்தி | | | | X. 27ab | 30 | V.61 | VIII.18 | 59-60 | II.42 |
| சமாசோக்தி | II.79 | II.205 | 2.33 | X. 11ab | 31 | V.62 | VIII.19 | 61 | II.43 |
| பரிகரா | | | | X. 32ab | 32 | V.39 | VIII.43 | 62 | II.44 |
| ஸ்லேஷ | III.1,14 | II.310 | 4.50 | X. 10cd | 33 | V.63 | VIII.42 | 64 | II.45 |
| அப்ரஸ்துதப்ரசம்சா | III.2,29 | II.340 | 5.59 | X. 12cd | 34 | V.66,67 | VIII.46 | 66 | II.46 |
| அர்த்தாந்தரநியாஸ | II.71 | II.169 | 2.28 | X. 23 | 35 | V.68 | VIII.51 | 122-123 | II.68 |
| பர்யாயோக்த | III.1,8 | II.295 | 4.47 | X. 29ab | 36 | V.70 | VIII.47 | 68-69 | II.47 |
| வ்யாஜஸ்துதி | III.2,31 | II.343 | 5.60 | X. 26ab | 37 | V.71 | VIII.45 | 70-71 | II.48 |
| ஹேது | II.86 | II.235 | | | | | | 167-169 | |
| அனுகூல | | | | | | | | | |
| ஆக்ஷேப | II.68 | II.120 | 2.25 | X. 20cd | 38 | V.72 | VIII.44 | 73-74 | II.49 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிவுரை**

முழுமையாக நோக்குமிடத்து ஏனைய காவியவியல் நூல்களோடு ஒப்பிடும் போது குவலயானந்தம் அதிக எண்ணிக்கையான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை வரைவிலக்கணப்படுத்துகிறது என்பதை ஒப்பீட்டு ரீதியில் அறியமுடிகிறது. பொது நோக்கில் இவ்வாய்வானது தமிழ், சம்ஸ்கிருத மொழிகளிடையிலான ஆழ்நிலை உறவுகள் குறித்து சமுதாயத்தில் நிலவும் இன மத பேதமற்ற நடுநிலையான சிந்தனைகளை மேலும் வளர்த்தெடுக்க முனைந்து நிற்கின்றது. குறிப்பாக சமுதாயமட்டத்தில் நிலவும் பல்வேறுபட்ட மொழிச்சிந்தனைகளைத் தூண்டி சம்ஸ்கிருத காவியவியல் குறித்தும் அலங்காரக்கோட்பாடு குறித்தும் புதிய ஆய்வுகளுக்கான புலங்களை இனங்காட்டியுள்ளது. இலங்கைத் தமிழ் மக்களின் மொழிப்பற்றினை பாதிக்காத வகையில் பிறமொழி என்றவகையில் சம்ஸ்கிருதத்தின் காவியவியல் கோட்பாடுகளை அறிமுகம் செய்வதன் மூலம் அவர்களின் வடமொழி தொடர்பான உணர்வு குறித்த மீளாய்வுப்பார்வைக்கு வழி சமைத்து எதிர்காலத்தில் இத்துறையில் கூடியகவனம் செலுத்தும் சமுதாயமாற்றத்தினையும் இவ்வாய்வு நாடி நிற்கிறது. அண்மைக்காலமாக மாற்றமடைந்து வரும் ஆய்வு நோக்கும் மொழியியல் ரீதியிலான ஆழமான ஆய்வுகளும் வேறுபல மொழிகளுடனான ஒப்பியல் ஆய்வுகளும் சம்ஸ்கிருதத்திற்குப் புதிய பரிமாணத்தை வழங்கியுள்ளன. இன்றைய நிலையில் இவ்வாய்வு இலங்கையில் சம்ஸ்கிருத காவியவியல் குறித்தும் அலங்காரக்கோட்பாடு குறித்தும் புதிய ஆய்வுகளுக்கான தேவையினை இனங்காட்டி நிற்பதுடன் புதிய ஆய்வுமுயற்சிகளையும் ஊக்குவிக்கிறது.

**உசாத்துணை நூல்கள்**


1. Alankara Sutra of Rajanaka Ruyyaka - K.Sambasiva Sastri Trivancore : The Maharani Regent , 1926
2. Biswanath Bhattachariya, (1982) A History Of Rupaka In Alankarasastra - Varanasi : Chaukhamba Orientalia
3. Chandraloka of Shri Jeyadeva ed. By AnantharamasastriBanaras:Chowkhamba Sanskrit Series Office, 1938 p. 170
4. Kane , P.V, (1985) Out Lines Of The History Of Alamkara Literature Part I The Indian Antiquaryxli Delhi : Swati Publication , 1985 - pp.124-128
5. Kane, R.V, (1994), History Of Sanskrit Poetics Delhi : Motilal Banarsidass Pub. , 1994 - pp.372-379
6. Kavya Prakasa of Mammatahar Dutt Sharma Poona : Oriental Book Agency , 1951
7. Kavyadarsa of Dandin ed. By Belvelkar S K., Poona:sl, 1924. p47+82
8. Kavyalankara of Bhamaha ed. By Naganantha Sastri New Delhi : Motilal Banars, 1991 p 134.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. Kavyalankara Sara Samgraha of Udbhata , With Laghuvritti Of Induraja Sl:sn , 1925
10. KEITH, A., (1927), Berriedale Classical sanskrit literature / by A.Berriedale Keith.-- 2nd ed.- London : Oxford University Press, 1927.
11. Kuvalayananda Appayadiksitnarayan Ramacharya Bombay : Satyabamabai Pandurang , 1942
12. Mukunda Madhava Sharma, (1968), The Dhvani Theory In Sanskrit Poetics Varanasi : Chowkhamba Sanskrit Series Office , 1968 - pp.3—11
13. Nobel , J., (1925), The Foundations Of Indian Poetry And Their Historical Development Calcutta : , 1925 - pp.85-93
14. Pradaparudriyam of Vidyanathar ed. By Sankararama Sastri Mylapore : Sri Balamanorama Press , 1931
15. Rasagangadhara of Sri Jegannathar ed.by Durgaprasad Bombay: Pandurang Javaji, 1939 p. 706
16. சிவச்சந்திரன், (1989) சம்ஸ்கிருதத்தில் தோத்திர இலக்கியம் - சிவானந்தலகரி சௌந்தர்யலகரி ஆகியவற்றுடன் விசேட தொடர்புபடுத்திய ஆய்வு -சம்ஸ்கிருத முது கலைமாணிப் பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு, சம்ஸ்கிருதத் துறை யாழ் பல்கலைக்கழகம்.
17. Shukla , C.P ., A (1982), Controversy On The Concept Of Utpreksa Journal Of The Oriental Institutexxxi Baroda : M.S.University Of Baroda , pp.365-370
18. Tapasvi Nandi, (1997), Bhava Bhuti And Sanskrit Literary Criticism Annals Of The Bhandarkar Oriental Research Institutelxxvii Pune : Bhandarkar Oriental Research Institute , pp.141-150
19. Vijayavardhana , G ., (1970 ) Out Lines Of Sanskrit Poetics Varanasi : Chowkhamba Sanskrit Series Office , pp.1—56
20. Warder , A.K , (1989), Indian Kavya Literature V.1 Delhi : Motilal Banar Sidass , pp.76-79
21. Weerathunge , S., (1969) The Origin And Development Of The Sanskrit Prose Style University Of Peradeniya Phd Thesis : Not Published.
22. Wijayawardhana , G.D., (1990) , The Infiuence Of Sanskrit Alankara Sastra On Early Sanskrit Poetry Colombo University Phd Thesis : Not Published.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய உணவுகளினதும் உடன் உணவுகளினதும் உணவுத் தரம் குறித்த ஒரு விடய ஆய்வு

கு. பத்மாசனி

**ஆய்வுச் சுருக்கம்**

*மானிட வாழ்க்கைக்கு அடிப்படையான உணவு, உடை, உறையுள் ஆகியவை இன்றியமையாதவை என்பது யாவரும் அறிந்ததே. இவற்றுள் உணவுக்கே முதலிடம் வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணம் உணவின்றி மனிதனால் உயிர் வாழ முடியாது என்பதனாலாகும். உணவு உடலுக்கு சக்தியும், வளர்ச்சியையும், பாதுகாப்பையும் வழங்குகின்றது. உடலுக்கு தீங்கு விளைவிக்காத திண்ம,திரவ, அரைத்திண்மப் பதார்த்தங்களையே உணவு என வரையறுக்கப்படுகின்றது.*

*பாரம்பரிய உணவு என்பது ஆரம்ப காலத்திலிருந்தும் மரபு ரீதியாகவும் பண்பாட்டு கலாச்சார அடிப்படையிலும் இயற்கையாகக் கிடைக்கக் கூடிய உணவுப் பொருட்களினால் தயாரிக்கப்படுதல் பாரம்பரிய உணவு எனப்படுகின்றது. உடன் உணவு என்பது குறைந்த நேரத்தில் தயாரித்து வைத்த உணவுப் பொருட்களை உண்பதற்கு ஏற்ப தயாரித்து விற்பனை செய்தலையே உடன் உணவு என்பர். (சிவசண்முகராஜா. சே ,2002 ப. 13)*

*உணவின் தரங்களை அடிப்படையாகக் வைத்து பாரம்பரிய உணவினையும், உடன் உணவினையும் ஒப்பிட்டு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு இதுவாகும். உணவின் தரங்களாக போசனைப் பொறுமானம் சுகாதாரப்பாதுகாப்பு, தோற்றம், நிறம், மணம், தன்மை, இழையமைப்பு, சுவை போன்றவை பாரம்பரிய உணவுகளிற்கும் உடன் உணவுகளிற்கும் எவ்வாறு விஞ்ஞான ரீதியில் தாக்கம் செலுத்துகின்றன என்பதனை இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.*

*யாழ்ப்பாணப் பிரதேசத்தை ஆய்வுப் பிரதேசமாகக் கொண்டும், மக்களின் பாரம்பரிய, உடன் உணவுப் பழக்கவழக்கத்தினை மையமாகக் கொண்டும் யாழ்ப்பாணமக்களிடையே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள வலிதென்மேற்கு பிரதேசசபைக்கு உட்பட்ட 50 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு வயது அடிப்படையில் 25 பெண்பிள்ளைகளையும் (5 - 20) 25 யுவதிகளையும் (25 - 40) எழுமாறாக தெரிவு செய்து, அவர்களின் பாரம்பரிய உணவு, உடன் உணவு போன்ற இரண்டு உணவுகளையும் உட்கொள்ளும் பெண்பிள்ளைகளையும் யுவதிகளையும் தெரிவு செய்து இவ்விருசாரரினதும் உட்கொள்ளும் உணவுகளுக்கிடையிலும் தரத்தின் அடிப்படையிலும் எத்தகைய வேறுபாட்டை உணருகின்றனர் - ஏன் பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதனை ஆராய்வதற்கும், தகவல்கள் சேகரித்தல் மூலம் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரவு சேகரிக்கும் கருவிகளாக வினாக்கொத்துக்கள், கலந்துரையாடல்கள், அவதானிப்புமுறைகள் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன.*

*ஆய்வின் முடிவாக பாரம்பரிய உணவின் பெறுமதியை உணர்ந்து ஆரோக்கியமான சுகதேகியாக வாழ்வதற்கு எமது உணவுப்பழக்கவழக்கங்களை பாரம்பரிய உணவுமுறைகள் எம்மை விட்டு மறைந்து போகாமல் பேணி பாதுகாப்பதுடன் எமது ஆரோக்கியத்தை பேணி வழமான வாழ்வு வாழமுடியும் என்பதனையே கண்டு கொள்ளமுடியும்.*

**திறவுச் சொற்கள்:-** உணவு திண்மபதார்த்தம், திரவபதார்த்தம், அரைத்திண்ம பதார்த்தம், உடன்உணவுகள், பாரம்பரிய உணவுகள் உணவுகளின் தரம் உணவு பழக்கவழக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிமுகம்:-**

உணவினை அதன் தன்மை, இழையமைப்பு அடிப்படையில் திண்ம, திரவ, அரைதிண்ம உணவுகளாகப் பிரிக்கலாம். அவை ஒவ்வொரு பிரதேசத்துக்கும், நாட்டுக்கும் உணவுப்பழக்கங்கள் வேறுபட்டு அமைகின்றன. குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் நீண்ட காலமாக அவர்களின் பிரதேச மண்வாசனையை வெளிப்படுத்தும் விதமாக முன்னோர்களின் வழியை பின்பற்றி தொடர்ந்தும் தற்காலம் வரை உண்ணப்பட்டு வரும் பாரம்பரிய உணவுப்பழக்கத்தில் பிறநாட்டவர்களின் வருகையால் ஏற்பட்ட கலாச்சார ஊடுருவல் தொடர்பாடல் இலத்திரனியல் ஊடகங்களில் உடன் உணவு சார்ந்த விளம்பரங்களின் அதிகரித்த செல்வாக்கு தொழிநுட்பவிருத்தி நகரவாழ்க்கைமுறை போன்றவற்றால் உடன் உணவுப்பழக்கம் பிரபல்யமடைந்துள்ளது. எனினும் கிராமப்புறங்களில் இன்றும் பழமை போற்றும் பண்பும், ஊடகங்களின் தாக்க குறைவினாலும் பொருளாதார குறைவு காரணமாகவும் அவர்கள் பாரம்பரிய உணவுகளையே அதிகளவில் தயாரித்து உண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (B.Srilaxmy,2015. pp-5-6)

இவ் வாய்வின் மூலம் பாரம்பரிய உணவு உடன் உணவினதும் உணவுத்தரம் தொடர்பான அறிவியல் ரீதியான தகவல்களை முன் வைத்து பாரம்பரிய உணவிலிருந்து உடன் உணவு உணவுத்தரத்தில் எத்தகைய வேறுபாட்டைக் கொண்டுள்ளது எனத் தெளிவுபடுத்துவதையோ நோக்கமாக கொண்டுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தை மையமாக வைத்துக் கொண்டு மக்களின் பாரம்பரிய மற்றும் உடன் உணவுப் பழக்கவழக்கத்தினை இவ்வாய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

பாரம்பரிய உணவு என்பது குறிப்பிட்ட ஒரு சமூகத்தினரிடையே நிலவுகின்ற வேறுபட்ட உணவுத் தயாரிப்புக்களை குறிக்கின்றது. பல நுற்றாண்டுகளாக பரம்பரை பரம்பரையாக பின்பற்றப்பட்டு வருகின்ற ஒன்று குறிப்பிட்ட பிரதேசத்தின் கலாச்சார பண்பாட்டு விழுமியங்களையும் மண்வளம் தனித்துவத்தன்மை போன்ற பல சிறப்பியல்புகளையும் பறைசாற்றுவதாகக் காணப்படுகின்றது.

**பாரம்பரிய உணவுகளாக:-**

**மதியஉணவு** - சோறும் கறியும் புழுங்கல் அரிசி, சிவப்புபச்சைஅரிசி சோறு சமைப்பதற்கு பயன்படுத்துகின்றனர் கறிகளாக காய்கறிகள், இலைவகைகள், மீன், இறைச்சி, போன்றவற்றை சமைக்கின்றனர். கறிகளாக பருப்புக்கடையல், குழம்பு, சாம்பார், கூட்டுக்கறி, பால்கறி(வெள்ளைக் கறி) கீரைகடையல், வறை, துவையல், சம்பல், பொரியல், சொதி, தூள் பிரட்டல் கறி போன்றவற்றைக் கூறலாம்.

**காலை இரவு உணவுகளாக** - அரிசிமா, இடியப்பம், அரிசிமா, குரக்கன்மா, ஒடியல்மா பிட்டு வெள்ளையப்பம், பாலப்பம், தோசை, அவித்தகிழங்கு வகைகள், குரக்கன் ரொட்டி, ஒடியல்மா கூழ், பிட்டு, புழுக்கொடியல் மா உருண்டை, பனாட்டு, கருப்பட்டி, பனங்காய் பணியாரம், உழுத்தங்களி, பால்புட்டு, போன்றவற்றை குறிப்பிடலாம்.

**திரவ உணவுகளாக** - பழஞ்சோற்றுத் தண்ணீர், பால், மோர், கருப்பநீர், இளநீர் கஞ்சி தேனீர் எலுமிச்சங்காய் நீர் போன்ற பானங்களையும் பயற்றம்பணியாரம், மோதகம் கொழுக்கட்டை , முறுக்கு, சிப்பி சோகி பலகாரம் போன்ற சிற்றுண்டி வகைகளையும் பாரம்பரிய உணவாக கூறியுள்ளனர்.

வேகமான தொழில்நுட்ப வளர்ச்சியினால் குறுகிய நேரத்தில் தயாரித்தல் பரிமாறல் நுகர்தல் ஆகிய தொழிற்பாடுகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட உணவுகளே உடன் உணவுகள் எனக்கூறப்படுகின்றன. இவற்றுக்கு உதாரணமாக சான்விச் (பாண்படை), பொரித்த கிழங்குச்சீவல்கள், சொசேஜ் நிரப்பப்பட்ட பனிஸ், நூடில்ஸ், கொத்து,ரொட்டி, தகரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைக்கப்பட்ட உணவுகள் பொரித்த கோழிஇறைச்சி, பிஸ்தா, பேகர், பேஸ்ரிவகை, உருளைக்கிழங்கு சிப்ஸ், ஜெலிவகைகள் , சூப்வகைகள், ஐஸ்கிறீம், மிக்சர், சோஸ்வகைகள், குளிர்பானங்கள்,(பெப்சி கொக்கோ கோலா ரிப்பி ரிப் ) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றினை ஒப்பீட்டு ரீதியாக நோக்கும் போது யாழ்ப்பாணத்து பாரம்பரிய உணவுப்பழக்கங்கள் அனைவரும் ஒரே மாதிரி யான உணவுப்பழக்கத்தைக் கொண்டுள்ளனர் என கூறுவதற்கில்லை. ஏனைய சமூகத்தவரின் உணவுப்பழக்கங்களைப் போலவே இவர்களின் உணவுப்பழக்கமும் பல்வேறு பிரிவினரிடையேயும் அடிப்படையில் வேறுபடுவதைக் காணலாம். ஆனால் இவர்கள் உள்ளூரில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்படாத காலத்திலிருந்து உடலுக்கு தீங்கு விளைவிக்காததும் சுவையான தும் ஆரோக்கியமானதும்மணம்மிகுந்தவையாகவும் உணவுகளைத் தயாரித்து உண்டு நீண்ட காலம் நோயற்று வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. இறப்பு வயதிலிருந்து இதனை கண்டுகொள்ள முடிந்தது.

உணவின் தரத்தினை நோக்குமிடத்து உட்கொள்ளும் உணவின் அளவிலும் (Quantity) பார்க்க உணவின் தரமே (Quality) ஆரோக்கியத்தை பேணும் வகையில் போசாக்கினை முழுமையாகக் கொண்ட நிறையுணவு அல்லது தரமான உணவு எனக் கூறப்படுகின்றது. உணவு தரமானவையாக விளங்க பின்வரும் பண்புகளை வெளிப்படுத்து பவையாக இருக்க வேண்டும்.

போசணைப் பொறுமானம், சுகாதார பாதுகாப்பு, தோற்றம், நிறம், மணம், தன்மை, இழையமைப்பு, சுவை போன்றவற்றைப் பண்புகளாக கூறலாம்.

பாரம்பரிய உணவு முறையானது இயற்கையானதாகவும் மலிவாகக் கிடைக்கக்கூடியதாகவும் காணப்படும் அதுமட்டுமன்றி எமது பிரதேசத்திலுள்ள பயன்தரு செடிகள் கொடிகள் மரங்கள் என்பவற்றைப் பயன்படுத்தக்கூடியதாகவும் அமையப்பெற்றுள்ளது. அத்துடன் பயன்படுத்துகின்ற காய்கறிகள் தானியங்கள் என்பன நார்த்தன்மை கொண்டதாகவும் சத்துக்கள் நிறைந்ததாகவும் காணப்படுகின்றன. அவற்றின் நோய் தீர்க்கும் ஆற்றலினால் முன்னைய கால மக்கள் ஆரோக்கியமாகவும் நீண்ட ஆயுளுடனும் வாழ்ந்துள்ளனர். இவ்வுணவுகளில் பச்சை இலைக்கறி வகைகள் அதாவது கீரை வகைகளை அதிகமாகப் பயன்படுத்துவதனால் அவற்றின் மூலம் உயிர்ச்சத்து கனிப்பொருட்களையும் பொற்றுக்கொள்ளும் அம்மக்கள் சுகவாழ்வு வாழ்ந்த வரலாற்றை கண்கூடாகக் காணலாம்.

இன்றைய மக்கள் உண்ணும் உணவானது உணவுத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டு பதப்படுத்தியதாகவே (90%) காணப்படுகின்றது.சுவையான எல்லா உணவுப்பொருட்களிலும் அதிக கலோரி தரும் கொழுப்பு, காபோவைதரேற்று போன்றவையே காணப்படுகின்றன. இவ்வுணவுகளை இரைப்பை, உணவுக் கால்வாய் போன்றவற்றில் சிக்கல்கள், குடற்புண், குடல்அலர்ஜி, பித்தப்பையில் கற்கள், அப்பெண்டிக்ஸ், உணவுக்குழாய் அடைப்பு போன்ற நோய்களே ஏற்படுகின்றன.

கவர்ச்சியான நிறங்கள், வன்மையான வாசனைகள் அல்லது மணங்கள் கொண்ட உணவுகளில் ஆபத்தான இராசயனப் பொருட்கள் இருப்பதனால் அவற்றை வாங்குவதைத் தவிர்த்தல் வேண்டும். இதனால் நுரையீரல்களிலும் ஒவ்வாமை, ஆஸ்த்துமா, சமிபாட்டுத்தொகுதிகளில் புற்றுநோய் சுவாசத்தொகுதிகளிலும் கல்லீரல், சிறுநீரகங்கள் போன்றவற்றில் பல பிரச்சனைகளையும் பாதிப்பையும் ஏற்படுத்துகின்றன. (B.Srilakshmi, 2014. pp 257- 286)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன் உணவுகளின் நன்மைகளாக போக்குவரத்தின் போது விரைவாக பெற்று உண்ண முடிகின்றமை, சமைத்த உணவாகவோ பாதி சமைத்த உணவாகவோ காணப்படுகின்றமையால் குறைந்த தயாரிப்பு நேரத்துடன் விரைவாக வேலை முடிவதால் வேலைக்குச் செல்லும்பெண்களுக்கு நேரத்தை மீதப்படுத்துவதுடன் நிறம், மணம், சுவை மிகுந்ததாகக் காணப்படுகின்றமையால் சிறுவர்களும் விரும்பி இவ்வுணவுகளை உண்கின்றமை நன்மையாக கருதப்படுகின்றது. அதே வேளை பல தீமைகளை வெளிக்காட்டு கின்றன. (கொழுப்பு) இக்கொழுப்பு உடலுக்கு வேவையான கொழுப்புச் சத்தை குறைத்து தேவையற்ற கொழுப்புச்சத்தை இருமடங்காக்கி உடல் ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவிக்கின்றது. அதனால் இருதயநோய் புற்றுநோய் நீரழிவு உடற்பருமன் போன்றவற்றை உருவாக்கும் கொழுப்பு இதுவேயாகும். இந்தக் கொழுப்பிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணையே "Partiallyhydrogenated oils" ஆகும். (அ. இராமசாமி , 2006. பக். 23 - 33)

பல்வேறு உடன் உணவுத் தயாரிப்புக்களில் இக்கொழுப்பே பயன்படுத்தப்படுகின்றது. இது தீங்கு விளைவிக்கிறது என அறிந்தும் சில நிறுவனங்கள் இக் கொழுப்பை பயன்படுத்துவதற்கான காரணம் பலமுறை இதனை திரும்பத்திரும்ப உபயோகிப்பதனால் தயாரித்த உணவில் மணம் மாறாது காணப்படுகின்றமையினாலேயே ஆகும். சுவையும் அதிகமாகும்.

மேலும் உடன்உணவுகளில் பயன்படுத்தப் படும் இராசாயனப் பொருட்களில் ஈஸ்றோஜன் ஓமோன் சுரப்பை அதிகரிக்கும் தன்மையுடையதாககாணப்படுவதால்சிறுமிகள் 5-9 வயதுக்குள்ளேயே பூப்பெய்துவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. (Biro F.M, Khoury.P and Morrison J.A. 2005. PP 272 - 277). இவ்வாறு குறைந்த வயதில் பூப்பெய்தல் அவர்களின் வளர்ச்சியை பாதிப்பதுடன் அதனால் ஏற்படும் மாற்றங்களை புரிந்து கொள்ளும் மனநிலையும் அவர்களிடம் காணப்படுவதில்லை என்பதனால் உடன்உணவுகளை தவிர்ப்பது நன்மையாக்கும் என வைத்தியர்கள் எச்சரிக்கின்றனர். மேலும் இவ்வுணவுகளை உண்பதனால் சோர்வு, ஞாபகசக்திகுறைவு, படபடப்பு, இரத்தக்கொதிப்பு போன்றன ஏற்படுவதாகவும் கருதப்படுகின்றது. (வசந்தி அரசரட்ணம், 2006)

அடுத்து நிறமூட்டிகளை எடுத்துக் கொண்டால் பாரம்பரிய உணவுகள் பெரும்பாலும் இயற்கை நிறங்களுடனேயே காணப்படுகின்றன. பழங்கள், காய்கறிகள், பச்சை இலைவகைகள் அவற்றுக்கு எடுத்துக் காட்டாகும். மேலும் இயற்கை நிறமூட்டியான மஞ்சள், செம்மஞ்சள் நிறங்களைப் பெறுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் உடன் உணவுகளை எடுத்துக்கொள்வோமானால் கண்கவர் உணவுப் பண்டங்களாக மாற்றியமைப் பதற்கு இந்நிறமூட்டிகள் செயற்கை பயன்படுத்தப்படுகின்றன. (அ. இராமசாமி, 2006. பக் 34 - 38)

சேர்குயின் 100 – மாஜரின்க்கும், பீற்றுட் சிவப்பு 162 பீற்றுட் சாற்றில் தயாரிக்கப்படுகின்றது. கொச்சினல் 120 இயற்கை சிவப்பு நிறம் திராட்சைப் பழத்தோலிலிருந்து பெறப்படும் பானங் களுக்குசேர்க்கப்படுகின்றது. அசோ சாயங்கள் சொக்கிலேற் கபிலம் 155 இறைபோபிளேவின் 101 கள்மொய்சின் 122 பழப்பாகுகளிலும் நற்காப்பியாகவும் பயன்படுத்தப்படுகின்றது. (அ. இராமசாமி ,2006 பக் - 34- 38 )

அடுத்து மணமூட்டிகளை நோக்கும் போது பாரம்பரிய உணவுகளின் மணமூட்டிகளை இயற்கையான நறுமணப் பொருட்கள் அல்லது வாசனைச்சரக்ககள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. மணமூட்டப் பயன்படும் பூண்டு வகைகள், வாசைன மூலிகைகள், சரக்குவகைகள் போன்றவற்றை குறிப்பிடலாம். ஏலக்காய், கராம்பு, உள்ளி, இஞ்சி, பெருஞ்சீரகம், நற்சீரகம், கொத்தமல்லி, கடுகு, பெருங்காயம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிளகு, ஜாதிக்காய், வெந்தயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். (J.S சுந்தர்ராஜன், 1990 பக் 129 - 145)

அடுத்து உணவின் தரத்தினை பார்ப்போமானால் அங்கு பாரம்பரிய உணவுகளுக்கு சுவையூட்டிகளாக நிறமூட்டிகளாக மணமூட்டிகளாக பயன்படுத்தப்பட்டவை பற்றி நோக்குவோம். தமிழர் பண்பாட்டில் "அறு சுவை உணவு முக்கியமாக இடம் பெறுகின்றது". அவையாவன இனிப்பு, புளிப்பு, கசப்பு, உவர்ப்பு, கார்ப்பு/காரம், துவர்ப்பு போன்ற உணவுப் பொருட்களுக்கு சுவைச்சரக்குகள் பயன்படுத்தப்படுவதுடன் உற்பத்தி செய்யப்பட்ட சுவையூட்டிகளும் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் சுவைக்கூட்டுக்களும் (சோஸ் அச்சாறு) சேர்த்துக்கொள்ளப்படுகின்றன.

பாரம்பரிய உணவுகளின் சுவைக்குக் காரணமான பல்வேறு வகையான சமையல் முறைகளையும் அவற்றில் சேர்க்கப்படுகின்ற சுவைச் சரக்குகளையும் குறிப்பிடலாம். பாரம்பரிய உணவில் சேர்க்கப்படுகின்ற சுவைச் சரக்குகளாக மிளகாய், வெங்காயம், உப்பு, கறிவேப்பிலை, மிளகு, புளி, மஞ்சள், இஞ்சி, உள்ளி, ஏலக்காய், வெந்தயம், கடுகு, சீரகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். உடன் உணவுகளில் சுவையைக் கூட்டுவதற்கு இங்கு செயற்கை சுவையூட்டிகள் இயற்கை சுவையை தரும் வண்ணம் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக வனிலாப்பழத்திலிருந்து பெறப்படும் வனிலாச்சாரம் எலும்பிச்சை தோடம்பழச் சாரங்கள் கசப்பான வாதுமையிலிருந்து பெறப்படும் இயற்கையான பென்சால்டிகைட்டு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

உடன் உணவுகளில் இயற்கைப் பொருட்களில் காணப்படுவதை ஒத்த இரசாயண மணமூட்டற் பொருட்களே உடன் உணவுப் பொருட்களில் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது. இவற்றுக்கு உதாரணமாக மொனோ சோடியம் குளூற்றாமேற்று (MSG) மூகோலோனிக் அமிலம் இபெரெனிக் அமிலம் இனேசின் -5-மொனோ பொசுபோற்று (IMP) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**ஆய்வு முறையியல்**

யாழ் பிரதேசத்திலுள்ள வலி தென்மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட 50 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு வயது அடிப்படையில் 25 பெண்பிள்ளைகளையும், (5 - 20) 25 யுவதிகளையும், (25 - 45) எழுமாறாக தெரிவு செய்து ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இவர்களிடம் 2016 ம் ஆண்டு வினாக்கொத்துக்கள் கொடுக்கப்பட்டு பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

**தரவுகளும் பாகுப்பாய்வும்**

வினாக் கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மக்கள் உட்கொள்ளும் உணவுகளில், உணவின் தரத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட தரவுகள் தொடர்பாகவும் விகிதாசார முறையில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உட்கொள்ளும் உணவு சார்ந்த பகுப்பாய்வு**

**ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டோர் உட்கொள்ளும் உணவுகள்**

**அட்டவணை 1 வினாக்கொத்து மூலம் 2016**

| பாரம்பரிய உணவுகள் | உட்கொள்ளு வோரின் வீதம் | உடன் உணவுகள் | உட் கொள்ளுவோரின் வீதம் |
|---|---|---|---|
| கூழ் (சைவம், அசைவம்) | 58 | வெதுப்பக உணவுகள் | 80 |
| கஞ்சி | 48 | நூடில்ஸ் | 80 |
| பால்ப்பிட்டு | 40 | கொத்து ரொட்டி | 80 |
| குரக்கன்மாப்பிட்டு, ரொட்டி | 52 | பிஸ்கட் லகை | 80 |
| இடியப்பம் | 80 | பேஸ்ரி வகை | 64 |
| தோசை | 80 | பிஸ்ஸா | 34 |
| அப்பம் | 80 | பேக்கர் | 18 |
| உழுத்தங்களி | 44 | பிரெஞ் பிரைட் | 16 |
| அவித்த கிழங்கு | 46 | சிபிஸ் | 76 |
| பொரி உருண்டை | 36 | சோயாமீற் வகை | 80 |
| முட்டைமா | 44 | சோஸ்வகை | 68 |
| பனம்பண்டங்கள் | 60 | சுவையூட்டப்பட்ட பால் | 66 |
| கைக்குத்தரிசிச் சோறு | 58 | சொசேஜஸ் | 12 |
| எள்ளுப்பாகு | 34 | ஜெலி வகை | 72 |
| பயற்றம் பணியாரம் | 76 | சூப் வகை | 34 |
| முறுக்கு | 80 | ரின் மீன் | 76 |
| அரியதரம் | 44 | குளிர்பானங்கள் | 80 |
| பால்ரொட்டி | 44 | சமபோசா | 52 |

*மூலம் - கள ஆய்வு வினாக்கொத்து- 2016*

இவ் அட்டவணையை நோக்கும் போது பாரம்பரிய உணவுகளில் இடியப்பம், அப்பம், தோசை, முறுக்கு, போன்றவற்றை அனைவரும் உட்கொள்கின்ற போதிலும் பால்ப்புட்டு, எள்ளப்பாகு, உழுத்தங்களி, முட்டைமா, அரியதரம், பால்ரொட்டி போன்றவற்றை குறைந்த அளவிலேயே உட்கொள்கின்றமையை காண முடிந்தது. உடன் உணவுகளில் வெதுப்பக உணவுகள் நூடில்ஸ், கொத்துரொட்டி, பிஸ்கட் வகை, சோயாமீற், குளிர் பானங்கள் போன்றவற்றை அனைவருமே உட்கொள்கின்றனர் இருப்பினும் சேசோஜஸ், போகர், பிஸா, சூப் வகை போன்றவற்றை குறைந்தளவினரே உட்கொள்கின்றனர் என்பது கண்டு கொள்ளப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணவின் தரத்தை அடிப்படையாகக் கொண்ட பகுப்பாய்வு**

**போசணைப் பொறுமானம்**
**அட்டவணை 2 வினாக்கொத்து மூலம் 2016**

**சிறந்த போசாக்குள்ள உணவுகள்**

| உணவுகள் | தெரிவு செய்தோரின் எண்ணிக்கை | தெரிவு செய்தோர் வீதம் |
|---|---|---|
| பாரம்பரிய உணவுகள் | 40 | 100% |
| உடன் உணவுகள் | 00 | 00% |

*மூலம் - கள ஆய்வு வினாக்கொத்து- 2016*

இவ் அட்டவணையின் படி பாரம்பரிய உணவுகளையே 100% மக்கள் சிறந்த போசாக்குள்ள உணவுகளாக தெரிவு செய்துள்ளமையை அவதானிக்க் கூடியதாகவுள்ளது.

**சுகாதாரப் பாதுகாப்பு**

**அட்டவணை 3 வினாக்கொத்து மூலம் 2016**

நோயை ஏற்படுத்தும் உணவுகள்

| உணவுகள் | தெரிவு செய்தோரின் எண்ணிக்கை | தெரிவு செய்தோர் வீதம் |
|---|---|---|
| பாரம்பரிய உணவுகள் | 00 | 00% |
| உடன் உணவுகள் | 40 | 100% |

*மூலம் - கள ஆய்வு வினாக்கொத்து- 2016*

இவ் அட்டவணையின் படி உடன் உணவுகளே நோயை ஏற்படுத்தும் உணவுகள் என்பதை அவதானிக்க முடிகிறது

**தோற்றம்**

**அட்டவணை 4 வினாக்கொத்து மூலம் 2016**

*கவர்ச்சியான காட்சிப்படுத்தலினால் உண்ணத்தூண்டும் உணவுகள்*

| உணவுகள் | தெரிவு செய்தோரின் எண்ணிக்கை | தெரிவு செய்தோர் வீதம் |
|---|---|---|
| பாரம்பரிய உணவுகள் | 00 | 00% |
| உடன் உணவுகள் | 40 | 100% |

*மூலம் - கள ஆய்வு வினாக்கொத்து- 2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கேயும் 100% மக்கள் உடன் உணவுகளையே தெரிவு செய்தமையை அவதானிக்க முடிகிறது.

**தன்மை**

**அட்டவணை 5 வினாக்கொத்து மூலம் 2016**

**சமிபாட்டுச் சிக்கலை ஏற்படுத்தக்கூடிய உணவுகள்**

| உணவுகள் | தெரிவு செய்தோரின் எண்ணிக்கை | தெரிவு செய்தோர் வீதம் |
|---|---|---|
| பாரம்பரிய உணவுகள் | 00 | 00% |
| உடன் உணவுகள் | 40 | 100% |

*மூலம் - கள ஆய்வு வினாக்கொத்து- 2016*

இங்கேயும் உடன் உணவுகளே முதன்மை பொறுகின்றது.

**நிறம்**

**அட்டவணை 6 வினாக்கொத்து மூலம் 2016**

| உணவுகள் | குறிப்பிட்டோரின் வீதம் |
|---|---|
| ஜெலி வகை | 36 |
| இனிப்பு, மிட்டாய் வகை | 12 |
| நூடில்ஸ் | 26 |
| பிஸ்ஸா | 43 |
| மஸ்கட் தொதல் | 22 |
| சிற்றூண்டி வகை | 48 |
| குளிரூட்டிய பானங்கள் | 36 |
| புழரசம் | 38 |
| கேக் | 50 |
| பிரியாணி | 20 |
| குளுக்கோரஸ் | 30 |
| உப்பு மா | 02 |
| கொத்து ரொட்டி | 24 |
| மாஸ்மலோ | 10 |
| பேஸ்ரி | 02 |
| சிப்ஸ் | 04 |
| ஜஸ்கிறீம் | 70 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஜீஸ் | 10 |
| மிக்சர் | 06 |
| பூந்தி | 14 |
| இனிப்புப் பண்டங்கள் | 24 |
| சிக்கன் போல்ஸ் | 08 |
| ஜாம் வகை | 20 |
| சோக்றே | 30 |
| சுவிஸ் ரோல் | 24 |
| அல்வா | 04 |
| போம்பே சுவீற் | 14 |
| யோகட் | 06 |
| சுவையூட்டப்பட்ட பால் | 10 |

மூலம் - கள ஆய்வு வினாக்கொத்து - 2016

பாரம்பரிய உணவுகளில் செயற்கை நிறமூட்டிகள் பயன்படுத்தப்படாமையினால் இங்கு பாரம்பரிய உணவுகள் சோத்தக் கொள்ளப்படவில்லை.

இங்கு பார்த்தவுடன் உண்ண தூண்டும் உணவுகளாக உடன் உணவுகளே காணப்படுகின்றன.

**சுவை**

**அட்டவணை 7 வினாக்கொத்து மூலம் 2016**

**மீண்டும் மீண்டும் உண்ணத் தூண்டும் தன்மை கொண்ட உணவுகள்**

| உணவுகள் | தெரிவு செய்தோரின் எண்ணிக்கை | தெரிவு செய்தோர் வீதம் |
|---|---|---|
| பாரம்பரிய உணவுகள் | 40 | 100% |
| உடன் உணவுகள் | 00 | 00% |

மூலம் - கள ஆய்வு வினாக்கொத்து - 2016

இங்கேயும் உடன் உணவுகளே முதன்மை பெறுவதை அவதானிக்க முடிந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 8 வினாக்கொத்து மூலம் 2016**

இயற்கையான வாசனைச் சரக்குகள் சேர்த்து தயாரிக்கப்படும் உணவுகள்

| உணவுகள் | தெரிவு செய்தோரின் எண்ணிக்கை | தெரிவு செய்தோர் வீதம் |
|---|---|---|
| பாரம்பரிய உணவுகள் | 40 | 100% |
| உடன் உணவுகள் | 00 | 00% |

மூலம் - கள ஆய்வு வினாக்கொத்து - 2016

இங்கு பாரம்பரிய உணவுகளில் இயற்கையான வாசணைத்திரவியங்கள் சேர்த்து தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள் என்பதனை மக்கள் அவதானிக்க முடிகிறது.

**கண்டறிதல்கள்**

உடன் உணவுகளைத் தயாரித்தல் பரிமாறல் நுகர்தல் போன்றவற்றிற்கு மிகக் குறுகிய நேரமே செலவாவதால் பாரம்பரிய உணவுகள் ஆரோக்கியமான உணவுகளாக இருப்பினும் இன்றைய அவசர உலகில் மக்கள் உடன் உணவுகளையே அதிகளவில் பயன்படுத்துகின்றனர். பாரம்பரிய உணவுகளே போசணையில் சிறந்த உணவுகள் என்பதனையும் உடன் உணவுகள் உடலுக்குத் தேவையான போசணைச் சத்துக்களைக் கொண்டிருப்பதில்லை என்பதனையும் அறிந்திருந்த போதும் மக்கள் கண்களுக்கும் மூக்குக்கும் நாவிற்கும் அடிமையாகி அவற்றைத் திருப்திப்படுத்தும் முகமாக தமது உணவுத் தெரிவுகளில் உடன் உணவுகளுக்கே அதிகம் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். பொதுவாகக் கிராமப்புற மக்கள் எப்போதும் நிறையுணவுகளையே உட்கொள்ளுகின்றார்கள் ஆனால் நகர்ப்புற மக்களோ போசாக்கினை விட நேரத்திற்கே முக்கியத்துவம் கொடுத்து உடன் உணவு வகைகளை அதிகளவில் உட்கொள்ளுகின்றமையைக் காணக் கூடியதாகவுள்ளது.

உடன் உணவுகளில் சேர்க்கப்படுகின்ற இரசாயனப் பொருட்கள் புற்றுநோய் போன்ற பாரிய நோய்களினை ஏற்படுத்தும் தன்மை கொண்டதாகக் காணப்படினும் அப் பாதிப்புகளைப்பலமக்கள்அறியாதவர்களாகவே உள்ளனர். அதிகரித்த விளம்பரங்களின் செல்வாக்கும் மக்களின் உணவுப் பழக்கத்தில் அதிகம் தாக்கம் செலுத்துகின்றது. அதிலும் குறிப்பாக இன்றைய இளம் தலைமுறையினர் விளம்பரங்களால் அதிகளவில் ஈர்க்கப்பட்டு உடன் உணவுகளை உட்கொள்வதைப் பழக்கமாக்கிக் கொண்டுள்ளமையால் அவற்றின் விற்பனையும் அதிகமாகக் காணப்படுகின்றது. பொதுவாக உடன் உணவுகள் இலாப நோக்கோடு மக்களைக் கவரும் விதத்தில் உற்பத்தி செய்யப்படுகிறதேயொழிய மக்களின் ஆரோக்கியத்திற்கு ஏற்றவகையிலோ ஆரோக்கியத்தைக் கருத்திற் கொண்டோ இவை தயாரிக்கப்படுவதில்லை. விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சி ஏற்படாத காலத்திலிருந்தே பாரம்பரிய உணவுகள் தயாரித்து உண்ணப்பட்டுவரினும் அவை தரத்தில் சிறந்தனவாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.(அட்டவணை 6)

உயிர் வாழ்க்கைக்கு உணவுவகைகள் இன்றியமையாதன. அவை உடலின் வளர்ச்சியையும் பாதுகாப்பையும் அன்றாட பணிகளைச் செய்வதற்கான சக்தியையும் வழங்குகின்றன. இந்த நன்மைகள் அனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறையுணவை உட்கொள்வதனூடாகவே கிடைக்கின்றன. மாறாக கண்களுக்கும் மூக்குக்கும் நாக்குக்கும் மட்டும் விருந்தளித்து நோய்களை ஏற்படுத்தும் உடன் உணவுகளிலிருந்து எந்தவொரு நன்மையும் கிடைப்பதில்லை. அதாவது இத்தகைய உணவுகள் மாப்பொருள் கொழுப்பு சத்துக்களையே அதிகளவில் கொண்டிருப்பதனால் இருதயநோய், நீரிழிவு, உடற்பருமன் போன்றன நோய்கள் ஏற்படவே காரணமாகின்றது.(அட்டவணை 5) (B.Srilakshmi- 2015)

மேலும் உடன் உணவுகளில் தரத்தை மேம்படுத்துவதற்கென பல்வேறு இரசாயனப் பொருட்கள் சேர்க்கப்படினும் அவையும் உடல் நலத்திற்குக் கேடு விளைவிப்பனவாகவே காணப்படுகின்றன. ஏனெனில் அவ் இரசாயனப் பொருட்களில் பொரும்பாலானவை இரசாயன சேர்க்கையில் இருந்து தயாரிக்கப்பட்டவையாக வும் மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்களின் தயாரிப்பில் பயன்படுத்தப் படும் நிறச்சாயங்களுமாகவே காணப்படுகின்ற மையால் அவை புற்றுநோயை ஏற்படுத்தும் தன்மையுடையதாகவும்காணப்படுகின்றன. இவ் உடன் உணவுகள் தயாரிக்கப் பெற்றக்கொள்ள இலகுவாக இருப்பதுடன் கண்கவர் நிறம் உண்ணத்தூண்டும் சுவை மற்றும் கவர்ச்சியான காட்சிப்படுத்தல்களுடன் தோற்றமளிக்கின்ற போதும் அவை உடல் ஆரோக்கியத்தைக் கெடுப்பவையாகவே காணப்படுகின்றன. (அட்டவணை 6,7)

எனவே பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கத்தைக் கடைப்பிடிப்பதென்பது நிரந்தர இலாபத்தைத் தரும் ஆரோக் கிய வழியாகும். பாரம்பரிய உணவு முறையானது இயற்கையானதாகயும் மலிவாகக் கிடைக்கக்கூடியதாகவும் காணப்படுகின்ற அதேவேளை எமது பிரதேசத்திலுள்ள வளங்களைப் (மரம்; செடி, கொடிகள், கடல்வளம்) பயன்தரும் வகையில் பயன்படுத்தக்கூடியதாகவும் அமைந்து காணப்படுகிறது. அத்துடன் பயன்படுத்தப்படுகின்ற காய்கறிகள், தானியங் கள் என்பன நார்த்தன்மை கொண்டதா கவும் சத்துக்கள் நிறைந்தனவாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அவற்றின் நோய் தீர்க்கும் ஆற்றலினால் முன்னைய கால மக்கள் ஆரோக்கியமாகவும் நீண்ட ஆயுளுடனும் வாழ்ந்துள்ளனர். இவ்வுணவுகளில் பச்சை இலைக்கறி வகைகள் அதாவது கீரை வகைகள் அதிகமாகப் பயன்படுத்துவதனால் அவற்றின் மூலம் உயிர்ச்சத்து கனிப்பொருட்களையும் பெற்று அம்மக்கள் சுக வாழ்வு வாழ்ந்த வரலாற்றை கண்கூடாகக் காணக்கூடியதாகயுள்ளது.

எனவே பாரம்பரிய முறைகளைப் பழமையென்றும் ஒன்றுக்கும் உபயோக மற்றவை என்றும் ஒதுக்கி விடுவதோ அன்றி நவீன முறைகள் தான் சிறந்தவை என்று ஏற்றுக்கொள்வதோ புத்திசாலித்தனமல்ல. ஆரோக்கிய வாழ்விற்கு எவை உகந்தவையோ அவற்றையே ஏற்றுப் பின்பற்ற வேண்டும் அல்லாதவற்றை விலக்க வேண்டும். அந்த வகையில் ஒவ்வொருவரினதும் உணவுப் பழக்கவழக்கங்களிலிருந்தே ஆரோக்கியம் ஆரம்பமாவதால் ஆரோக்கிய வாழ்விற்கு ஏற்ற வகையில் தரமான உணவுகளை உட்கொள் ளுதல் அவசியமாகும்.

இவ் ஆய்வின் முடிவாக பாரம்பரிய உணவுகளின் பெறுமதியை மக்கள் உணர்ந்து "உணவே மருந்து மருந்தே உணவு" என்பதற்கு இணங்க ஆரோக்கிய வாழ்வு வாழ பாரம்பரியம் பேணி சுகதோகியாக வாழ முயற்சிப்பதுடன் எமது உணவுப்பழக்கவழக்கங்களை பாடத்திற்கு ஏற்ப சீரமைத்து பின்பற்றுவோமேயானால் நல்ல பல பாரம்பரிய உணவு முறைகள் எம்மை விட்டு மறைந்து போய் விடாமல் பாதுகாக்கப்படுவதுடன் எமது ஆரோக்கி யத்தை மேலும் நன்நிலையில் பேணி வழமான வாழ்வும் வாழமுடியும் என்பதில் ஐயம் இல்லை.

எதிர்காலத்தில் இவ் ஆய்வானது வேறுபட்ட வயதுப் பிரிவினர், பால், உணவுக் கோலம், என்பவற்றைக் கருத்திற் கொண்டு விரிவாக மேற்கொள்ளப்படலாம்.

உசாத்துணைப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்**


1. சிவசண்முகராஜா,சே., (2002, ஆனி), 'யாழ்ப்பாண மக்களின் சைவ உணவுப் பழக்கவழக்கங்கள்', சித்தமருத்துவ வளர்ச்சிக் கழகத்தின் வெளியீடு.

2. வசந்தி, அரசரத்தினம். , (2006), 'உணவும் போசணையும்', மலர் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

3. ப்ருதி, ஜே.எஸ்., தமிழாக்கம் சுந்தரராஜன், (1990), "நறுமணப் பொருட்கள்" (உணவுக்கு ருசியூட்டும் மசாலாப் பொருட்கள்)இ நேசனல் புக் டிரஸ்ட்இ இந்தியா.

4. சிவராஜா, எம்., சிவராஜா, என., 'உணவுப் பொருட்களின் போசணைப் பெறுமானங்கள்'சுகாதார கல்விசார் பொருட்கள் தயாரிப்பு அலகு, சமுதாய மருத்துவத்துறை மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

5. Jenny,Ridgwell., (1996), "Examining food &Nutrition", Heinemann Educational Publishers.

6. David Foskett Victor Ceserani and Ronald Kinton,(2003), "Theroy of catering", Book power, Supported by charitable donation.

7. Ramasamy, M., (2000) "A Treatise and manual of food analysis", Print Graphics.

8. Anita, Tull. ,(1996), "Food and Nutriton", Oxford University Press.

9. Srilakshmy .B ., (2015) Food and nutrition. New Age Publication

10. Srilakshmy .B., (2015) Dietetics , New Age Publication

11. Biro F.M, Khoury.P and Morrison J.A. (2005). Influence of obesity on timing of puberty, International Journal of Andrology, 29 (1), 272–277.


**உபயோகிக்கப்பட்ட இணையத்தளங்கள்**


1. www.wikipedia.org 2016
2. http://ayuredamaruthuvam.Forumta .net, 2016
3. www.kodal.com/health/food-guid, 2016
4. www.eegarai.net, 2016
5. http://article.wn.com 2016
6. http://www.sangkavi,com 2016
7. www.uyirmmai.com 2016
8. www.curesure4u.com 2016
9. www.gnanamuthu,com 2016
10. http://mittaikkadai.blogspot.com 2016




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக் கோயில்களில் கட்புலக்கலை வெளிப்பாடுகள் - யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்துக் கோயில்களை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு

ர. பிரகாஷ்

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையில் இந்து ஆலயங்கள் பக்தி நெறிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதே பட்சத்தில் கலை வெளிப்பாடுகளை கட்புலக்கலை வடிவங்களினூடு எடுத்துக்காட்டுவதற்கான கலைக் கோயில்களாகவும் விளங்குகின்றன. தொன்மையான வேர்களைக் கொண்ட ஒரு தனித்துவ கண்ணோட்டத்தை வழங்கும் கண்கவர் கலைப்படைப்புக்களை பிரதிபலிக்கும் கலைக் களஞ்சியமாக இந்துக்கோயில்கள் விளங்குகின்றன. இலங்கையில் எண்ணிக்கையில் அதிகமான இந்து ஆலயங்களைக் கொண்ட மாவட்டமாக யாழ்ப்பாணம் காணப்படுகின்றது. அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தொன்மையான இந்து ஆலயங்களின் கட்புல கலை வெளிப்பாடுகள் இனங்காணப்பட்டு இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. புராதன இந்து ஆலயங்களின் கட்புல கலை வெளிப்பாடுகள் பாரம்பரிய மற்றும் நவீன பாணிகளுடன் இணைந்ததான தன்மையை மெய்ப்பிக்கின்றன. தென்னிந்திய திராவிடக் கலையின் வீச்சு அதிகமாக இந்து ஆலயங்களின் கட்புலக் கலை வடிவங்களில் பிரதிபலிக்கின்றது. அத்துடன் இங்கு சமகாலத்திய கட்புலக் கலைகளில் அதிநவீன நடைமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பழமைகள் புறந்தள்ளப்படும் போக்கினையும் இனங்காண முடிகிறது. திராவிட மரபுகளில் ஊடக ரீதியான வேறுபாடுகள் மற்றும் தொழில்நுட்பம் முதலியவற்றின் ஊடாக கட்புலக்கலைகள் புதிய அவதாரங்களை எடுத்திருக்கின்றமையை இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

**திறவுச்சொற்கள்:** கட்புலக்கலை,திராவிடக்கலை,கர்ப்பக்கிரகம்,விமானம்,கோபுரம்,தூண்கள்

**அறிமுகம்**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தேர்ந்தெடுக் கப்பட்ட பாரம்பரிய இந்து ஆலயங்களில் வெளிப்படுத்தப்படும் கட்டிட, சிற்ப, ஓவிய அலங்கார கட்புலக்கலை வடிவங்கள் பற்றிய ஓர் ஆய்வாக இது அமைகின்றது. இந்து ஆலயங்களின் கட்புலக் கலை வடிவங்கள் இந்து மதத்தின் புராணம், இதிகாசம், வரலாறு, சமூகம், தத்துவம், கலாச்சாரம், பண்பாடு முதலிய அம்சங்களில் செறிந்து காணப்படுகின்றன. ஓர் இனத்தனவரின் நாகரீகம், பண்பாடு முதலியவற்றை எடுத்தியம்பும் கலாச்சார சின்னமாகவே கோயில்கள் விளங்குகின்றன. குறிப்பாக தென்னிந்திய கலை வடிவங் களின் முழுமையான தழுவல்களை யாழ்ப்பாணப் பிரதேச இந்துக்கோயில்கள் கொண்டிருக்கின்றன.

பொதுவாக இந்தியக் கோயில்களின் கட்புலக் கலை வடிவங்கள் நாகரம், வேசரம், திராவிடம் முதலிய கலைப் பாணிகளில் முக்கியம் பெற்று விளங்குகின்றன. அதிலும் குறிப்பாக தென்னிந்தியக் கோயில்களின் கட்புலக் கலை வடிவங்கள் முழுமையாக திராவிட பாணியிலேயே பின்பற் றப்பட்டுள்ளது (Gananasekara iyar, 2005, P.24). இந்த திராவிடப் பாணியில் அமைந்த மரபுகளை யாழ்ப்பாணப் பிரதேசக் கோயில்களின் கட்புலக்கலை வடிவங்களில் இனங்காண முடியும். இந்துமதம் சைவம் - சிவன், சாக்தம் - சக்தி, வைஷ்ணவம்-விஷ்ணு, காணபத்தியம் - கணபதி, கௌமாரம் - முருகன், சௌமாரம் - சூரியன் எனும் ஆறு பிரிவுகளாக ஸ்ரீசங்கரர் வகுத்துள்ளார் (Vasantha Nadarajan, 2003, p.19). குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் சௌமாரம் - சூரியக்கடவுள் தவிர்ந்த ஏனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து பிரிவுகளுக்கும் அதிகமான கோயில்கள் காணப்படுகின்றன. இந்த ஐந்து பிரிவுகளில் உள்ள புராதன கோயில்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றின் கட்டுலக்கலை வடிவங்கள் பற்றி இங்கு பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இதில் குறிப்பாக கர்ப்பக்கிரகம், விமானம், கோபுரம், தூண்கள், மண்டபங்கள், சிற்பங்கள், ஓவிய அலங்கார வெளிப்பாடுகள் திராவிட பாணிகளுடன் ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. ஆகம, சாஸ்த்திர விதிமுறைகளுக்கு உட்பட்ட தூய்மையான திராவிட பாணிகளை இந்த இந்துக்கோயில் கட்டுலக்கலை வடிவங்களில் இனங்கண்டு கொள்ள முடியும். ஆனால் ஊடகம், வர்ணம், வடிவமைப்புரீதியில் முழுமையான திராவிட மரபினை கோயிலின் உட்புறத்திலும் மற்றும் வெளிப்புறச்சூழலிலும் புராதன வடிவங்கள் புதிய பாணிகளுடன் மாற்றம் காண்பதனை இங்கு இனங்காண முடியும். இதனைத் தீர்மானிப்பது கோயிலின் பொருளாதார வளம், கோயிலைக் கட்டுவதில் மக்களிடையே ஏற்பட்ட போட்டி, பழைய கோயிலைப் புதுப்பித்தல், இதற்காக பழைய கட்டுலக்கலை வடிவமைப்புக்கள் உடைக்கப்படல், சிறிய கோயில்கள் பெரிய கோயில்களாக மாற்ற மடைதல், சமூகத்தில் சாதிப்பாகுபாடு காணப்படுதல் முதலிய காரணங்களினால் பழைய திராவிட மரபினுள் புதிய கலை வடிவங்களும் உட்புகுத்தப்படுகின்றமையை சுட்டிக்காட்ட முடியும்.

**இந்துமதம்**

கோயில் என்பது இறைவனை வணங்குதல், வேள்விகள் நடாத்துதல் முதலிய மதம் சார்ந்த ஆன்மீக நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட கட்டிடமாக விளங்குகின்றது. இந்துக்களின் தெய்வ வழிபாட்டிற்கு ஆலயங்களே உறுதுணையாக காணப்படுகின்றன. ஆலயங்களும் அதன் கோபுரங்களும் ஊருக்கு அணிகலண்களாகத் திகழ்கின்றன. இந்துமதம் கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை மற்றும் சமய இலக்கிய கலைகளுடன் ஒன்றிணைந்த தத்துவங்களையும், சமயக் கிரியைகளை உணர்த்தும் மதமாகவும் விளங்குகின்றது. இந்துமதம் மக்கள் பண்பாட்டின் உறைவிடமாகும்.

இந்துக்களின் இவ் வழிபாட்டுத்தலங்கள் தேவஸ்தானம், கோவில், ஆலயம், தலம் என பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இந்து சமயம் சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌமாரம் எனும் ஆறு மதப்பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இதில் இந்து என்பது சைவம் எனும் பொருளையே உணர்த்துகின்றது. சைவ சமயத்திற்கு அடிப்படையானவை சிவாகமங்களும், சைவமரபுகளுமேயாகும். சிவாகம மரபில் முக்கியத்துவம் பெறுவது திருக்கோயில் அமைப்புக்களும், திருவுருவ அமைப்புக்களும் கிரியை மரபுகளுமேயாகும். இந்துக்கோயில்களில் திருவிழா என்பது சமய வழிபாட்டிற்கும், சமூக முன்னேற்றத்திற்குமாகவே நடைபெறுகின்றது. ஒரு கிராமத்தைச் சேர்ந்த பல சமூகத்தினருக்கு உதவி புரியும் சமூக விழாவாகவும் மகோற்சவம் பயன்படுகிறது. இந்து ஆலய கட்டிட சிற்பஅலங்கார வடிவங்களைப் பற்றி பல கல்வெட்டுச் சான்றுகள் ஊடாகவும் சிற்ப சாஸ்த்திர நூல்களினூடாகவும் படைப்புக்கள் ஊடாகவும் மன்னர்களின் ஆதரவுகளினுடாகவும் இனங்காண முடியும்.


**இந்தியா மற்றும் இலங்கையில் இந்துமதச் செல்வாக்கு**

இந்து மதத்தின் தாயகமான இந்தியாவில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கோயில்கள் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இந்திய நாட்டில் பண்டைய காலத்தில் இருந்து ஆரியர் மற்றும் திராவிடர் எனும் இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். விந்திய மலைக்கு வடக்கே வடமொழியாகிய சமஸ்கிருதத்தை தம்தாய்மொழியாகக் கொண்ட இனத்தவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியர் காணப்படுகின்றனர். திராவிடர் தமிழ் மொழியை தம் தாய்மொழியாகக் கொண்டு விந்திய மலைக்குத் தெற்கே வாழ்ந்து வருகின்றனர். இவ்விரு இனத்தவர் களிடையேயான பண்பாட்டு பழக்கவழக்கங்கள் வேறுபட்டனவையாகப் காணப்படுகின்றன. இந்தியாவின் பல பாகங்களிலும் உயர்ந்து விளங்கிய கட்டிட, சிற்ப, ஓவிய முறையானது அந்நாட்டினை அண்மித்துள்ள இலங்கை, யாவா, சுமாத்திரா, கம்போடியா, சயாம் முதலிய நாடுகளிலும் பரவி வளர்ச்சி பெற்றது. இந்திய நாடு இலங்கையுடன் பலதுறைகளிலும் தொன்றுதொட்டு தொடர்புடையதாக இருந்து வருகின்றது. இதனை இருநாட்டு சரித்திர நூல்கள் மற்றும் கல்வெட்டுக்களினுடாக இனங்காண முடியும்.




**படம் 01,** A - Nagara, B- Dravida, C - Vesara types, (in Book ), Swami Hrashananda, 1998, All about Hindu Temples, Sri Ramakrishna math, mylapore, Madras

**நாகர பாணி,** B **திராவிடபாணி,** C **வேசர பாணி**

இந்திய இந்துக் கோயில் கட்டிட சிற்ப ஓவியக்கலைப் பாணிகள் நாகர, திராவிட, வேசர பாணிகளினூடாக பிரித்து நோக்கப்படுகின்றன (படம் 01). நாகரப் பாணி ஆரியர்களினுடைய பாணி யாவும் திராவிடப்பாணி தமிழர்களினுடைய பாணியாகவும் வேசரப்பாணி நாகர திராவிட பாணிகள் கலந்த பாணியாகவும் காணப்படுகின்றது. தமிழ்நாட்டில் சிறப்படைந்து வாழ்ந்த சேர, சோழ, பாண்டிய, பல்லவ, நாயக்க மன்னர்கள் தங்கள் ஆதிக்கத்தை இலங்கை மீதும் செலுத்தினர் என இருநாட்டு சரித்திரங்களும் கூறுகின்றன. அவர்களின் காலணித்துவத்திற்குள் இலங்கை இருந்த காலங்களில் சைவசமயக் கொள்கைகளும் கோயிற்கட்டிடக்கலையும் நிலையங்களும் இலங்கையில் பரவியது. அதன் பயனாக இன்றும் இலங்கை சைவசமயத்திற்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் ஓர் சிறந்த நிலைக்களமாக விளங்குகின்றது. இலங்கையில் மிகப்பண்டைய காலந்தொடக்கம் சைவசமயம் பரவியிருந்தது என்பதற்கு மகாவம்சம், இராமாயணம் முதலிய நூல்களிலும் தேவாரத் திருமுறைகளிலும் சான்றுகள் உள்ளன.

**இலங்கையில் இந்துமதம்**

இலங்கையில் கட்டிட, சிற்ப, ஓவிய கலை வளர்ச்சி இந்திய நாட்டின் கலை வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். இந்திய சிற்பங்கள் சமயத் தொடர்புடையவையாக காணப்பட்டவை போன்றே இலங்கைச் சிற்பங்களும் சமயத் தொடர்புடையனவாக அமைந்துள்ளன. இலங்கயில் உபயோகிக்கப்படும் சிற்ப நூல்கள் மாயா மருதம், ரூபாவளி என Dr.ஆனந்தகுமாரசுவாமி குறிப்பிடுகின்றார். அசோகச்சக்கரவர்த்தி காலம் தொடக்கம் ஏற்பட்ட சமய மாறுதல்களாலும் அரசியல் புரட்சிகளாலும் இந்தியாவில் பல்வேறு வித அம்சங்கள் பொருந்திய சிற்பமுறைகள் (Styles of art) தோன்றி விருத்தியடைந்தன. அச்சிற்ப முறைகளுல் மௌரிய, காந்தார, ஆந்திர, குப்த, பல்லவ, சோழ, பாண்டிய, விஜயநகர, நாயக்க சேதுபதிகள் பாணிகள் முக்கியம் பெறுகின்றன (Navaratnam,K.,2007,P.09) இலங்கையின் கட்டிட, சிற்ப, ஓவிய வளர்ச்சிக்காலங்களை நான்கு வகையாக பிரித்து நோக்க முடியும்.

1. அனுராதபுரக்காலம் - தேவநம்பியதீஸன் தொடக்கம் 9ம் நூற்றாண்டுவரை (மௌரிய, ஆந்திர, குப்த, பல்லவ, சிற்ப முறைகளின் செல்வாக்கு)
2. பொலனறுவைக்காலம் - 10ம் நூற்றாண்டு வரை (சோழ, பாண்டிய சிற்ப முறைகளின் செல்வாக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கண்டி நகாக்காலம் - 14ம் நூற்றாண்டு 18ம் நூற்றாண்டு (விஜய நாயக்க சேதுபதிகள் சிற்ப முறைகளின் செல்வாக்கு)
4. கொழும்பு நகர்காலம் - 19ம் நூற்றாண்டுக்குப் பின்னர் உள்ள காலம் (சமகால தென் இந்திய சிற்ப முறைகளின் செல்வாக்கு)

இலங்கையில் நாலந்தாவிலுள்ள 'கெடிகே' எனும் ஆலயம் மற்றும் இசுறுமுனியா புடைப்புச்சிற்பங்கள் பல்லவர் கட்டிட சிற்ப முறைகளைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் சிலதேவாலயம், மற்றும் தூபராம ஆலயம் முதலியன சோழ கட்டிட சிற்ப முறையில் அமைந்துள்ளன. முதலாம் சிவதேவாலயம் மற்றும் யாப்பகூவா சிற்பங்கள் பாண்டிய சிற்பமுறைகயில் கட்டப்பட்டுள்ளன. பொலனறுவையிலுள்ள பௌத்த ஆலயங்களின் புறச்சுவர்களில் காணப்படும் சிற்ப வேலைப்பாடுகள் தென் இந்திய கோயில் சுவர்களிலுள்ள சிற்ப வேலைப்பாடுகளை நினைவூட்டுகின்றன. இலங்காதிலக விகாரையில் கர்ப்பக்கிரகம், அந்தராளம், அர்த்தமண்டபம் ஆகியவற்றுடன் அமைந்த ஓர் சைவ ஆலயத்தை நினைவூட்டுகின்றது. இவ்விகாரை நாயக்க பாணியில் அமைந்துள்ளது. இலங்கையில் கட்டப்பட்ட கருங்கல் விகாரையான கடலாதெனிய விகாரை தென்இந்திய சிற்பியான கணேஸ்வராச்சாரியால் கட்டப்பட்டது. கண்டி தலதாமாளிகை தூண்கள் தென் இந்திய நாயக்கர் பாணியை ஒத்ததாகக் காணப்படுகின்றது. பழைய ஆலயங்களும் தாதுகோபங்களும் 19ம் நூறற்ாண்டுக்கு பின் திருத்தப்பட்டு வருகின்றன. களனிவிகாரை முற்றாகப் புதுப்பிக்கப்பட்டு தென்இந்திய சிற்பமுறையில் அமைக்கப்பட்டுள்ளது. தென்இந்திய கட்டிட சிற்ப மரபுகள் இலங்கையில் பௌத்த, இந்து மதக் கட்டிட அமைப்புகளுடன் ஒன்றிணைந்து காணப்பட்டதனை இதனூடாகக் காண முடிகின்றது.

**யாழ்ப்பாணத்தில் இந்துமதம்**

இலங்கையில் 25 மாவட்டங்களிலும், ஆறாயிரத்து அறுபத்தெட்டுக்கும் அதிகமான இந்துக்கோயில்கள் பரந்து காணப்படுகின்றன. இலங்கையில் இந்து கலாச்சார அமைச்சினால் 30.09.2016ம் ஆண்டு வெளியிடப்பட்ட கோயில் பதிவுகள் பற்றிய அறிக்கையின்படி யாழ்ப்பாண மாவட்டமே இலங்கையில் எண்ணிக்கையில் அதிகளவிலான இந்து கோயில்களைக் கொண்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது. ஆயிரத்து ஐந்நூற்றி இருபத்தி ஒன்பதிற்கும் அதிகமான இந்துக்கோயில்களை கொண்ட, இலங்கையில் முதலாவது மாவட்டமாக யாழ்ப்பாணப் பிரதிபலிக்கின்றது. இங்கு தொன்மையான இந்துக்கோயில்கள், புதுப்பிக்கப்பட்ட பழமையான இந்துக்கோயில்கள், புதிதாக கட்டப்பட்ட இந்துக்கோயில்கள் என பிரித்து இனங்காண முடியும்.

இலங்கையின் வடபகுதியில் ஆரம்ப காலங்களில் சிறுவழிபாட்டு இடமாகக் காணப்பட்ட இடத்தில் இருந்து கி.பி 12ம் நூற்றாண்டின் பின்னர் பாரிய கட்டிடமாக கோயில்கள் வளர்ச்சியடையத் தொடங்கின. யாழ்ப்பாண பிரதேசத்தில் தமிழர்கள் அதிகமாக செறிந்து வாழ்ந்தமையால் இந்துமதம் சார்ந்த கட்டிடங்கள் பல கட்டப்பட்டன. இந்தியாவின் வணிக தொடர்பு மற்றும் படையெடுப்புக்கள் காரணமாக தென் இந்திய கட்டிட சிற்ப ஓவிய மரபுகளும் பின்பற்றிய இந்துக்கோயில்கள் பல கட்டப்பட்டன. யாழ்ப்பாணத்தில் இந்துமதப் பாரம்பரியங்கள் பேணப்பட்டு கோயில்களில் சடங்கு பாரம்பரியம், பூஜைப்பாரம்பரியம், திருவிழா கொண்டாடும் பாரம்பரியங்கள் முதலியன இங்கு முக்கியம் பெறுகின்றன. யாழ்ப்பாணத்தில் காணப்படும் பண்டைய பாரம்பரிய இந்து ஆலயங்கள் திராவிட கட்டிட கலைமரபுகளுக்கு உட்பட்டும் சமகாலத்தில் நாகர, வேசரப் பாணிகளிற்குப் பட்டும் அமைந்துள்ளதனை இனங்காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றினை பாரம்பரிய பண்டைய இந்து ஆலயங்களிலும், பின்பு திருத்தி அமைக்கப்பட்ட இந்து ஆலயங்களிலும், சமகால இந்து ஆலயங்களிலும் இனங்காண முடியும்.

பொதுவாக யாழ்ப்பாண பாரம்பரிய இந்து ஆலயங்களில் காணப்படும் கட்புல கலைவடிவங்களை கட்டிட, சிற்ப, ஓவிய அலங்கார வேலைப்பாடுகள் தென்இந்திய திராவிட கலைமரபுகளினூடாக இனங்காண முடியும். இந்துமத ஆலங்களின் கட்டிட அமைப்பை வெறும் ஆலய வணக்கத்தல அமைப்பாகக் கருதாது ஒருமானிடனின் உடல் உறுப்புக்களின் தன்மையை ஒத்ததான வடிவு என வாஸ்து சாஸ்த்திரம் கட்புல அழகியலுடன் புகழ்கின்றது. இதற்கு ஏற்பவே இந்து ஆலயங்கள் அமைக்கப் பெறுகின்றன.

சிகை – ஆலய ஸ்தூபி
சிரசு – கர்ப்பக்கிரகம்
முகம் - அர்த்தமண்டபம்
கழுத்து - ஸ்நபன மண்டபம்
இருதயம், வயிறு – மஹாமண்டபம்
தொடை – நிருத்தமண்டபம்
முளங்கால் - ஆஸ்தான மண்டபம்
பாதம் - கோபுரம்

பண்டைய காலத்தில் மண், மரம், செங்கல் கொண்டு கோயில்கள் அமைக்கப்பட்டன. அதனாலேயே அவை இன்று அழிவடைந்து மறைந்து போயின எனலாம். பிற்காலத்தில் கருங்கல் திருப்பணிகளாக அவை மாற்றி அமைக்கப்பட்டன. இந்து சமய கலைக்களஞ்சியமாக விளங்கும் சிவாகமங்கள் திருக்கோயில் கட்டிட அமைப்பு, சிற்பம், ஓவியம், அலங்காரம், வழிபாடு, இசை,கலை, தத்துவம் என பல அம்சங்களைச் சுட்டிக்காட்டி இந்துப் பண்பாட்டில் அடிப்படைத் தன்மைகளைக் கூறுகின்றது. திருக்கோயில் கட்டிட, சிற்ப அமைப்பு பற்றி சிவாகமங்கள், சிற்ப சாஸ்திரங்கள், வாஸ்த்து சாஸ்திரங்கள் முதலியன இந்துப்பண்பாட்டில் இணைந்து காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் இந்துக் கோயில் கட்டிடம்,சிற்பம்,ஓவியம் பற்றி பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை,நெடுநெல்வாடை முதலிய தொன்மையான தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. பெரும் விமானங்கள் உடைய ஆலயங்கள் அமைத்தல் சோழர் காலத்திலேயே இடம்பெற்றது. அத்துடன் கோபுரங்களை மாடங்களைப் போல அடுக்கடுக்காக அமைக்கும் வழக்கம் திராவிடர்கள் கையாண்ட முறையாகும். இந்து ஆலய கோபுரத்தில் தெய்வீகவியல் வரலாறுகள், புராணவரலாறுகள் கடவுள், தேவர்கள் , அசுரர்கள், மானிடர்கள், விலங்குகள், பறவைகள், இயற்கை காட்சிகள், இந்துமத குறியீடுகள்,அலங்கார வடிவமைப்புக்கள் என பல வகையான சிற்பங்கள் காணப்படுகின்றன.இவை கருங்கல், வெள்ளைக்கல், சுதை முதலிய ஊடகங்களில் வடிவமைக்கப்பட்டுள்ளன. சகளாதிகாரம் எனும் புராதன சிற்ப நூலில் மண்ணினாலும் மரத்தாலும் உருவங்களைச் செய்வதற்கான முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.


யாழ்பிரதேச இந்து ஆலயங்களில் சிற்பங்கள் மரம், உலோகம், கருங்கல், சீமெந்து, வெள்ளக்கல், முதலிய ஊடகங்களினூடாகவே படைக்கப்பட்டுள்ளன. “அசைவுடைய உருவங்கள் பொன், வெள்ளி, செம்பு, சுதை, ஓடு, முதலிய ஊடகங்களாலும் அசைவில்லா மூலவிக்கிரகங்கள் கல்லினாலும் மரத்தினாலும் மாத்திரமே செய்ய வேண்டும்” என மானசார சிற்ப நூலில் கூறுகின்றது. இந்து ஆலய கோபுரங்களில் சித்திர வேலைப்பாடுகள் அதிகம் காணப்படும் மரபு விஜயநகர காலத்திலேயே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 02,கர்ப்பக்கிரகத்தின் மேல் உள்ள விமானம், வடக்குப் பக்கம், நாகரபாணி, பொற்பதி அம்மன் கோயில்,(புகைப்படம்)

யாழ்ப்பாணத்தில் தென்னிந்திய திராவிட பாணியில் அதிக எண்ணிக்கையிலான இந்துக்கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இங்கு நாகர பாணியிலும் அமைந்த இந்துக் கோயில் களை இனங்காணமுடியும். யாழ்ப்பாணத்தில் பொற்பதி அம்மன் கோயில் முழுமையாக நாகர பாணியில் கட்டப்பட்ட இந்துக்கோயிலாகும் (படம் 02). அதன் கர்ப்பக்கிரகத்தின் மேல் காணப்படும் விமான அமைப்பு நாகர பாணியில் உயர்ந்த சிகர வடிவமைப்பைக் கொண்டமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்த கோயில் கோபுர அமைப்பக் கொண்டிருக்கவில்லை. வெள்ளை சலவைக்கல்லினாலான கர்ப்பக்கிரகத்தினையும் சீமெந்தினாலான விமான அமைப்பினையும் இங்கு காணமுடியும். இந்தக் கோயிலின் வெளிப்பபுற சுற்றுப்பிரகாரத்தில் கிழக்குத்திசை நோக்கியுள்ள சிவலிங்க கோயிலின் விமான மும் முற்றாக நாகர பாணியிலேயே வடிவமைக்கப் பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும் (படம் 03).



படம் 03 விமானம், கிழக்குப் பக்கம், நாகரபாணி, சிவலிங்க கோயில், பொற்பதி, (புகைப்படம்)



படம் 04,கர்ப்பக்கிரகம், மேற்குப் பக்கம், வெள்ளை சலவைக்கல், பொற்பதி அம்மன் கோயில், (புகைப்படம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**படம் 05 கர்ப்பக்கிரகம், மேற்குப் பக்கம், கருங்கல்,மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், (புகைப்படம்)**

யாழ்ப்பாணத்தில் பிந்திய நாயக்க கால பாணியில் அமைந்த கலை வெளிப் பாடுகள் அதிகமாக சமகால இந்துக் கோயில்களில் காணப்படுகின்றன. இங்கு கர்ப்பக்கிரகங்கள் பளிங்குக் கல், வெள்ளை சலவைக்கல், சுண்ணாம்புக் கல், கருங்கல் முதலிய ஊடகங்களைக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளன(படம் 04,05). கர்ப்பக் கிரகத்தின் உட்பகுதி எவ்விதமான கலை வெளிப் பாடுகளும் இன்றி அதன் மூன்று பக்க வெளிப்புறப்பகுதியில் தேவகோஷ்டங்கள், மகர தோரணங்கள், சிறிய அளவிலான தெய்வ உருவங்கள், இருபுடைப்பில் அமைந்த தூண் வரிசைகள் முதலயவற்றினால் அலங்கரிக் கப்பட்டுள்ளதனை இங்கு இனங்காணமுடியும். கர்ப்பக்கிரகத்தின் அதிட்டானம் பல வடிவங்களில் காணப்படுகின்றது. சில இந்து ஆலயங்களில் அதிட்டானமும் கர்ப்பக்கிரகமும் வர்ணம் தீட்டப்பட்டு விஜய நகர பாணியை ஒத்ததாக அமைந்துள்ளது



**படம் 06,விமானம், மேற்குப் பக்கம், சீமெந்து, கைலாய பிள்ளையார் கோயில், (புகைப்படம்)**




**படம் 07 விமானம், வடக்குப் பக்கம், சீமெந்து, கைலாய பிள்ளையார் கோயில், (புகைப்படம்)**


இந்து ஆலயங்களில் கர்ப்பக்கிரகத்தின் மேல் காணப்படும் பகுதி விமானம் என்றழைக்கப்படுகின்றது. இதில் தெய்வ உருக்கள், தேவர்கள், அசுரர்கள், மானிடர்கள், இயற்கைத் தாவரங்கள், விலங்குகள், பறவைகள், மகரதோரண அலங்காரங்கள், புராணக்காட்சிகள் என பல சிற்ப வடிவங்களைக் கொண்டும் உச்சியில் ஒரு கலசத்தினையும் கொண்டும் விளங்குகின்றது. அதிகமான இந்துக் கோயில்களில் சீமெந்து ஊடகத்தினால் வடிவமைக்கப்பட்ட வட்ட வடிவான விமான அமைப்புக்களே இடம்பெற்றுள்ளன. அத்துடன் விமானங்கள் மஞ்சள், செம்மஞசள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணங்கள் பூசப்பட்டு ஓர் கவர்ச்சிகரமான கண்ணோட்டத்தை ஈர்க்கக்கூடிய பகுதியாக காணப்படுகின்றது (படம் 06,07).




**படம் 08,** Stages of the Dravindian Bracket, (In Book) Percy Brown, 1984,Indian Architecture (Buddhist & Hindu Periods), D.B. Taraporevala Sons & Co Pvt, Ltd, Bombay.



**படம் 09 அர்த்த மண்டபத்தூண்கள், கிழக்குப் பக்கம், பல்லவர் பாணி,**
**கைலாய பிள்ளையார் கோயில், (புகைப்படம்)**

யாழ்ப்பாணத்தில் இந்துக்கோயில்கள் அதிக தூண்கள் நிறைந்த மண்டபங்களை கொண்டதாக இனங்காணப்பட்டுள்ளன. அர்த்த மண்டபம் தொடக்கம் மஹா மண்டபம்,நிருத்த மண்டபம்,முக மண்டபம் வரையான பகுதிகளில் காணப்படும் தூ ண்களின் வடிவமைப்புக்கள் ஒரே மாதிரியாக காணப்படவில்லை. தென் இந்தியாவில் தூண்களின் போதிகை மற்றும் அதன் வடிவமைப்புக்கள் காலத்திற்கு காலம் மாற்றமடைந்து வந்துள்ளதனை இனங்காண முடியும் (படம் 08). அர்த்த மண்டபத்தில் பல்லவர்கால தூண் அமைப்பினையும் (படம் 9), மஹா மண்டபத்தில் சோழர் மற்றும் பாண்டியர் கால தூண் அமைப்பினையும், நிருத்த மண்டபத்தில் விஜயநகர மற்றும் மதுரை நாயக்கர் கால தூண் அமைப்பினையும்,முக மண்டபத்தில் பிந்திய நாயக்கர் கால தூண் அமைப்பினையும் கோயிலின் உள்ளிருந்து வெளிவாயில் வரை ஒவ்வொரு காலத்தை பிரதிபலிக்கும் பாணியை இங்கு சுட்டிக்காட்ட முடியும்.




**படம் 10 மஹா மண்டபத்தூண்கள், வடக்குப் பக்கம், டொறிக் பாணி,**
**கைலாய பிள்ளையார் கோயில், (புகைப்படம்)**

இந்து ஆலயங்களில் கோபுரத்தின் முன்பு காணப்படும் மண்டபங்கள் முகமண்டபங்கள், வில்லு மண்டபங்கள் என அதன் வடிவமைப்பைப் பொறுத்து பெயர் பெறுகின்றது. இங்கு இராசமல்லுக்கூரையும் (King postroot) டொறிக் (Doric) தூணும் கொண்ட ஓட்டு மண்டபங்கள், திராவிட தூண்களை உடைய மண்டபங்கள், வில்லுவடிவான மண்டபங்கள் என பிரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்க முடியும். காலணித்துவ ஆட்சியின் பின்புலத்தின் தாக்கமும் இங்கு மேலைத்தேய தூண் வடிவமைப்புடன் (Doric) இணைந்து காணப்படுகின்றது(படம் 10).



**படம் 11,கோபுரம், மேற்குப் பக்கம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், (புகைப்படம்)**


இந்துக் கோயிலின் பிரதான வாயிலில் காணப்படும் முக்கியமான பகுதியாக கோபுரம் விளங்குகின்றது. கோபுரம் மூன்று தொடக்கம் பன்னிரண்டு வரையான பல தளங்களைக் கொண்டமைந்துள்ளது..இது புடைப்புத் தூண் அமைப்புக்கள், தெய்வ உருக்கள், தேவர்கள், அசுரர்கள், மானிடர்கள், இயற்கைத்தாவரங்கள், விலங்குகள், பறவைகள், மகரதோரண அலங்காரங்கள், புராணக்காட்சிகள் என பல சிற்ப வடிவங்களைக் கொண்டும் உச்சியில் கலசங்களையும் கொண்டும் விளங்குகின்றது. அத்துடன் இவை சீமெந்து, பளிங்குக் கல், வெள்ளை சலவைக்கல், கருங்கல் முதலிய ஊடகங்களைக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் உள்ள தொன்மையான கோபுரமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் மேற்குப்பக்க கோபுரத்தினை சுட்டிக்காட்ட முடியும் (படம் 11).



**படம் 12,சுவரோவியங்கள், மேற்குப் பக்கம், கைலாய பிள்ளையார் கோயில், (புகைப்படம்)**




**படம் 13 சுவரோவியங்கள், வடக்குப் பக்கம், கைலாய பிள்ளையார் கோயில், (புகைப்படம்)**



**படம் 14,மேற்கூரை ஓவியங்கள், கிழக்கு நுழைவாயில் மேல்ப்பக்கம், வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோயில், (புகைப்படம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**படம் 15,மேற்கூரை ஓவியங்கள், அலங்காரங்கள், கிழக்கு நுழைவாயில் மேல்ப்பக்கம், வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோயில், (புகைப்படம்)**

இந்து ஆலய ஓவிய வெளிப்பாடுகளில் மேற்கூரை ஓவியம், சுவர் ஓவியம், அலங்கார வடிவமைப்புக்கள், என பலவகையாக காணப்படுகின்றது. இதில் முப்பரிமான ஓவியம், இருபரிமான ஓவியம் முதலிய கட்புல அழகியல் வெளிப்பாடுகளும் இடம்பெறுகின்றன. அத்துடன் கோபுரங்கள் அதிலுள்ள சிற்பங்கள் முதலியவற்றுக்கு வர்ணம் பூசுதல் பாணியும் நாயக்கர் காலத்தில் இருந்து உருவாகின்றது. ஓவியக்கலையில் இந்து புராணக்கதைகள், அவதார ஓவியங்கள், வரலாற்று ஓவியங்கள், தெய்வ ஓவியங்கள், நாயன்மார் ஓவியங்கள் என பலவகை யாகக் காணப்படுகின்றது. இதனை கைலாய பிள்ளையார் கோயில் சுவரோவியங்களில் இனங்காண முடிகின்றது(படம் 12,13). ஆனால் இங்கு காணப்படும் ஓவிய வெளிப்பாடுகளில் திராவிடப்பாணி பின்பற்றப்படாமல் மேலைத்தேய ஓவியப் பாணி பின்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரேகை,வர்ணம்,உருவ வெளிப்பாடு,பின்னணிக் காட்சி முதலியன வற்றில் முழுமையான மேலைத் தேய ஓவியப் பாணியின் செல்வாக்கு இடம்பெற்றுள்ளதனை, வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோயில் மேற்கூரை ஓவியங்கள் மற்றும் அலங்காரங்களில் இனங்காண முடிகின்றது (படம் 14,15).

**முடிவுரை**

யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள இந்துக் கோயில்களின் காண்பியக்கலை வெளிப்பாடுகள் முழுமையாக தென்னிந்திய திராவிடப் பாணிகளைப் பின்பற்றி இருந்தாலும் கூட காலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சமூகதேவைகளுக்கேற்ப கலைப்படைப்புக்கள் புதிதாகபடைக்கப்பட்டுவருகின்றனஎன்பதனை இங்கு அவதானிக்க முடிகின்றது. சில இந்து ஆலயங்களில் தொன்மையான திராவிடமரபு கட்புலக்கலைகளில் முழுமையாகப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது.பல இந்து ஆலயங்களில் சமகால சமூகதேவைகளுக்கேற்ப புராதன கலை மரபுகளிலிருந்து விடுபட்டு புதிய கலை மரபுகளுக்குள் உள்வாங்கபடும் நிலமையை இங்கு இனங்காண முடிகின்றது. இந்துக்கோயிலின் நிர்வாகம்,பொருளாதார வளம்,சமூக ஏற்றத்தாழ்வுகள்,போட்டிகள் முதலிய பல காரணங்களினால் திராவிடப் பாணியில் உள்ள கட்புலக்கலைகள் கோயிலின் குறித்த பகுதிகளைத் தவிர ஏனைய இடங்களில் மாற்றத்திற்கு உள்ளாகின்றன. கட்புலக்கலைகள் கோயிலின் கர்பக்கிரகம், அர்த்த மண்டபம் முதலிய இடங்களைத் தவிர விமானம், கோபுரம், மண்டபங்கள், தூண்கள் முதலிய இடங்களில் காலத்திற்கு காலம் வர்ணம்,தொழில்நுட்பம் போன்ற ஊடகங்களினால் பல மாற்றத்திற்கு உள்ளாகின்றன. நிலையான, இந்துக் கோயில் ஆகம சாஷ்த்திர விதிமுறைகளின் பின்னணியில் நிலையற்ற மாறுதல்களை தோற்றுவிக்கக் கூடிய,தொன்மையான மரபை மீறும் செயற்பாட்டினை இங்கு அனுமானிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Bibliography


1. Gnanasekara Iyar,G.,2005,What is Hindu Religion(In Tamil), Manimekalai Publication,Channai.
2. Hindu Temples in Sri Lanka (In Tamil), 1984 , Survey Research Report on Hindu Temples of Sri Lanka, Hindu Cultural Ministry of Sri Lanka , Colombo.
3. Indirapala,K.,1999,Dravidian Architecture in Sri Lanka(InTamil),Kumaran Publishers, Vadapalani Chennai
4. Jouveau Dubreull,G.,1987, Dravidian Architecture , Asisan Education Services, New Delhi.
5. Krishnaveny,N.A.,2008,Indian Aesthetics(In Tamil), Kumaran Book House, Colombo.
6. Krishnaraja,S., 2004 , Hindu Art Theories (In Tamil), Kumaran Book House, Colombo.
7. Navaratnam,K., 2006,Sculptures of South India(In Tamil),Kumaran Book House, Colombo.
8. Nirmala Ramachandran,2000,Hindu Heritage-I,Stamford Lake Publication,Sri Lanka.
9. Pathmanathan,S.,1994,Hindu Temples of Sri Lanka,Part-I(In Tamil),Department of Hindu Religious and Cultural Affairs , Colombo.
10. Pathmanathan,S.,2001,Hindu Traditions:Temples and Sculptures (In Tamil),Department of Hindu Religious and Cultural Affairs , Colombo.
11. Pathmanathan,S.,2006,Hindu Temples of Sri Lanka,Kumaran Book House, Colombo.
12. Percy Brown, 1984,Indian Architecture (Buddhist & Hindu Periods), D.B. Taraporevala Sons & Co Pvt, Ltd, Bombay.
13. Prasanna Kumar Acharya,1996, Indian Architecture in India and Manasara –Silpasastra, Munshiram Manoharlal Publishers (Pvt) Ltd, New Delhi.
14. Prasanna Kumar Acharya,1998, Hindu Architecture – According to Manasara Series, Munshiram Manoharlal Publishers (Pvt) Ltd, New Delhi.
15. Seenevasan,K,R.,2010,Temples of South India(In Tamil) The Director,National Book Trust, Delhi.
16. Sivaramamurthi,C. , 1970, Indian Painting , National Book Trust ,India.
17. Sivaramamoorthy,K.,1974,Indian Paintings(In Tamil),The Director,National Book Trust, Delhi.
18. Sivathamby,K., 2007 , The Art Heritage of Tamils , International Institute of Tamil Arts, Switzerland.
19. Swami Hrashananda, 1998, All about Hindu Temples, Sri Ramakrishna math, mylapore, Madras
20. Vasantha Nadarajen,2003,History of Sri Lankan hindu Temples,Manimekalai Publication,Channai-17.


## Journals and Articles


1. Kenneth Robbins,X.,1985,The Sculpture of India, Art of Asia,Vol-15(05), Art of Asia Publication Ltd,Hong Kong.
2. Leop Bazou,S,J.,1955,A Sculpture's Paradise in South India Mamallapuram,Tamil Culture,Vol-IV(01),Academy of Tamil Culture,Madras.
3. Marcello Tranchini,1989,Arts forms Tanjore,Art of Asia,Vol-19(05), Art of Asia Publication Ltd,Hong Kong.
4. Sasithara Kurukal,I.,2016, Shape of Hindu Temple(In Tamil),Hindu Oli,Vol-1,All Ceylon Congress,Colombo.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CINTANAI

The Journal of the Faculty of Arts,
University of Jaffna.


## Contents


Vankalai Birds Sanctuary: Challenges for its Sustainable Management

**-A.S.Soosai / V.Piratheepa**

Trans - Trade route centred with the Thondamanaru Basin and its influence on the Socio - Economic History of the Medieval Northern Sri Lanka

**-S. Krishnarajah**

Political Leadership of G.G.Ponnambalam: A Critical Review

**- S. Thiruchchenthuran**

The Concept of Political Development in Modern Political Thought: A Critical Study

**- T. Vigneswaran**

Influence of employment opportunity in Education and Age structure with Special Reference to Vaddakkachchi Village in Karachchi Divison.

**- S.S. Uthayakumar**

Altanative Approches for play : A Research which based on the Stage Techniques of Kalaiyarasu Sornalingam

**- K. Rathitharan**

Jaffna Swamikal resferred to by Subramaniya Bharathiyar.

**- N. Gnanakumaran**

The views of the Scholers on the Indus Valley Civilazation: A Critical view

**- R. Kalaivani**

Kuvalayanantha as reveal the Sathruya Garba Alankaras among the Sanskrit Poetics Literatures.

**- P. Navaneethakrishnan**

A Comparative Study of the food Quality among the Traditional food and Fast food in Jaffna.

**- K. Pathmasini**

A Research on Visual Arts explicated through selected traditional Hindu Temples of the Jaffna Peninsula

**- R. Pragash**



ISSN 2478-1061

9 772478 106003

Harikanan, Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org